
தேரையார் வைத்தியம்-1000

உரையுடன்



தாமரை நூலகம், சென்னை - 26.

தேரையர் வைத்தியம்-1000

(உரையுடன்)

பதிப்பாசிரியர்

ஆர்.சி.மோகன்

தாமரை நூலகம்
7, என். ஜி. ஓ. காலனி 3வது தெரு
வடபழனி, சென்னை - 600 026
தொலைபேசி எண் - 044 - 23620249

தாமரை வெளியீடு எண் : 116
முதல் பதிப்பு : ஏப்ரல் 1994
இரண்டாம் பதிப்பு : ஏப்ரல் 1999
மூன்றாம் பதிப்பு : டிசம்பர் 2012
நான்காம் பதிப்பு மே 2021

நூலைப்பற்றி

நூலின் பெயர் : தேரையர் வைத்தியம் 1000

பதிப்பாசிரியர் : ஆர். சி. மோகன்

வெளியிட்டோர் : தாமரை நூலகம்
7, என். ஜி. ஓ. காலனி
வடபழனி, சென்னை - 26.

பதிப்பு ஆண்டு : 2021

உரிமை : பதிப்பகத்திற்கு

நூல் வடிவம் : டெமி

அச்சுத்தாள் : 16 கி.வெள்ளைத்தாள்

எழுத்துக்கள் : 11 புள்ளி

மொத்த பக்கங்கள் : 240

பிரதிகள் : 1200

நூல் விலை : ரூ. 120/-

அச்சிட்டோர் : கிரியேட்டிவ் ஆப்செட்
நுங்கம்பாக்கம், சென்னை -34

91/4

முதல் பதிப்பின் பதிப்புரை

தேரையர் பெயரால் உள்ள மருத்துவ நூல்கள் ஏராளம், ஆயிரக் கணக்கான பாடல்களைப் பாடிக் குவித்திருக்கிறார் என்று சொல்லலாம். வைத்திய காவியம் 1500, வைத்தியம் 1000, வைத்தியம் 500, வைத்தியம் 100, சேகரப்பா, வெண்பா, கரிசல், நிகண்டு, காப்பியம், தரு, அந்தாதி, மருத்துவப் பாரதம், வண்ணம், நாள்மாலை, யமகவெண்பா, எதுகை வெண்பா, தவிர பதார்த்த குண சிந்தாமணியும் இவர் இயற்றியுள்ளார்

இவர் எழுதிய மருத்துவ முறைகள் பலவும் இன்று வைத்தியர்களால் அனுசரிக்கப்படுகின்றன. மருத்துவத்திற்கு உதவும் ஒவ்வொரு பொருளைப் பற்றியும் அதன் குணம், தன்மை அடையாளம் முதலியவற்றைக் கூறும் பதார்த்தகுண சிந்தாமணியைப் போன்ற ஒரு நூல் மிகவும் அற்புதமானது என்று கூறவேண்டும்.

மருத்துவ உலகத்திற்கு ஒரு மாபெரும் தூணாக விளங்கும் தேரையரைப் பற்றிச் சரியான வரலாறு இல்லாதது மிகவும் வருந்தத்தக்க விஷயம்.

தேரையரைப்பற்றி அகஸ்தியர்

அகஸ்திய மாமுனிவர் தமது பெருநூல் காவியம் பனிரெண்டாயிரம் என்னும் நூலில் தேரையரைப் பற்றிக் கூறியுள்ளார்.

காணவே எந்தனுக்கு மூன்றாஞ் சீஷன்
காசினியில் யானறிந்த மார்க்கமெல்லாம்.
தோணவே யுபதேச வுண்மையாவும்
தோறாம லோது வித்தேன் பாலனுக்கு
நான்காம் காண்டம் 528

இருந்தாரே தேரையர் தந்தை தாய்மார்
எழிலான மேழியென்ற செல்வத்தாலே
திருந்தமுடன் காடேகி வனந் திரிந்து
தீர்க்கமுடன் நாற்றிசையும் வனந் திரிந்து
நான்காம் காண்டம் 523

தேரையரின் தாய்தந்தையர் விவசாயம் செய்து பெரும் செல்வம் பெற்றிருந்தார்கள் என்பதும் அகஸ்திய முனிவர்க்கு மூன்றாவதுசீடன் என்பதும் இந்த வரிகளால் விளங்குகின்றன.

கேளப்பா கலியுகமாம் இருபத்தைந்தில்
கெடியான சங்கத்தார் காலந்தன்னில்
நாளப்பா நெடுங்காலம் தன் முன்னாக
நவிலுகிறேன் சங்கத்தார் செய்தி தன்னை

தாளப்பா மகமேரு பர்வதத்தில்
　　தகமையுடன் சங்கத்தார் கூட்டந்தன்னில்
ஆளப்பா ஜமதக்கினி முனிவரப்பா
　　அப்பனே யருந்தவசி யிருந்தார் பாரே!

நான்காம் காண்டம் 529

கலியுகம் இருபத்தைந்தாவது ஆண்டில் இருந்த தமிழ்ச் சங்கத்தைப் பற்றி இங்கு அகஸ்திய மாமுனிவர் கூறுகிறார். இன்றைக்கு நடப்பது கலியுகம் 5095 வது ஆண்டு. அப்படி யென்றால் அகஸ்திய மாமுனிவர் கூறும் தமிழ்ச் சங்கம் 5070 ஆண்டுகளுக்கு முன்பு இருந்தது என்பது உறுதியாகிறது.

பாரப்பா வரமுடைய மைந்தனாகும்
　　பாங்கான திரணாக்கிய முனிவருக்கு
நேரப்பா நெடுங்கால ரோகமப்பா
　　நேர்மையுடன் தலையிடியும் தலைநோக்காடாம்
தீரப்பா பனிரெண்டு வாண்டு தானும்
　　தீர்க்க முடன் பிணியதுவும் அதிகமாகி
வேரப்பா கபால வலி மிகவுண்டாச்சு
　　வித்தகனாம் படுந்துயரம் சொல்லொண்ணாதே

நான்கு 530

ஒன்னாத சங்கத்தார் மேவலாக
　　உத்தமர்கள் தான் கூடி வினயங்கூறி
அண்ணாந்து தென்பொதிகை யேகலாகி
　　அப்பனே என்பதிக்கு வந்தாரங்கே
விண்ணாடர் தான் துதிக்கு மடியேன் தன்னை
　　விருப்ப முடனெந் தனையுமழைத் தாரல்லோ
கண்ணாடிப் பாத்திரமும் சிலை ஆயுதங்கள்
　　கருத்துடனே யானெடுத்து நடந்திட்டேனே

நான்கு 531

கேட்கையிலே சங்கத்தார் முன்னதாக
　　கெடியான வார்த்தைக்கு யிதவுகூறி
தாட்கமலம் வீற்றிருக்கும் தாயார் பாதம்
　　தன்மையுட னடியேனும் தாள்பணிந்து
மீட்கவே ரோகமதை நிவர்த்தி செய்ய
　　வேகமுட னாயுதத்தைத் தானெடுத்து
மீட்கவே கபால மதைத் தான் திறந்து
　　மிக்கவே தேரையதை யெடுக்கலாச்சே

நான்கு 535

இரண்டாம் பதிப்பின் பதிப்புரை

புதுடெல்லியில் உள்ள மைய ஆயுர்வேத சித்த ஆராய்ச்சிக் கழகம் வெளியிட்டுள்ள தேரையர் சேகரப்பா என்ற நூலில் தேரையயைரப் பற்றிச் சிறிய வாழ்க்கைக் குறிப்பு ஒன்று காணப்படுகிறது.

இந்நூலாசிரியரான தேரையர் பழந்தமிழ் நாட்டின் ஒரு பகுதியாய் "தெண்ணீர் வயல் தொண்டை நன்னாடு சான்றோர் உடைத்து " என்று ஔவை மூதாட்டி கூறும் சிறப்புடைய தொண்டை நாட்டிலே சற்றேறக்குறைய ஐநூறு ஆண்டுகட்கு முன்பு வாழ்ந்திருந்த வராவார் என்பது மருத்துவ அறிஞர் கருத்தாகும். இவர்தம் ஊர் பாலாற்றின் வடகரையிலுள்ளதான திருமலைச் சேரி என்பதாம். தந்தையர் நம் பூபதி என்னும் பெயரினராவார்.

தேரையர் தம் இளமையிலேயே முத்தமிழும் சோதிடமும் பிறபல கலைகளும் பல மொழிகளும் கற்றுத் தேர்ந்து தொண்டை நாட்டு மன்னரிடம் பரிசிலும் வரிசை களும் பெற்றுப் புகழ் பெற்று வாழ்ந்தார். மேலும் சூரத்தில் தரும சௌமியர் என்னும் புத்த ஆசிரியரிடம் மருந்துவம் பயின்று சித்த மருத்துவராகவும் விளங்கினார்.

பழம் பாடலொன்று தேரையரியற்றிய நூல்களாகப் பின் வரும் பட்டியலைத் தருகின்றது.

1. சிகாமணி வெண்பா
2. நிகண்டு
3. சேகரப்பா
4. காப்பியம்
5. தரு
6. அந்தாதி
7. மருத்துவப் பாரதம்
8. வண்ணம்
9. நான் மாலை.
10. யமக வெண்பா
11. எதுகை வெண்பா
12. கரிசல்.

தேரையர் யமக வெண்பா இரண்டாம் பாகத்திற்கு எழுதிய முன்னுரையில் டாக்டர் ஆர்.தியாகராசன் அவர்கள் தேரையரைப் பற்றி இவ்வாறு குறிப்பிடுகிறார்.

இந்நூலின் ஆசிரியர் தேரையர். இவ்வாசிரியர் தம் பெயரைத் தேரன் எனத் தன் பாடல்களில் குறிப்பிட்டுள்ளார். இவர் இயற்றிய பாடல்களிலிருந்து இவருக்குத் தமிழைப் போல் வடமொழி, தெலுங்கு, கன்னடம் எனப்பட்ட பல மொழிகளின் புலமை உண்டென அறியப்படுகின்றது. இவர் இயற்றியதாகக் கூறப்பெறும் முக்கிய நூல்கள் பன்னிரெண்டு நூல்களில் இப்போது வெளி வரும் யமக வெண்பாவும் ஒன்றாகும். மேலும் தொடர்ந்து கூறிவருங்கால்.

தேரையரை வணிகர் என்பர் தேரையருடைய ஞானாசிரியர் தரும சௌமியர் என்பர்.

மேலும் தெலுங்குக் கவிஞர் வேமனரைப் பற்றி தேரையர், " உத்தமா மஞ்சிவாடு சுமி நீவென வேமனர் வடுகில் உரைத்தல்போல் " என்று

கூறியிருப்பதால், இவர் வேமனர் காலத்தவர் அல்லது அவருக்குச் சற்றே பிற்காலத்தவர் என்று ஊகிக்கலாம். வேமனர் கி.பி. 1389- 1505 இடைப்பட்ட காலத்தவர். மேலும் இந்நூலில் உருளைக் கிழங்கு கற்பம் பற்றிக் கூறியிருப்பதாலும் உருளைக் கிழங்கு தென் இந்தியாவுக்கு வந்தது. கி.பி. 16ம் நூற்றாண்டு என்று அறிவதாலும் தேரையர் சற்றேறக்குறைய 500 ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்தவர் என்று கருத இடமுண்டு.

இவ்வளவும் எடுத்துக் காட்டியதன் காரணம் என்னவென்றால் தேரையர் என்ற பெயரால் அகத்தியரின் புகழ் பெற்ற சீடராக இருந்த ஒருவர் பிற்காலத்தைச் சேர்ந்த ஒருவரோடு இணைத்துப் பேசப் படுவதால் குழப்பம் உண்டாகக்கூடாது என்பதற்காகவே.

தேரையர் ஐநூறு ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்தவர் என்று முடிவு கட்டிவிட்டால் அகத்திய சீடரான தேரையர்என்ன ஆனார். ஒரு வேளை தேரையர் பெயரால் வழங்கும் நூல்கள் பலவும் இந்த பிற்காலத் தேரையர் இயற்றியதே என்று வைத்துக் கொண்டாலும் அகத்திய சீடரான தேரையரைப் பற்றிய வரலாற்றை அடியோடு அழித்துவிட இயலுமா?

இங்கே சித்தர்களைப் பற்றிய ஒரு வரலாற்று உண்மையைக் குறிப்பிட விரும்புகிறோம். சித்தர்கள் காலம்கடந்து வாழக்கூடியவர்கள் ஒரு கால கட்டத்தில் வாழ்ந்து மறைந்து போய் பின்பு மீண்டும் ஒரு காலகட்டத்தில் தோன்றக் கூடியவர்கள். மீண்டும் ஒரு குழந்தை யாகபிறந்து வளர்ந்து தம் பூர்வஜென்மப் பணிகளைத் தொடரவும் அவர்களால் முடியும்.

அதனால் அந்தத் தேரையர் வேறு இந்தத் தேரையர் வேறு என்று நினைத்துக் கொண்டிருக்க வேண்டிய அவசியமில்லை.

இந்த நூலில் தேரையர் பல அருமையான மருந்துவ முறைகளைக் கூறியிருக்கிறார். சில இடங்களில் பாடல்கள் சிதைந்து போய் சொற்கள் அடையாளம் தெரிந்து கொள்ள முடியாத படி உருக்குலைந்து போய்க காணப்பட்ட போதிலும் மொத்தத்தில் நூற்றுக் கணக்கான நல்ல மருந்துகள் இந்த நூலின் மூலம் கிடைக்கின்றன. வீண் சர்ச்சைகளை விடுத்து அவற்றைப் பயன் படுத்திக் கொள்வதே அறிவுடைமை என்று கருது கிறோம்.

பதிப்பாசிரியர்
ஏஸ். பி. இராமச்சந்திரன்

எடுக்கவே எண்ணமது கொண்டேயேகி
எழிலான சிமிட்டாவைக் கரத்திலேந்த
தடுக்கவே தேரையர் சித்து நாமும்
தண்மையுடன் சுரந்தனிலே யிருந்த கோலை
அடுத்துமே தேரைதனை யெடுக்கா முன்னம்
அப்பனே சிமிட்டாவை தொட்டவாறு
கருத்துடனே வூமைபோ லிருந்த சித்து
கருவாகக் கரந்தனையே தடுத்திட்டாரே

நான்கு 536

இட்டான யெந்தனுட வாயுதத்தை
யெழிலாகத் தன்கையி லேந்திக் கொண்டு
தட்டமுடன் தாம்பாளம் தன்னில் காட்டி
தகமையுடன் சலமது வைத்தரவே கூறி
மட்டமுடன் சிரந்தனிலே இருந்த தேரை
மயங்கிடவே சலத்தையே காட்டும்போது
வட்டமுள்ள தாம்பாளச் சலத்திலப்பா
மன்னவனே குதித்து விழக் கண்டிட்டேனே

நான்கு 537

அதுவரை தேரையர் ஊமைபோல் நடித்துக் கொண்டு அகஸ்தியரிடம் மாணாக்கராக இருந்தார் என்று கூறப்படுகிறது. ஒளவையாரே இராமதேவர் என்ற தேரையரை ஊமைப்பையன் என்று சொல்லி அகஸ்திய முனிவரிடம் சேர்த்து விட்டதாகவும் ஒருகதை கூறுகிறது.

தேரையர் குருவை மிஞ்சிய சிஷ்யன். பிற்காலத்தில் ஒரு மலையையே பொன்னாக்கி விடுகிறேன் என்று சொல்லி மலைமேல் மூலிகை ரசத்தைப் பூசி நான்கு பக்கங்களிலும் துருத்திகளை வைத்து ஊதச் சொன்னதாகவும் அம்மலையில் வசித்த சித்தர்கள் அகஸ்தியரிடம் ஓடிப்போய் முறையிட்ட தாகவும், அகஸ்தியர் கோபித்து தேரையரை இரண்டாகக் கிழித்துப் போட்டதாகவும் மரணம் மாற்றும் மூலிகைகளைத் தேரையர் தம் சீடர்களுக்கு உபதேசித்திருந்ததால் அவர்கள் தேரையரின் உடலை ஒட்டவைத்து மூலிகைகளைப் பிழிந்து மீண்டும் உயிர்பெறச் செய்தார்களென்றும் கூறப்படுகிறது.

தேரையரின் வாத வைத்தியத் திறமையையும் புலமை யையும் மிகைப் படுத்திக் காட்டுவதற்காகச் சொல்லப்பட்ட கதைகள் என்று இவற்றை அறவே ஒதுக்கித் தள்ளிவிட முடியாது.

இன்றைய கால அமைப்புக்கும் முறைகளுக்கும் பொருந்தாத விஷயங்கள் எத்தனையோ பழங்கால வரலாறுகளில் காண்கிறோம் அன்றைய காலகட்டத்தில்

ரிஷிகள் சித்தர் அத்தனை வலிமையும் ஆற்றலும் கொண்டவர்களாக இருந்தார்கள் என்பதை மறுப்பதற்கு நமக்கு என்ன அருகதை இருக்கிறது, என்பதை யோசிக்க வேண்டும்.

சித்தர்களின் வரலாறுகளில் காணப்படும் முரண்பாடுகளை மட்டும் சுட்டிக் காட்டி இவையெல்லாம் பொய் என்று கூறுவதானால் - கடல்போல் குவிந்து கிடக்கும் சித்தர்களின் நூல்களைப் புறக்கணிப்பதானால்- தமிழன் என்ற பெயருக்குக் கூடத் தகுதியற்ற கடையர்களாவோம்- நாம்! - என்பதை மறந்து விடக்கூடாது.

ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்த ஒரு தமிழ்ச் சங்கத்தைப் பற்றி அகஸ்திய மாமுனிவர் பேசுகிறார். அதற்கு மாறான வரலாறு. சான்று. மேற்கோள்- ஏதாவது உள்ளதா என்பதை அடித்துக் கேட்கலாம்.

தமிழனின் பெருமையைப் பொறாத நெஞ்சங்கள், தமிழனைத் தாழ்த்தவே பொய்க்கதைகள் புனைந்தும் புனை சுருட்டுகள் செய்தும் ஏராளமான சதிவேலைகளைச் செய்த கும்பல்கள்- அவர்களைப்பற்றி அறிவோம் நாம். இனி நமது கடன்- அவர்களை மன்னித்து நமது பெருமையை நிலை நாட்டமுயல்வதே என்பதை ஒவ்வொரு தமிழ் மகனும் மனப்பூர்வமாக உணர வேண்டும்.

எஸ்.பி ராமச்சந்திரன்

பதிப்பாசிரியர்

பதினெண் சித்தர்களில் மகா மகத்துவம் பொருந்திய தேரையர் வைத்தியம் 1001

உ

பதிணெண் சித்தர்களில் மகா மகத்துவம் பொருந்திய

தேரையர் வயித்தியம் - ஆயிரத்தொன்று

கலிவிருத்தம்

ஆதி சக்தி யருள்புதல்வா சரண்
மாதி லுற்ற பிணி யகலும்படி
வாதி உத்தமர் சித்தர் பதம்பணிந்து
ஓதி வைத்தது ஓராயிரத் தொன்றுமே 1

ஆதிசக்தியின் புதல்வன் கணேசனுக்கு சரணம். உலக மக்களின் நோய் நீங்கி சுகமாக வாழவேண்டி, உத்தமராகிய சித்தர்களின் பாதம் பணிந்து போற்றி ஆயிரத்து ஒருபாடலாக இந்நூலைக் கூறுகிறேன்.

ஒன்று மாத்திரை யோங்கு முடுபரம்
நன்று லேகியம் ஆடுமைக் கண்ணின்மை
மன்று சூரணம் ஆக்ராணஞ் சர்க்கரை
வென்று தேறி மனத்தில் இருத்திடே 2

மாத்திரை, லேகியம், கண் மை, சூரணம், ஆக்ராணம், சர்க்கரை, மற்றும்,

இருத்திடு மருந் தெண்ணெய் ரசாயனத்
திருத்திடும் பாலைச் செந்தூர மூலிகை
கறுத்திடுங் கலிக்கங் கஷாயங் கிருதம்
குறித்திடும் தயிலம் கூழுப் பாண்டமே 3

எண்ணெய், ரசாயனம், செந்தூரம், மூலிகை, கலிக்கம், கிருதம், தயிலம், கூழ்பாண்டம் மற்றும்,

பாண்டநற் குழம்பாஞ் சீலை எண்ணெயும்
கண்டது மெழு கோடு பதங்கமும்
வேண்டது நெய்யில் இலங்குங் கிருதமும்
மேண்டதுக் கவியோர் புகைப் பத்திடே. 4

குழம்பு, சீலைஎண்ணெய், மெழுகு, பதங்கம், நெய் சிருதம், புகை ஆகியவைகளைப் பற்றி இந்நூலில் சொல்லுகிறேன்.

பத்தி வேதிது பற்பங் காரமுமாஞ்
சித்திக் காரச் சிலையுங் கபாடமும்
மத்திது கட்டு மாத்திரைக் கற்கமும்
நித்திது குடிநீர் பற்பம் பார்த்திடே 5

மற்றும் பற்பம், காரம், காரச்சிலை, கபாடம், கட்டுத, மாத்திரை, கற்கம், குடிநீர், பற்பம் ஆகிய முறைகளையும் அறிவாயாக,

சயித்தியத்திற்கு

ஒண்ட ரிசியின் திப்பிலி யுள்ளிடை
விண்டரி வகை வீதம் பலமரைக்
கண்டரி முருங்கைப் பட்டைச் சாறரைத்
திண்டரி சயித் தியமும் பார்த்திடே. 6

அரிசி திப்பிலி, வெங்காயம், இரண்டும் வகைக்கு அரைப் பலம் எடுத்துக் கொண்டு கண்டங்கத்திரிச் சாறும், முருங்கைப் பட்டைச் சாறும் விட்டு நன்றாக அரைத்து உட்கொள்ள சயித்தியம் தீரும்.

சொறிக்கு

பார்த்துப் பூவரசன் பட்டை ஓர்பலந்
தேர்த்து நீரா காரத்தில் ஆழாக்குடன்
ஏர்த்து மூன்றுநாள் இவ்விதங் கொண்டிடில்
போர்த்துமே சொறி போம்உடல் விட்டிடே 7

நீராகாரம் ஆழாக்குடன் பூவரசன் பட்டையை அரைத்து உட்கொள்ளவும். இவ்விதம் மூன்றுநாள் உட்கொள்ள சொறி ஓடிவிடும்.

வயிற்றுக் கடுப்புக்கு

விட்டிடில் ஆலின் விழுது துளிர்பலம்
பட்டிடா எருமைத் தயிர் ஆறுபலம்
தட்டிடாய்ப் பழச் சாறு பலமேவிடு
தொட்டிடா வயிற்றுக் கடுப்பு ஓடுமே. 8

ஆலம் விழுது துளிர் ஒருபலம் எடுத்து, எருமைத் தயிர் ஆறுபலம் எலுமிச்சம் பழச்சாறு ஒரு பலத்துடன் கூட்டி உட்கொள்ள வயிற்றுக் கடுப்பு ஓடிவிடும்

நாய்க்கடிக்கு

ஒடுங் கோழிச் சாறுத் திருமேனிச்சாற்
றோடுங் கூட்டிச் செவித்துளை விட்டிடில்
வேடு நாயின் வெளிப்படுந் தோலமிட்டு
ஆடு மில்லாவிட் டாலழிந் தீருமே 9

கோழிச்சாறு, திருமேனிச் சாறும், கூட்டி, காதில்விட நாய்க்கடி விஷம் தீரும். (கோழிச்சாறு என்றது கோழி சூப்பா அல்லது கோழியாவாரைச் செடியிலிருந்து பிழிந்த சாறா என்பது விளங்கவில்லை.)

விஷத்துக்கு

தீரடா வெள்ளைச் சீந்திற் கழுகுடன்
வேரடா யிரண்டு மண்ணிற் கீழ்தனில்
சேரடா விஷந்திக் கென் றிரங்கிடுஞ்
சாரடா முறை தப்பாது பாங்குடே. 10

ெவள்ளை சீந்தில் கிழங்கு, கெருடன்கிழங்கு, இரண்டையும் கலந்து கொடுக்க ·தப்பாமல் விஷமிறங்கும்.

கிராணிக்கு

பாங்கு மூவந்திப் பட்டை யெண்ணார்பல
மாங்கு மோடி அழிஞ்சி விரைசுக்கு
நீங்கு கீழ்க்காய் நெல்லிவேர் கிரந்தையும்
வாங்குநீர் செவ்வல்லிக் கொடி பார்த்திடே 11

மூவந்திப்பட்டை, மோடி, (மோடி என்பது திப்பிலிவேர்) அழிஞ்சில் விதை, சுக்கு, கீழ்க்காய் நெல்லிவேர், கிரந்தை, கூகை நீர், செவ்வல்லிக் கொடி, இத்துடன்.

சீழ் மூலத்துக்கு

பார்த்தி டாதி விடையம் பற்பாடகஞ்
சார்த்திடாய் பரங்கிப் பட்டைச் சாதிக்காய்
நேர்த்திடாய்ப் படி ரெண்டு வெள்ளாட்டுப்பால்
சேர்த்திடா யெரித் தீர்ந்திடா தாரியே 12

அதிவிடையம், பற்படாகம், பரங்கிப்பட்டை, சாதிக்காய் இவற்றை இரண்டுபடி வெள்ளாட்டுப்பாலில் இட்டு எரித்திடு.

ஆரிதே நிழலாக வுலர்த்திப் பின்
சேரிதே யிடித்தே வடி செய்துடன்
மாரிதே பனைவெட்டு நெய் தேனோடு
பாரிதே கொட்டைப் பாக்கள வுண்டிடே 13

எரித்துப்பின் நிழலில் உலர்த்தி இடித்து துணியில் வடித்துக் கொள்ளவும். ப்னை வெல்லம் நெய் தேனுடன் சூரணத்தை பாக்களவு உட்கொள்.

உண்டிட விரு போதுமே ஏழுநாள்
சுண்டிடு மூலக்கிராணி சீழ் மூலமும்
நின்றிடு வயி ரெத்தக் கழிச்சலும்
உண்டிடும் நெய்யோடு அன்னமுந் தாக்கிடே 14

ஏழுநாள் இருவேளை உட்கொள்ள மூலக்கிராணி, சீழ் மூலம், இரத்தக் கழிச்சல், இவைகள் தீரும், மருந்து கொள்ளும் நாளில் சாதத்துடன் நெய் கலந்து உண்ணவும்.

மூலவாய்வுக்கு

தாக்குவாய்ப் பிரண்டைச் சாறு குறுணியாந்
தேக்குவாய்ப் பல மேகரைத்தே பிணி
தோக்குவா யிரண்டுந் தொந்தமாய்க் குழம்
பாக்குவாய்ப் பதம் பாகெனக் காச்சிடே 15

குறுணி அளவு பிரண்டைச் சாற்றில் சிறுதேக்கு ஒருபலம் எடுத்துத் தூள்செய்து கலந்து பதமாக காய்ச்சிக் கொள்.

காச்சிடு கடுக்காய் சுக்கு திப்பிலிப்
பாச்சிடு மிளகுப் பருவேந்திய
மாச்சிடு வகை யொன்றுக் கரைப்பலந்
தேச்சிடு வறுத்துப் பொடி செய்திடே. 16

கடுக்காய், சுக்கு, திப்பிலி, மிளகு, வெந்தயம் இவைகள் வகைக்கு அரைப்பலம் எடுத்து வறுத்து பொடித்துக் கொள்.

செய்யுஞ் சோமன் ஆதிப் பெருங்காயமாங்
கெய்யுங் குப்பை மேனிப் பொடிசெய்துமே
பெய்யுமின் குழம்பி லிழைத் தாட்டியே
வெய்யுஞ் சாற்றினில் விட்டுண்ணக் கண்டிடே 17

சோம்பு, பெருங்காயம், குப்பைமேனி இலை இவைகளையும் பொடித்து மேற்படி தூளுடன் மேற்படி குழம்பில் இட்டு கலந்து வெருகடி அளவு உட்கொள்.

கண்டுமே யொரு கடிப் பிரமாணமாய்
மண்டுநீத மெண்ணைய்ந்து நாட் கொண்டிடில்
வண்டு மூலத்தின் வாய்வை யெரித்திடுத்
திண்டு வாய்வுட லற்றிடு மாத்திடே 18

ஒருநாளைக்கு இருவேளை வீதம் நாற்பது நாளுட்கொண்டால் மூலவாய்வு, எரிவாய்வு முதலான பிணிகள் நீங்கும்.

இரணங்களுக்குச் சீலை எண்ணெய்

மாத்துப் புங்கத்தி மாவோடு இலுப்பைவேர்
ஆத்து மாவிலி னரசு பூவரசன்வேர்
காத்து வாரைக் கடம்பு குளம்புடன்
ஏத்து புன்னை யீருள்ளியும் வாங்கிடே 19

புங்கம், அத்தி, மாமரம், இலுப்பைமரம், மாவிலங்கம், அரசன், பூவரசன், ஆவாரை, கடம்பு வேர்களுடன் (குளம்பு என்பது குதிரைக் குளம்பாக இருக்கலாம்) புன்னையும்,

வாங்கி டப்பா வகைக்குச் சரிபலம்
ஆங்கிடப் பாமணக் கெண்ணெ யரைப்படி
பாங்கிடப் பாபதத்தி லெரித் திருத்து
ஒங்கிடப்பா துதித் தெடு வார்த்திடே 20

மேற்படி வேர்களும், வெங்காயமும் வகைக்கு ஒருபலம் எடுத்து ஆமணக்கு எண்ணை அரைப்படியில் போட்டு பதமாக எரித்து எடுத்து பததிரப்படுத்து.

வார்த்திடு நீதம் ஆறா ரிணத்தின்மேற்
போர்த்திடு விப்புருதிப் புரை யொடு
கார்த்திடு வெட்டுக் காயம் பொருத்ததில்
ஆர்த்திடும் அரையாப்பு இவை கோறிடே 21

இரணம், விப்புருதி, புரை, வெட்டுக்காயம், அரையாப்பு இவைகட்கு மேற்படி எண்ணையைத் தடவ குணமாகும். சிறப்பான எண்ணெய்.

ஆனந்தவாய்வுக்கு

கோறிடுந் தேளுக் கொட்டி யுழக்கது
சாறிடு நிதந் தப்பாதே யோரைந்து
ஊறிடும் புளி யுப்புப் புகையொடு
மாறிடா வந்த வாயுவிட் டோடுமே 22

தேள் கொடுக்குச்சாறு உழக்கு எடுத்து ஐந்து நாட்கள் உட்கொள்ள ஆனந்த வாய்வு நீங்கும், புளி, உப்பு, புகை நீக்கிப் பத்தியமாயிருக்க வேண்டும்.

கல்லடைப்புக்கு

ஓடும் வௌவா லுறைந்த மரத்தடி
தேடுஞ் சக்கை யெடுத்தரைத் தேயதை
காடு முள்ளியின் காய்போல் உருட்டியே
போடு மூன்றுநாள் போய்விடுங் கல்லுமே 23

வௌவால் இருக்கும் மரத்தடியில் கிடக்கும் வௌவால் புழுக்கையை எடுத்து அரைத்து முள்ளிக்காயின் அளவு உட்கொள்ள கல்லடைப்பு தீரும்.

கல் முருக்கிலைக் காடி வார்த்தரைரசம்
நெல் குறுவை மாவென் றுறவாகவே
வில் பழச்சாற் விட்டுக் களிக்கிண்டியே
மல் பொசிக்கையில் மலசல மோடுமே. 24

முருக்கிலையை காடி விட்டு அரைத்து ரசம் எடுத்து அத்துடன் குறுவை அரிசி இடித்த மாவு சேர்த்து பழச்சாறு விட்டுக் களி கிண்டி உண்ண மலசலக்கட்டு தீரும்.

திரிதோஷத்துக்கு அனுபானச் சூரணம்

வெட்டுமே கொடி வேலி யிந்துப்புடன்
கட்டுமே திப்பிலிக் கடுக்காய் சமன்
வெட்டுமே வடித்தே வடி கொண்டபின்
மெட்டுமே கொள் வெருகடி தேனிலே 25

கொடிவேலி வேர், இந்துப்பு, திப்பிலி, கடுக்காய் இவை நான்கையும் சமமாக எடுத்து இடித்து சூரணம் செய்து வெருகடி அளவு தேனில் உட்கொள்ள,

தேனிற் கொள்ள தெறித்திடும் வாதமாம்
சீனியிற் கொள்ளத் திகைத்திடும் பித்தமாம்
பாணியிற் கொள்ளப் பறந்திடும் உஷ்ணம்
வேனிற் கொள்ள வெகுபசி யாகுமே. 26

வாதம் போகும். சீனியில் கலந்து உட்கொள்ள பித்தம் ஓடும். தண்ணீரில் உட்கொள்ள உஷ்ணம் போகும். வெந்நீரில் உட்கொள்ள நன்கு பசி எடுக்கும்.

ஒருவிரை வாதத்துக்கு மெழுகு

நீங்கு நன்மிளகு வகை யோர்பலம்
ஓங்கு பூரமு மொன்று களஞ்சிடை
வாங்கு லிங்கம் வகையது காலதாய்
ஆங்கு தேன் விட்டரை மெழுகாகுமே 27

மிளகு ஒருபலம், பூரம் ஒரு களஞ்சி எடை, லிங்கம் கால்களஞ்சு எடை இவைகளைத் தேன்விட்டு அரைக்க மெழுகாகும்.

ஆடுந் தூதளங்காய் போலுருட்டிடு
தேடும் ஐந்து தினமிரு நேரமும்
வாடு முன்விரை வாதக் குடைச்சலும்
ஓடும்உப்பு புளிபுகை தள்ளிடே 28

மெழுகானது தூதுளங்காய் அளவு உருட்டி இரண்டு வேளை வீதம் ஐந்து நாள் உட்கொள்ள விரைவாதம் குடைச்சல் தீரும். புளி, உப்பு புகை நீக்கவும்.

வேறு- சாந்துசந்திரோதய மாத்திரை

காந்தரிப் பகைபொரி பூரந்தொடி கடையாதி
சாந்த மொன்றரை மொன்றரை சவ்வீரம்
தாழ்ந்தரைத்தன மணியென மணிபுரி மதநாமம்
சாந்துசந்திரோதய மதில்அழல் நோய்தரியாதே 29

காந்தாரிப் பகை என்ன என்பது விளங்கவில்லை. இந்தப் பாடலின் பொருளைத் தக்க அநுபவஸ்தர்களிடம் கேட்டு அறிந்து கொள்க.

வேறு- சூலைக்கு

சுழல்மணி வெள்ளையுள்ளிக் கடுகுடன் வசம்புதேறு
அழகிய சுக்கோடைந்து அடுப்பில் வெந்துழக்க தானால்
குழலிடை கூப்பிட்டோடுங் குழலிடுங் குடலில்வாதம்
பழகிய சூலைகுன்மம் பாயெடுத் தோடுந்தானே 30

கழற்சிக்காய், வெள்ளைப் பூண்டு, கடுகு, வசம்பு, சுக்கு இவை ஐந்தும் அடுப்பில் வைத்துக் கஷாயமிட்டு உழக்கு அளவு உட்கொள்ள குடல்வாதம், சூலை, குன்மம் இவைகள் தீரும்.

வேறு- சாரீரமுண்டாக

சுக்கடா கடுக் காயுடன் திப்பிலி
ஒக்கடா வாலுளு வையுங் கூட்டியே
நக்கடா தேனில் நாளிலோர் மண்டலம்
அக்கடா குர லானந்தம் பாடுமே 31

சுக்கு, காடுக்காய், திப்பிலி, வாலுளுவை இவைகள் சூரணித்து ஒருமண்டலம் தேனில் உட்கொள்ள பாடும் குரலுக்கு வளமுண்டாகும்.

வேறு- தீராத வாந்திக்கு

கடுக்காய் சுக்கு வெண்காரங் கடிய சீனிக்காரமுடன்
அடுக்காய் சீனித்தேன் கூட்டி அரிதா யெலுமிச்சஞ் சாற்றரைத்து
கொடுக்க வாந்தி விட்டோடுந் துகளும் நாக்கிற் தேய்த்துவிட்டால்
சடக்கா ரிந்தக் கிரியைதனைச் சதுராய்ச் செய்து முடிப்பிரே 32

கடுக்காய், சுக்கு வெண்காரம் சீனாக்காரம் இவைகளுடன் சர்க்கரையும், தேனும் கூட்டி எலுமிச்சம் பழச் சாற்றால் அரைத்து நாக்கில் தேய்த்துவிட நிற்காத வாந்தியும் நிற்கும்.

வேறு

நெற்பொரியின் சிறுபயறு வில்வம் முல்லை
நெறிய சீர்ஏலமுடன் சுக்கு நெல்லி
முற்படவே இளநீர் வெந் தெட்டொன்றாக்கி
முத்தியபின் எடுத்து விடித்து உட்கொள்ள
சொற்பெரிய சக்தி குன்மம் சுரத்தில் சந்நி
துயரமுடன் கிறுகிறுப்பு அழலை மூர்ச்சி
இப்படியென்றிமைய வரும் ரிஷிகள் தாமும்
இசைத்தனர் பன்னருந் தமிழின் படியைக் கண்டே, 33

நெற்பொரி, சிறுபயறு, வில்வவேர், முல்லைவேர், ஏலம். சுக்கு, நெல்லி இவைகளை இளநீரில் போட்டு அடுப்பேற்றி வேக வைத்து எட்டுக்கு ஒன்றாகக் குறுக்கி

கஷாயம் வைத்து வடித்து உட்கொள்ள சத்தி குன்மம், சுரம், சந்நி, கிறுகிறுப்பு, அழலை, மூர்ச்சை இவைகள் தீரும்.

கபால வலிக்கு தயிலம்

பச்சை மஞ்சள் சாறு ஆதண்டைச் சாறு
பருத்த நொச்சியின் சாறு பகர்வோங் கேளு
இச்சை யாமணக் கெண்ணெய் வகைநாழி
இதனுடனே கற்கவகை அரத்தை சதகுப்பை
வைத்தவகை பலமொன்றே அரைத்துக் காய்ச்சி
வழுவாத பதம் வடித்துத் தலைமூழ்க
உச்சிதமாய் கபாலவலி ஒருத்தலை நோய் எல்லாம்
ஓடிப்போ மென்றே உரைத்தார் முனிவர்தாமே. 34

பச்சை மஞ்சள் சாறு, ஆதண்டைச்சாறு, நொச்சியிலைச் சாறு, ஆமணக்கு எண்ணெ இவைகளை வகைக்கு நாழி அளவு எடுத்துக் கொள். இத்துடன் அரத்தை, சதகுப்பி வகைக்கு ஒருபலம் சேர்த்து இவைகளை அரைத்துப் பதமாக காய்ச்சிக் கொள், இந்த தைலத்தை தலைக்குத் தேய்த்து முழுக கபால வலி, ஒருத்தலை நோய் இவைகள் தீரும்.

வேறு- இருமலுக்குக் கியாழம்

இண்டிலை தூதளை இசங்கு திப்பிலி
கண்டரி சுக்குடன் கலந்து வெந்தநீர்
உண்டபின் னொருதரம் இருமல் உற்றிடில்
தெண்டமுந் தருவன்யான் தேரனல்லவே 35

இண்டு இலை, தூதுளை இலை, சங்கங்குப்பி இலை, திப்பிலி, கண்டங்கத்திரி, சுக்கு இவைகளை கஷாயமிட்டு உட்கொள்ள இருமல் தீரும். தீராவிட்டால் என் பெயர் தேரையன் அல்ல. மாற்றிக் கூப்பிடு என்று சவால் விடுகிறார் தேரையர்

பித்தத்துக்குக் கியாழம்

பெருத்த நெற்பொரி பேய்ப்புடல் கூவிளம்
பருத்தசுக்குப் பயறுடன் வெந்தநீர்
ஒருத்தர் சொல்லவும் வேண்டுமோ உண்பீரேல்
வருத்தமாம் பித்தம் நாற்பது மோடுமே. 36

நெற்பொறி, பேய்ப்புடல், வில்வயிலை, சுக்கு, பயறு இவைகளைப் போட்டு வேக வைத்த நீரை உட்கொள்ள நாற்பது வகையான பித்தமும் தீரும்.

வேறு- பித்தத்துக்குக் கியாழம்

கொத்தமல்லிக் கூவிளங் குறுந்தமுட்டி நெற்பொரி
ஒத்தசுக்கு முத்தமோ டுருத்தநீ ருழக்கதாய்

சுத்ததிண்டி சர்க்கரை கலந்துடன் குடிப்பீரேல்
சத்தியென்று தோற்றுமோ தவிர்க்கலாகு மென்பரே. 37

கொத்தமல்லி, கூவிளம், சித்தாமுட்டிவேர், நெற்பொரி, சுக்கு முத்தக்காசு இவைகளை கஷாயமாக்கி சர்க்கரைக் கூட்டி குடிக்க தீராத பித்தமெல்லாம் தீரும்.

வேறு- விக்கலுக்கு

நீடு மாதுளை நெற்பொரி சர்க்கரைத்
தேடுந் திப்பிலித் தேனிற் குழைத்துண்ண
பீடை யான பெருவிக்கல் சர்த்தியும்
ஓடஓட துரத்தலு முண்மையே 38

மாதளை, நெற்பொரி, சர்க்கரை, திப்பிலி இவைகளை சூரணித்து தேனில் குழைத்து உட்கொள்ள பெரியவிக்கல் நிற்காத விக்கலும் வாந்தியும் தீரும்.

சரக்குகளுக்குமேல் விஷம்

பெரிய வாகைப் பெருங்குமிழ் பாதிரி
தெரியிற் கூவளை நயமுன்னை யுள்ளியும்
பரிய சுக்குப் பருஞ்சதா வேலியும்
செரியிற் சீந்திலுந் தோல்விஷஞ் செய்யுமே. 39

பெருவாகை, பெருங்குமிழ், பாதிரி, கூவளை, முன்னை, உள்ளி, சுக்கு, சதாவேலி, சீந்தில் இவைகளின் மேல் தோல் நச்சுத்தன்மை உடையதாகும். இச்சரக்குகளின் மேல் தோல் நீக்கி மருந்தில் சேர்க்க வேண்டுமாம்.

வெண்பா- சரக்குகளுக்கு உள்விஷம்

கடுநெல்லித் தான்றிக் கனச் சித்ரமூலம்
நடுவாகுஞ் சிவதை யிவைநாட்டில் வடிவாய்கேள்
கள்ளே யவிழுங் கனங்குழலி காணுங்கான்
உள்ளே விஷமென் றுரை. 40

நெல்லி, தான்றி, சித்திரமூலம், சிவதை இவைகளுக்கு உள்ளே நச்சுத்தன்மை உண்டு. இவற்றின் கொட்டை போன்ற உட்பகுதிகளை மருந்துகளில் சேர்க்கலாகா,

வேறு- பாரளந்தான் சக்கரம்

ஆதிவிந்து தாரலிங்க மானசத்தி நாபியும்
சோதிமூல பஸ்பமுந் துலங்கு காந்த முஞ்சரி
நீதிநிம்பச் சாற்றினில் நெருங்குகுன்றி நேர்பட
பாதிசத்தி யாயிருந்த பாரளந்தான் சக்கரம் 41

இரசம், தாரம், லிங்கம், சக்திச்சாரம், நாபி, மூலபஸ்பம், காந்தம் இவைகளை சமனெடை எடுத்து எலுமிச்சம் பழச்சாற்றில் அரைத்த மருந்தை விஷ்ணு சக்கரம் எனலாம்.

சக்கரத்தி லோர்மணித் தரித்திரு கடுகுநீர்
மிக்கியிஞ்சி சாற்றினில் இட்டமோடு அருந்திட
பக்கவீச்சு விக்கல்சத்திப் பத்துமூன்று சன்னியும்
தக்கசூலை மிக்கவாய்வு சகலவாய்வு மோடுமே 42

விஷ்ணு சக்கரம் எனும் மருந்தை குன்றிமணி அளவு திரிகடுகு கியாழம் அல்லது இஞ்சிச் சாற்றில் கொடுக்க பக்க வீச்சு, விக்கல், பத்துவகை குன்மம், மூன்றுவகை சன்னி, சூலை இன்னும் சகல வாயு ரோகம் ஓடிவிடும்.

வேறு - தீராத வெள்ளைக்கு

கருத்தோல் நாவலுதித் தோலுங் கருப்பாமலகம் பழரசமும்
அருத்தல் நெய்யும் ஆனெய்யும் அன்பால் வகைக்குப் படிமுக்கால்
தரிக்கு மருந்துந் தாளிசமு மேலங் கிராம்பு சாதிக்காய்
முருக்கும் அரத்தை மதுரம்பூ பனையின் வகைமுக் காற்பலமே 43

கருநாவல் பட்டை, உதியன்பட்டை, கருநெல்லிப் பழச்சாறு, அருத்தல்நெய், பசுநெய் இவைகளை வகைக்கு முக்கால்படி, தாளிசமூலம், ஏலம், கிராம்பு, சாதிக்காய், அரத்தை, அதிமதுரம், பனையின் பூ இவைகள் வகைக்கு முக்கால் பலம்.

இதுவுமது

முக்கண் கனிபாலா லரைத்து முதிராப் பதத்தில் தான்வடித்து
நக்கன் தன்னைப் பூசித்து நவநாட் பாதிபலங்கொள்ள
நிக்காச் சுறுக்கு நீரடைப்பு நீங்கா வெள்ளைச் சதையடைப்பு
எக்கா லத்துப் பெரும்பாடு எலும்பை யுருக்கிப் பாண்டுவுடன்
செப்பா மேகமது வொழியுந் தீராப்பிணி யெலாம் பறக்கும்
தப்பா தொழியும் இவையெல்லாந் தரணி மீது மானிடற்கு
அப்பா யிதற்கோர் பத்தியமும் ஆவின் பாலும் தயிராகும்
உப்பா மதனை வறுத்துண்ண உமையாட்கு ஈசன் உரைத்தனரே.44

மேற்படி சரக்குகளை தேய்காய்ப் பாலால் அரைத்து பதமாக எடுத்து வடித்துக் கொண்டு, கடவுளை வணங்கி பூசை செய்து இருவேளையும், வேளைக்கு அரைப்பலம் ஒன்பது நாள் கொள்ள நீர்சுருக்கு, நீர் அடைப்பு, தீராத வெள்ளை, சதை அடைப்பு, பெரும்பாடு, எலும்புருக்கி, பாண்டு, மேகம் இவைகள் தீரும். தீராத நோய்கள் குணமாகும். இந்த முறைகளை உலக மக்களுக்கு தேரையராகிய யான் சொல்விட்டேன். ஆவின்பால், தயிர் ஆகும். உப்பு வறுத்து சேர்த்துக் கொள்ளலாம். ஈசன் உமாதேவியாருக்கு சொன்ன முறையிது.

வேறு- மேக ரணத்துக்கு

பரிதிய ரசகற்பூரம் பலந்தானொன்று
பாவையர் பாலூறவைத்து மற்றாநாளும்
முடுகாமல் நீரதனில் அலசிப்போடு
உத்தமனே காய்ந்தபின்பு பொடியதாக்கி

மெருகான கொப்பரைக்காய் கொத்தமல்லி
நேர்த்தியாய் லவங்கப்பூ வோமம் வெண்ணெய்
வருகிறதோர் துவர்ப்புக்குப் பனையின்வெல்லம்
மக்களே பணவிடைதான் வைத்துக் கொள்ளே. 45

இரச கற்பூரம் ஒருபலம் எடுத்து தாய்ப் பாலில் ஊற வைத்து மறுநாள் எடுத்து நீரில் கழுவி உலர்த்திப் பொடியாக்கு. கொப்பரைத் தேங்காய், கொத்தமல்லி, லவங்கப்பூ ஓமம், வெண்ணெய் இவைகளைச் சூரணித்து பனைவெல்லத்துடன் பணவிடை உட்கொள்ளவேண்டும்.

தீரும் வியாதி

கொண்டிடவே பரங்கிப்புண் கிரந்திசூலை
கொடிதான அரையாப்பு யோனிச் சூலை
நொண்டியிடும் வாதமொடு முடக்குப் புண்கள்
நொறுக்கிடுமே பவுத்திரங்கள் நொடியிற்போகும்
வென்றிடவே நாவரட்சி சன்னிதோஷம்
விதமான சந்திடுப்பு அஷ்டகுன்மம்
தென்றிசையில் வயித்தியற்கு ஒன்றேபோதும்
சித்திதுவே புளிபுகையுந் தூரத்தள்ளே. 46

உட்கொள்ள பரங்கிப்புண், கிரந்தி, சூலை, அரையாப்பு, யோனிச் சூலை, வாதம், முடக்கு நோய், புண், பவுத்திரம் இவைகள் தீரும். நாவரட்சி, சன்னிதோஷம், அஷ்டகுன்மம் இவைகளும் தீரும். இவ்வொரு மருந்தே போதுமானது. புளி, புகை நீக்கி பத்தியம் இருக்க வேண்டும்.

இராமபாணக்குளிகை

இடிமருந்து அரிதாரங் காந்தம் எள்ளு
எட்டிவிரை சேங்கொட்டை சித்திரமூலம்
வடிமருந்து ரசங்கெந்தி மஞ்சள் ஓமம்
மாசிக்காய் சாதிக்காய் வசம்பு ஈருள்ளி
குடிமருந்து கொள்ளுக்காய் துரிசுதுத்தம்
கோழிமுட்டை இந்துப்பு கோஷ்டங்கார்கோல்
பிடிமருந்து அமுக்கிறா யிடைசமபாகம்
ஆக்கியிடித்து கலசமதில் அரையக்கேளே. 47

அரிதாரம், காந்தம், எள்ளு, எட்டிவிதை, சேங்கொட்டை, சித்திரமூலம், ரசம், கெந்தகம், மஞ்சள், ஓமம், மாசிக்காய், சாதிக்காய், வசம்பு, ஈருள்ளி, கொள்ளுக்காய், துரிசு, துத்தம், கோழிமுட்டை, இந்துப்பு, கோஷ்டம், கார் போக அரிசி, அமுக்கிரா இவைகள் சமமாக எடுத்து அரைத்துக் கொள்.

தீரும் வியாதி

அறையுகிறேன் யோனி தன்னில் அங்கந் தன்னில்
அண்டத்தின் புரைபுண்கள் அரையின் புண்கள்
விறையுறேன் மூக்கரத்தன் கரப்பன் புண்கள்
இடிப்புற்றுக் குறிப்புற்று யீரல்புற்று_।
விறையுறேன் யிடிகரப்பன் குறவு குஷ்டம்
வீச்சுடனே பிறவாச்சு விஷநீர்ப் புற்று
முறையுடனே மண்டலந்தான் கொண்டு சென்றால்
மூட்டோடே வியாதி யெழுந்திடு மென்பீரே. 48

யோனி, லிங்கம், அண்டம், அரை இவைகளில் உண்டாகும் புண்கள், கரப்பான், குறிப்புற்று, ஈரல் புற்று, இடி கரப்பான், குறைவு குஷ்டம் விஷநீர் புற்று ஆகிய கடின நோய்கட்கு மேற்படி மருந்தை ஒரு மண்டலம் உட்கொள்ள நோய்கள் முழுமையாக குணமாகும்.

வேறு- மேகங்களுக்கு களி

எட்டுமே பெருந் தும்பை இலைபறி
ஒட்டுமே அரிசியுடன் சேர்த்தரை
கட்டுமே எள்எண்ணெய்க் களிக்கிண்டியுண்
மட்டு மேக மசையறுங் கண்டிடே 49

பெருந்தும்பை இலையை அரிசியுடன் சேர்த்து அரைத்து எள் எண்ணெயை சேர்த்து நன்றாகக் களி கிண்டி உட்கொள்ள மேக நோய் தீரும்.

தந்த வியாதிக்கு வாய் கொப்பளிக்க கியாழம்

கண்டுமே நாவற் கங்காவிப் பட்டையும்
வெண்டு உணர்ச் சலம் விட்டுற வானபின்
கொண்டு நீர்தனை கொப்பிளிக் கைந்துநாள்
முண்டு வாய்வாத மோடும்பொய் யல்லவே. 50

நாவல்பட்டை, காவிப்பட்டை இரண்டையும் சேர்த்து கஷாயம் வைத்துக் கொப்பளித்துப் பார். இவ்வாறு 5 நாள் செய். வாயில் ஏற்பட்ட வாதம் போகும்.

அல்ல வேலம்பட்டை ஆவாரம் பட்டை
செல்ல ஓர் சலஞ்சேர்ந்திடித் தூரிடில்
நல்லவோ ரெட்டு நாட் கொப்பளித்திட
வெல்லவே தந்த வாதமுந் தீருமே. 51

வேலம்பட்டை, ஆவாரம் பட்டை, இரண்டையும் தண்ணீர் விட்டு இடித்து ஊற வைத்து அந்நீரில் எட்டுநாள் கொப்பளிக்க பல்லில் ஏற்பட்ட வாதம் தீரும்.

இதுவுமது

தீருஞ்சுக்கது தேறியப் பாக்குடன்
ஏறும் வாயினில் இட்டுமே மென்றிடில்
மீறுதந்த மிகக்கடுப் பேறுநீர்
பாறுங் கொப்பளிக்கப்படும் பஞ்சுமே 52

சுக்கு, முற்றிய பாக்கு இவைகளை வாயிலிட்டு மென்று விட்டு வெந்நீரில் வாய் கொப்பளிக்க தந்த நோய்கள் தீரும்.

தந்தவாயுவுக்கு வேது

அஞ்சி வாதம் அடக்கித் தழுதாழை
கொஞ்சி நொச்சிக் கொடுத்திடில் வேதுதான்
மிஞ்சி நீரில் மிளகரு ணையின்வேர்
பஞ்சு போலரைப் பத்துமேல் ஏத்திடே. 53

வாதமடக்கி தழுதாழை, நொச்சி இவைகளின் இலைகளைப் போட்டு வேது பிடி, மிளகருணையின் வேரை நன்றாக நீரில் அரைத்து பற்று போடு. தந்தவாயு ஓடிப்போகும்.

மேகத்துக்கு

தள்ளுமா விலிங்கப் பட்டை தன்னிடை
விள்ளுமீர் பலமே யரை மோருடன்
கொள்ளு மைந்து தினங்கொள்ள மோரன்னம்
துள்ளு மேக மெடு பட்டு வோடுமே. 54

மாவிலிங்கப்பட்டையுடன்- அதன் எடைக்குப் பாதி லவங்கப்பட்டை சேர்த்து மோர்விட்டு அரைத்து 5 நாள் உட்கொள்ளவும். மேக நோய்கள் ஓடிவிடும். மோர் சாதம் மட்டுமே உட்கொள்ளவும் வேண்டும்.

வயற்றுவலிக்கு

தூர் முருங்கையின் துளிரின் அரைப்பலம்
மோர் வெள்ளுள்ளிக் கடுக்காய் ஒருபலம்
நேரரைத்து ஆமணக் கெண்ணெய் சரியிடை
கோரரைத்து ராக்குழப்பியுண் முத்திதே. 55

முருங்கைத் துளிர் அரை பலம், வெள்ளுள்ளி, கடுக்காய் இவை இரண்டும் ஒரு பலம், இதற்கு ஆமணக்கெண்ணை சரிஎடை எடுத்து சரக்குகளை அரைத்து குழப்பி இரவில் உட்கொள்ளவும்.

விரைவாதத்துக்கும் பிடிப்புக்கும்

முத்திது முறை மூன்று தினங்கொடுப்
பெத்திது வயர் பேதி தப்பாதரி

மத்தித்து விரை வாதப் பிடிப்பொடு
தித்திது புளி நீரு மறந்திடே. 56

உட்கொள்ள தப்பாமல் பேதியாகும். விரைவாதம், பிடிப்பு, குணமாகும், புளி, புகை, உப்பு நீக்கி பத்தியமாக இருக்க வேண்டும்.

இதுவுமது

மறந்திடு உத்தாமணிச் சார் கழஞ்சிடை
நிறைந்திடு ஆமணக் கெண்ணெயில் ஊட்டியுண்
நிறைந்த பேதி யெடுக்கு மொருதரம்
உறைந்திடா வலியொரு வகை கண்டதே. 57

உத்தாமணிச்சாறு கழஞ்சி எடை, ஆமணக்கெண்ணையில் சேர்த்து உட்கொள்ள ஒருதடவை பேதியாகும். வயிற்றுவலி தீரும்.

கண்டுஉப்புப் படிகாரம் மீராற் பலம்
விண்டுமே சூதம் விட்டரைத்து உண்டைநால்
உண்டு போதும் இருவேளை மண்டலம்
இண்டுத் திரேகம் இறுகவு மின்னவே. 58

உப்பு படிகாரம் இரண்டும் பனிரெண்டு பலம், சூதம் நான்கு பலம் விட்டு அரைத்து மாத்திரைகளாக உருட்டி வைத்துக் கொண்டு ஒரு மண்டலம் தினமும் இருவேளை உட்கொள். உடல் இறுகும்.

மின்னையே யெலு மிச்சரசத் துடன்
தன்னை யாட்டிச் சனித்திடப் பூசிமேல்
பின்னைக் காட்டுப் புளிப்பு ராணிப்புகை
அன்னை மூன்றுத் தினமுறை யானதே. 59

மேற்படி மருந்தை எலுமிச்சை சாற்றில் அரைத்து அண்டத்தின் மீது தடவி புளியன்பழ ஓடுகளைப் போட்டு எரித்த தீயின் புகையில் வாட்டு. இவ்வாறு மூன்றுநாள் செய்ய வேண்டும்.

ஆனதே விரை வாதம் அகன்றிடும்
போனதே மெய்யிது பொய்யிது அல்லவே
தானதே செய்தறிந்து அறிவாய்முறை
தேனதே பொழிந் தேபொசிப் புண்டிடே 60

மூன்றுநாள் மேற்படி முறையில் செய்ய விரை வாதம் குணமாகும். இது பொய்யாகாது.

உண்டிடும் வசம்பு உள்ளி விழுதலைக்
கொண்டிடு மிளகுசிறு சுக்கொடுக்
கண்டிடு வகை யொன்றுக் கரைப்பலம்
தொன்றிடு மரைத் தூட்டு வென்னீரிலே. 61

வசம்பு, உள்ளி, வழுதலை, மிளகு, சுக்கு வகைக்கு அரைபலம், இவைகளை அரைத்து வெந்நீரில் 5 நாள் உட்கொள். அண்டவாதம் குணமாகும்.

வென்னீரிற் கொடு வெற்றியா மைந்துநாள்
நன்னி நாக்கு மேலட்டி நாயகத்தினங்
கன்னியே புத்துக் கட்டுக் கொடியரை
முன்னியே பாலில் மூன்று நாள் தீரிடே 62

புற்றின் மேலிருக்கும் கட்டுக்கொடி அரைபலம் மூன்று நாள் பாலில் ஊறவிடு.

தீரு முள்ளி தெருபுளி யின்னிலை
ஈருடீர் எலுமிச்சக் கனிரசம்
கோருடீர் வகைக் குப்பலம் ரண்டுதான்
மாருடீர் எருமைத் தயிர் சேர்த்திடே. 63

அத்துடன் வெங்காயம் புரியிலை, எலுமிச்சம்பழ ரசம், வகைக்கு இரண்டுபலம், எருமைத் தயிரில் சேர்த்திடு.

குழந்தைகட்கு மாந்தக்குளிகை

சேர்த்திடுங் குழப்பி யதின் மூன்றுநாள்
வார்த்திடு வய ரேத்தம ரிட்டு
மேத்திடு புது வண்ணத் தயிருடன்
சாத்திடும் புளிதான் விட்ட ரிந்திடே 64

சேர்த்து குழப்பி மூன்றுநாள் கொடுக்க வயிறேற்றம் குணமாகும். புதிய எருமைத் தயிருடன் புளியை சேர்த்து கலக்கிக் கொள்.

அரிந்திடும் பழச் சாறுடன் ஆவின்பால்
தெரிந்திடும் வகை சேர்பலம் ரண்டுதான்
வரிந்திடு நிதம் வாங்கொரு மூன்றுநாள்
சொரிந்திடுமே முதிர்ந்து ஒத்துப் போகுமே. 65

கலக்கியதுடன் எலுமிச்சம் பழச்சாறு பசுவின் பால் வகைக்கு இரண்டு பலம் சேர்த்து மூன்று நாள் கொடுத்திட குழந்தைகளின் மாந்தம் போகும்.

போகும் சண்பகப்பூ விலா மிச்சம் வேர்
ஏகுங் கோஷ்ட மோடு ஏலங் கோரோசனை
வேகுஞ் சாத்திரப் பேதி மதுரமும்
வாகும் வெட்டிவேர் மாசிப்பச்சு ஒன்பதே. 66

சண்பகப்பூ, விலாமிச்சம் வேர், கோஷ்டம், ஏலம், கோரோசனை, சாத்திரபேதி, அதிமதுரம், வெட்டிவேர், மாசிப்பத்திரி ஆக ஒன்பதும் வகைக்கு கழஞ்சி எடை.

ஒன்பது வகைக் கொண்டு கழஞ்சிடை
மின்பது வெட்டிவேர் தண்டுச்சாற்றினில்

நன்பது வெழு நாழிகை யாட்டிப்பின்
அன்பது குன்றி போலத் திரட்டிடே 67

வெட்டிவேர் தண்டில் எடுத்த சாற்றில் மேற்படி சரக்குகளை ஏழு நாழிகை அரைத்துக் குன்றிமணி போல் உருட்டி உலர்த்திடு.

திரட்டியே யுலர்த்தி யொரு மாத்திரை
விரட்டிடு முலைப்பாலினில் வென்னீரில்
கொரட்டிடு மிழைத்தே கொடு மூன்றுநாள்
கரட்டிடு மீள் கொடும்பிணி யோடுமே. 68

உலர்த்தியதை ஒரு மாத்திரை தாய்ப்பால் அல்லது வெந்நீரில் இழைத்துக் கொடுக்க மூன்று நாளில் குழந்தைகட்கு ஏற்படும் நோய்கள் தீரும்.

எழுவகை மாந்தத்துக்கு

ஆவுஞ் சின்னி யடவுவெண் ணொச்சிலை
ஏவும் வேப்பிலைச் சீந்தில் இடித்தநீர்
மேவு மூன்றுநாள் மேல் துவளையிடில்
நோவு மாந்தம் நொடிக்குள்ளே நீங்குமே. 69

சின்னி, அடவு வெண்ணொச்சியிலை, வேப்பிலை, சீந்தில் இலை, இடித்த நீர், இவைகளை குழந்தைகட்கு, உடம்பின் மேல், துவளையிட மாந்த நோய் குணமாகும்.

நீங்குங் கோரோசனைத் திப்பிலி யுள்ளி
ஓங்குமோ மதுரம் வகை யொன்றுக்கு
காங்கு நீயொரு கழஞ்சிடை தூக்கியே
வாங்கு மண்டலம் வெண்கரு வார்த்திடே. 70

கோரோசனை, திப்பிலி, உள்ளி, அதிமதுரம், வகைக்கு கழஞ்சி எடை , எடுத்து அதில் முட்டை வெண்கரு ஊற்றி ஒரு மண்டலம் வைத்திடு,

வார்த்திடு முலைப் பால் விதமாகவே
தோர்த்திடும் வரைத் துள்ளுக்கு மூன்றுநாள்
ஏர்த்திடும் வகை மாந்தமோர் ஏழையும்
பார்த்திடும் புளி யுப்பாகா தன்னமே. 71

தாய்ப் பால் விட்டு அரைத்து மூன்றுநாள் உள்ளுக்கு கொடுக்க ஏழுவகை மாந்தமும் குணமாகும், புளி, உப்பு, நீக்கி, உணவு கொள்ள வேண்டும்.

தோஷமாந்தத்துக்கு எண்ணெய்

அன்னமே முருங்கைப் பட்டைத் தன்னுடன்
முன்னமே வெண்கருவும் வெள் ளுள்ளியும்
மின்னமே வேப்பெண்ணெய் இவை நாலுடன்
வின்னமே செயி தயிலம் இறக்கிடே. 72

முருங்கைப் பட்டை, வெண்கரு, வெள்ளுள்ளி, வேப்பெண்ணை, இவை நான்கையும் சோத்துத் தயிலம் காய்ச்சு.

இறக்கிடுந் தயிலம் நெல்லைக் குத்தியே
உறக்கிடுங் கண்ணி லிட்டுநா வினில் அது
துரிக்கிடுந் தடவ தோஷ மாந்தமும்
எரிக்கிடு மிது செய்முறைக் கண்டிடே. 73

இறக்கின தயிலத்தை நெல்லில் தோய்த்து கண்ணில் இடு நாக்கில், தடவு, மாந்தம், தோஷம் இவைகள் குழந்தையை விட்டு போகும்.

இதுவுமே

கண்டிடு சாதிக்காய் சாதிப் பத்திரி
உண்டிடு லவுங்கப் பட்டை தன்னுடன்
கொண்டிடு மல்லிக் கோஷ்டங் கோரோசனை
சென்டிடுஞ் செண்பக மலர் சேர்த்திடே. 74

சாதிக்காய், சாதிபத்திரி, லவுங்கப்பட்டை, மல்லி, கோஷ்டம், கோரோசினை, செண்பகப்பூ, இவைகளுடன்.

சேர்த்துக் கார்போக வரிசி மதுரமாம்
பார்த்து லவுங்கப் பத்திரி சீரகம்
ஏர்த்துச் செங்கழ னீர்க்கிழங்கு ஏலமும்
கார்த்து வோர்வகை காற்பல மாட்டிடே 75

கார்போக அரிசி, அதிமதுரம், லவுங்கப்பத்திரி, சீரகம், செங்கழுநீர் கிழங்கு, ஏலம், வகைக்கு கால்பலம் எடுத்துக் கொள்.

ஆட்டிடு ஆமணக் கெண்ணை ஈரார்பலம்
சூட்டிடாய் நற்பசும் வெண்ணை யார்பலம்.
மூட்டிடா யெள் ளெண்ணைபலம் மூன்றுதான்
காட்டிடாய் முருங்கை யிலைச் சாத்திடே. 76

எடுத்தச் சரக்கை, ஆமணக்கெண்ணை பனிரெண்டு பலம் பசுவெண்ணை ஆறுபலம், எள்எண்ணை மூன்றுபலம், முருங்கையிலைச் சாறு ரெண்டு பலம்,

சாத்திடா யிடை தானே ரெண்டு பலம்
சேர்த்திடா எரித்து மெழுகாம் பதம்
வார்த்திடாய் பலமா முறை மூ ன்றுநாள்
கார்த்திடா யுதிர கணந் தாளவே. 77

மேற்படி சரக்குகளுடன் சேர்த்து எரித்து மெழுகு பதமாக வார்த்து மூன்றுநாள் உட்கொள்ள, உதிர கணம் தீரும்.

சுழிகணம் அல்லது சுழிமாந்தம்

தாளடா ஈருள்ளிச் சாறு வெள்ளிண்டின்
கேளடா ஆமணக் கெண்ணையுஞ் சேரதாய்
சூளடா யெரித்துப் பலங் கொண்டிடில்
வாளடா சுழி மாந்தமும் நீங்குமே. 78

ஈருள்ளிச்சாறு, வெள்ளை இண்டு, ஆமணக்கெண்ணை ஒரு சேர் இவைகளை சேர்த்து எரித்து ஒருபலம் அளவு கொடுக்க சுழி மாந்தம் தீரும்.

நீங்குமே பச்சை நெல்உமி யோர்பலம்
பாங்குமே அகத்திப் பட்டை யோர்பலம்
ஓங்குமே யுள்ளி யோரிடை யோர்பலம்
தாங்கு நன்னாரி தான்பலம் நாட்டிடே. 79

பச்சை நெல் உமி ஒருபலம், அகத்திப்பட்டை ஆறுபலம், உள்ளி ஒருபலம், நன்னாரி ஒருபலம், எடுத்துக் கொள்.

நாட்டி டரைப்படி நற்சலம் விட்டுடன்
சூட்டடுப்பில் வைத்துச் சுண்டக் காய்ச்சியே
மூட்டடுத் ததையே யொரு மூன்றுநாள்
மாட்டுத் தவிச் சுழிகண மார்த்திடே. 80

அரைப்படி தண்ணீரில் மேற்படி சரக்குகளை இட்டு அடுப்போற்றி சுண்டக் காய்ச்சி மூன்றுநாள் கொடுக்க சுழிகணம் தீரும்.

மார்த்திடும் பொன்னாங் கண்ணி வல்லாரையே
ஏர்த்திடும் புளியாரை கீழாநெல்லி
சேர்த்திடுந் துளசிச் சிறு புள்ளடி
பேர்த்திடு சிறு பூலாத் தகரையே. 81

பொன்னாங்கண்ணி, வல்லாரை, புளியாரை, கீழாநெல்லி, துளசி, சிறுபுள்ளடி, சிறுபூலா, தகரை மற்றும்,

தகரை யோரிலைத் தாமரைப் பூவிலை
அவரை தூதுவளை அம்மான் பச்சிலை
துவரை பீர்க்கிலை காரவெண் ணொச்சிலை
அவரை செந்நா யுருவிக்கா வேளையே. 82

ஓரிலைத் தாமரை பூ, இலை, அவரை, தூதுளை, அம்மான் பச்சரிசி இலை, பீர்க்கம் இலை. வெண்ணொச்சியிலை, செந்நாயுருவி, காய்வேளை மற்றும்

வேளை முத்திருக் குடன் வாடுதின்
பாளை வேலிப் பருத்தி மிளகுசுக்கு
ஆளை ஆடாதோடைக் கரு நொச்சிநாய்
வேளை சின்னி வேம்புவட்டப் புல்லிதே. 83

வேளை, முத்திருக்கு, ஆடுதிண்ணாப்பாளை, வேலிப் பருத்தி, மிளகு, சுக்கு, ஆடாதோடை, கருநொச்சி, நாய் வேளை, சின்னி, வேம்பு, வட்டப்புல் மற்றும்.

புல்லிது கனம் பூண்டு நுனித்துளிர்
செல்லிது பரி வாலி சிறுகீரை
வெல்லிது முசுக்கை வேற் முருங்கிலை
சொல்லிது பொன் முசுட்டையும் பாங்கிடே. 84

பூண்டு, நுனித்துளிர், குதிரைவாலி, சிறுகீரை, முசுக்கை வேர், முருங்கையிலை, பொன்முசுட்டை மற்றும்.

பாங்கிடத் தின்னரிப் பயித்தங் கோரை
நீங்கடத்தி னிலக் குமிழ் ஆவாரை
வேங்கடத் திதுரை விஷ்ணுக் காந்தியும்
தாங்கடத்திற் சங்கங் குப்பித் தாக்கிடே. 85

நரிப் பயிற்றின் கோரை, ஆவாரை, நிலக்குமிழ், விஷ்ணு காந்தி, சங்கங்குப்பி இவைகளை எடுத்துக்கொள்.

இதுவுமது

தாக்கடா செங்கத் தாரி யிலைத்துளிர்
மேக்கடா கண்டங் கத்திரி வில்வமுந்
தேக்கடா சீந்திற் குட்டி விளாமிச்சன்
தோக்கடா யிடித் தொருபடிச் சாறுமே 86

எடுத்ததுடன் செங்கத்தாரி துளிர், கண்டங்கத்திரி, வில்வம், சிறுதேக்கு, சீந்தில், குட்டி விளாமிச்சன் இலை அனைத்து இலைகளையும் இடித்தசாறு ஒருபடி.

சாறுஞ் சீரகங் கிராம்பு வசம்பொடு
சேறு முள்ளி திப்பிலி பற்பாடகம்
நேறுமே கடு ரோகணி மஞ்சளாம்
மாறும் புந்திப் பழமர மீருள்ளியே. 87

சீரகம், கிராம்பு, வசம்பு, முள்ளி, திப்பிலி, பற்பாடகம், கடுகுரோகணி, மஞ்சள், புந்திப்பழம், ஈருள்ளி மற்றும்.

உள்ளிடு ஆமையோடு கருஞ் சீரகம்
விள்ளி டாழி நுரைவகைக் கோர்பலம்
தெள்ளி தூட்டி சித்தாமணக் கெண்ணெய்சேர்த்
துள்ளிடாய் படிசேர்த் தீரெண் டேத்திடே 88

ஆமையோடு, கருஞ்சீரகம், கடல்நுரை இவைகள் வகைக்கு ஒருபலம் மேற்படி சாற்றில் சரக்குகளை நன்றாக அரைத்து இத்துடன் ஆமணக்கெண்ணை ஒருபடி சேர்த்து அடுப்பில் வைத்து எரிக்கவும்.

ஏத்திட்டே எரித்தே இருத் தேயுடன்
நேர்த்திட்டே தினம் துட்டுஎடை உள்ளுக்கு
மாத்திட்டே கணம் மாந்தம்ஓர் ஏழையும்
பேத்திட்டே புளியுப்பு இவைக் கண்டிடே. 89

எரித்து பதமாக வாங்கி துட்டு எடை உள்ளுக்கு கொடுக்க குழந்தைகட்கு உண்டாகும் ஏழுவகை கண மாந்தமும் தீரும். புளி, உப்பு ஆகாது.

பெருநோய் திமிர் குஷ்டத்துக்கு

கண்டிடே இலைக் கள்ளி சமூலமுஞ்
செண்டிடுப் பொடி செய்திடு மார்பலம்
துண்டிடு மஞ்சள் தூளிடை யார்பலம்
எண்டிடுங் கலசத்தி லிருத்திடே. 90

இலைக்கள்ளி சமூலம் பொடிசெய்து ஒருபலம், மஞ்சள் தூள் ஒருபலம் இரண்டையும் கலசத்துள் இட்டு அதில் கோமயம் அரை பலமிட்டு இரண்டுவேளை ஒரு மண்டலம் உட்கொள்.

இருத்திடு பலமே அரை ஆவின்நீர்
புரித்திடு மிருபோது கொள் மண்டலம்
முரித்திடும் பெருநோயின் திமிர் வாதம்
பரித்திடும் பசும்பால் அன்னஞ் சட்டமே. 91

உட்கொள்ள பெருநோய், திமிர்வாதம் பசும்பாலுடன் அன்னம் கூட்டி சாப்பிட வேண்டும். புளி, புகை, உப்பு ஆகாது.

சட்டமா நெறி இஞ்சியின் சாறிடை
திட்டமாய்க் கொடு சேரரையின் மூன்றுநாள்
தொட்ட போதுமே கரண மகன்றிடும்
தொட்டகலும் குஷ்டம் பிரண் டோடுமே. 92

இஞ்சி சாற்றை அரை சேர் அளவு மூன்றுநாள் உட்கொள்ள மேகரணம், குஷ்டம் தீரும். (நெறி இஞ்சி என்றிருப்பதால் நெருஞ்சி என்றும் பொருள் கொள்ளலாம்)

தாம்பர பஸ்பம்

ஓடு மாத்தல் அலரி யிலை யரைத்
தேடுந் தாம்பர மீதிற் கவசஞ்செய்
ஓடு மூடி சந்தொக்க மண் சீலையாற்
போடுமே செசப்புடம் போட பற்பமே 93

அலரி இலையை அரைத்து தாமிரத்தகட்டிற்கு கவசமிட்டு ஓட்டில் வைத்து ஓடுமூடி மண்சீலை செய்து கெசப்புடம் போட பற்பமாகும்.

அனுபானம்

பற்பங் கால்தான் பணவிடை தூக்கியே
விற்ப மாவிநெய் விட்டனு பானமாய்
நற்ப மாயரை மண்டலம் நாட்டியுன்
அற்பமாம் பலநோய்க் குஷ்ட மாறுமே. 94

பற்பத்தை கால்பண எடை எடுத்து பசுநெய்யில்குழைத்து அரை மண்டலம் உட்கொள்ள பல நோய்களும் குஷ்டம் போன்ற கொடிய ரோகங்களும் தீரும்.

கெந்தக பற்பம்

மாறுங் கெந்தியில் வைத்திடு வேப்பிலைச்
சாறு சேர்த்தரைத் தப்பிடு செம்பின்மேல்
தேறுமல்லிலைத் தேங்காப்பா லாட்டுடன்
நேறுஞ் சிலைக் கெசப்புட நீறுமே. 95

கெந்தகத்தை வேப்பிலைச் சாற்றில் அரைத்து செம்பின் மீது கவசமிட்டு, மல்லி இலையை தேங்காய் பாலால் ஆட்டி அதன்மேல் கவசம்கட்டி சீலைமண் செய்து கெசப்புடம் போடு. பற்பமாகும்.

அனுபானம்

நீறு மாவி நெய்யிற் பணங்காலிடை
மாறு சேர்த்துன் ணரைமண் டலமுந்தின்
ஒறுங் கூட்டிறைச்சி நெய்யின் பாலன்னம்
ஏறுங் குஷ்டம் பலநோ யிறங்குமே. 96

கால் பணிவடை மேற்படி பற்பத்தை பசு நெய்யில் உட்கொள். இவ்வாறு அரை மண்டலம் உட்கொள். பால்அன்னம் மட்டும் உட்கொண்டு பத்தியமாக இருக்க குஷ்டம் மற்றும் பல தீராத நோய்கள் தீரும்.

அண்டவாதம் அரோசிகம்

இறங்கு நற்கருங் கோழி அண்டத்துள்ளே
உறங்கும் வெண்கருவை யெடுத் தேயுடன்
மிறங்கு கெந்தியில் விட்டரை மூன்றுநாள்
வறங்கு தீய்ந்த முன்வைத்தே யுலர்த்திடே. 97

கருங்கோழி அண்டத்தின் வெண்கருவை மட்டும் எடுத்து கெந்தகத்தை சேர்த்து மூன்றுநாள் அரைத்து; வெய்யிலில் உலர்த்திடு

அனுபானம்

உலர்த்தி யானபின் னோர்பணந் தன்னிடைச்
சலத்தி டாக்கதன் டாவிநெய் தன்னிலுண்

பிலத்தி டாப்பெரு நோயும் மகோதரம்
தலத்திடாச் சகல நோயைக் கண்டிடே. 98

உலர்த்தியதை பணவெடை ஆவின் நெய்யில் உட்கொள்ள பெருநோய், மகோதரம், உள்பட சகல நோயும் தீரும்.

கியாழ மனுபானம்

கண்ட சுக்குக் கடுகுடன் பேய்ப்புடல்
விண்ட தேக்கு மிகுகொத்த மல்லியும்
கொண்ட நீரில் குறித்துக் குடிப்பீரேல்
அண்ட வாத மரோசிகந் தீருமே. 99

சுக்கு, கடுகு, பேய்ப்புடல், சிறுதேக்கு, கொத்தமல்லி, இவைகளை கியாழமாக்கி முன்பற்பத்தைக் கொள்ள அண்டவாதம். அரோசிகம், தீரும்.

தாளபகற்பம்

தீருந் தாளகம் சுத்திசெய் தோர்பலம்
பேரும் பீர்க்கி னிலையரைத் தேயப்பி
ஒருஞ் சீலைமன் ணீரெண்டு செய்துடன்
நேரு மொன்றரைச் சாண்புடம் நீறுமே. 100

சுத்தித்த தாளகம் ஒருபலம், பீர்க்கனிலையை அரைத்து தாளகத்திற்கு கவசமிட்டு இரண்டு சீலைமண் செய்து ஒன்றரைச்சாண் அளவு குழியில் வைத்துப் புடம் போட நீறும்,

நீறு மாத்தங் கவசம் நிகழ்த்தியே
ஏறுந் தூபமிட் டேயெடுத் தேயதை
ஓறும் பொற்பணம் தூக்கனு பானத்துள்
பாறுங் காசம் சயம்பறந் தோடுமே. 101

தூபதீபமிட்டு எடுத்து அதை பணவெடை அனுபானத்தில் உட்கொள்ள சயம், காச நோய்கள் தீரும்.

இதுவுமது

ஒடு மண்டைக் கருவெடுத் தோட்டினுள்
ஆடுஞ் சூதங் கழஞ்சிவிட் டப்பனே
சாடும் நல்வேளைச் சாறு சமனிடை
மூடுஞ் சீலைமண் மூவிரண் டொன்றுமே. 102

மண்டை ஓட்டினுள் சூதம் கழஞ்சி எடை விட்டு நல்வேளைச்சாறு சமமாகவிட்டு ஏழுசீலை மண் செய்திடு.

ஒன்றுமே குழி யோர்கெச மேபுடம்
மன்றுமே தணல் நல்லதோர் பற்பமாம்

என்றுமே யரிசி யிடை தூக்கியே
அன்று நற்பசு நெய்யுற வாகுமே. 103

மண்ச்லை செய்ததை கெசபுடமிடு, நல்ல பற்பமாகும். பசு நெய்யுடன் அரிசி எடை பற்பத்தை உட்கொள்.

ஆகும் தேத்தான்விரை அமுக்கிறா வேர்
தாகும் பரங்கிச் சக்கை புளிவிரை
பாகுமே வகைக் கோர்பலந் தூக்கியே
ஏகுமே இடித்தேவடி செய்திடே. 104

தேத்தான் கொட்டை, அமுக்கிராவேர், பரங்கிச் சக்கை, புளி விதை, வகைக்கு ஒருபலம் எடுத்து இடித்து வடிகட்டிக் கொள்.

செய்யுஞ் சூரணத்திற் பலம் காலிடை
வையுந் தேனதில் மத்தித்தெண் போதுவுண்
செய்யும் ரத்தப் பிரமியம் ஓடிடும்
கொய்யும் நல்முளைக் கீரைப் பருப்புண்ணே. 105

மேற்படி சூரணத்தை கால்பலம் எடுத்து தேனில் குழைத்து அளவுடன் எட்டுவேளை உட்கொள்ள ரத்தப் பிரமியம் தீரும். பருப்புடன் முளைக்கீரை சேர்த்து உண்ணுவாயாக.

இரத்தப் பிரமியத்திற்கு கலிக்கம்

உன்ன லிங்கம் நாபி மிளகோரிடை
தன்னரைப் பழச் சாற்றினி லோர்தினம்
ஒன்னவே திரட்டி யுட னுலர்த்தியே
எண்ணவே பழச் சாற்றி லிழைத்திடே. 106

லிங்கம், நாபி, மிளகு சமஎடையாக எடுத்து பழச்சாற்றில் ஒருநாள் அரைத்து திரட்டி உலர்த்திக் கொள்.

இதுவுமது

இழைத்திடுங் கண்ணி லேறிய சன்னியும்
துழைத்திடுஞ் சிரோ பாரஞ் சுரத்தையும்
முழைத்திடும் வாதப் பித்தமோ ரைந்தையும்
கழைத்திடும் நற் கலிக்கமுந் தேத்திடே. 107

உலர்த்தியதைப் பழச்சாற்றில் இழைத்து கண்ணில் கலிக்கமிடு சன்னி, தலைபாரம், சுரம், வாதம், பித்தம் ஆகிய ஐந்தும், இக்கலிக்க மருந்தால் தீரும்.

ஏத்திடுஞ் சுக்கிந் துப்புத் திரிபலைப்
போத்திடு வசம் புள்ளி சமுத்திரா

மாத்திடு மிளகு வகையோர் பலஞ்
சாத்திடு வோர்கழஞ் சிடை சாட்டிடே. 108

சுக்கு, இந்துப்பு, திரிபலை, வசம்பு, உள்ளி, சமுத்திராபழம், மிளகு, வகைக்கு ஒருபலம் எடுத்து பழச்சாற்றால் அரைத்து கழஞ்சி எடை கொண்ட மாத்திரைகளாக உருட்டி நிழலில் உலர்த்து,

சாட்டிடாய் பழச் சாற்றினி லாட்டியே
நீட்டிடா யன்னிழலி லுலர்த்துடன்
தீட்டிடா வெள்ளிலை ரசத்தி லிழைக்
காட்டிடாய் கலிக்க மீதறிந் திடே. 109

உலர்த்தியதை வெற்றிலைச் சாற்றில் இழைத்து கலிக்க மிடு.

அனுபானம்

அரிந்திடுஞ் சுரமப்பா சிரசில் நோய்
சரிந்திடுஞ் சளிதனி சிரோ பாரமும்
பரிந்திடு முலைப் பாலி லிழைத்திடு
தெரிந்திடு மிது செய்திட வோடுமே. 110

சுரம், தலையில் ஏற்படும் நோய், சளி, தலை பாரம், இவைகட்கு தாய்ப் பாலில் இழைத்து கலிக்கமிட மேற்படி நோய்கள் தீரும்.

ஆக்கிராணம்

ஓடிடு மிளகு ஓமஞ் சமுத்திரா
வாடிடு மிலுப்பை யுரைப்போர் வகை
தேடிடு வோர் கழஞ்சிடை தூக்கியே
நாடிடு வரை நன்றாய் வடித்திடே. 111

மிளகு, ஓமம், சமுத்திரா பழம், இலுப்பை, அரப்பு இவைகள் வகைககு கழஞ்சி எடை எடுத்து தூள் செய்து துணியில் வடிகட்டிக்கொள்.

இதுவுமது

வடித்திடுப் பொடி வாங்கோர் பணவிடை
தடித்திடுஞ் சளி தன்சிரோ பாரமும்
முடித்திடு நோயும் மூன்றுந் தெறித்திட
வடித்திடு மிதுவாக் கிரானங் கார்த்திடே. 112

மேற்படி பொடியை பண எடை ஆக்கிராணம் செய்ய சளி தலைபாரம் மற்றும் தலைநோய் ஆகியவை தீரும். இது ஆக்கிராண மருந்து. (ஆக்கிராணம் மூக்கில் உறிஞ்சுவது)

நெல்லிக்காய் கெந்தி பற்பம்

கார்த்திடும் நெல்லிக் காய்கெந்தி யோர்பலம்
ஏர்த்திடு மரைக் கீரை சமனுடன்
சேர்த்திடு மரைத் தோர்தினம் பற்பமாம்
தோர்த்திடு கழஞ்சி யிடை தூக்கிடே. 113

நெல்லிக்காய் கெந்தகம் ஒருபலம், அரைக்கீரைச்சாறு, சமனாக சேர்த்து ஒருநாள் அரைத்திடு, பற்பமாகும். கழஞ்சி எடை எடுத்து,

தூக்கிடு மிரு போதரை மண்டலம்
வாக்கிடுங் குருவை மனத் தியானமாய்த்
தூக்கிடுங் குஷ்டந் தப்பா திறங்கிடும்
போக்கிடும் புளி யுப்பு தகையுமே. 114

இருவேளை கழஞ்சி எடை, அரை மண்டலம் குருவைத் தியானம் செய்து உட்கொள்ள குஷ்டம் குணமாகும். புளி புகை, உப்பு தள்ள வேண்டும்.

சகல வியாதிக்கும் இரசபற்பம்

தகையு மேனியின் சாற்படி ரெண்டுடன்
புகையுஞ் சூத மரைப்பலம் போடிரு
வகையுஞ் சேர்த்துடன் வைத்தெரி பாண்டத்துள்
திகையுமே மெழுகாக வறுத்திடே. 115

குப்பை மேனிச்சாறு இரண்டுபடியில் சூதம் அரைப்பலமும் சேர்த்து பாண்டத்துள் இட்டு அடுப்பேற்றி வறுத்திடு.

அனுபானம்

வறுத்திடும் பற்ப மாகும் பணவிடை
நிறுத்திடும் பசு நெய்யில் மேகம்படு
மிறுத்திடு நீரிழி வுக்குச் சர்க்கரை
வெறுத்திடுஞ் சயத்துக்கு வெல்லத்திடே. 116

வறுக்க பற்பமாகும், பணவிடை பசுநெய்யில் உட்கொள். மேக நோய் குணமாகும். சர்க்கரையில் உட்கொள்ள நீரிழிவும் வெல்லத்துடன் உட்கொள்ள சயமும் தீரும்.

ஆர்த்திடும் வாதத்துக்கு வாழைப்பழம்
மார்த்திடும் வெள்ளியில் மாலைக் கண்ணுக்கும்
பார்த்திடு பாண்டுக்கு மூங்கிற் பட்டைத்தூள்
சேர்த்திடு மெரிப்புக்கு வெண் சீனியே. 117

வாழைப்பழத்துடன் உட்கொள்ள வாதமும், வெற்றிலையில் உட்கொள்ள மாலைக்கண்ணும், மூங்கில்பட்டைத் தூளுடன் உட்கொள்ள பாண்டும், சீனியுடன் உட்கொள்ள எரிப்பும் குணமாகும்.

சீனி சன்னிக்கு திரிகடுகு கியாழத்தில்
மாஎரி தேனில் மலஞ்சலஞ் சிக்கினால்
தானி வாழைப் பூச்சாறிடுஞ் சூலைக்கு
சானி சீரசுரம்போந் திப்பிலிக்கே. 118

திரிகடுகு கியாழத்துடன் மேற்படி பற்பத்தை அளவுடன் உட்கொள்ள, சன்னி நீங்கும், மலசல கட்டிற்கு தேனிலும். சூலைக்கு வாழைப் பூச்சாற்றிலும், சீத சுரத்திற்கு திப்பிலிச் சூரணத்துடனும் கொடுக்க குணமாகும்.

பீலிக்கை சொறி குட்டம் பொருந்திடும்
தேலிக் கையான் தகரையின் சாற்றினில்
கேலிக்கை யான் தலைநோய்க் கிஞ்சிச்சாறு
மாலிக்கைத் திப்பிலி விறல் போக்கிடே. 119

பீலிகை, சொறி, குட்டம் இவைகட்கு கையாந்தகரைச் சாற்றுடன் மேற்படி பற்பத்தை சேர்த்துண்ண நோய்கள் தீரும், ஒருத்தலை நோய்க்கு இஞ்சிச் சாற்றில் கொடுக்க வேண்டும்.

போக்கிடும் புளி வேம்பு விளாஞ்சிரா
ஆக்கிடுமே ரழிஞ்சிவேர் நால்வகை
தோக்கிடும் பெரும் பாண்டத்துள் இட்டிதை
தாக்கிடுங் குழியின் புடம் தானிடே. 120

புளி, வேம்பு, விளா, ஏரழிஞ்சி, இந்த நான்கு மரத்தின் வேர்களையும் பெரிய பாண்டத்துள் இட்டு குழிப்புடமிட்டு தயிலம் எடுத்துக் கொள்.

திமிர்நோய் புழுக்குழித் தயிலம்

தானியே கன லாரித் தனித்தெடுத்
தேனிடும் பெருஞ் செவ்வரி தாரமும்
பேணிடு மெய்யிற் பூசிடு மூன்றுநாள்
வாணிடுங் கதிர்முன் வந்து இருத்திடே. 121

தைலத்துடன் அரிதாரம் சேர்த்து மூன்றுநாள் வெய்யிலில் வை.

இருத்திடும் பெருநோய் திமிரும் விடு
மரித்திடு மிதெல்லாம் வெளி வாங்கிடு
விரித்திடுந் தயிலம் மிது நேர்த்தியை
வருத்திடுங் குரு வாக்குப் பொய்யல்லவே. 122

இத்தயிலத்தை உட்கொள்ள பெருநோய், திமிர் நோய் தீரும். குருவின் வாக்கு பொய் ஆகாது.

இலிங்கபற்பம்

அல்லவே யெருக்கம் பால் அரைப்படி
வெல்ல லிங்க மிடைப்பல மொன்றுதான்

செல்ல வேதின மூன்றரைத் தேயுடன்
சல்லவே வில்லைத் தட்டி யுலர்த்திடே. 123

லிங்கம் ஒருபலத்தை எருக்கம்பால் அரைப்படியை சிறிது சிறிதாக விட்டு அரைத்து வில்லை தட்டி உலர்த்திக் கொள்ளவும்.

உலர்த்திடு கல சத்து ளொடுக்கியே
மலர்த்திடு சில்லு மூடிமண் சீலைசெய்
திலர்த்திடும் பாண்டத் திட்டு மணல்சொரி
பெலர்த்திடு மடுப் பேற்றி யெரித்திடே. 124

உலர்த்தியதை கலசத்துள் வைத்து சில்லுமூடி சீலைமண் செய்து, பாண்டத்துள் மணலிட்டு அதன்மேல் இக்கலசத்தை வைத்து அடுப்பேற்றி எரிக்கவும்.

எரித்திடுஞ் சிவப் பேறு மணலிலே
தரித்திடும் லிங்கந் தானது பற்பமாம்
விரித்திடும் வியாதிக்குப் பணவிடை
தரித்திடு மனு பானமறிந்திடே. 125

எரித்து எடுக்க லிங்கம் பற்பமாகும். நோய்கட்குத் தக்க அனுபானத்துடன் பண எனட பற்பம் கொடுக்க நோய்கள் தீரும்.

சூதபற்பம்

அரிந்திடுஞ் சூத மப்பா பலமிடை
சொரிந்திடுங் கொட்டைக் கரந்தை ரசமதில்
தெரிந்து வாட்டிடச் சாமத் திரட்டுடன்
விரிந்து மவ்விலை வைத்தரைத் தப்பிடே. 126

சூதம் ஒரு பலத்தை கொட்டைக் கரந்தைச் சாற்றில் ஒரு சாமம் சுருக்கிடு. வெண்ணெயாகும். மேற்படி இலையை அரைத்து கவசமிடு.

தப்பிச் சீலைமண் ணேழுந் தரித்துடன்
ஒப்பி வெய்ய லுலர்த்தி வலிந்தபின்
மெப்புக் கொக்குப் புடமிட பற்பமாம்
செப்பு வெல்லத் திடுபணஞ் சேர்த்திடே. 127

கவசத்திற்கு ஏழுசீலை மண்செய்து வெய்யிலில் உலர்த்தி கொக்கு புடமிடு, பற்பமாகும். இப்பற்பம் பணவெடை வெல்லத்துடன் சேர்த்து ஏழுநாள் உட்கொள்ளவும்.

அனுபானம்

சேர்த்திடு மிருபோது மோரேழ் தினம்
கார்த்திடுங் கடும் பத்தியங் கண்டறி
வேர்த்திடு மிளவெண் ணீரோ டன்னமும்
ஆர்த்திடுங் கண்ட மாலையுஞ் சூலையே. 128

மேற்படி சூதபற்பம், ஏழுநாள் உட்கொள்ளும் போது கடும்பத்தியமாக இருக்க வேண்டும். அன்னம் வெந்நீர்விட்டுப் பிசைந்து உண்ண வேண்டும். கண்டமாலை, சூலை குணமாகும்.

நேத்திரவாயுவுக்குக் கலிக்கம்

சூலும் வெற்றிலைச் சாத்திட்டுச் சுக்குரைத்
தாலுஞ் சத்தெடுத் தேதரிக் கண்ணினில்
மேலும் வாயு வெளிப்பட நீங்கியப்
பாலும் மோடிப் பறந்திடுந் தாக்கிடே. 129

வெற்றிலைச் சாற்றில் சுக்கை உரைத்து கண்ணில் இட நேத்திர வாய்வு வெளிப்பட்டு நீங்கும்.

தாக்கிடுஞ் செம்புத் தட்டைக் கவிழ்த்ததில்
பார்த்திடும் பசு வெண்ணெய்ப் பலமதில்
சேர்த்திடு வைத்திழை செம் பிரமியின்
சார்த்திடு விட்டிடாய் சமனாட்டியே. 130

செம்புத் தட்டைக் கவிழ்த்து அதில் ஒருபலம் பசுவெண்ணெயில் செம்பிரமி சாறுவிட்டு இரண்டு நாழிகை நன்றாக இழைத்து எடுத்துக் கொள்ளவும்.

ஆட்டிடா யிருந் தாரிரு நாழிகைத்
தீட்டிடாய்த் தீப தூபங் கொடுத்துடன்
காட்டிடாய்ப் பரணைக் குள் ளடைத்துமை
நாட்டிடாய்ப் பத்து நாளிரு போதிடே. 131

இழைத்ததை தூபதீபம் காட்டி பானைக்குள் வைத்துக் கொண்டு பத்துநாள் இரண்டு வேளையும் கண்ணிலிட

போதிடும் படலம் புழு வெட்டொடு
மீதிடுஞ் சல மிட்டக் குடைச்சலுஞ்
சாதிடும் பறக்குந் தவறா முரை
யூதிடும் புளி யுப்புப் புகைதள்ளே. 132

கண்படலம், புழுவெட்டு, நீரிறங்கல், குடைச்சல், குணமாகும். புளி, உப்பு, புகை நீக்க வேண்டும்.

பொன்னாங்கண்ணி மை

தள்ளும் பொன்னாங் கணிரசங் கற்கண்டு
உள்ளுட் டுறவு செய்து மறைத்துடன்
விள்ளு கம்மாறு வெற்றிலைச் சார்துளி
கொள்ளு நற்பரணைக் குள்ளே மாட்டிடே. 133

பொன்னாங்கண்ணிச் சாற்றில் கற்கண்டை உடைத்துப் போட்டு இரண்டையும் நன்றாகக் குழம்புபோல் செய்து கொண்டு கம்மாறு வெற்றிலைச் சாறு துளிவிட்டு சிமிளில் பத்திரப்படுத்து.

மாட்டுந் தூபமும் வந்தனை செய்துமை
நாட்டு மண்டலம் நாளிரு போதிடில்
சூட்டுக் குத்தலுஞ் சூலைப் புகைச்சலும்
ஒட்டும் பத்திய மொன்றிலை தின்றிடே. 134

தூப தீபம் காட்டி ஒரு மண்டலம் இரண்டு வேளை கண்ணிலிட கண்சூடு, குத்தல், சூலை, புகைச்சல் இவைகள் தீரும். பத்தியம் இல்லை.

குடோரிரசம் கண்படலத்திற்கு

தின்று நற்சீரகங் குடோரி யிலை
மன்று டீருள்ளி வாங்கு மதினிறம்
கன்றிடும் வகைக் கொன்றுக் கழஞ்சிடை
தொன்றிடுஞ் சுற்றித் துணிக்குள் வையவே. 135

சீரகம், குடோரியிலை, ஈருள்ளி, வகைக்கு கழஞ்சி எடை, துணியில் வைத்துப் பொட்டணமாக கட்டிக் கொள்.

வையடா பொட்டண மாகக் கண்ணினீர்
செய்யடாப் பிழிந் தூதிடு மூன்றுநாள்
பையடா முப் படலம் விட்டோடிடும்
மெய்யடா புளிவிட் டுண்ணத் தீருமே. 136

பொட்டலத்தைப் பிழிந்து கண்ணில் இடவும், இவ்வாறு மூன்றுநாள் செய்யக் கண் படலம் தீரும். புளியை நீக்கி உணவு உட்கொள்ள வேண்டும்.

கண் படலத்திற்கு

தீரும் வெள்ளிலைப் பத்திரிக் காடியில்
சேரும் விட்டரைத் தேயிரு நேரமும்
பாரும் நாளேழுப் பாவைமேற் கட்டிடில்
ஏறுங் கன்பட்ல மிழிந் தோடுமே. 137

வெற்றிலை, பத்திரி இவைகளைக் காடிவிட்டு அரைத்து இரண்டு நேரமும், ஏழுநாள் கண் மீது வைத்துக் கட்ட படலம் குணமாகும்.

ஓடும் பத்திய முப்பு புளிதள்ளி
ஆடும் வென்னீரோ டன்னம் புசித்திடில்
நாடு தேறைய னன்மொழி யாமிது
தேடு மிம்முறை செய்துகை கண்டதே. 138

மேற்படி மருந்து செய்யும் போது உப்பு, புளி, நீக்க வேண்டும் வென்னீருடன் சாப்பாடு கொள்ள வேண்டும், தேரையராகிய நான் சொன்ன இது கை கண்ட முறை.

இதுவுமது

கண்டி டவ்விலைக் காரை ரசம்பலம்
தண்டிடச் செப்புத் தகட்டைக் கவிழ்த்ததில்
விண்டிடப் பசு வெண்ணெய் விட்டோர்பலம்
கொண்டிடப் பீத ரோகணி யாட்டிடே. 139

காணாவிலை ரசம் ஒருபலம், செம்பு தகட்டைக் கவிழ்த்து மேற்படி ரசத்துடன் பசுவெண்ணெய் ஒருபலம், பீதரோகிணி கழஞ்சி எடை சேர்த்துக் கொள்ளவும்.

ஆட்டிடாய்க் கழஞ்சி யிடை யானபின்
மாட்டிடாய் மேல் மறுசெம்பி னாலிழை
நாட்டிடா யொரு நாள் தவறாமலே
மூட்டிடாய்ப் பரணைக்குள்ளும் போற்றிடே. 140

சேர்த்ததை மற்றொரு செம்பைக் கொண்டு இழைத்திடு, ஒருநாள் இழைத்து சிமிளில் வைத்து தூபதீபம் காட்டு.

கண்படலம் சிகப்பு நீரேத்தலுக்கு மை

போற்றிடு மையிற் பொற்பணந் தானிடை
ஏற்றிடு மிரு நேரமு மேழுநாள்
பாற்றிடும் படலஞ் சிகப்பு தீரும்
ஊற்றிடுஞ் சூலை யோடிடுஞ் செய்திடே. 141

சிமிளில் வைத்த மையில் பணவெடை எடுத்து இரண்டு வேளையும் ஏழுநாள் கண்ணில் தீட்ட கண்படலம், சிகப்பு கண்சூலை தீரும்.

செய்யடா புளி சேரும் நாகப்புகை
மெய்யடா யிளவென் னீரோ டன்னமும்
ஐயடா யீது அறிந்திடும் பத்தியம்
பொய்யடா யிலை பெண்மையில் தீருமே. 142

மேற்படி மருந்து பயன் படுத்தும்போது புளி புகை ஆகாது. வெந்நீரும் சாதமும் உடன் சாப்பிட வேண்டும் இவ்விதம் பத்தியமாக இருந்தால் நோய்கள் தீரும்.

மாலைக் கண்ணுக்கு தும்பை மை

தீரடா சிறு தும்பையின் சாறது
சேரடா பிழிந் து ஈர்கரத் தாலிழை
பாரடா பரிந்தே யிடுங் கண்ணினுள்
மாரடா யந்தி மாலை விட்டோடுமே. 143

சிறு தும்பை இலைச்சாற்றை கையிலிட்டு இழைக்க மை போலாகும், கண்ணில் இட மாலைக்கண் நோய் தீரும்.

ஆடப்பா பத்திய முன் னறிந்துகொள்
போடப்பா யேழு போதிரு நேரமும்
சாடப்பா புளியும் புகையுந் தவிர்
நாடப்பா வெந்நீ ரன்னமுண் டோடுமே. 144

பத்தியமாக இரு. ஏழு நாள் இருவேளையும் கண்ணில் இடு புளி, புகை ஆகாது. வெந்நீரும், அன்னமும் உட்கொள்.

புளித்த கண்ணுக்கு வெண்கல மை

ஓடும் வெண்கல மொன்று பதங்கம்வை
சாடுஞ் சங்கிலைச் சார்பிழி நாட்டுமே
ஆடுஞ் செம்பினா லப்பமை யானபின்
போடு வேழுநாள் புளித்தக் கண்ணாறுமே. 145

வெண்கலத்துடன் சங்கிலைச் சாறு கூட்டி செம்பினால் இழைத்து இருவேளை ஏழுநாள் கண்ணிலிட புளித்த கண் குணமாகும்.

ஆறும் பாசிப் பயறுட் னாவின்பால்
சேறும் நற் புழுங்க லரிசியின்மா
நேறுஞ் சர்க்கரை நெய்சுக்கு சீரகம்
கேறு நற்களிக் கிண்டுண்ணப் போகுமே.

பாசிப் பயிறு, ஆவின் பால், புழுங்கரிசி மாவு, சர்க்கரை நெய், சுக்கு, சீரகம், இவைகளைச் சேர்த்து களி போல் கிண்டி உட்கொள். புளித்த கண் மாறும்.

கண் எழுச்சிக்கு

இல்லையே குக்குடற் சிறக் கொண்டைகொய்
தில்லையே குருதி யெடுத் தேயதை
அல்லையே பகலார் தினமே யிடி
சொல்லவே யெழுச்சியும் புண் ணாறுமே 147

சேவலின் கொண்டையை அறுத்து ரத்தத்தை எடுத்து கண்ணிலுண்டாகும் எழுச்சி மீது தடவு. இவ்வாறு ஆறுநாள் செய்ய எழுச்சி புண் ஆறும்.

செவி நோய்க்கு சதுரக்கள்ளி சிட்சை பரிகாரம்

ஆறுமே சதுரக் கள்ளியைத் தணல்
நேறுமே வதக்கி யிரு நேரமும்
சாறுமே பிழிந் தாடைச் செவியிநோய்
தீறுமே பத்தியம் புளித் தள்ளிடே. 148

சதுரக்கள்ளியை நெருப்பில் வாட்டி பிழித்து காதில் விடு. காது நோய் குணமாகும். புளி நீக்கி பத்தியமிரு.

தள்ளடா நல்லு சித மரத்தடி
உள்ளடா விளையுங் குடையுங் காளான்
மெள்ளடா பலமே யெடுத் துள்ளிடு
தெள்ளடா பலந் தேன்விட் டிழைத்திடே. 149

நல்ல உசித மரத்தடியில் விளைந்த காளானை பலம் அளவு எடுத்து இடித்து ஒரு பலம் தேன் விட்டு இழைத்துக் கொள்.

சந்து வாதத்திற்கு விழுதிக்களி

எத்திது விழுதி யிலையோர் பலம்
செத்திது பல்லரி யிற்கடு குடன்
கத்திது யிடித்துக் களி கிண்டியுண்
மத்திது சந்து வாதமு மில்லையே 150

விழுதியிலை ஒருபலம், கடுகுடன் சேர்த்திடித்து களிபோல் கிண்டிக்கொள், இதை உட்கொள்ள சந்துவாதம் தீரும்.

இடுப்பின் வாதம்

இல்லையே பொடுதலை யினிலை பிடி
வல்லையே பண வெட்டு மிளகுடன்
அல்லையே சுக்கு வுள்ளி அரைத்தின்ன
இல்லையே யிடுப்பின் வாதந் தானுமே. 151

பொடுதலை இலை ஒரு பிடி அளவு, எட்டு பணவெடை மிளகு, சுக்கு, உள்ளி, இதையும் சேர்த்து அரைத்து உட்கொள்ள இடுப்பு வாதம் தீரும்.

குடல் வாதம்

தானுமெக் குருஞ்சி யிலை யெண்பலம்
தானும் மேலவணச் சிலம் விட்டுவாய்
பாலும் பல்லசை வுடன்மேவும் வாயுவும்
தேனும் வாய்க்குடல் வாதமுஞ் சுத்துமே. 152

குருஞ்சி இலை எட்டு பலம் எடுத்து லவணச்சிலம் விட்டு உட்கொள். பல்லு அசைவு, தந்தவாதம், குடல் வாதம் இவைகள் தீரும்.

சுத்து மத்துடன் மண்ணோடு நண்டுளை
வெத்து மூட்டையும் வெண்கரு சுன்னமும்
சித்து வாமணக் கெண்ணெயிற் காச்சியே
குத்து சுத்துங் குடல்வாதந் தெரிந்ததே. 153

நண்டு இலை, முட்டை வெண்கரு, சுன்னம் இவைகளை ஆமணக்கெண்ணெயில் காய்ச்சி உட்கொள்ள குடல்வாதம் தீரும்.

தன்று வாதம்

தெரிந்து மஞ்சணத் தீயிலை யெண்பலம்
பரிந்து போட்டது பாண்டத்து நீர்த்துளி
சொரிந்து மாச்சிலை சுத்திக் குருவைமா
வரிந்துப் பிட்டு வேகவைத்துப் பாங்கிடே. 154

மஞ்சணத்தி இலை எட்டு பலம், பாண்டத்தில் நீர்விட்டு அதில் மேற்படி இலையை போட்டு வேடு கட்டி குருவையை இடித்த மாவை வைத்து பிட்டவியல் செய்திடு.

பாங்கு யெள்ளெண்ணெய்ப் பார்பனை வெட்டொடு
ஆங்கு செய்து நாளாரிரு நேரமும்
வாங்கு ருளையினி வாதத் தெரித்திடு
நீங்கி வுப்பு நிறுத்தி நிலைகொளே. 155

பிட்டவியல் செய்ததுடன் எள் எண்ணெய், பனைவெல்லம் சேர்த்து இரண்டுவேளையும் ஆறுநாள் உட்கொள்ள வாதம் குணமாகும். உப்பு நீங்கிவிட வேண்டும்.

கொள்ளு குப்பைமேனிக் கோவைச் சாறுடன்
விள்ளுடன் முள்ளி மிளகு வசம்பொடு
துள்ளு மேயரைத் தின்றுமே கொத்தோடு
தள்ளுமேகமுந் தன்றுவாயு வெட்டுமே 156

குப்பைமேனி, கோவை இலைகளின் சாறு, முள்ளி, மிளகு, வசம்பு சேர்த்து அரைத்து உட்கொள்ள தன்றுவாதம் குணமாகும்.

முழங்கால் வாதம்

எட்டுங் காத்தொட் டிலைச்சாறு தன்னொடும்
கட்டுஞ் சுக்கான்கல் காச்சிட்டுப் பூசிமேல்
மட்டுங் கோதை வறுத்தாவிக் கட்டிடில்
விட்டு வோடு முழங்காலின் நோயென்றே. 157

காத்தொட்டி இலைச்சாற்றுடன் சுக்கான் கல் சேர்த்து அரைத்து மேல் பூசி, கோதை வறுத்து அதில் வரும் ஆவியை காட்ட முழங்கால் வாதம் குணமாகும்.

அஷ்டகெண்ட வாதம்

எந்த மான்செவி யிலைக்கள்ளி செந்தணல்
இந்த விரண்டும் வெதுப்பிப் பிழிந்துநீர்

தண்டு வாதத் தடவி முறுக்கிடில்
கெண்டை வாதங் கெடுங்கெடுங் கார்த்திடே. 158

மான் செவி கள்ளியை நெருப்பில் வெதுப்பி பிழிந்த நீரை கெண்டை வாதம் கண்டவிடத்தில் தடவ கெண்டை வாதம் குணமாகும்.

கார்த் திருந்திரு திருகு கள்ளியும்
ஏர்த்திடும் வாதத் தணலிட்டு வெதுப்பிடு
வேர்த்திடு மாசம் விட்டு முறுக்கியே
மார்த்திடுங் கெண்டை வாதம் பின்னெட்டுமே 159

திருகு கள்ளியை நெருப்பில் வாட்டி நீர் எடுத்து தடவ கெண்டை வாதம். எட்டும் தீரும்.

எட்டுமே திருகு கள்ளி வேருடன்
வெட்டுமே தண விட்டு வெதுப்புடன்
கட்டுமே பிசைந்து கடிநோய் நிதம்
மட்டுமே குதி வாதமு மேங்குமே. 160

திருகு கள்ளி வேரை நெருப்பில் வெதுப்பி நீர் எடுத்து தடவ கடிநோயும், குதிவாதமும் தீரும்.

குதிகால் வாதம்

ஏங்கு வாமணக் கெண்ணெய் தடவியே
தாங்கி நொச்சிலைத் தன்னை யவித்தெடு
ஆங்கு நாளைந் தடுத்துமேக் கட்டிடில்
வாங்குமே குதி வாதமுங் கோரிடே. 161

ஆமணக்கு எண்ணெய் தடவி, அதன்மேல் வேகவைத்த நொச்சிலையை வைத்து கட்ட குதிவாதம் தீரும்.

கோரி டின்னங் கொட்டைக் கிரந்தையுடன்
தூரிடுமே வைத்துக் கட்டு மூன்றுநாள்
பாரிடுங் குதி வாத மகன்றிடும்
தேரிடு முறை செய்யிது கண்டதே. 162

கொட்டை கிரந்தையை முன்போல் மூன்றுநாள் கட்ட குதிவாதம் தீரும், இம்முறை கை கண்டது.

கண்டிடுந் திருகுக் கள்ளி வேருடன்
விண்டிடும் வசம் புள்ளி மிளகொடு
கொண்டிடு மறைத்தக் கொதி செய்துபின்
வெண்டிடு மெள்ளெண் ணெயுற வாகவே. 163

திருகு கள்ளிவேர், வசம்பு, உள்ளி மிளகு இவைகளை அரைத்து கொதிக்க விட்டு எள் எண்ணெய் விட்டு குழப்பிக் கொள்.

சகல வலிக்குத் திருகுள்ளி எண்ணெய்

ஆகவே குழப்பி யதை மெய்யினில்
வேகவே துவளை யிட்டுப் பூசிடில்
போகவே வலி வாதம் புகன்றிடும்
தாக வெந்நீ ரோடன்னமு மாகுமே. 164

குழப்பியதை வாதம், வலி உள்ள இடங்களில் பூசிவிட வாதம்,வலிகள் தீரும். வெந்நீருடன் அன்னம் கூட்டி உட் கொண்டு பத்தியமாக இருக்க வேண்டும்.

ஆகு மெள்ளெண்ணெ யாமணக் கெண்ணெயோ
டேகும் வேம்பெண்ணெ யிம்மூன்று நாற்பலம்
நேகு நொச்சியில் வேர்தழு தாழை வேர்
தாகு வுள்ளி வசம்பு மிளகிடே. 165

எள் எண்ணெய், ஆமணக்கெண்ணெய், வேப்ப எண்ணெய் ஆகிய மூன்றும் நான்கு பலம், நொச்சிவேர், தழுதாழை வேர், உள்ளி, வசம்பு, மிளகு வகைக்கு ஒரு பலம்.

சுக பேதிக்கு

கிட்டடா வகைக் கோர்பலங் காச்சிடு
தெட்டடா சரீரத் துக்குத் தொக்கடம்
விட்டடா பிசைந்தே இடு மூன்றுநாள்
மட்டடா சருவாங் கமும் ஓடுமே. 166

சரக்குகளை மேற்படி எண்ணெயிலிட்டு நன்றாக காய்ச்சிடு. உடலில் இந்த எண்ணெயை இட்டு பிசைந்து ஒத்தடம் கொடுக்க சர்வாங்க வாதம் தீரும்.

ஓடுஞ் சாரணைவுடன் கிழங்கோர் பலம்
மாடு நிம்பழச் சார்விட் டரைத்துடன்
தேடும் வென்னியிற் சேர்கறைக் கண்டிடில்
சாடும் பேதியில் தான்விழுந் தப்பாதே. 167

சாரணை கிழங்கு ஒருபலம், வேப்பம் பழச்சாறுவிட்டு மேற்படி கிழங்கு அரைத்து வென்னீரில் உட்கொள்ள பேதி யாகும்.

இதுவுமது

தப்பா தின்னமுஞ் சாரணையின் கொழுந்
துப்பா தாட்டியே காற்பலங் கொண்டிடில்
அப்பா பாரும் பெருவயி ரற்றிடும்
ஒப்பா யன்னமு மோருட னுண்டிடே. 168

சாரணையின் கொழுந்தை ஆட்டி கால்பலம் அளவுக்கு உட்கொள்ள பெருவயிறும் வற்றிப் போகும். மோர் சாதம் மட்டும் உட்கொள்ள வேண்டும்.

ஒண்டிடும் பேயின் காய்த்தொட்டி வித்துவும்
வெண்டிடு மிளகு வசம்பு சுக்கு
கொண்டிடுஞ் சாரணைக் கிழங் குள்ளிடை
தண்டிடும் வகைக் கோர்பலங் காட்டிடே. 169

பேய்க் காய்த்தொட்டி விதை, மிளகு, வசம்பு, சுக்கு சாரணைக்கிழங்கு, உள்ளி, வகைக்கு ஒருபலம்,

பேதிக்கும் பெருவயிறுக்கும்

காட்டிடா மணக் கெண்ணெ யரைப்படி
கூட்டிடாய் வகை யெல்லாங் கொதித்துவுண்
மாட்டிடா யொரு மண்டலந் துட்டிடை
ஊட்டடா பெரு வயிரற்று மாறுமே. 170

ஆமணக்கு எண்ணெய் அரைப்படியில் மேற்படி சரக்குகளை இட்டு நன்றாகக் காய்ச்சித் துட்டு எடை ஒருமண்டலம் உட்கொள்ளப் பெருவயிறு குணமாகும்.

மார் வசம்பு மிளகுவெள் ளுள்ளியும்
சேர்வுரி செங்கத் தாரியின் வேர்சமன்
ஏரனல் தனை யிட்டுநீ ராக்கியே
பார நெய்தனிற் பாங்காக் குழைத்திடே. 171

வசம்பு, மிளகு, வெள்ளுள்ளி, செங்கத்தாரிவேர், இவைகளை நெருப்பில் வாட்டி எரித்துச் சாம்பலாக்கி குழைத்துக் கொள்.

குழைத்து மூன்றுநாள் கொதித்துமே பூசிடில்
வலித்து நொந்திடு மார்வலி வாதமும்
இளைத்து வாடியே தெங்கு நில்லாமலே
களைத்து ஓடிடுங் கார்புகை தள்ளிடே. 172

குழைத்ததை மூன்று நாட்களுக்கு பூசு, வலி, வாதம் இவைகள் தீரும். காரம், புகை, நீக்கு.

மார்வலி குன்மபேதிக்கு

தள்ளு முக்கா வேளை சாரணையின்வேர்
துள்ளு மிளகு சுக்கு வெள்ளுள்ளியும்
விள்ளு நீரினில் வென்னீரி லாட்டியே
கொள்ளு மூன்றுதினங் குன்மந் தீருமே. 173

முக்காவேளை, சாரணை இவைகளின்வேர், மிளகு, சுக்கு, வெள்ளைப்பூண்டு, இவைகளை வென்னீரில் அரைத்து மூன்று நாள் உட்கொள்ள குன்மம் தீரும்.

அனுபானம்

தீரும்பத்தியஞ் செப்புவேன் கேளுநீ
பாரும் பெண்மயல் போகம் அகற்றிடு
வேரு செய்புளி யுப்பு மிகத்தள்ளி
சேரு வென்னீரோ டன்னமும் கொண்டிடே. 174

மேற்படி மருந்திற்கு பத்தியம் கேள், பெண் உறவு ஆகாது. புளி, உப்பு நீக்கி வெந்நீருடன் சாதம் உட்கொள்.

கொண்டிடும் வெள் ளாட்டுக் கோமியமுடன்
கண்டிடு மப்படி யொன்று கடுகவே
வெண்டிடுங் கடுக்கா யரை நேரிடை
விண்டிடும் வடி செய்யுமீ ரஞ்சுமே. 175

வெள்ளாட்டு கோமியம் ஒருபடி அதில்பாதி கடுக்காய் சேர்த்து காய்ச்சி வடிகட்டிக் குடித்திடு.

அஞ்சுமே குடி யப்பனே பேதியாங்
கொஞ்சுமே பசு மோரன்னங் கொண்டிடில்
அஞ்சுமே கருப் பிட்டி புண்ணாக்குடன்
மிஞ்சு மாறுநா ளுண்ணவும் வேண்டுமே. 176

குடித்திட பேதியாகும், பசுமோரன்னம் உட்கொள், கருப்பட்டி, புண்ணாக்கு சேர்த்து மேற்படி, மருந்தை ஆறுநாள் உட்கொள்.

வேண்டுமே கரு வாடுமே மூன்றுநாள்
தீண்டுமே பல மாரதின் மாகவே
ஊண்டுமே புளி யுப்புமே தூத்திட
தாண்டுமே கெண்டை தப்பாது தேயுமே. 177

கருவாடு மூன்றுநாள், மேற்படி மருந்துடன் கொடுக்க வேண்டும் புளி, உப்பு தள்ள வேண்டும். குன்மம் குணமாகும். (இந்தப் பாடல் சரியாகத் தோன்றவில்லை).

தேயு மேனி செருப்படி நொச்சிலை
தோயுங் காஞ்சுரங் கோரைத் துளசிலை
சாயுங் கையான் தகரைப் பொடுதலை
மேயுஞ் சாரணை வெள்ளறு கோர்த்திடே. 178

குப்பைமேனி, செருப்படை, நொச்சிலை, கஞ்சாங்கோரை, துளசி இலை, கையான்தகரை, பொடுதலை, சாரணை, வெள்ளருகு, மற்றும்,

ஏர்த்திடுங் கடுக்கா யுடனிந் துப்பு
மோர்த்திடு மிளகு வசம்புசுக்கு
சேர்த்திடுங் கஞ்சி யுள்ளி திப்பிலியும்
கார்த்திடும் பெருங் காயமு மாறுமே. 179

கடுக்காய், இந்துப்பு, மிளகு, வசம்பு, சுக்கு, வெங்காயம், திப்பிலி, பெருங்காயம், இவைகள் கூட்டிக் கொள்,

ஆறுங் கூட்டி யரைத்திடு வாய்சமன்
தேறுங் கெச்சைக்காய் போலே யுருட்டியே
நேரு மண்டல மேநிதங் கொண்டிடில்
தீருங் கவுசை செப்புறேன் மெய்யிதே. 180

மேற்படி சொன்னதை சமனாக எடுத்து அரைத்து கெச்சைக்காய் போல் உருட்டி ஒரு மண்டலம் உட்கொள்ள கவுசை தீரும்.

கவுசை எலும்புருக்கிக்கு நமனாச மெழுகு

மெய்யடா நெரிஞ்சி பிரமி யிலை
வையடா யோர் வகைக்குப் பலமரை
ஐயடா நிம்பழம் போல் திரட்டியே
செய்யடா கற்கண்டு சீனி கூட்டிடே, 181

நெருஞ்சில், பிரமி இலை, வகைக்கு அரைப்பலம் அரைத்து வேப்பம்பழம் போல் திரட்டி கற்கண்டு சீனி கூட்டி இளநீரில் குழப்பி உட்கொள்,

கூட்டிடு விள நீரிற் குழப்பியே
மீட்டிடு மிள நீரு மிலாவிட்டால்
ஊட்டிடும் பசும் பாலுற வாகவே
கேட்டிடு மெலும் புருக்கிபோங் கார்த்திடே. 182

இளநீர் கிடைக்கா விட்டால் பசும்பாலில் குழப்பி உட்கொள், எலும்புருக்கி நோய் தீரும்.

கார்த்துப் பொற்கடுக்காய் களிப் பாக்குடன்
சேர்த்து ரண்டுஞ் சமனரைத்தே பலம்
ஏர்த்து மூன்று நாளிவ்விதம் கொண்டிடில்
போர்த்துக் கீரிப் புழுப்போகுங் கொண்டிடே. 183

பொற் கடுக்காய், களிப்பாக்கு இரண்டையும் சம எடை எடுத்து அரைத்து ஒருபலம் உட்கொள். இவ்விதம் மூன்றுநாள் உட்கொள். கீரிப்புழு நீங்கும்.

நீரிழிவுக்கு

[illegible]ண்டு கீழ்விளா கோரை யிலையுடன்
இல[illegible] கீழ்க்கா யிலை யிரண்டுபலம்
பண்டு வெள்ளாட்டுப் பாலரை மூன்றுநாள்
புண்டு தானே புழுவிழும் பாரிதே. 184

விளா, கோரை இலை, கீழ்க்காய் இலை இவைகளை இரண்டுபலம் எடுத்து வெள்ளாட்டுப்பாலால் அரைத்து மூன்று நாள் உட்கொள்ள வயிற்றிலுள்ள புழு வெளிப்பட்டு போகும்.

பாரு மாவாரம் பட்டை மாம்பட்டையும்
ஏரு வேலம் பட்டையிவை மூன்றுடன்
கூரு பாண்டத்து வுள்ளே யமிழ்த்திடு
வேரு நற்சலம் விட்டுமே யூறவே 185

ஆவாரம்பட்டை, மாம்பட்டை, வேலம்பட்டை, மூன்றையும் பாண்டத்துள் இட்டுத் தண்ணீர் விட்டு ஊற வை.

ஊற லானபின் னோருழக் காமதில்
சேர வாங்கு தினமெழு நீரினம்
நேர லான நெருஞ்சிப் பட்டையுடன்
பார றிந்து பாண்டத்துள் நீர்விடே. 186

ஊறுயபின் அதில் ஒரு உழக்கு வீதம் ஏழுநாள் ஊறலை எடுத்துக் கொண்டு அதில் நெருஞ்சிப் பட்டையைப் போட்டு,

நீரிட்டுக் குடிநீ நிதங் காய்ச்சியே
ஆரிட்டு வுழக்காய் நித மப்பனே
நேரிட்டுக் குடி நீரிலே யெட்டுநாள்
லிரிட்டுப் பயந்து விழுந் தஞ்சுமே 187

நீரை விட்டு காய்ச்சி உழக்கு அளவு தினமும் எட்டுநாள் உட்கொள். நீரிழிவு குணமாகும்

அஞ்சு பாக்குட னாவாரம் பட்டையும்
மிஞ்சி யுண்ணு முசுட்டை யிலைக்கனி
கொஞ்சி யாவின்றன் மோருட னன்னமும்
நெஞ்சி லுப்புப் புளிபுகை நீக்கிடே. 188

அஞ்சு பாக்கு, ஆவாரம்பட்டை, முசுட்டை இலை, பழம் இவைகளை பசுமோர் சாதத்துடன் சாப்பிட நீரிழிவு குணமாகும், உப்பு புளி, புகையைத் தள்ளு.

நாவரட்சிக்குக் காளான் சூரணம்

இழைத்திடு மிரு நேரமும் நாவினில்
அழைத்திடுஞ் சல மப்பா பெருக்கென
உழைத்திடு நாவரட்சி விட் டோடுமே
பிழைத்திடும் பிசகா முறை யாமிதே. 189

மேற்படி சரக்குகளின் சூரணத்தை நாக்கில் இட்டு சுவைத்து உட்கொள்ள நாவரட்சி தீரும்.

இரசச் செந்தூரம்

ஆமிதுப் புதுச் சட்டி யடுப்பில்வை
பாமிது வம்மான் பச்சிலை போட்டதில்

வேமிது ரசமே யிடுவோர் பலம்
போமி திவ்விலை போட்டு மேல் மூடிடே. 190

புதுச்சட்டியை அடுப்பில் வைத்து அம்மாம் பச்சரிசி இலையை போட்டு அதில் ஒருபலம் ரசத்தை இட்டு அதன் மேலும் மேற்படி இலைகளைப் போட்டு மேல்மூடி சீலைமண் மூன்று செய்திடு.

மூடிச் சீலைமண் மூன்றுமே செய்துடன்
நோடி வெய்யோன் நொடித்திடு மாலையில்
நாடித் தீபரா முப்பதுந் தானெரி
ஆடிச் சட்டிமே லப்பா சிவந்ததே 191

சீலைமண் செய்ததை வெய்யிலில் வைத்து தீபம் போல் முப்பது நாழிகை எரித்திடு. மேல் சட்டி சிவந்து போகும்.

சிவந்த போதுமே திக்கென் றிறக்கியே
கவந்த சட்டியின் காந்தலுந் தீர்ந்தெடு
துவந்த செந்தூரத் திற்பணந் தூக்கிநெய்
மிவந் தெரிந்துண் மிகப்பிணி தீருமே. 192

சிவந்தவுடன் இறக்கி சட்டி ஆறியபின் எடுத்துப்பார். செந்தூரமாகி இருக்கும் பணவெடை அளவு நெய்யில் உட்கொள்ள நோய்கள் தீரும்.

நீரிழிவுக்குத் தூறு சூரணம்

தீர்பிளி விரைத் தோலிடை யார்பலம்
வேர் பனையின் வெல்லத்திடை யார்பலம்
மார் புண்ணாக்கு வறுத்திட்டிட்டார்
சேர் விடித்திடித் தேழ்தின முண்டிடே. 193

புளி விரையின் தோல் ஆறுபலம், பனைவெல்லம் ஆறுபலம், எள்ளு புண்ணாக்கு வறுத்தது ஆறுபலம் இவைகளை இடித்து தினமும் உட்கொள்.

பத்தியம்

உண்டிடு மிரு போதுற வாகவே
வெண்டிடுங் குருவின் மொழி செய்துடன்
சென்டிடும் நீரிழிவுந் தெறிந் திடும்
சுண்டிடும் புகையும் புளி தள்ளிடே. 194

இரண்டுவேளையும் உட்கொள். நீரிழிவு குணமாகும், புளி புகையும் நீக்க வேண்டும்.

சீத சுரத்திற்கும் குளிர் சுரத்திற்கும் பவுத்திரத்திற்கும் சூரணம்

தள்ளு நாபிரச கெந்தி வாளமும்
கொள்ளு காய்சமன் கூட்டிப் பொடித்திடில்
விள்ளும் பொற்பண மேயிடை தூக்கியிட்டு
உள்ளி சீனியு மோரிடை யுண்டிடே. 195

நாபி ரசம், கெந்தகம், நேர்வாளம், கொள்ளுக்காய், இவைகளை சமனாக சேர்த்து இடித்து தூள் செய்து பண எடை எடுத்து சீனி சரிசமன் கூட்டி உட்கொள்.

உண்டிடு மிரு போதுமே மூன்றுநாள்
தெண்டிடு மகா சீத சுரத்தையும்
விண்டிடும் புளிப்பே வெறுத்தே தினம்
கொண்டிடு மிளகு நீர் பருப்புமே. 196

இரண்டு வேலையும் மூன்றுநாள் உட்கொள்ள சீத சுரம் தீரும். புளியை நீக்க வேண்டும். மிளகு, ரசம் பருப்பு சேர்த்து உட்கொள்ளலாம்.

பருப்படா முருங்கைப் பூ கழஞ்சிடை
மருப்படா திப்பிலி சமன் சேர்த்துடன்
திருப்படா வரைத்தே விதமூன்றுநாள்
இருப்படா விள வெந்நீரி லீய்ந்திடே 197

முருங்கைப் பூ கழஞ்சி எடை, திப்பிலி கழஞ்சி எடை சேர்த்து மூன்று நாள் வெந்நீரில் உட்கொள்ள குளிர் சுரம் தீரும்.

பவுத்திரக் கங்கண சிட்சை

ஈய்ந்திடு மிரு போதொரு மூன்றுநாள்
தீய்ந்திடு மேருளிர் சுர மேனிவேர்
சேர்ந்திடும் பேய்ச்சுரைக் கீரை யிண்டுவேர்
காய்ந்திடும் வேருங் கங்கணங் கட்டிடே. 198

மேனி வேர், பேய்சுரை கீரைவேர் இண்டுவேருடன்

கட்டிடுங் கொடிக் கள்ளி துளிர்பலம்
கொட்டிடு நற்சலத்தி லங்கோர் தினம்
விட்டிடு மரைத்தே யிரு நேரமும்
மட்டிடு மொரு மண்டலங் கொள்ளிதே. 199

கொடிக் கள்ளி துளிர் ஒருபலம் சேர்த்து இரு நேரமும், ஒருமண்டலம் உட்கொள்.

கொள்ளும் போது குறுகி பவுத்திரம்
முள்ளுஞ் சீழ் முளை யடிவே ரறுத்திடும்

தள்ளும் போது தவளைக் கட்டற்றிடும்
உள்ளுக்குப் புகையும் புளி யுண்டிடே., 200

உட்கொள்ள ரத்த பவுத்திரம் தீரும். சீழ்முளை அறுந்து விழும். பத்தியமாக இருக்க வேண்டும்.

உண்டிடுங் கொடி வேலியின் வேர்பலம்
செண்டிடு மிடித்தே யிழைச் சீலையில்
உண்டிடும் பொட்டணஞ் செய்தெள் ளெண்ணையில்
தண்டிடுந் தணல் தாக்கிமே லேத்திடே. 201

கொடி வேலி வேர் ஒரு பலம் இடித்து துணியில் முடிந்து எள் எண்ணெயில் போட்டு அடுப்பேத்து.

ஓது மண்டல மோரிரு நேரமும்
கேது மேழிற் கொடிய பவுத்திரம்
மூடுஞ் சீழ்முளை யடிவேறு தானறும்
மாதுபோம் புளியும் புகை தாத்திடே. 202

பதமாக எரித்து வாங்கி இரண்டு வேளையும் ஒரு மண்டலம் உட்கொள்ள, பவுத்திரம், சீழ்முளை அடிவேர், விழுந்து மேற்படி நோய்கள் தீரும். புளி, புகை போகம் நீக்க வேண்டும்.

தாத்திடா செந்திரா யிலை யார்பலம்
மேத்திடாய் வெள்ளெருக் கிலைத் தொன்னையில்
போய்த்திடாய் வைத்து பொட்டணங் கட்டிடில்
சேத்திடாய் வெந்ததை யெடுத் தோங்கிடே. 203

செந்திரா இலை ஒரு பலம், வெள்ளெருக்கன் இலையில் மேற்படி இலையை பொட்டணம்போல் கட்டி வேகவிட்டு வெந்தபின் எடுத்துக் கொள்.

ஓங்கிக் கையா லுழட்டிப் பிசைந்துடன்
தாங்கி யோரடைத் தட்டிரு நேரமும்
வாங்கியே யேழ்தின மல்லாத்திக் கட்டிடில்
நீங்கியே யோடும் பவுத்திர மில்லையே. 204

எடுத்ததை கையால் நையப் பிசைந்து அடை தட்டி பவுத்திரத்தின் மீது கட்டிவிடு. இரண்டு வேளையும் ஏழுநாள் இவ்வாறு கட்ட பவுத்திரம் குணமாகும்.

இல்லையே பலம் வாளப் பருப்பெடுத்
தில்லையே பழச்சாற்றி லரைத்துமே
நல்லவே யரையாப்பி லரைத்து பின்
கல்லையே பத்து லாத்திடக் கண்டிடே. 205

ஒருபலம் நேர்வாளப் பருப்பு எடுத்து பழச்சாற்றால் அரைத்து அரையாப்பு, பவுத்திரம் இவைகட்கு மேல் பற்று போடு, நோய்கள் தீரும்.

பவுத்திரத்திற்கும் அரையாப்புக்கும் மல்லி மூலிகைக்கட்டு

சுண்டிடுஞ் சீலை மடித்திடுங் கட்டின்மே
லண்டு வென்னீரி லக்கடி விட்டிடில்
விண்டு நீராய் மிகக்கரைந் தோடுந்தான்
பண்டு சொல்லுங் குருமொழி பார்த்திடே. 206

அரையாப்பிற்கு மேற்படி மருந்தை துணியில் தடவி மேல் கட்டி வென்னீரை அதன் மேல் விட அரையாப்புக் கட்டி கரைந்து போகும்.

பார்த்திடு மல்லிகை யிலையும் பரிச்
சாத்திடுஞ் செந் தணலில் வதக்குடன்
நேர்த்திடு ஆமணக் கெண்ணெய் தடவியே
ஆர்த்திடுங் கட்டரை யாப்புச் சுண்டுமே. 207

மல்லிகை இலையை நெருப்பில் வாட்டி ஆமணக்கு எண்ணெய் அரையாப்பு கட்டியின்மேல் தடவி அதன் மேல் மேற்படி இலையை வைத்து கட்ட அரையாப்பு கட்டி சுருங்கிப்போகும்.

அரையாப்புக்குச் சுண்ணப்பத்தும் தாமரையிலைப்பத்தும்

சுண்டிடுஞ் சிப்பிச் சுண்ணாம்புத் தொட்டிடு
வெண்டிரு மண்ட வெண்கரு விட்டிழைத்
தொண்டிடும் பகைத் தொத்திடக் கண்டறிந்
தண்டிடும் அரையாப்பி லறைந் திடே. 208

அறைந்திடு மூன்று நாளெடுத் தேயதில்
கரைந்திடுங் கதிர் கண்ட பனியென
வறைந்திடுங் குரு வாக்குப் பொய்யாதிது
நிறைந்திடும் புளி நீக்கிடு முன்னமே. 209

சிப்பிச் சுண்ணாம்பை அண்ட வெண்கருவால் மத்தித்து அரையாப்புக் கட்டியின் மீது பற்றுப் போட மூன்று நாளில் குணமாம், சூரியனைக்கண்ட பனிபோல நோய் நீங்கும், புளி நீக்கி சாதம் உட் கொள்ள வேண்டும்.

முன்னையுங் குழித் தாமரை யின்னிலைத்
தன்னையும் வாயில் மெண்ணடை தட்டியே
பின்னையு மரை யாப்பி லிறுக்கிடில்
வெண்ணெய் போல மிகக்கரைந் தாறுமே. 210

தாமரையின் இலையை வாயிலிட்டு மென்று அடை போல் தட்டி அரையாப்பு கட்டியின் மீது வைத்துக்கட்ட வெண்ணெய் உருகுவது போல் கட்டி கரைந்திடும்.

முளைகட்டிக்கு கோழிரத்தப்பத்து அண்டப்பத்து

ஆறுங் கோழி யணைவிலாக் கீருடன்
பீறும் ரெத்தம் பிடித்தெடுத் தேயடிக்
கூறுஞ் செங்கொட்டைக் குத்திப்பால் தொட்டதில்
ஏறுஞ் சுத்திழி யாமது நாடிடே. 211

கோழியின் ரத்தத்தைப் பிடித்து சேங்கொட்டைப்பால் சேர்த்துப் போடவும்.

ஆடுஞ் சுண்ணத்தி லண்டத்தின் வெண்கரு
போடும் ரெண்டும் புத்தோட்டி லிழைத்துடன்
சாடு மூன்று பத்தாக்கரை யாப்பறும
தோடு மல்லா லுடையும் புளிதள்ளே. 212

சுண்ணாம்புடன் முட்டை வெண் கரு கூட்டி மத்தித்து அரையாப்பு கட்டிக்குப் பற்றிட கட்டி உடைந்து போகும். புளிநீக்கி பத்தியம் இருக்க வேண்டும்.

பேதி கொட்டு நோய்க்கு

தள்ளடா கரிச்சான் பட்டை யரைப்பலம்
விள்ளடா வின்பால் விட்டவித் தேயரைத்
துள்ளடா புளியோ டுறவாய் பிசைக்
கொள்ளடா பேதி கொட்டுநோய் தீரும். 213

கரிச்சான் பட்டையை ஆவின் பால் விட்டு-வேகவிட்டு அரைத்து புளியுடன் பிசைந்து உட்கொள்ள பேதி கொட்டு நோய் குணமாகும்.

அரையாப்புக்கு

தீரு மின்னமுஞ் செப்புறே னுத்திரி
நீரு மேலு நெருப்பைப் பறித்தரை
ஆறு போதரை யாப்பி லிறுக்கிடில்
ஏறுங் கட்டியிளகி விட் டோடுமே. 214

நீர் மேல் நெருப்பை அரைத்து அரையாப்பு கட்டிக்கு பற்று போட கட்டி சிறுத்து குணமாகும்.

இராஜ புண்ணுக்கும் ரணத்திற்கும் வீரமுலாம்

ஒண்டிடு வீரமோர் பலங் காவிமண்
கண்டிடு பலங் காலிடைக் கூட்டியே
விண்டிடு சலம் விட்டரைத் தேதிரட்டு
அண்டிடு நிழலாக வுலர்த்திடே. 215

வீரம் ஒரு பலத்துடன், காவி மண் கால் பலம் கூட்டி தண்ணீர் விட்டு அரைத்து திரட்டி நிழலில் உலர்த்திடு.

உலர்ந்ததை யெடுத் தோங்கிய ராசப்புண்
பிலத்ததே விப்புருதி பணிச்சை மேல்
சலத்தை யேயிழைத் தாக்கிடில் மூன்றுநாள்
மலத்ததே வெந்து வாய்விடும் பார்த்திடே. 216

உலர்த்தியதை, ராஜப்புண், விப்புருதி, இவைகட்கு தண்ணீர் விட்டிழைத்து மூன்று நாள் போட கட்டி உடைந்து சீழ் ரத்தம் போகும்.

பார்த்திடாய் முலைப் பாலில் வரைரசம்
கேத்தி டாமணக் கெண்ணெய் சரியெடை
வாத்திடா யிவை மத்தித்துப் பஞ்சின்மேல்
போத்திடாய் ரணம் போமி தறிந்திடே. 217

முலைப்பால் ரசம் ஆமணக் கெண்ணை இவைகளை மத்தித்து பஞ்சின் மீது வைத்து ரணத்தின்மீது போட ரணம் குணமாகும்.

இரணங்களுக்கு அன்னக்கட்டு

அறிந்திடுபுது வன்ன மரைத்தெடுத்
தெரிந்து டெண்ணெயுஞ் சேர விட்டுப்பிசை
சரிந்திடு மடை தட்டிமேல் கட்டிடில்
பொரிந்திடும் ராசப் புண்ணழிந் தாறுமே. 218

அன்னத்தை (சாதம்) அரைத்து எண்ணெய் விட்டுப் பிசைந்து ராஜப்புண் மீது வைத்துக் கட்ட குணமாகும்.

ஆறு மேகவெடி யரையாப்பு புண்
பாறு ரெத்தப் பருப்பணிச் சையொடு
தூறு விப்புருதி தொடை வாழையும்
தீறுங் கண்ட மாலை நோயுங் கண்டிடே. 219

மேற்படி மருந்தால் அரையாப்பு புண், கட்டி, விப்புருதி தொடைவாழை, கண்டமாலை, இவைகள் குணமாகும்.

பருவுகளுக்குப் பத்து

கண்டு னற்கருங் கல்லரைத் தேயதில்
அண்டு நல்வெல்லம் அவ்விடைத் தூக்கியே
ரெண்டுங் கூட்டிரணக்கணப் பத்திடில்
பண்டு மீறும் பருவுடைந் தோடுமே. 220

கருங்கல்லை அரைத்து அதில் நல்ல வெல்லம் அந்த எடைக்குச் சேர்த்து மத்தித்து ரணங்களுக்கு பற்றிட பருக்கள் உடைந்து முளை வெளியேறும்

ஓடும் ரத்தம் சீழுள்முளை யற்றபின்
காடு னல்முருங் கையிலைச் சார்பிழிந்

தோடு மெல்லிய சீலையி லூட்டிமேற்
போடு லர்ந்து பொரிந்திடச் சாடுமே. 221

மேற்படி கட்டிகளில் இருந்து முளை சீழ் வெளியான பின் முருங்கை இலை சாற்பிழிந்து மெல்லிய துணியில் தோய்த்து புண்கள் மீது போட புண்கள் குணமாகும்.

வெட்டுப்புண்ணுக்கு

சாடுங் கோடக சாலை யிலைப்ரித்
தேடும் வேண்டியே தேயிரு நேரமும்
மாடுங் கையினால் தாக்கியீ ரைந்துநாள்
போடு மேல்வெட்டுப் புண்ணாரித் தண்டதே. 222

கோடகசாலை இலையை பறித்து அரைத்து இரண்டு வேளையும் பத்து நாட்களுக்கு வெட்டுப்பட்ட புண்ணிற்கு போட குணமாகும்.

புண்ணுக்கு கொன்னைக்கட்டு குமரிக்கட்டு மல்லிகைக்கட்டு

தண்டதே மைக்கொன்னைத் தழை யித்துடன்
அண்டதே சிறுத் தாமணக் கெண்ணெய் வார்க்
கிண்டதே வதைக்கீ யடைத்தட்டி மோர்
கண்டதேப் புண்ணீர் கட்டாரிப் போகுமே. 223

மைக் கொன்றை இலையை எடுத்து சிற்றாமணக்கு எண்ணெயில் வதக்கி அடைதட்டி புண்கட்கு கட்ட புண்கள் குணமாகும்.

ஓடுங் கற்றாழை யுட்சோ றெடுத்துட
நாடு மூவைந்து நாளிரு நேரமும்
தேடுவைத்து ரணத்தின்மேற் கட்டிடில்
நீடு புண்புரை நில்லாதி தெட்டுமே 224

கற்றாழையின் உள் சோற்றை எடுத்து இரண்டு நேரமும் பதினைந்து நாள் புண்கள் மீது கட்ட புண், புரைகள் குணமாகும்.

எட்ட மல்லிகை யிலையும் பறித்துமே
இட்ட மாமணக் கெண்ணெய் விடுத்துடன்
தொட்டமாய் வதக்கி யொரு தொந்தமாய்க்
சுட்ட ரணங்களுங் கண்டறிந் தோடுமே. 225

மல்லிகை இலையைப் பறித்து ஆமணக்கு எண்ணெயில் வதக்கி புண்களுக்கு கட்ட புண்கள் குணமாகும்.

ஒடு மவ்விலைச் சார்பிழிந் தொக்கவே
தேடு மெல்லிய சீலை துவைத்துடன்

போடு வெய்ய லுலர்த்திட்டுப் புண்ணின்மேல்
சாடு வந்து தணிந்திடுங் கண்டிடே. 226

மல்லிகையிலைச் சாற்றைப் பிழிந்து மெல்லிய துணியின் மீது தடவிப் போட புண்கள் ஆறும்.

குழிப்புண்ணுக்குக் கெந்திகாரச் சீலை

கண்டிடும் நெல்லிக் காய்கெந்தி யோர்பலம்
கொண்டிடும் படிக் கொட்டியோர் சட்டியுள்
அண்டிடுஞ் சூத மப்பா கொளுத்திவை
தண்டிடு மறு சட்டியி லேத்திடே. 227

ஏத்திடுங் கடிகை யிரண் டானபின்
பாத்திடுஞ் சத்துப் பத்துமே சட்டியும்
ஆத்திடுஞ் சிலை யாலே துவட்டியும்
போத்திடுங் குழிப்புண் போம் அறிந்திடே. 228

இரண்டு கடிகை நேரம் சென்ற பின் பார்த்திடு. மேல் சட்டியில் பதங்கம் பற்றியிருக்கும், அதை எடுத்து துணியில் ஊட்டி குழிப்புண் மீது வைத்துக் கட்ட குழிப்புண் குணமாகும்.

இரணத்திற்கு பூவரசு பத்து

அறிந்திடும் பூவரசு பழுப் பெடுத்து
எறிந்திடு வரைத் தேயிரு நேரமும்
பறிந்திடு மிரு பத்து தினத்திடில்
பொறிந்திடும் ரணம் போமிது கண்டிடே. 229

பூவரசன் பழுப்பு இலைகளை எடுத்து அரைத்து இரண்டு நேரமும் இருபது நாள் புண்கள் மீது பூச புண்கள் ஆறும்.

புண்ணுக்கு வீர பிளாஸ்திரி

கண்டிடும் வெண் மிளகு கழஞ்சிடை
அண்டிடு சட்டியி லடுப் பேற்றியே
கொண்டிடும் வெள்ளைக் குங்கிலியம் பொடி
விண்டிடும் பலமே யரைப் பார்த்திடே. 230

வெண்மிளகு ஒரு கழஞ்சி, வெள்ளைக் குங்கிலியம் அரை பலம் மற்றும்.

பார்த்திடும் நெய் பலமிரண் டேயதில்
சேர்த்திடு கழஞ் சீரரத் தூளெடு
கார்த்திடு வெங் கலத்திற் சலந்தூணி
பேர்த்திடும் வழி செய்து பிழிந்திடே. 231

நெய் இரண்டுபலம், இரண்டு சுழஞ்சு அரத்தூள், வெங்கல பாத்திரத்தில் சலம் விட்டு மேற்படி பொருட்களை விட்டு துணியால் பிழிந்து எடு.

பிழிந்த போது பிசைந்து பிசைந்துடன்
சுழிந்த நீரைக் கடந்துபூ சுத்தியாம்
சுழிந்த கண்டனைச் சுட்டு பொட்டிட
அழிந்த புண்ணி லழிந்திடு மாத்துமே. 232

பிழிந்ததை சுட்டு புண்ணின் மேல் வைக்க புண் ஆறும் (பாடல் தெளிவாக இல்லை)

ஆத்துமே மெழுக் காமணக் கெண்ணெயும்
மேத்திடு மருந்து வெள்ளைத் தூளதுக்
கேத்திரு வகைக் கீர்பலந் தூக்குடன்
சேத்திடுஞ் சட்டியில் விட்டெரி செய்யே. 233

ஆமணக்கு எண்ணெய், மருந்து வெள்ளைத்தூள் வகைக்கு இரண்டு பலம் எடுத்து சட்டியிலிட்டு எடுத்துக் கொள்.

செய்யடா வொரு சித்தெளிந் தேவரில்
பையடா யிருந் தாரும் பதத்திலே
வெய்யடா பலம் வீரம் பொடித்ததில்
மையடா கட்டி கைவலித் தேறவே. 234

பதமாக எரித்து ஒரு பலம் வீரத்தை பொடித்து எண்ணெயில் இட்டு பதமாக எடுத்துக் கொள்.

ஏறவே வலிச் சீலையி லிட்டுடன்
சாரவே ரிணந் தன்னி லொருதினம்
மூரவே கரைத் துண்ணவோர் கோழையை
ஏறவோ வொட்டதி கார மானதே. 235

எடுத்ததை துணியில் இட்டு புண்ணிற்கு போட புண் குணமாகும். இது காரமான பிளாஸ்திரி

லிங்க பிளாஸ்திரி

ஆனதே மெழுக் காமணக் கெண்ணெயும்
மானதே மத்தித்து வெள்ளைத் தூள்சமன்
போனதே சட்டிப் போட்டடுப் பேத்துடன்
தானதே வைத் துருக்கிவைத் தாத்திடே. 236

ஆமணக்கு எண்ணெய், வெள்ளைத்தூள் சட்டியில் மேற்படி இரண்டையும் இட்டு அடுப்பேற்றி நன்றாக உருக்கி ஆற வைத்திடு.

ஆத்தி வேம்பா டரைப்பலந் தூளெடு
பேத்தி லிங்கப் பொடிபலங் காலுடன்
தூத்தி யிட்டுச் சுழட்டித் துணியின்மேல்
ஏத்தி விட்டு ரணத்தை யகத்திடே. 237

ஆறிய பின் வேம்பாடம் பட்டை அரைப்பலம் தூள் செய்து லிங்கப் பொடி கால்பலத்துடன், மேற்படி மருந்தில் இட்டுக் கலக்கி துணியின் மீது தடவி ரணத்தின் மீது கட்ட ரணம் குணமாகும்.

துருசு பிளாஸ்திரி

அகத்தி டாணமக் கெண்ணெய் மெழுகுடன்
தகத்திடா மறுத்து வெள்ளைத் தூள்சமன்
இகத்திடா சட்டியி லிட்டுப் பில்லையை
மகத்திடா யுருக்கி வடி செய்திடே. 238

ஆமணக்கெண்ணெய், மெழுகு, இதே அளவு வெள்ளைத் தூள், சட்டியில் மேற்படி பொருட்களை இட்டு அடுப்பேற்றி உருக்கி வடிகட்டிடு.

செய்யடா துருசுப் பொடிக் காற்பலம்
மையடா சொரிந் தாட்டி வலிந்தபின்
துய்யடா வலுச் சீலையி லூட்டிமேல்
மெய்யடா ரணமே விடும் வேண்டிடே. 239

வடிகட்டினதுடன் தூரிசுப் பொடி கால்பலம், கூட்டி நன்றாக கலந்து துணியிலிட்டு ரணத்தின் மீது வைத்துக் கட்ட ரணம் குணமாகும்.

ஈய செந்தூரப் பிளாஸ்திரி

வேண்டு மெள்ளெண்ணெய் விட்டிடு மெண்பலம்
தோண்டிடு மீயச் செந்தூர மிருபலம்
கூண்டிடுங் குங்கிலிய மோரெண்பலம்
மீண்டி டீர்பலம் வெண்மெழுக் கேத்திடே. 240

எள் எண்ணெய் எட்டுபலம், ஈயசெந்தூரம் இரண்டுபலம், குங்கிலியம் எட்டுப்'பலம், வெண் மெழுகு இரண்டுபலம், இவைகளை சட்டியில் இட்டு அடுப்பு ஏற்று.

ஏத்திடா வெரித்தே பலங் காணிடை
ஆத்திடாய் பூர மண்டுவிட் டாடடிபின்
தேத்திடாய் வலுச் சீலையி லிட்டுடன்
பேத்திடாய் ரணம்போம் விடுஞ் செய்திடே. 241

அடுப்பேற்றி எரித்து கால்பலம் பூரம் பொடித்துப் போட்டு கலக்கி துணியில் இட்டு ரணத்தின் மீது கட்ட ரணம் குணமாகும்.

கிரந்திக்கு நுணாயெண்ணெய்

செய்யடா நுணாச் சாறைந் தடாபலம்
மெய்யடா ரச மெள்ளெண்ணெ யண்டத்தோல்
பையடா புடம் பற்பம் பணவிடை
செய்யடா குழப்'பி தினங் கொண்டிடே. 242

நுணாச்சாறு ஐந்து பலம், எள்ளெண்ணெய் ஐந்து பலம் பதமாக காய்ச்சி அண்டத்தோல் பற்பம் பணஎடை எடுத்து மேற்படி தைலத்தில் குழப்பி உட்கொள்.

கொண்டி டிந்தப் படிக்கோ ரிதைந்துநாள்
திண்டிடுங் கிரந்திப் புண் பிரமியம்
விண்டிடு மறு பத்திய மிப்படி
உண்டிடும் புளி யுப்பை நிறுத்திடே. 243

இவ்வாறு ஐந்துநாள் உட்கொள்ள கிரந்தி, புண், பிரமியம், குணமாகும், புளி, உப்பு, நீக்கி, மறுபத்தியம் இருக்க வேண்டும்.

கரப்பான் புண்ணுக்கு மிருதார்சிங்கி பிளாஸ்திரி

நிறுத்திடும் வேப் பெண்ணெய்பல மைந்துடன்
தெறித்திடு மிருதார் சிங்கிடை யீர்பலம்
மறுத்திடுங் கல்வத்தி லுற வாட்டிமேல்
தறித்திடுங் கரப்பான் புண்ணும் தாண்டுமே. 244

வேப்ப எண்ணெய் ஐந்துபலம், மிருதார் சிங்கி இரண்டு பலம், கல்வத்தில் இட்டு நன்றாக அரைத்து கரப்பான் புண்மீது பற்றிட கரப்பான் புண் குணமாகும்.

வங்க பற்பம்

தாண்டிநீ நீலியின் சார்பல மாறுடன்
வேண்டி நல்மிள கார்பல மேயிடு
தீண்டிநீ யரைத்தே வங்கத் துள்ளிடை
பூண்டு சீலைமண் போதுணர் வைத்திடே. 245

நீலிச்சாறு ஆறுபலம், மேற்படி சாற்றில் ஆறுபலம் மிளகை அரைத்து வங்கத்திற்கு கவசமிட்டு சீலை மண்செய்து உலர்த்து.

வைத்திடு கெசமே புட பற்பமாம்
பைத்திடு பொற் பணமிடை நெய்யினில்
சத்திடு மிரு போதரை மண்டலம்
முத்திடு பத்திய மொன்று மில்லையே. 246

உலர்த்தியதை கெசபுடமிடு பற்பமாகும். பற்பத்தை ஒரு பண எடை நெய்யில் கலந்து உட்கொள். இரண்டு வேளையும் ஒரு மண்டலம் உட்கொள். பத்தியம் இல்லை.

தாளக பற்பம்

இல்லை நல்மிள கீர்பலந் தாக்குடன்
செல்ல நற்கனிச் சிருங்கனிச் சாற்றினில்
வெல்லரைத்து நடுவில்வைத் தாளகம்
கொல்ல செப்புச் சிமிழ்க்குள் பொருத்திடே. 247

மிளகு இரண்டு பலம். இதை சிறுங்கனிச் சாற்றில் அரைத்து தாளகத்திற்கு கவசமிட்டு செப்பு சிமிழுக்குள் வைத்திடு.

பொருத்த டாயிரு சாண்புடம் பற்பமாம்
கருத்தினா லைங் கரனைப் பணிந்திட
நிறுத்திடாய் பொற் பணவிடை யேநிதம்
சுறுத்திடாய்த் திப்பிலி மாவிலிங் கொள்ளே. 248

வைத்ததை இருசாண் அளவு புடமிடு. பற்பமாகும். பூசை செய்து எடுத்து பண எடை பற்பத்தை திப்பிலிச் சூரணத்துடன் உட்கொள்.

கொள்ளடா தவங் கோரிரு வேழுநாள்
மெள்ளடா சய மீளை யிறப்புடன்
உள்ளடா யிரும லுடன் காசம்போம்
மெள்ளடா வெண்ணையை விட்டுக் காய்த்திடே. 249

இரண்டு வேளையும் பதினான்கு நாள் உட்கொள். சயம் ஈளை, இறைப்பு, இருமல், காசம் ஆகிய நோய்கள் குணமாகும். வெண்ணையை காய்ச்சி மேற்படி மருந்தை உட்கொள்.

பெண் வசியம்

காத்திடும் பெரு நாய்ப்பாகல் வீத்துடன்
சேத்திடு நல்லரவப் பித்தே சமன்
பாத்திடும் பேயின் பாகலின் சாற்றினில்
ஏத்திடு மரைத் திந்திரியங் கூட்டே. 250

பெரு நாய் பாகல் விதையை அதற்குச் சமன் பேய்ம் பாகல் சாறுவிட்டு இந்திரியம் கூட்டி அரைத்திடு.

கூட்டிடும் பரணைக்குள் பதனஞ் செய்
தீட்டிடுஞ் சுன்னத்தில் வெந்திய மெடை
மூட்டிடு மிருமூன்று நா ளேத்திடில்
மாட்டிடும் பெண் வசமென் றறிந்திடே. 251

அரைத்ததை சிமிழுக்குள் வைத்து பத்திரப்படுத்து. வேணும் போது வெந்தயமெடை எடுத்து ஆறுநாட்களுக்கு பெண்ணிற்கு கொடுக்க அப்பெண் உனக்கு வசியமாவாள்.

புருஷ வசியம்

அரிந்திடா யொட்டி யரவந்தன் பித்துடன்
சரிந்திடுங் காய் சரக்கொன்னை யின்பசை
தெரிந்திடுஞ் சமன்தேன்விட் டரைத்துடன்
பரிந்திடும் மூன்றுந் தோரிடைப் பாலிலே 252

பாம்பின் பித்து, சரக்கொன்றை பிசின் இவை இரண்டிற்கும் சமனாக தேன்கூட்டி அரைத்துப் பாலில் கொடுக்கப் புருஷ வசியமாகும்.

அனுபானம்

பாலும் வாழைப் பழம்பல வஸ்திலும்
மேலுஞ் சாதத்தில் வெள்ளிலை சுன்னத்தில்
நாலு போது நயந்துள்ளுக் கேத்தொருக்
காலும் விண்டிடான் கைவசந் தேர்ந்திடே. 253

மேற்படி மருந்தை வாழைப்பழம், பல திண்பண்டங்கள், சாதம், வெற்றிலை சுண்ணம் இவைகளில் வைத்து ஊளுக்கு கொடுத்துவிட அவன் வசியமாவான்.

குஷ்டம் பதினெட்டுக்கும் சூரணம்

தேரடா கான கத்தி லுரைந்தநா
வேரடா பட்டை வெய்ய லுலர்த்துடன்
பாரடா பொடிக் காரெட் டிடைபலம்
மீரடா பலமே யரைக் கொள்ளிதே. 254

காட்டில் இருக்கும் நாவல் மரத்தின் பட்டையை வெய்யிலில் உலர்த்தி பொடி செய்து எட்டு எடை, அதில் பாடல் தெளிவாக இல்லை.

அனுபானம்

கொள்ளும் வென்னீர் குழைத்திடு நேரமும்
தெள்ளு குஷ்டம் திமிர்பெரு நோய்கடி
விள்ளு மேகம் விடுமண் டலத்திலே
தள்ளுமே புளித் தான்விடுத் துண்டிடே. 255

இரண்டு நேரமும் ஒரு மண்டலம் மேற்படி மருந்தை உட்கொள்ள குஷ்டம், திமிர், பெருநோய் கடி இவைகள் தீரும். புளி நீக்கி உணவு உட்கொள்.

சுரஞ் சன்னிக் குளுருக்கு ஆனந்த வயிரவக் குளிகை

உண்டிடுஞ் சூதம் நாபி மனோசிலைக்
கண்டிடுங் கெந்தி லிங்கம் வெண்காரமும்
விண்டிடும் வகை வீதஞ் சமனொடு
அண்டிடும் பழச் சாற்றினி லாட்டிடே. 256

சூதம், நாபி, மனோசிலை, கெந்திலிங்கம், வெண்காரம் இவைகளை சம எடை எடுத்து பழச்சாற்றில் அரைத்திடு.

ஆட்டு லர்த்தியோ ரானந்த நாதனை
நாட்டிடு மிஞ்சி ரசத்தினில் சன்னிக்கு
கூட்டுமே தேனிற் குளிருஞ் சுரத்துக்குக்
காட்டும் பத்தியங் காணப் பறக்குமே. 257

அரைத்து உலர்த்திடு, சன்னிக்கு இஞ்சி சாற்றிலும் குளிர் சுரத்திற்கு தேனிலும் கொடுத்து பத்தியமிருக்க மேற்படி நோய்கள் குணமாகும்.

சகல வியாதிக்குங் கெந்தி கபாடக்குளிகை

பறக்குங் கெந்தி நெல்லிப் பருப்புச்சுக்கு
சிறக்கு மிளகு திப்பிலித் தான்றிக்காய்
விறக்கு நாபிக் கடுக்காய் வெண்காரமும்
கறக்குஞ் சூத மரிதாரங் கண்டிடே. 258

கெந்தம், நெல்லிப்பருப்பு, சுக்கு, மிளகு, திப்பிலி, தான்றிக்காய், நாபி, கடுக்காய், வெண்காரம், சூதம், அரிதாரம் இவைகள் வகைக்கு கழஞ்சி எடை.

கண்டி டொன்று வகைக்கு கழஞ்சிடை
திண்டிடுங் கண்ணிச் சிலாங்கனிச் சாற்றினில்
உண்டி டாட்டி யுருட்டிப் பயறுபோல்
வெண்டிடும் வெய்ய லாகா துலர்த்திடே. 259

மேற்படி சரக்குகளை கரிசலாங்கண்ணி சாற்றில் அரைத்து பயிறுபோல் உருட்டி நிழலில் உலர்த்திடு.

உலத்தி நெல்லிச் சாறூட்டிடத் தாகம்போம்
பெலத்த நெய்யினிற் பேதியைக் கட்டிடும்
கலத்தி டாட்டுப்பால் கல்லெரிப் போடிடும்
குலத்து மேனியிற் குன்மந் தெரிக்குமே. 260

நெல்லிச்சாறுடன் மேற்படி மாத்திரையை கொடுக்க தாகமும், நெய்யினில் மேற்படி மாத்திரையை கொடுக்க பேதியும் ஆட்டுப் பாலில் மேற்படி மாத்திர்ரையைக் கொடுக்க கல்எரிப்பும், குப்பைமேனிசாற்றில் கொடுக்க குன்மமும் குணமாகும்.

தெரிக்கு மாமணக் கெண்ணெயில் பேதியாம்
தரிக்குமே பழச் சாற்றினில் மேகமாம்
பிரிக்கும் கையான் ரசம்பித்தம் போக்கிடும்
விரிக்குமே புளி சார்சுர மாட்டிடே. 261

ஆமணக்கு எண்ணெயில் மேற்படி மாத்திரையைக் கொடுக்க பேதியாகும்; பழச்சாற்றில் கொடுக்க மேகமும் கையான் சாற்றில் கொடுக்க பித்தமும் புளியிலைச் சாற்றில் கொடுக்கச் சுரமும் தீரும்.

மாட்டிடு மெருமைத் தயிர் தன்னிலே
நாட்டுன் டொன்பது நாளில் கிராணிபோம்
போட்டிடும் வசம்புப் பொடி தன்னிலே
வாட்டிடும் பிராந்தி வாந்திபோங் கண்டிடே. 262

எருமைத் தயிருடன் மேற்படி மாத்திரையை ஒன்பதுநாள் கொடுக்க கிராணி குணமாகும், வசம்புப் பொடியில் மாத்திரையைக் கொடுக்க குமட்டல், வாந்தி குணமாகும்.

கடுக்காய் லேகியம்

கண்டிடாய் பொற் கடுக்காய்த்தூ ளெண்பலம்
வண்டிடாய் பனவெல்லம் ரெட்டுப் பலம்
கண்டி டாமணக் கெண்ணெய் சரியிடை
அண்டி டாம லேகியம்போல் பிரட்டிடே. 263

பொற்கடுக்காய்த்தூள் எட்டு பலம், பனைவெல்லம் எட்டுப் பலம், ஆமணக்கெண்ணெய் சரிஎடை சேர்த்து லேகியம் போல் கிளறிக் கொள்.

பிரட்டியே மறு பீங்கானில் வைத்திடு
வரட்டு மண்டல மாமருந் துள்ளுக்குத்
திரட்டு வாய்நிதந் தின்றி டரைப்பலம்
மிரட்டு வாதம் வெளிப்படத் தீட்டிடே. 264

கிளறிப் பீங்கானில் பத்திரப்படுத்து. அரைப் பலமாக இருவேளை ஒரு மண்டலம் உட்கொள். வாதநீர் வெளியாகி வாதம் குணமாகும்.

தீட்டி னாட்டி னிறச்சி கவிச்சொடு
பார்த்திடா மெதிப் பாகலின் சாற்றினில்
மார்த்திடாய் வாயுவு வஸ்து வகற்றியுண்
நேர்த்திடா நோ யிறங்கும் பின்னோடுமே. 265

ஆட்டின் இறைச்சி அல்லது மிதிபாகல் சாற்றில் கொடுக்கவும் குணமாகும். வாய்வுப் பண்டங்கள் நீக்கி உணவு கொள். நோய்கள் குணமாகும்.

ஓடும் வேளை வேருத்தா மணியின்வேர்
மூடு மாவுலிங்கப் பட்டை தன்னுடன்
ஓடு நால்வகைக் கோர்பல மேரசம்
தோடு வாங்கி முறித்துச் சூடாத்திடே. 266

வேளை வேர், உத்தாமணிவேர் மாவுலிங்கப் பட்டை, மூன்றும் வகைக்கு ஒருபலம் சாறு எடுத்துக் கொள்.

மந்த ஜன்னிசுரம்

ஆத்தி டாய்ப்பின் னரிசியின் திப்பிலி
கோத்தி டாய்மிள கோடுடன் சுக்குடன்

ஏத்திடாய் நவ லோக மிழைத்துடன்
வார்த்திடாய் ஜன்னி மாந்தம்போம் பார்த்திடே. 267

எடுத்ததை சூடாக்கி ஆறவிட்டு அரிசித்திப்பிலி மிளகு, சுக்கு இவற்றுடன் நவ்லோகம் இழைத்து கொடுக்க ஜன்னி, மாந்தம் குணமாகும்.

பின்னிசுவு முன்னிசுவு குடைச்சல் சுரஜன்னிக்கு

பாரிது முருங்கைப் பட்டை யெண்பலம்
சேரிது வொரு சென்னிவெள் ளுள்ளிடை
ஏரிது பலம் ரெண்டுற வாகவே
தூரிது விடித் தோரடை தட்டிடே. 268

முருங்கைப்பட்டை, எட்டுபலம், சிறுசின்னி, வெள்ளுள்ளி வகைக்கு இருபலம் இட்டு உறவாக இடித்து அடை தட்டிக் கொள்.

தட்டிப் பின்தலை யொட்டிக் கவிழ்த்ததை
ஒட்டிச் சீலை யுரமாகச் சுற்றியே
கட்டிப் போடு கடிகை யாரைந்துமே
கெட்டி நோயுங் கெடுங்கெடு முண்டிடே. 269

அடையை சீலை சுற்றி முப்பது கடிகை வைத்திருந்து பின் கொடுக்க நோய்கள் குணமாகும்.

மன்னி யேழுமே மாந்தக் குடைச்சலும்
பின்னிசு முன்னிசு தனுர் வாயுவும்
சென்னி நோய்சிரோ பாரங் குளிர்சுரம்
சன்னி வாதஞ் சயித்தியம் நீங்குமே. 270

ஏழுவகை மாந்தம், குடைச்சல், தனுர்வாய்வு, ஜன்னி, தலைபாரம், குளிர்சுரம், சன்னிவாதம், சயித்தியம் இவைகள் மேற்படி மருந்தால் நீங்கும்.

நீங்கும் பத்தியம் நெஞ்சினி லுத்திரி
ஓங்கும் வெள்ளாட்டுப் பாலுற வாமதில்
தாங்கும் வேய்விரை சாமைமுன் பாலினில்
பாங்கு செய்துணர் பரிந்துநோய் தீர்த்திடே. 271

மேற்படி மருந்துண்ண பத்தியம் காத்திடு, வெள்ளாட்டு பாலில் மூங்கிலரிசி சாமை சேர்த்து வேக வைத்து உட்கொள்.

புழுவெட்டுக் கடிக்கும் ஊரலுக்கும் சிப்பித்தயிலம் பூசல்

தீர்த்து யெண்ணெயின் சிப்பி யிருநூறு
பார்த்துக் கொட்டிப் பெரும்பாண்டத் துள்ளடை
சேர்த்துச் சட்டிவாய் சீலைமண் செய்துடன்
கார்த்து வார்துளை க் கண்ணது செய்திடே. 272

பெரிய பாண்டத்துள் எண்ணெய் ஊற்றி இருநூறு சிப்பிகளை இட்டு மூடி சீலைமண் செய், அதில் துளை ஒன்றை செய்திடு.

செய்யுங் கெந்தி துருசு மிளகொடு
வையு மொன்று வகைக்குப் பலமிடை
நைய பொட்டிடு நற்கல சத்தினில்
வெய்யுந் தந்தியால் விட்டு நுழைத்திடே. 273

கெந்தகம், துரிசு, மிளகு வகைக்கு ஒருபலம் எடுத்து பொடி செய்து கலசத்துள் இடு. மேற்படி துளையில் கப்பி பொருத்து.

நுழைத்திடுங் கலச மதில் தீப்புகை
வழைத்திடும் பிசகாமல் மண்சீலைசெய்
விழைத்திடுங் கெசமே புட மானபின்
குழைத்திடு வொரு குப்பியில் வார்த்திடே. 274

மண்சீலை செய்து கெசபுடமிடு. இறங்கிய தைலத்தைக் குப்பியில் வாங்கிக் கொள்.

வார்த்திடும் புழு வெட்டுக் கடித்திமிர்
பார்த்திடு மூரல் பத்தர வெட்டிடும்
நேர்த்திடும் பசுநெய் தயி ரன்னமும்
ஏர்த்திடும் பாலிவை யன்ன முண்ணுமே 275

புழுவெட்டு கடித்திமிர், ஊரல், படை, இவைகட்கு பசு நெய், தயிர்சாதம், பால் அன்னம் இவைகள் மட்டும் உண்டு, மேற்படி மருந்தை பயன்படுத்து.

பருவுகளுக்கு மருந்து

பார்த்திடே யிப்படி யொருமூன்று நாள்
மார்த்திடே புட்டு வைத்தாவி கட்டுடன்
நேர்த்திடே நாறும் நோய்நெகிழ்ந் தோடிடும்
ஏர்த்திடே பத்திய மில்லைக் காத்திடே. 276

மேற்படி மருந்தை மூன்றுநாள் புட்டாவி வைத்துக்கட்டு, மேற்கண்ட நோய்கள் தீரும், பத்தியம் இல்லை.

இரச செந்தூரம்

காத்திடு மிரதங் கருஞ் சீரகம்
ஏத்திடு நல் மிளகுநற் சீரகம்
கோத்திடுஞ் சுக்கு லிங்க மனோசிலை
மாத்திடு நாவியு மரி தாரமே. 277

இரசம், கருஞ்சீரம், மிளகு, சீரகம், சுக்கு, லிங்கம், மனோசிலை, நாவி, அரிதாரம்.

தாரப் பாவகைக் கிச்சம னாகவே
நேரப் பாநற் சீரகக் கியாழத்தில்
சேரப் பாவரைத் தீரைந்து நாழிகை
மாரப் பாகுகை யுள்மருந் தாண்டிடே. 278

மேற்படி பொருட்கள் சமன் எடை எடுத்து சீரக கியாழத்தில் பத்து நாழிகை அரைத்து குகையில் வைத்திடு.

தாண்டிடு மிருசாண் குழி வெட்டியே
தோண்டிடும் புகைத்துப் புடம் போட்டுடன்
தாண்டிடுஞ் சீரகப் புகை வீசினால்
பூண்டிடும் புடம் யின்னொன்று போட்டிடே. 279

மேற்படி குகையை வைத்து இருசாண் அளவுள்ள குழியில் வைத்துப் புடத்தைப் போடு, சீரகப் புகை வரும் சமயம் எடுத்து ஆறிய பின் மீண்டும் புடம்போடு.

போட்டிடு செந்தூரம் பொற்ப் பணவிடை
நாட்டிடு நற் சீரகக் கியாழத்தில்
நீட்டிடு மிரு நேரமோ ரேழுநாள்
ஊட்டிடு மிருமல் சய மோடுமே 280

செந்தூரத்தை ஒரு பண வெடை சீரக கியாழத்தில் இரு வேளையும் ஏழுநாள் உட்கொள்.

ஓடும் வாயுவுப் புகைச்ச லிளைப்பதும்
தோடுங் காசமேற் சுவாசமோ ரேழ்விட்டு
ஓடும் வெந்நீரோ டன்னம் பொசித்திடில்
போடு முப்பு புளிபுகை தள்ளிடே 282

இருமல், சயம், வாய்வு, புகைச்சல், இளைப்பு, காசம், இவ்வகை நோய்கள் தீரும். வெந்நீருடன் அன்னம் உட்கொள். புளி, புகை, உப்பு, தள்ளி பத்தியமாக இருக்க வேண்டும்.

சூத கெந்திதார செந்தூரம்

தள்ளப்பா யிரதம் பல மூன்றுதான்
கொள்ளப்பா கெந்தி கூட்டிவிட் டோர்பலம்
மெள்ளப்பா வரி தாரம் பலமரை
தெள்ளப்பா பொடித்தே குப்பிக் கேத்திடே. 282

மூன்று பலம் ரசம் கெந்தகம் ஒருபலம் அரிதாரம் அரைப்பலம் இவைகளைப் பொடித்து குப்பிக்குள் ஏற்று.

ஏத்திடு ரசம் பின்பொடி யேவிடு
வாய்த்திடுக் குப்பி வாய்த்துணி யிட்டடை
சேத்திடு வெழு சீலைமண் செய்துடன்
காத்திடும் பெருஞ் சட்டியில் வைத்திடு. 283

ரசத்தை முன் குப்பிக்குள்ளிட்டு அதன்மேல் மேற்படி பொடியைப் போடு. குப்பியின் வாயில் துணியை வைத்து அடைத்து ஏழுசீலைமண் செய்து பெரிய பாண்டத்துள்வைத்து குப்பியின் வாயளவு மணலிடு.

வைத்திடு மணல் வாயள வுஞ்சொரி
மொய்த்திடுஞ் சட்டி மூடிமண் சீலைசெய்
கைத்திடும் புடந் தாழனா ளொன்றரை
மெய்த்திடுஞ் செந்தூர மிது பார்த்திடே. 284

பின் பாண்டத்தின் மூடியிட்டு சீலைமண்செய்து ஒன்றரை நாள் புடத்திலிட்டு எரித்து வாங்கு. செந்தூரமாகும்.

பார்த்தி டாதி சத்திச் சுதனைப்பணிந்
தேத்திடாய் வந்தனை செய் தெடுத்துடன்
போத்திடாய் பொர்ப் பணமிடை தாக்கிவிட்
டேத்திடா யனு பானந் தரித்திடே. 285

கணபதிக்கு பூசை செய்து எடுத்து செந்தூரத்தை அனுபானத்துடன் கொடு.

இதனுடன் அனுபானம்

தரித்தி டரிசித் திப்பிலி சீரகந்
தெரித்தி டாச்சுரந் தீர்ந்திடு மூன்றுநாள்
சரித்திடாய் நொச்சி சாற்றினி லிழைத்திடில்
முரித்திடா சன்னி முன்னழிந் தோடுமே. 286

அரிசித் திப்பிலி, சீரகம் இவைகளுடன் மேற்படி செந்தூரத்தை பணவெடை கொடு. மூன்று நாளில் சுரம் தீர்ந்திடும். நொச்சி சாற்றில் செந்தூரத்தைக் கூட்டிக் கொடுக்க சன்னி தீரும்.

ஓடும் நெரிஞ்சிலைச் சுளை சக்கரைத்
தோடு நாளேழ் திரட்டிக் கொடுத்திடில்
சாடும் பித்தந் தலைச்சுழல் வாயுவுங்
கேடு மந்தங் கெடுங்கெடுங் கண்டிடே. 287

நெரிஞ்சியுடன் சர்க்கரைக் கூட்டி மேற்படிசெந்தூரத்தை கொடுக்க, பித்தம் கிறுகிறுப்பு வாய்வு இவைகள் குணமாகும்.

கண்டி டாவிநெய் யிற்கலந் தேழுனாள்
கொண்டிடாய் சேத்துமங் குதித் தோடிடும்
வெண்டிடாய் சலம் விட்டிழை மண்டலம்
உண்டிடாய் குட்ட மூரல் தெரிக்குமே. 288

ஆவின் நெய்யில் செந்தூரத்தை அளவுபட கலந்து உண்ண சேத்தும நோய் தீரும். தண்ணீர்விட்டு இழைத்து செந்தூரத்தை ஒரு மண்டலம் உட்கொள்ள குட்டம் ஊரல் குணமாகும்.

தெரிக்கும் நெர்ப்பொரி தேனெய்யி லேழுநாள்
கரிக்கும் வாந்தி காணாது பின்னோடிடும்
குரிக்கும் செவ்விள நீர்குடி நீருடன்
எரிக்குஞ் சீனி யிரண்டுடன் சேர்த்திடே. 289

நெற்பொறி, தேன், நெய் கலந்து மேற்படி செந்தூரத்தை ஏழுநாள் உட்கொள்ள வாந்தி குணமாகும், செவ்விளநீர் சீனியுடன் மேற்படி செந்தூரத்தை உட்கொள்.

சேர்த்திடாய் தாகந் தீருநா ளொன்றினில்
ஏர்த்திடா யுப்பு புளிப்புகை யேவிடு
நேர்த்திடா யிள நீரில் குடித்திடில்
பார்த்திடாய்ப் பயித்தியம் விட்டோடுமே. 290

மேற்படி ஒருநாள் உட்கொள்ள தாகம் தீரும். உப்பு, புளி, புகையை நீக்கி பத்தியம் காத்திடு, இளநீரில் செந்தூரத்தைக் கொள்ள பயித்தியம் தீரும்.

ஓடுங் கையான் ரசத்திலோ ரேழுநாள்
சாடுஞ் சுவாசந் தரித்திடா தோடிடும்
ஆடுங் காய மரிசியின் திப்பிலி
சாடுமே யெவச் சாரமும் போட்டிடே. 291

கையான் சாற்றில் மேற்படி செந்தூரத்தை ஏழுநாள் உட்கொள்ள சுவாசம் குணமாகும், பொருங்காயம், அரிசி, திப்பிலி, எவட்சாரம் மற்றும்.

போட்டிடு மிளகு யிரு போதுதான்
மாட்டிடு மழுவை வலி வீக்கமும்
மூட்டிடு யிளவென் னீரோ டன்னமுந்
தாட்டிடும் புகைப்புளி யுப்பு தள்ளிடே. 292

மிளகு, கூட்டி இருவேளையும் உட்கொள்ள முட்டுவலி, வீக்கம், குணமாகும், வென்னீருடன் அன்னம் கூட்டி புகை, உப்பு நீக்கி மருந்தை ஏழுநாள் உட்கொள்ள பாண்டு காமாலை தீரும்.

தள்ளப்பா பொடி தன்னிலிட் டேழுநாள்
மெள்ளப் பாண்டு காமாலை விட்டோடிடும்
வெள்ளப் பூண்டு தயில மீரைந்துநாள்
உள்ள வாயுவு மொதுங்கிப்பின் னெட்டுமே. 293

பூண்டு தயிலத்துடன் செந்தூரத்தை பத்து நாளுட் கொள்ள வாய்வு நீங்கி போகும்.

எட்டு வேலஞ்சா் றிட்டிழைத் தேழுநாள்
கொட்டிடும் பல்நோய் குதித்துப் பின்னோடிடும்
திட்டிடு முசுக்கைச் சாற்விட் டேழுநாள்
முட்டிடும் பித்த முறிந்திடுங் கண்டிடே. 294

வேலஞ்சாற்றில் செந்தூரத்தை இழைத்து ஏழுநாள் தேய்க்க பல்நோய தீரும். முசுமுசுக்கை சாற்றில் ஏழுநாள் உட்கொள்ள பித்தம் தீரும்.

கண்டிடாய் கதலிக் கிழங்குச் சலங்
கொண்டிடாய்ப் பெருங் கொள்ளவி நீரதில்
உண்டிடா யிரு போதுமோ ரேழுநாள்
தொண்டிடாய் வயிற் றுப்பிசந் தீருமே. 295

கதலிக் கிழங்குச் சாற்றில் அல்லது கொள்ளு வேக வைத்த நீரில் மேற்படி ஏழுநாள் இருவேளையும் உட்கொள்ள வயிற்று உப்புசம் தீரும்.

தீரடா கரும்பின் ரசத் திலிழை
வாரடா வயிர் பேதியா மார்திறம்
வேரடாப் புளியும் புகை விட்டுடன்
காரடா வென்னீ ரன்னமுங் காட்டிடே. 296

கரும்பின் சாற்றில் செந்தூரத்தை இழைத்து உட்கொள். ஆறுதடவை பேதியாகும், உப்பு, புளி, புகை நீக்கி வென்னீரன்னத்தை உட்கொள்ள வேண்டும்.

பயித்தியத்திற்கு சிரோஸ்நான சிட்சிகாபரிசனம்

காட்டுப் பொட்டுப் பலகரை யீரைந்து
ஆட்டு நாழியறு திங்கள் காடியும்
மாட்டு நிம்பழச் சாற்வகை யார்பலம்
நாட்டு நாளாற் றடைவிலங் கேத்திடே. 297

பலகரை பத்துபலம், ஆறுமாத பழங்காடி நாழி, நிம்ப பழச்சாறு ஆறுபலம், இவைகளை கலந்து வை.

ஏத்திடுப் பின் னிருக் கிருகையனை
வாத்திடு முன் மருந்தை நசியமாய்க்
கீத்திடு தலைக் கீறி மருந்ததில்
தீத்திடு நடு நெற்றித் தெரிந்திடே. 298

கலந்ததை நசியமாக கொடு, தலையை கீறி இம்மருந்தை அதில் ஊற்று. நெற்றியைக் கீறி அதுபோல் செய்திடு.

தெரிந்திடு நூற் றிருபத் திருகுடம்
சொரிந்திடு சலஞ் சுவாசம் விடாமலே
பிரிந்திடும் வாதப் பித்தப் பயித்தியம்
மரிந்திடு முறை யப்பா கைகண்டதே. 299

செய்து நூற்றி இருபத்தி இரண்டு குடம் தண்ணீரை சுவாசம் விடாமல் மேலே ஊற்று. வாதம், பித்தம் பயித்தியம் குணமாகும்.

மேகநாதக் குளிகை

கண்டி டப்பா வெண்காரஞ் சிவதைவேர்க்
கொண்டி டப்பா மிளகொடு லிங்கமும்
விண்டி டப்பா மாவிலிங்கம் வசம்பொடு
தொண்டி டப்பா யிந்துப்பும் பெருங்காயமே. 300

வெண்காரம், சிவதைவேர், மிளகு, லிங்கம், மாவிலிங்கம், வசம்பு, இந்துப்பு, பெருங்காயம் மற்றும்.

காயஞ் சுக்கு காளாஞ்சிவேர்த் திப்பிலி
சாய வைக் குராசானி யிருவகை
நேய வைத்து நிரைசமன் சேர்த்திடு
மாய வைத்து நேர்வாளந் தெரிந்திடே. 301

சுக்கு, காளாஞ்சி, வேர்த் திப்பிலி, ஓமம், குரோசானி ஓமம் இவைகளை சமனாக எடுத்துக் கொள். மொத்த சரக்கிற்கு சமனாக நேர்வாளம் எடுத்துக் கொள்.

தெரிந்திடாச் சமன் சேர்த்திரு சாமமும்
சரிந்திடாப் பழச் சாற்றி லரைத்தெடு
விரிந்திடாக் குன்றி வீதந் திரட்டியே
எரிந்திடா தேன் நிழலி லுலர்த்திடே. 302

சரக்குக ளை சேர்த்து இருசாமம் பழச்சாற்றால் அரைத்து குன்றி அளவு திரட்டி நிழலில் உலர்த்திடு.

உலர்த்திடு மேக நாதன் குளிகையாம்
பெலர்த்திடு வெல்லம் போதத் தீரைந்துநாள்
குலர்த்திடும் பஞ்ச குன்மம் விட்டோடிடும்
நிலர்த்திடும் பத்திய நிதங் காத்திடே. 303

இது மேகநாதன் குளிகை ஆகும். வெல்லத்துடன் பத்து நாள் உட்கொள்ள ஐந்துவகை குன்மமும் தீரும். பத்தியமாக இருக்க வேண்டும்.

கார்த்திடாய் வெண்ணெயிற் கலந் தேழுநாள்
பார்த்திடாய் சயம் பாண்டு காமாலையும்
தீர்த்திடா யசீரணம் பசி யுமாம்
போர்த்திடாய் புளியும் புகை தள்ளிடே. 304

மேகநாதன் குளிகையை வெண்ணெயில் கலந்து ஏழுநாள் கொள்ள சயம். காமாலை, பாண்டு இவைகள் தீர்ந்து நல்ல சீரண சக்தியும், பசியும், உண்டாகும். புளி, புகை தள்ளி பத்தியம் காக்க வேண்டும்.

தள்ளி டிந்தப் படியீ ரைந்துநாள்
கொள்ள டப்பிர மூலம கோதரம்

உள்ளிடச் சுவாச காசம் விட்டோடும்
விள்ளிடிற் புளியும் புகை தள்ளிடே. 305

இவ்வாறு பத்துநாள் உட்கொள்ள மூலம், மகோதரம், சுவாசகாசம் குணமாகும், புளி புகையை நீக்க வேண்டும்.

விட்டிடிஞ் சிரச மீரைந்து நாள்
தொட்டிடு மிரு போதுற வாகவே
தட்டிடாப் படர் தாமரை யார்ப்பித்தந்
தொட்டிடீ ருத்திர ரோகஞ் சொரியுமே. 306

இஞ்சிச் சாறுடன் மேற்படி குளிகையை பத்துநாள் இரண்டு வேளையும் உட்கொள்ள, படர்தாமரை. பித்தம் இவைகள் குணமாகும்.

சொரியுமோ கடி கஞ்சாவேர் தகரையும்
மரியுமே யிவை யைந்துமே மோருடன்
புரியுமே புகையும் புளி பழையது
மெரியுமே பந்திய மீதரிந் திடே. 307

கஞ்சாவேர், தகரைவேர் இவைகள் ஐந்துபங்கு எடுத்து மோருடன் சேர்த்து மேகநாதன் குளிகையை உட்கொள். புளி உப்பு, புகை, பழைய சாதம் இவைகள் ஆகாது.

அரிந்திடு சுக் கரிசியின் திப்பிலி
எரிந்திடு மிளகு யிவை மூன்றினில்
சொறிந்திடுஞ் சலஞ் சுண்டெரித் தேயதில்
தெரிந்திடுங் குளிகை யொன்று தேய்த்திடே. 308

சுக்கு, அரிசித் திப்பிலி, மிளகு இவை மூன்றும் இட்டுக் கஷாயம் வைத்து மேற்படிகுளிகையை கஷாயத்துடன் சேர்த்து உட்கொள்ள வேண்டும்.

தேய்த்திடு யிரு போதின மேழுநாள்
நேத்திடும் வாயிநீர் கொள்ளு மாங்கிஷ
மாத்திடு முதிரமு மந் தாக்கினி
பாத்திடு விருமல் பறந் தோடுமே. 309

மேற்படி முறையில் ஏழுநாள், உட்கொள்ள வாயில் நீர் ஊறல், ரத்த மந்தாக்கினி, இருமல், இவைகள் தீரும்.

ஓடும் பத்திய முண்டது கண்டறி
போட முப்புப் புளிபுகை தள்ளிடு
ஆடும் வெந்நீரோ டன்னம் புசித்திடு
நாடுந் தேரையர் நல்முறை செய்திடே. 310

மேற்படி மருந்தை உட்கொள்ளும்போது புளி, உப்பு புகையை நீக்கி பத்தியமாக இருக்க வேண்டும். வெந்நீருடன் அன்னம் உட்கொண்டு தேரையராகிய நான் சொன்ன இம்முறையை பார்த்திடு. நோய்கள் தீருவது திண்ணம்.

உஷ்ணத்துக்கு லேகியம்

செய்யப்பா குராசானி நற் சீரகம்
பையப்பா சத குப்பியுந் திப்பிலி
வெய்யப்பா பெருங் காயம் விளங்கமும்
பையப்பா லவுங்க மிள கேத்திடே. 311

குரோசானி ஓமம், சீரகம், சதகுப்பை, திப்பிலி, பெருங்காயம், வாய்விளங்கம், லவுங்கம், மிளகு, மற்றும்,

ஏத்திடிர்ச் சித்தரத் தையி டோமமும்
கார்த்திடிர்க் கருஞ் சீரகஞ் சாதிக்காய்
போத்திடிர் வெள்ளைப் பூண்டு வகைசமன்
பார்த்திடிர் பொடி பக்குவஞ் செய்திடே. 312

சித்தரத்தை, ஓமம். கருஞ்சீரகம், சாதிக்காய், வெள்ளைப் பூண்டு இவைகளை சமனாக சேர்த்து இடித்துப் பொடி செய்.

செய்யிது சமன் சேர்பன வெல்லமும்
பையிது கொட்டைப் பாக்கள வாகவே
கெய்யிது விரு போதுமூ வேழுநாள்
வையிது உஷ்ண வாயுவுந் தீருமே. 313

சரக்குகளின் பொடிக்கு சமமாக பனை வெல்லம் சேர்த்து இடித்து கொட்டைபாக்கு அளவு இருவேளையும் இருபத்து ஒருநாள் உட்கொள்ள உஷ்ணம், வாய்வு தீரும்.

தீரடா நாய்த் துளசிக் கியாழத்தில்
நேரடா மிளகின் னிடைக் காற்பலஞ்
சேரடா சிறு திப்பிலிக் காற்பலம்
வேரடா வரைத் திவ்விதங் கொண்டிடே. 314

நாய்த்துளசி கியாழத்தில் மிளகுத் தூள் கால்பலம். திப்பிலித்தூள் கால்பலம் இட்டு அரைத்து உட்கொள்.

சிறுநீரிறங்க

கொண்டிடு முடக் கொத்தா னிடைப்பலம்
புண்டிடும் வெள்ளைப் பூண்டிடு அரைப்பலம்
வெண்டிடு மரைத் திவ்வித மூன்றுநாள்
கண்டிடுஞ் சிறுநீர்க் கட் டிறங்குமே. 315

முடக்கொத்தான் ஒருபலம், வெள்ளைப் பூண்டு அரைப் பலம், இரண்டையும் அரைத்து உட்கொள், இவ்விதம் மூன்று நாளுட்கொள், சிறுநீர்க்கட்டு இறங்கும்.

குன்மங்களுக்கு லேகியம்

இறங்குந் தேத்தான் வித்தேயெடுத் தோர்பலம்
பறங்கு மாவினின் பால்விட் டரைத்துடன்
நறங்கு நற்குழலா தொண்டை வேர்ப்பட்டை
வறங்குங் கோஷ்ட்ட மதுரமுஞ் சேர்த்திடே. 316

தேத்தான் விதை ஒருபலம், இதை ஆவின் பால்விட்டு அரைத்து அத்துடன் குழலாதொண்டை வேர்பட்டை ஒரு பலம், கோஷ்டம், அதிமதுரம் மற்றும்.

சேர்த்தி டேலங் கிராம்பு சன்னிக்கொடால்
மார்த்தி டமுர்த வள்ளிக் கிழங்கொடு
தோத்தி னல்ல முசுக்கையின் வேருடன்
கேத்தி டப்பக் கிழங்கு நல்வெல்லமே. 317

ஏலம், கிராம்பு, வள்ளிக்கிழங்கு, முசுக்கைவேர், அப்பக் கிழங்கு, நல்ல வெல்லம் வகைக்கு அரைபலம். சன்னிக் கொடால் என்பதுவிளங்க வில்லை.

வெல்லத் தோடு வகைக்குப் பலமரை
நல்லத் தோடுக் காராம் பசும்பால்படி
எல்லத் தோடு விழைத்தெரித் தேபத
மல்லத் தோடுப் பசுவிநெய் வார்த்திடே. 318

காராம் பசும்பால் ஒருபடியும் மேற்படி சரக்குகளுடன் சேர்த்து பசுநெய் விட்டு இரு நாழிகை எரித்து பதமாக கிளறி எடுத்துக் கொள்.

வார்த்திடு விருநாழி மாறா திருந்
தேர்த்திடு வெரித்தே யிரு நேரமும்
பார்த்திடு பலமா யிருபத்து நாள்
கார்த்திடு முறை கைகண்ட தோங்கிடே. 319

நாளொன்றுக்கு ஒருபலம் வரை உட்கொள். இவ்வாறு இருபது நாளுட்கொள். இது கைகண்ட மருந்து.

ஓங்கிடாக் குன்ம முள்ளங்கை யுள்ளங்கால்
ஏங்கிடாக் கையி லெரி குன்மமுந்
தாங்கிடா தொரு சந்தி குன்மத்தொடு
பாங்கிடா நீங்கும் பத்தியங் கண்டிடே. 320

குன்மம், உள்ளங்கை, உள்ளங்கால் எரிச்சல், சந்தி குன்மம் இவைகள் தீரும். பத்தியம் காக்க வேண்டும்.

கருவங்க பற்பம்

கண்டி டப்பா கருவங்க மார்பலம்
மொண்டி டப்பா வோரோட்டி லுருக்கியே
அண்டி டப்பா வம்மான் பச்சிலைரசந்
தண்டி டப்பா சாமம்நா லூறவே. 321

கருவங்கம் ஆறுபலம், இதை ஓட்டில் இட்டு உருக்கிக் கொள். அம்மாம் பச்சரிசி சாற்றில் நான்கு சாமம் ஊற வைத்திடு,

ஊர லானபின் னோட்டி லுருக்கியே
சேரலாந் துணி தேய்த்திடு வாய்முகம்
வாரெலா மறுக்கால் வைத் துருக்கியுள்
ஏறலா மொதிப் பட்டைச் சாறேத்திடே. 322

மற்றொரு ஓட்டில் இட்டு உருக்கி துணியால் தேய்த்துப் பின் மறுபடியும் உருக்கு பின் ஓதிப்பட்டை சாறு எடுத்திடு.

ஏத்திடு சாம மீரெண்டு மேவறுப்
போத்திடு வோமம் போட்டு வறுத்துடன்
மாத்திடு பற்ப மானபின் தாழையின்
சாத்திடு விரு சாமங் கடைந்திடே. 323

சாற்றை மேற்படி வங்கத்திற்கு ஊட்டி நான்கு சாமம், வருத்திடு, பின் ஓமமிட்டு வருத்திடு, பற்பமாகும். பின் தாழையின் சாறிட்டு இரண்டு சாமம் கடைந்திடு.

கடைந்திடு மறுக் காலும் வறுத்திடாய்
அடைந்திடு பற்ப மானது பார்த்துடன்
இடைந்திடுஞ் செம்பருத்தம் பூவே ழெட்டுத்
துடைந்து டொன்றொன்று சூட்டி வறுத்திடே. 324

பின்பு நன்றாக வறுத்து நன்றாக பற்பமான பின்பு செம்பருத்தம் பூ ஏழு அல்லது எட்டு ஒவ்வொன்றாக அதனுடன் போட்டு வறுத்திடு.

வறுக்கில் செந்தூர மாகும் பதத்திலே
நொறுக்கிக் கல்வத்தில் நூரி யெடுத்துட
நிறுக்கி வைத்ததை யேத்திரு நேரமும்
பொரிக்கிப் பொற்பணம் போட்டு நிறுத்திடே. 325

வறுக்கச் செந்தூரமாகும், கல்வத்தில் இட்டு மடங்காத வங்கத்தை தனியாக எடுத்துவிட்டு, செந்தூரத்தை பணவெடை இரண்டு வேளையும் உட்கொள்.

நிறுத்திடாய் கற்கண்டு தேனி லேழுநாள்
அறுத்திடாய் வாத மப்பால் தெரித்திடும்

குறித்திடா வாரையின் கொழுந் தேழுநாள்
நிறுத்திடாய்ப் பிரமியம் விட் டோடுமே. 326

கல்கண்டு, தேன் இவைகளில் மேற்படி செந்தூரம் ஏழுநாள் உட் கொள்ள வாதம் நீங்கும். ஆவாரைக் கொழுந்தில் ஏழுநாள் உட்கொள்ள பிரமியம் தீரும்.

ஓடுஞ் சர்க்கரையி லுள்ளுக் கேழுநாள்
பாடும் பித்தம் பயித்திய மோடிடும்
நாடு வாழைக் கிழங்கு ரசத்திலும்
போடு நாளேழ் புரிந்திடு மேகமே. 327

சர்க்கரையுடன் மேற்படி செந்தூரத்தை அளவுடன் ஏழு நாள் உட்கொள்ள பித்தம், பயித்தியம் தீரும். வாழைக்கிழங்கு சாற்றில் மேற்படி செந்தூரத்தை அளவுபடி உட்கொள்ள ஏழு நாட்களில் மேகம் தீரும்.

சேத்தும வெள்ளைக்கு

மேகமாய் வெண் காரங் கழஞ்சிடை
ஏகமாய் பொரித்தே பொடித் தேயுடன்
பாகமா யெழு போது பகுத்துண்ண
வேகமாஞ் சேத்தும வெள்ளை நீங்குமே 328

வெண்காரம் கழஞ்சி எடை எடுத்து பொரித்துப்பின் நன்றாக பொடித்து ஏழாகப் பிரித்து ஒவ்வொரு வேளையாக செந்தூரத்தை அளவுபடக் கூட்டி உண்ண சேத்தும வெள்ளை தீரும்.

சூலைக்கு

நீங்கும் பேய்க் கொமட்டிவேர் பொடிநிரைத்
தாங்குமே கழஞ்சி யிடை தாக்கியுண்ணு
ஓங்குந் திருகடு கொக்கச் சமன்பொடி
வாங்கும் பஞ்ச லவணமுங் கூட்டிடே. 329

பேய்க்கொமட்டி வேர்த்தூள் கழஞ்சிஎடை. திரிகடுகு கழஞ்சிஎடை பஞ்சலவணம் கழஞ்சிஎடை.

கூட்டு மூன்று வகைக்கு கழஞ்சிடை
மாட்டு செந்தூர மப்பா பணவிடைப்
போட்டு மத்தித் தெழுபோது கொண்டிடில்
சூட்டு மேகமுஞ் சூலையுந் தீருமே. 330

மேற்படி சரக்குகளுடன் செந்தூரம் பணவெடை கூட்டி ஏழுநாள் கொள்ள மேக நோய், சூலை இவைகள் தீரும்,

தீரு மிந்தப் படிக்கொடுத் தேழுநாள்
நேருங் குன்ம நீராமை மகோதரம்

பாரு மண்டலத்தின் வாதம் பவுத்திரம்
ஈரு கல்லடைப்பு மிவை நீங்குமே. 331

இவ்வாறு ஏழுநாள் உட் கொண்டால் குன்மம், நீராமை, மகோதரம், அண்டவாதம், பவுத்திரம், கல்லடைப்பு இவைகள் தீரும்.

நீங்கும் பத்திய நெஞ்சிலுத் தேயரிந்
தேங்கு சக்கரை தேனொடு கற்கண்டு
பாங்கு நெல்லிக் காய்பரும் புடலங்காய்
ஓங்கு மிவ்வகை யுண்ணுங் கைகண்டதே.

மேற்படி மருந்தை உட்கொள்ளும் போது பத்தியமாக இருக்க வேண்டும். சர்க்கரை தேன், கல்கண்டு, நெல்லிக்காய், புடலங்காய் உட்கொள்ளலாம். இம் முறை கை கண்ட முறை

கண்டிடாய் கவுதாரி வாழைப் பிஞ்சு
உண்டிடா யூர்க்குருவி யுள்ளான் கறி
கொண்டிடாய்க் கரு குக்கிடத் தண்டமும்
விண்டிடாய் பத்தியத் திற்கு வெட்டுமே. 333

கவுதாரி, வாழைப்பிஞ்சு, ஊர்க்குருவி, உள்ளான்கறி, கோழிமுட்டை இவை ஆகும்.

விக்கலுக்கு

எட்டுத் திப்பிலி யீரைந்து சீரகம்
கட்டுத் தேனிற் கலந்துண்ண விக்கலும்
விட்டுப் போகும் விடாவிடிற் பொஸ்தகஞ்
சுட்டுப் போடு நான்தேறனு மல்லவே. 334

திப்பிலி, சீரகம் இவைகளை தேனில் கலந்துண்ண விக்கல் தீரும். விக்கல் தீராவிட்டால் இந் நூலை சுட்டுவிட்டு, என் பெயர் தேரையர் என்பதை மாற்றிக் கொள்கிறேன்.

சூலை எரிவுக்கு

அல்லவே பழ மாறு வதக்கியே
மல்லவே ரசம் வாங்கினர்ச் சீரகம்
சொல்லவே பலஞ் சேர மிளகொடு
வெல்லவே வாய் விளங்கமுஞ் சேர்த்திடே. 335

ஆறு எலுமிச்ச பழங்களை வதக்கி சாறு எடுத்து சீரகம் ஒருபலம், மிளகு, வாய்விளங்கம், மற்றும்,

சேர்த்திடு சர்க்கரை சிறு நாகப்பூ
கார்த்திடு வகைக் கொன்று கழஞ்சிடை

ஓர்த்திடு கதலிக் கிழங்கு ரசம்
பார்த்திடு பலம் பாலூரி விட்டிடே. 336

சர்க்கரை, சிறுநாகப் பூ வகைக்கு ஒரு கழஞ்சி எடுத்து கதலிக்கிழங்குச்சாறு பலம் அளவு எடுத்து முன் சரக்குகளுடன் மேற்படி எலுமிச்சை சாறும் கூட்டி ஊற

விட்டிடு மது வெல்லா மரைத்துடன்
தொட்டிடு மிரு போதுமோ ரெட்டுநாள்
கட்டிடுங் குலை கைபத மெய்யொடு
பட்டிடு மெரிவு படச் சாடுமே. 337

வெல்லம் அரைப்பலம் சேர்த்து மேற்படி மருந்தைக் கூட்டி அளவுபட உட்கொள். எட்டுநாள் இவ்வாறு உட்கொள்ளச் சூலை எரிவு இவைகள் தீரும்.

சாடுமே நறுந் தாளிலைச் சர்க்கரை
யாடுமே புழுங் கல்லரிசி சீரகம்
நாடுமே யரை நால்பதஞ் செய்தெடுத்
தோடுமே நெய்யிற் சுட்டுண்ணா ளெட்டுமே. 338

நறுந்தாளி இலை, சர்க்கரை, புழுங்கல் அரிசி, சீரகம் இவைநாலும் பதம் நெய்யில் சுட்டு எட்டுநாள் உட்கொள்.

எட்டடா புளியும் புகையே விடுத்
தட்டடா திரோ தாயி மயக்கத்தை
வெட்டடா யிள வெந்நீரோ டன்னமும்
கட்டடா விது கைமுறை போற்றிடே 339

மேற்படி மருந்துண்ணும்போது புளி, புகை, தள்ளி வெந்நீருடன் அன்னம் சாப்பிட பித்தம், மயக்கம் தீரும்.

தலை நோவுக்குத் திரிபுகை

போர்த்திடு லிங்கம் பூர மரிதாரஞ்
சேர்த்திடு ரசச் செந்தூரஞ் சாம்பிராணி
கோர்த்திடுந் துய்ய குன்றிமணி மஞ்சள்
கார்த்திடுங் பலங் கால்வகை யொன்றுமே. 340

லிங்கம், பூரம், அரிதாரம், ரசச்செந்தூரம், சாம்பிராணி, குன்றிமணி, மஞ்சள் வகைக்கு கால்பலம்.

ஒன்றி டாட்டிப் பழச்சாற்றில் லோர்தின
முண்டி டாட்டி முலைப்பாலி லோர்தினந்
தண்டி டாட்டிருச் சாண்சதிர் சீலையில்
ஈண்டி டாட்டிச் சுருட்டித் திரிசெய்யே. 341

மேற்படி மருந்துகளை எடுத்து பழச்சாற்றில் ஒருநாள் தாய்ப்பாலில் ஒருநாள் அரைத்து இருசாண் அளவுள்ள சதுரமான துணியில் தடவி சுருட்டித் திரி செய்திடு.

செய்யடா யிரு நேரந் திரிபுகைப்
பையடா பிடி பார்த்துப் பதனமாய்
மெய்யடா தலைநோய் விட் டிறங்கிடும்
உய்யடா பகை முற்றிலுங் காருமே. 342

திரியை இரண்டு நேரத்திலும் பற்ற வைத்துப் புகை பிடிக்கத் தலைநோய் தீரும்.

மயிர்முளைக்கத் தைலம்

காரு நாய் கரிச்சான்பட்டை யார்பலம்
பாரு பேருறை யார்பலம் வெள்ளுள்ளிச்
சேரு வாய்பலஞ் சேர்த்து நறுக்கியே
ஏரு வாய் நாழி யெள்ளெண்ணெ யூற்றிடே. 343

நாய் கரிச்சான் பட்டை ஆறுபலம், பேருறை ஆறு பலம், வெள்ளுள்ளி ஒருபலம், சேர்த்து நறுக்கி நாழி அளவு எள்ளெண்ணெய் அதில் ஊற்றிடு.

ஊர்த்திடுங் கதிரோன் புட மேனிதம்
போர்த்திடு மிரு போதுமோ ரேழுநாள்
சேர்த்திடு மயிர் சேர முளைத்திடு
மோர்த்திடும் பத்திய மில்லைக் கார்த்திடே. 344

ஊற்றிய எள்எண்ணெயுடன் மருந்துகளை வெய்யிலில் வைத்திடு. தலையில் உள்ள சொட்டை பகுதியில் இத்தயிலத்தை இரண்டு வேளையும் ஏழுநாள் தடவ மயிர் முளைக்கும். பத்தியம் இல்லை.

சயத்துக்கு கர்ப்பூரக் குளிகை

கார்த்திடும் பச்சைக் கர்ப்பூரஞ் சீரகம்
கோர்த்திடுங் கலை கொம்பு கோரோசனை
சார்த்திடுங் கந்தஞ் சாம்பிராணி யிவ்வகை
சேர்த்திடும் வகைக்குக் கழஞ்சி விட்டே. 345

பச்சை கற்பூரம், சீரகம், கலைமான் கொம்பு, கோரோசனை, சாம்பிராணி, வகைக்கு கழஞ்சி எடை எடுத்துக் கொள்.

விட்டிடும் பேய்ப் புடலும் பேய்ப்பீர்க்கையும்
முட்டிடும் நெரிஞ்சி நீர்முள்ளி விரை
நெட்டிடு விளநீர் விட்டுக் காய்ச்சியே
தொட்டிடு மரைத்து மெழு காக்கிடே. 346

பேய்ப்புடல், பேய்ப் பீர்க்கன், நெரிஞ்சில், நீர்முள்ளி விதை, இவைகளை இளநீர் விட்டு காய்ச்சி கியாழம் வைத்து இக்கியாழத்தில் மேற்படி சரக்குகளை மெழுகுபோல் அரைத்திடு.

ஆக்கிக் குன்றிபோ லாகக் குளிகையும்
நீக்கி நல்ல நிழலி லுலர்த்தியே
தோக்கி நாளிரு போதுமூ வைந்துநாள்
தாக் கிருமல் சயம்விழச் சாடுமே. 347

அரைத்ததை குன்றி அளவுள்ள குளிகையாக செய்து நிழலில் உலர்த்திடு, இரண்டு வேளையும் பதினைந்துநாள் உட்கொள்ள இருமல், சயம், குணமாகும்.

சாடுமே முருக் கிலையின்சா றீர்பலம்
போடு நல்மிளகுப் பொடிக் காற்பலம்
மூடு நர்ப்பசு மோர்பலம் ரெண்டொடு
நாடு விப்படி நாள்மூன்று தோற்றிடே. 348

முருக்கிலையின் சாறு இரண்டுபலம், மிளகு தூள் கால் பலம், பசுமோர் இரண்டுபலம், சேர்த்து மூன்றுநாள் கொள்வாயாக.

மேற் சுவாசத்துக்கு

தோர்த்திடுப் புதுச்சொர் நெல்லிக் காயொடு
சேர்த்திடு நல் மிளகொடு திப்பிலி
மார்த்திடு கடுகு வகைக்குச் சமன்
ஏர்த்திடுப் பசு மோரில்விட் டாட்டிடே. 349

நெல்லிக்காய், மிளகு, திப்பிலி, திரிகடுகு, வகைக்கு சமனாக சேர்த்து பசுமோர் விட்டு ஆட்டு.

ஆட்டடா மூன்று நாளடுத் தேகொடு
நாட்டடா தவறாதென் குருமுறை
சூட்டடா மேல் சுவாசம் விட்டோடிடும்
போட்டடா புளியும் புகை தள்ளிடே. 350

முன் மருந்து கொடுத்தபின் இம்மருந்தை மூன்றுநாள் கொடு, மேல் சுவாசம் தீரும். புளி, புகை, நீக்கு, இது எனது குருவின் முறை.

மேகத்திற்கு லேகியம்

தள்ளப்பா வால் மிளகிடை யோர்பலம்
விள்ளப்பா நற் கசகசா யீர்பலம்
மெள்ளப்பா வறுப்பா மிதமா யரைத்
தூள்ளப்பா வடி செய்துடன் வாங்கிடே. 351

வால்மிளகு ஒருபலம், சுசகசா இரண்டு பலம், இரண்டையும் வறுத்து அரைத்து வடிகட்டிக் கொள்.

வாங்கினா லிரண்டு பல மாவின்பால்
தாங்கினாற் பலஞ் சர்க்கரை பாகுசெய்
தோங்கு முன்பொடித் தூளதைத் தூவியே
நீங்கு மொன்றவரை நெய்பலஞ் சேர்த்திடே, 352

இரண்டுபலம் ஆவின் பாலில் ஒரு பலம் சர்க்கரை இட்டு பாகு செய்து முன் பொடியை தூவி ஒன்றரை பலம் நெய் சேர்த்து நன்றாக லேகியம் போல் கிளறிக் கொள்.

சேர்த்திடு லேகியம் போற் றிரட்டியே
கார்த்திடுங் கொட்டைப் பாக்கள வாகவே
போர்த்திடு மிரு போதுமீ ரைந்துநாள்
பார்த்திட மேகம் பற்றறத் தீருமே. 353

மேற்படி லேகியத்தில் கொட்டைபாக்கு அளவு இரு வேளையும் பத்துநாள் உட்கொள், மேக நோய் குணமாகும்.

இரத்தச்சீழ் வயிற்றுக்கடுப்பு பெரும்பாடு நீர்ச்சுருக்குக் கியாழம்

தீரடா யிளந் தென்னையின் பாளையைப்
பூரடா மடல் போக்கி மலரிடிச்
சாரடா வொண் ணழக்குச் சமன்தயிர்
தேரடா பழம் நீர்பல மேத்திடே. 354

இளந்தென்னை மரத்தின் பாளையை எடுத்து மடலை நீக்கிவிட்டு இடித்து ஒரு உழக்கு அளவு சாறு எடுத்து அதன் அளவுக்கு தயிர்சேர்த்து சோற்று நீரும் சேர்த்திடு.

ஏர்த்திடாய் தின மூன்றிரு நேரமுஞ்
சேர்த்திடாய் ரெத்தஞ் சீழ் வயிற்றுக்கடுப்
பார்த்திடாய்ப் பெரும் பாடுட நீர்சுருக்
கார்த்திடாய்ப் புளி யாகா தறிந்திடே. 355

சேர்த்ததை உட்கொள், இவ்வாறு இரண்டு வேளையும் மூன்றுநாள் உட்கொள், ரத்தம் சீழ், வயிற்றுக் கடுப்பு, பெரும் பாடு, நீர்சுருக்கு, இவைகள் தீரும். புளி ஆகாது.

மேகத்துக்கு வெள்ளறுகு கியாழம்

அரிந்திடாய் வெள் ளறுகிடை யோர்பலம்
பரிந்தி டாமலே பாலுழக் காமதில்
தெரிந்தி டாயரைத் தேயிரு நேரமு
முரிந்திடாக் கொள்ளு மூவேழு நாளிதே. 356

வெள்ளறுகு ஒருபலம், பால் ஒரு உழக்கு அளவுவிட்டு அரைத்து உட்கொள். இவ்வாறு இரண்டு வேளையும் இருபத்தி ஒருநாள் கொள்ளவும்.

நாளடா கடும் பத்திய மார்பலம்
வேளடாப் பசுவின் பாலோ டன்னமுண்
டாளடா மேகந் தப்பா தொழிந்திடு
மாளடா வென்னீ ருப்புப்புளித் தள்ளே. 357

கடும்பத்தியமாக இருக்க வேண்டும். பசும் பாலுடன் சாதம் கலந்து சாப்பிட வேண்டும். மேக நோய் தீரும். வென்னீர், புளி, உப்பு நீக்க வேண்டும்.

சாலேசுரத்துக்கு நேத்திராஞ்சனத் தயிலம்

தள்ளி லந்தையின் சாறதி லோர்படி
எள்ளி னர்ச்சுயம் பெண்ணெயி லோர்படி
விள்ளின் பொர்ச்செவ் விளநீரி லோர்படி
அள்ளி மூன்று குழம்படுப் பேற்றிடே. 358

இலந்தைச்சாறு ஒருபடி, எள் எண்ணெய் ஒருபடி செவ்விளநீர் ஒருபடி, இவைகள் மூன்றையும் சேர்த்து பாண்டத்திலிட்டு அடுப்பேற்று.

ஏர்த்திடு மேயெரித் திட சாமமும்
பார்த்திடு மெழுகு பதமே வடி
மார்த்திடுங் குங்குமப் பூ கோரோசனை
கார்த்திடுஞ் சாதிக்கா யேலங் கொண்டிடே. 359

அடுப்பேற்றி ஒருசாமம் எரித்து மெழுகு பதத்தில் வடித்து குங்குமப்பூ, கோரோசனை, சாதிக்காய் ஏலம் மற்றும்.

கொண்டிடு மிளகு சாதி பத்திரி
கண்டிடு வகைக் கொன்று கழஞ்சிடை
தொண்டிடு வறுத்தே பொடி செய்திடாய்
அண்டிடு புதனுஞ் சனி யாடிடே. 360

மிளகு, சாதிபத்திரி, இவைகள் வகைக்கு கழஞ்சிஎடை, எடுத்து வறுத்து தூள் செய்து மேற்படி தைலத்திலிட்டு புதன், சனிக் கிழமைகளில் இத்தயிலம் தேய்த்து முழுகு

சிரோஸ்நான உசிலத்தூளறப்பு

ஆடிடு வுசிலந் தூள றப்பிடு
தேடிடு விரு திங்க ளிந்தப்படி
சாடிடும் விழி சாலே சிரந்தனைக்
கூடிடு நற் குருமொழி செய்திடே. 361

முழுகும் போது அறைப்பு தூள் தேய்த்து முழுகு, இரண்டு மாதமிவ்வாறு செய்ய சாலே சுரம் என்கிற கண் நோய் தீரும்.

இரணம் சில்விஷம் வண்டு பூரான் செய்யான் வாய்வு குடல்பிரட்டுக்கு

செய்யடா வன்னிச் சாருழக் குப்பிழிந்
தொய்யடா நாகத் தூர்பலங் காலதில்
வெய்யடா வரைத் திவ்விரு நேரமும்
பையடா கொடுப்பாய் ரிண மாறுமே. 362

வன்னியிலைச்சாறு உழக்கு அளவு பிழிந்து அதில் நாகத் தூர் கால்பலம் தூள் செய்து இட்டு உட்கொள்ளவும். இவ்வாறு இரு நேரமும் ஆறுநாட்கட்கு கொடு.

ஆறுஞ் சில்விஷ மப்பு வண்டாங்கடி
ஊறு பூரா னெடுத்த செய்யான்கடி
கூறும் வாயுவு குடல்பிரட் டிவ்வகைத்
தீரு முப்புச் சேர்த்தன்னமு முண்டிடே. 363

இவ்வாறு செய்ய சில்விஷம், வண்டுக்கடி, பூரான்கடி, செய்யான் கடி, வாய்வு, குடல் பிரட்டல், இவைகள் தீரும். உப்பு சேர்த்த அன்னம் உட்கொள்வாயாக.

கண்கால் எரிச்சல் வாந்திபித்தம், வீக்கம் எரிகுன்மத்திற்கு வாழைப்பழம் சர்பத்து

உண்டிடாய்ப் பழமோ யிரு நூறது
வண்டிடா யிதடுப் பனிலோ டுவை
சுண்டி டாக்கை சுழட்டி வதக்குடன்
விண்டிடாய் ரசமே பிழிந் தேத்திடே. 364

வாழைப்பழம் இருநூறை பனியில் வைத்து பின் தோலை அகற்றி வதக்கி சாறு பிழிந்திடு.

ஏர்த்து சீனி யிடைப்பல மைந்துநாள்
பார்த்துப் பாகு பதம்பிடித் தேயுடன்
மார்த்துச் சீரக மாநல் மிளகுடன்
சார்த்து வோர்வகை தான்பல மாறுமே. 365

பிழிந்த சாற்றுடன் சீனி ஐந்து பலம் கூட்டி பாகு பதத்தில் எரித்து சீரகம், மிளகு வகைக்கு ஆறுபலம் மற்றும்,

ஆறு சுக்கோ டரிசியின் திப்பிலி
பாறு தாளிச பத்திரி கோஷ்ட்டமோடு
ஏறுஞ் ஜாதிக்கா யிவ்வகை யொன்றுக்கு
வேறு தூக்கு விராகனா டெட்டுமே. 366

சுக்கு, அரிசித் திப்பிலி, தாளிசபத்திரி, கோஷ்டம் ஜாதிக்காய் இவைகள் வகைக்கு எட்டு விராகன் எடை.

எட்டடா வறுத்தே யிடி சூரணங்
கொட்டடா முன் குழம்பினிற் சாத்திட
நெட்டடா பசுநெய் பல மாறதில்
விட்டடா லேகிய மிது பார்த்திடே. 367

மேற்படி சரக்குகளை வறுத்து இடித்து சூரணித்து முன் பாகில் இட்டு பசுநெய் ஆறுபலம் விட்டு கிளறி லேகியம் போல் பதமாக செய்திடு.

பார்த்திடுக் கொட்டைப் பாக்கள வாகவே
போர்த்திடு விரு போதொரு மண்டலம்
நீர்த்திடுங் கண்ணில் நீரு வருகலும்
தோர்த்திடு மெரிச்ச லது வாங்குமே. 368

கொட்டைப்பாக்கு அளவு இரண்டு வேளையும் ஒரு மண்டலம் உட்கொள்ள, கண்ணில் நீர்வடிதல், எரிச்சல் இவைகள் தீரும்.

வாங்கும் வாந்தியு வாய்நீர்ச் சொரிதலும்
வீங்கு பித்த மிகுந்தெரி குன்மமும்
நீங்கு நற்புளி னேசம கத்தியே
பாங்கு செய்நோய் பறக்கு மரிந்திட்டே. 369

மற்றும் வாந்தி, வாயில் நீரூரல், பித்தம், எரிகுன்மம் புளித்த ஏப்பம் இவைகள் தீரும்.

மேகநீர்ச் சுறுக்கு கண்புகைபித்தம் நமைச்சல் வாய்நாறலுக்கு எண்ணெய்

அரிந்தி டாமணக் கெண்ணெ யொருபடி
தெரிந்திடாய் விழுதி யிலை மாணிக்கம்
பருந்திடாய் செருப்படைக் கீழா நெல்லி
கருந்திடாய்ச் சீந்தில் கத்தாழை கோரிடே. 370

ஆமணக்கு எண்ணெய் ஒருபடி, விழுதியிலை, மயிர் மாணிக்கம், செருப்படை, கீழாநெல்லி, சீந்தில், கற்றாழை மற்றும்

கோரடா பழங் கோவைநல் லீருள்ளிச்
சாரடா வகைக்குத் தான ரைப்படி
வேரடா பசுவின் பால ரைப்படி
நேரடா விளநீர் படி சேர்த்திடே. 371

கோவைப் பழம், ஈருள்ளி இவைகளின் சாறு வகைக்கு அரைப்படி, பசுவின்பால் அரைப்படி, இளநீர் ஒருபடி, மேற்படி எண்ணெயுடன் கலந்து கொள்.

சேர்த்திடாய் நல் மிளகொடு சீரகம்
பார்த்திடாய் வகைக்குப் பல மைந்துதான்
தோர்த்திடா யரைத் தொன்றாய்க் குழப்புடன்
மார்த்திடா யடுப்பில் வைத் தெரித்திடே. 372

மிளகு, சீரகம், இரண்டும் வகைக்கு ஐந்து பலம் எடுத்து அரைத்து மேற்படி எண்ணெயிலிட்டு அடுப்பேற்றி எரித்திடு.

எரித்திடு மோ ரிரும்பிலிக் கட்டையால்
குரித்திடு மெழுகு பதமே வடித்
திரித்திடு மண்டலந் தினமே பலம்
நெரித்திடு மேகநீர் சுருக் கண்டிடே. 373

இரும்பிலிக் கட்டையால் எரித்து மெழுகு பதமாக வடிகட்டு, தினமும், பலம் அளவு ஒரு மண்டலம் உட்கொள்ள மேகநீர் மாறும் மற்றும்.

கண்டிடா யிரு கண்புகை பித்தமு
மண்டிடா மெய் யனத்தல் நமைச்சலும்
விண்டிடா வாயில் வீசிய நாறல்போந்
தெண்டிடாய் பத்திய மில்லைக் காத்திடே. 374

கண் புகைச்சல், பித்தம், உடல் வலி, நமைச்சல், வாய் நாற்றம் இவைகள் தீரும், பத்தியம் இல்லை.

குடைச்சலுக்கு சிகாமணிச் சூரணம்

கார்த்திடாய் அறுகம் வேரி லெண்பலம்
மேர்த்திடாய் முதிர் வேம்பின்தோ லெண்பலஞ்
சார்த்திடாய் துய்ய சங்கம்வே ரெண்பலம்
பார்த்திடாய் சுத்தி பாலினிற் செய்திடே. 375

அறுகம் வேர் எட்டு பலம், முற்றிய வேம்பின் பட்டை எட்டு பலம், சங்கம் வேர் எட்டுபலம், மேற்படி சரக்குகளை பாலில் அவித்து சுத்திசெய்திடு.

செய்யடா கதிர் சேர வுலர்த்தியே
வையடா சுக்கு வால்மிள கோமமும்
வெய்யடா வாய் விளங்கம் நற்சீரகம்
பையடா பறங்கிப் பட்டை கூட்டிடே. 376

சுத்தி செய்ததை வெய்யிலில் இட்டு நன்றாக காயவைத்து சுக்கு, வால்மிளகு, ஓமம், வாய்விளங்கம், சீரகம், பறங்கிப் பட்டை மற்றும்.

கூட்டிடு திப்பிலி குரா சானியு
மூட்டிடு மிளகு பொடி ரோகணி
காட்டிடு பூலாக் கார மரத்தையுங்
கேட்டிடு வகைக்குப் பலஞ் சேரவே. 377

திப்பிலி, குரோசாணி ஓமம், மிளகு, பூலா மரப்பட்டை இவைகள் வகைக்கு ஒருபலம் மற்றும்.

சேரடா சிறுதேக் கருஞ் சீரக
மாரடா லவுங்கம் லவுங்கப் பட்டை
பாரடா சாதி பத்திரி சாதிக்காய்
கோரடா வேலங் கோஷ்டமுங் கண்டிடே 378

சிறு தேக்கு, கருஞ்சீரகம், லவுங்கம், லவுங்கப்பட்டை, சாதிபத்திரி, சாதிக்காய், ஏலம், கோஷ்டம் வகைக்கு கழஞ்சி எடை மேற்படி பொருட்களை இடித்து தூள் செய்திடு.

கண்டிடா யோர் வகைக்குக் கழஞ்சிடைத்
தெண்டிடாய் நற்ச் சிகாமணிச் சூரணங்
கெண்டிடாய்ச் சமன் கூட்டுவெண் சர்க்கரை
உண்டிடாய்ப் பல மோர்தினம் வாங்கிடே. 379

இது சிகாமணி சூரணம், சூரணத்திற்கு சம எடை வெள்ளைச் சர்க்கரைச் சேர்த்திடு. ஒரு பலம் அளவு உட்கொள்.

வாங்கிடு மிரு போதொரு மண்டலம்
ஓங்கிடும் வாய்வோ டொத்தக் குடைச்சல்போம்
தேங்கிடும் பசி தீபனங் கண்டிடும்
பாங்கிடு மில்லை பத்தியம் நீங்கிடே. 380

மேற்படி வகையில் இருவேளையும் ஒரு மண்டலம் உட்கொள்ள வாய்வு, குடைச்சல் தீர்ந்து நல்ல பசி தீபனம் உண்டாகும். பத்தியம் இல்லை.

சுகஜன்னிக்கு

நீங்கு நல்முதலை நெய் பலமரைக்
காங்கு மாயக் கரண்டியி லுருக்கியே
யாங்கு சாண்மோ ரங்குலங் கட்டிட
நோங்குஞ் சூட்டுட னுச்சியில் தாக்கிடே. 381

முதலை நெய் அரைபலம் அயக் கரண்டியில் உருக்கி சூட்டுடன் தலை உச்சியில் தடவு.

தாக்கும் போது சயித்திய சன்னியுந்
தோக்கு வேர்வை சுகசன்னி வாதமும்
போக்கு மென்னப் புகல்வது தேரையன்
வாக்குப் பொய்த்திடா வாங்கிடப் பார்த்திடே. 382

மேற்படி வகையில் செய்ய, சயித்தியம், சன்னி, வேர்வையுடன் கூடிய சுகசன்னி, வாதம், இவைகள் தீரும், தேரையராகிய நான் சொன்ன இம்முறை பொய்த்திடாமல் குணமளிக்கும்.

பார்த்திடு மிலுப்பை மல ரோகணி
தோர்த்திடு வாளஞ் சுத்தி வகைபலங்
கார்த்திடு வறுதுக் கருசிலாங் கணிச்
சார்த்திடு வேழு சாமம்விட் டாட்டிடே. 383

இலுப்பை, கடுகுரோகணி, சுத்தித்த நேர்வாளம், இவைகள் வகைக்கு ஒருபலம் எடுத்து வறுத்து கரிசலாங்கண்ணி சாற்றில் ஏழுசாமம் அரைத்திடு.

ஆட்டிடா மெழுகா மைங்கரன் றனைச்
சாட்டிடாய் வந்தனை தவறா நிழற்
காட்டிடாய் சுண்டக் காயொரு பூமணிக்
கூட்டிடாய் சங்கங் குப்பிஞ்சி நாட்டிடே. 384

அரைத்து மெழுகு பதமாக எடுத்து சுண்டைக்காயளவு உருட்டிக் கொள். இது பூமணிக்குளிகை. சங்கங்குப்பிச்சாறு இஞ்சிச் சாறு மற்றும்

நாடும் வேளை ரசமேனிச் சாறதில்
ஆடு மிவ்வகை யைந்துநாட் கொண்டிடில்
ஓடுங் குன்மவாய் வொக்கவே சூலைபோம்
போடு முப்புப் புளிபுகை விண்டிடே. 385

வேளைச்சாறு குப்பைமேனிச்சாறு இந்த சாறுகளில் மேற்படி குளிகையை ஐந்து நாட்கள் உட்கொள்ள குன்மம், வாய்வு, சூலை இவைகள் தீரும்.

பெருவியாதிக்கு திமிருக்கு நீலகண்டா மணித்தயிலம்

விண்டி டப்பா விலாரியின் தூரது
கண்டி டப்பா கதிர்முன் னுலர்த்திபின்
கொண்டி டப்பா குழற்பெரும் பாண்டத்துள்
அண்டி டப்பா வறுதுளை மூடிடே. 386

விளாரியின் தூர் எடுத்து வெய்யிலில் இட்டு உலர்த்தி பாண்டத்துள் இட்டு மூடியிட்டு அடைத்திடு.

மூடிச் சீலைமண் மூன்றது செய்துட
நோடி தூர்தனி லுள்ளிர்க் கலசம்வைத்
தேடி சந்துவாய் சீலைமண் செய்குழி
ஆடித் தீயிட் டரையள வோங்கிடே. 387

அடைத்து மூன்று சீலைமண் செய்து பெரிய பாண்டத்துள் இப்பாண்டத்தை வைத்து மூடியிட்டு சீலைமண் செய்திடு. அடுப்பேற்றி தீயிடு.

ஓங்கிடா யுத்ததி யுள்ளார் பாண்டத்தை
நீங்கி வைத்தெடு நீலகண் டாமணி
வாங்கி சட்டியில் வைத்தடுப் பேற்றியே
பாங்கு சாக்கரைப் பாகுசெய் தார்த்திடே. 388

தீயிட்டு பாண்டத்தை எடு, நீல கண்டாமணி எடுத்திடு, பாண்டத்தில் சர்க்கரைபாகு செய்து அதில் மேற்படி எடுத்த மருந்தை கலந்து கொள்.

ஆர்த்திடாய் முத லாகிக் கணேசனைப்
போர்த்திடாய்ப் பலம் போதிரு நேரமும்
ஏர்த்திடாய் மண்டல மிரண் டிப்படி
தீர்த்திடாய் பெரு நோய்திமி ரோடுமே. 389

முதல்வனான கணேசனை வணங்கி ஒருபலம் எடுத்து உட்கொள்வாய், இருவேளையும், இரு மண்டலம் இவ்வாறு கொள்ள பெருநோய், திமிர், குட்டம் தீரும்.

ஓடு மாவிநெய் யுத்தபால் சர்க்கரை
தேடு வெள்ளாட் டிறைச்சியின் வற்றலாங்
கூடு பாசிப்பயர் குறவை விறால்
ஆடு வுப்புப் புளியா மறிந்திட. 390

ஆவின் நெய், பால், சர்க்கரை, வெள்ளாட்டு இறைச்சியின் வற்றல், பாசிப்பயிர், விறால், உப்பு, புளி, இவைகள் சேர்க்க லாகும்.

மேகம் கறுப்பு வெளுப்பு ஊறலுக்குச் சஞ்சீவி லேகியம்

அரிந்திடாய்ச் சிவனார் வேம்பறுகம் வேர்ப்
பரிந்திடாய்ச் சமன் பாண்டத்தில் விட்டடை
முரிந்திடாய்ச் சட்டி மூடு துவாரமேழ்
தெரிந்திடாய்ச் சந்துச் சீலைமண் ணேத்திடே. 391

சிவனார் வேம்பு, அறுகம்வேர், சமனாக எடுத்து பாண்டத்துள் இட்டு மேல் சட்டி மூடி, அடிப் பாண்டத்தில் ஏழு துவாரம் செய்திடு, மேல் சட்டியின் சந்துக்கு சீலைமண் செய்திடு.

ஏர்த்திடாய்த் தூர் இருக்க கலசம்வை
போர்த்திடா வாய்ப் பொருந்தமண் சீலைசெய்
சார்த்திடாய்க் கெசந் தான்புட மாறிடில்
கார்த்திடா யைங் கரனைத் துதித்திடே. 392

குழிவெட்டி கீழே கலசம் வைத்து அதன்மேல் மேற்படி பாண்டத்தை வைத்து மண்சீலை செய்து கெசபுடமிடு. எரிந்து ஆறியபின், ஐங்கரனை துதித்து எடு.

எடுத்திடு சீனியே சமன் பாருசெய்
விடுத்திடுவால் மிளகு கசகசா
கொடுத்திடு மிளகு சுக்கு சாதிக்காய்
அடுத்திடுஞ் சித்த ரத்தையுங் கண்டிடே, 393

கீழ் கலசத்தில் உள்ள தைலத்தை எடுத்து அதற்கு சமனாக சீனி சேர்த்து பாகு செய்திடு. வால்மிளகு, கசகசா, மிளகு, சுக்கு, சாதிக்காய், சித்தரத்தை மற்றும்.

கண்டிடுந் தான்றிக்காய் கருஞ் சீரகம்
கொண்டிடு மோடி கோட்டநற்ச் சீரகம்
அண்டிடு லவுங்கம் லவுங்கப் பட்டை
விண்டிடு மதுர மேலந் தாக்கிடே. 394

தான்றிக்காய், கருஞ்சீரகம், மோடி, கோஷ்டம், நற்சீரகம், லவுங்கம், லவுங்கப்பட்டை, அதிமதுரம், ஏலம் மற்றும்.

தாக்கு பொற் கடுக்காய் சாதிபத்திரி
தேக்கு தாளிச பத்திரி ரோகணி
தூக்கு வோர்வகை சூட்டிக் கழஞ்சிடை
நோக்கு தூளாய் நொறுக்கி யிடித்திடே. 395

பொற் கடுக்காய், சாதிபத்திரி, தாளிசபத்திரி, கடுகுரோகணி, இவைகள் வகைக்கு கழஞ்சி எடை எடுத்து இடித்திடு.

இடித்திடு மிவையேக வடித் தெடு
பிடித்திடும் பாகிற் போட்டுற வாகவே
மடித்திடும் பல மாறுவிட் டாவிநெய்
குடித்திடுங் கிளறிக் குடுத் தேத்திடே. 396

இடித்து தூள் செய்து வடி செய்து மேற்படி பாகுடன் சேர்த்து ஆறுபலம் ஆவின் நெய்விட்டு நன்றாக உறவாக கிளறி பதமாக எடுத்திடு.

தேர்த்திடா திவை தீயா றிரக்கியே
சார்த்திடாய் மேக சஞ்சீவி லேகியம்
பார்த்திடாய்க் கொட்டைப் பாக்கள வாகவே
நேத்திடா யிரு நேரம் அரிந்திடே. 397

இதுவே மேக சஞ்சீவி லேகியமாகும். கொட்டைப்பாக்கு அளவு இரண்டு நேரமும் ஒரு மண்டலம் உட்கொள்.

அரிந்திடு மண்டல மக லாமலே
விரிந்திடு மேக வெள்ளைக் கறுப்பொடு
சொரிந்திடு மூறல் சொல்லா தொழிந்திடும்
தெரிந்திடு மொழித் தேறையன் கண்டிடே. 398

மேற்படி மருந்தால் மேகம், வெள்ளிக் கறுப்பு, ஊறல் இவைகள் தீரும். தேரையனாகிய நான் சொன்ன இம்முறை தவறாது.

கண்டிடாய் முருங்கைப் பிஞ்சு சிறுபயர்
பண்டிடாப் பசும் பால்தயிர் நெய்யுடன்
கொண்டிடாய் நர்க் குறவை விறால் முசல்
உண்டிடாய்ப் புளி யுப்பது வேத்திடே. 399

முருங்கைப் பிஞ்சு, சிறு பயர், பசும்பால், தயிர், நெய், விறால், முயல், புளி, உப்பு இவைகள் ஆகும்.

அசுவ கெந்திச் சூரணம்

வேர்த் தமுக்குறா வேரீ ரெட்டுபல
மோர்த்த சுக்கு யிடையுமே ரெண்டுபலங்
கார்த்த மோடிடைக் கண்டுகொள் ளார்பலம்
பார்த்து நல்மிளகு பல மாறிடே. 400

அமுக்கிறாவேர் பதினாறு பலம், சுக்கு எட்டுபலம், மோடி ஆறு பலம், மிளகு ஆறுபலம் மற்றும்,

ஆறு வோமம் அரிசியின் திப்பிலி
சேரு பொர்க்கடுக் காய்சிறு தேக்குடன்
பாரு தாளிச பத்திரி தான்றிக்காய்
மாரு ரோகணி வாய்விளங் கூட்டிடே. 401

ஒமம், அரிசித் திப்பலி, பொற்கடுக்காய், சிறுதேக்கு, தாளிச பத்திரி, தான்றிக்காய், கடுகரோகிணி, வாய்விளங்கம், மற்றும்.

கூட்டு நர்க்கடுகு கருஞ் சீரகம்
பூட்டு மல்லி கார்போகம் பற்ப்பாடகம்
நாட்டு.....ம நற்பரங்கிப் பட்டை
காட்டு வோர்வகைக் குப்பலங் கார்த்திடே. 402

கடுகு, கருஞ்சீரகம், மல்லி, கார்போக அரிசி, பற்படாகம், பரங்கிப்பட்டை வகைக்கு ஒரு பலம் மற்றும்.

கார்த்திடு லவுங்கம் லவுங்கப் பட்டை
சேர்த்திடு பெருஞ் சீரகம் கோஷ்டமும்
பார்த்திடு சாதி பத்திரி சாதிக்காய்
சார்த்திடு குறா சானி யறிந்திடே. 403

லவுங்கம், லவுங்கப்பட்டை, பெருஞ்சீரகம், கோஷ்டம், சாதிபத்திரி, சாதிக்காய், குரோசானி ஓமம் மற்றும்,

அரிந்திடாய் நல் லரத்தை மதுரமும்
வரிந்திடாய் மஞ்சள் வால்மிள கேலமுந்
தெரிந்திடாய் வகைக்குச் சேர் கழஞ்சிடை
கரிந்தி டாமல் கடுக வறுத்திடே. 404

அரத்தை, அதிமதுரம், மஞ்சள் வால்மிளகு, ஏலம் இவை வகைக்கு கழஞ்சி எடை எடுத்து நன்றாக வறுத்து மேற்படி பொருட்களுடன் இடித்து சூரணம் செய்திடு.

வறுத்திட ரசுவ கெந்தி சூரணம்
நிறுத்திடீர் சீனி ரேகிச் சமனிடு
பொறுத்திடீர் பலம் போதொரு மண்டலம்
ஒருத்திடீர் வாயுவு மோடு மிதுண்டிடே. 405

இது அசுவிகெந்திச் சூரணம், சூரணத்திற்கு சமனாக சீனி சேர்த்து ஒருபலம் அளவு உட்கொள். இரு வேளையும் ஒரு மண்டலம் உட்கொள்ள வாய்வு தீரும்.

கபாட மாத்திரை

துண்டிடாய்ப் பரங்கிச் சுக்கு கசகசா
வண்டிடாய் லவுங்க மால்வி்ழுதளிர்
அண்டிடாய்ப் பிளி மாதளை யினொடு
செண்டிடாய்ப் பூவந்திப் பட்டைச் சேரவே. 406

பரங்கிப்பட்டை, சுக்கு, கசகசா, லவுங்கம், ஆலம் விழுது துளிர், பிளி மாதளை, பூவந்திப்பட்டை மற்றும்,

சேரதி விடையஞ் சிறு நாகப்பூ
நேர் வகைக்கு நிறுத்திடு வாய்சமன்
பாரதென்னை விடும் பாளை ரசத்தினில்
ஏர் கடிகையீ ரேழுவொன் றாட்டிடே.. 407

அதிவிடையம், சிறுநானப்பூ, இவைகள் சமனாக எடுத்து தென்னம்பாளையின் சாறுவிட்டு பதினான்கு கடிகை நன்றாக அரைத்திடு.

ஆட்டிடாய் மயனம்போல ரைத்தெடு
கூட்டிடாய்ச் சிறு குன்றிபோல் செய்நிழல்
காட்டிடாய் பேதி கட்டுங் குளிகையாந்
தேட்டிடா மொழித் தேறையன் கண்டிடே. 408

மை போல் அரைத்து குன்றி அளவு உருட்டி நிழலில் உலர்த்திடு, பேதி வகைகளுக்கு இக்குளிகையைக் கொடுக்க பேதி நிற்கும். தேரையராகிய நான் சொல்லும் இம்முறைகள் தப்பாமல் குணமளிக்கும்.

பிள்ளை பெற்றவளுக்குச் சீழுதிரங்கட்டினால் இலேகியம்

கண்டிடக் கதலிச் சருகைச் சுட்டு
அண்டிடப் பனைவட்டு ரெட்டிப்பிசை
பண்டிடப் பாக்கள வொருமூன்று நாள்
உண்டிடச் சீழுதிரம் விட் டோடுமே. 409

கதலிச் சருகைசுட்டு அதற்கு இரண்டு பங்கு பனை வெல்ல மிட்டு பிசைந்து பாக்கு அளவாக மூன்று நாள் உட்கொள்ள பிரசவத்தால் உண்டான சீழ் உதரக்கட்டு தீரும்

வச்சிரக் கியாழம்

ஓடி வேயிலை யொக்கக் கியாழம்வைத்
தேடு மூன்று தினமுங் கொடுத்திடில்
ஆடிச் சீழு மழுக்கு முதிரமும்
நாடிக் கீழில் நழுவிடும் பார்த்திடே. 410

கதலி இலையை கியாழம் வைத்து மூன்றுநாள் கொடுத்திட சீழ், அழுக்கு, உதிரம் இவைகள் நீங்கும்.

வச்சிரவல்லிச் சூரணம்

பார்த்திடாய்ப் பிரண்டைத் தூர்பல மரைத்
தோர்த்திடா யிரண் டங்குலங் கொய்துடன்
வார்த்தி டாவின் பால் மாறா தரைப்படி
போர்த்திடா யடுப்புத் தாவி காட்டிடே. 411

பிரண்டைத் தூர் அரை பலம் எடையில் இரண்டு அங்குலம் எடுத்து ஆவின்பால் அரைப்படியில் போட்டு அடுப் பேற்றி காய்ச்சு.

காட்டிடு கதிர் காண வுலர்த்தியே
நாட்டு சுக்குட நற்பரங்கிப் பட்டை
காட்டிடு மிளகு கருஞ் சீரக
மூட்டிடு மதுரம் பொடி சேரவே. 412

பின் எடுத்து வெய்யிலில் உலர்த்தி. சுக்கு, பரங்கிப் பட்டை, மிளகு, கருஞ்சீரகம், அதிமதுரம் மற்றும்.

சேரடா சிறு தேக்கு நற்சீரக
மாரடா மல்லி வால்மிளகு ஏலமும்
நேரடா ரோகணி லவுங்கப் பட்டை
வேரடா வாய் விளங்கமுங் கண்டிடே. 413

சிறுதேக்கு, நல்லசீரகம், மல்லி, வால்மிளகு, ஏலம், கடுகுரோகணி, லவுங்கப்பட்டை, வாய்விளங்கம், மற்றும்,

கண்டு பொற்கடுக் காயொடு தான்றிக்காய்
அண்டு சித்தரத்தை பேர ரத்தையும்
பண்டு தாளிசப் பத்திரி கோஷ்டமும்
விண்டு வோர்பலம் வெவ்வேறு தாக்கிடே. 414

பொற்கடுக்காய், தான்றிக்காய், சித்தரத்தை, பேரரத்தை, தாளிசபத்திரி, கோஷ்டம் மேற்படி பொருட்கள் வகைக்கு ஒருபலம் வெவ்வேறாக எடுத்துக் கொள்.

தாக்கு கிறாம்பு சதிர்குறா சானியும்
தோக்கு சாதிக்காய் தொந்தமாம் பத்திரி
நோக்கு சோம்பு கோரோசனை யமுக்கறா
நீக்கு வோர்வகை நேர்கழஞ் சொன்றிடே. 415

கிராம்பு, குராசாணி, ஓமம், சாதிக்காய், சாதிபத்திரி, சோம்பு, கோரோசனை, அமுக்கிறா, வகைக்கு கழஞ்சி எடை எடுத்து வெய்யிலில் நன்றாக உலர்த்தி தூள் செய்திடு.

ஒன்றிடாய் வகை யொக்க வுலர்த்திடி
லன்றிடாய் வச்சிர வல்லிச் சூரணம்
அன்றிடாய் சீனி யந்திடை கூட்டியே
பொன்றிடா விரு போது மருந்திடே. 416

மொத்த தூளின் எடைக்கு சீனி கூட்டி இரு வேளையும் உட்கொள்.

அருந்திடும் பல மாகுந் தினந்தினம்
தெரிந்திடு மண்டலத்திற் பொருமலும்
வருந்திடு மூல வாயுவு குடைச்சலும்
விருந்திடு முஷ்ண வாயுவுந் தோற்றிடே. 417

தினமும் பலம் அளவு உட்கொள். ஒரு மண்டலம் இவ்வாறு கொள்ள பொருமல், மூல வாய்வு, குடைச்சல் உஷ்ண வாய்வு இவைகள் தீரும்.

விஷத்திற்கு நசியம்

தோர்த்தும் தும்பைத் துளசி மிளகுடன்
பேர்த்து மெண்ணுப் பிறட்டி நசியமுண்டு
ஏர்த்துப் போதி லிரங்கும் பல்லின்விஷம்
பார்த்து முப்புப்புளி பத்தறத் தள்ளே. 418

தும்பை, துளசி, மிளகு, இவைகளை மென்று நசியமிட பல்லின் விஷம் தீரும். உப்பு, புளி, நீக்குவாயாக.

பல விஷத்துக்கு - எலி விஷத்துக்கு

தள்ளு தும்பையின் சாறொன் றுழக்குடன்
எள்ளு ளெண்ணெ யேகச்சமன் கூட்டியே
கொள்ளும் போது குதித்துப் பலவிஷம்
விள்ளு பத்தியம் வென்னீரன்னந் தாக்கே. 419

தும்பைச்சாறு ஒரு உழக்கு, எள்ளெண்ணெய் அதே அளவு கூட்டி உட்கொள்ளும் போது பல விஷம் தீரும். வென்னீர் அன்னம் கூட்டி உட்கொண்டு பத்தியமாக இரு.

தாக்கு மேனியின் சாறொன் றுழக்குடன்
தூக்கு யெள்ளெண்ணெய் சூழச் சமன்விடு
தேக்கு மூன்று தினத்தில் எலிவிஷம்
போக்கு முப்புப் புளிபுகை மாற்றிடே. 420

மேனிச்சாறு ஒரு உழக்கு, எள்ளெண்ணெய் மேனிச் சாறின் அளவு, கலந்து மூன்று நாளுட்கொள்ள எலி விஷம் தீரும். உப்பு, புளி, புகை, நீக்க வேண்டும்.

மாத்துச் சீரக மாரி ரெண்டுபலம்
ஏத்து வாய்விளங் கேல மிளகொடு
சேத்து மோடி தேக்குசுக்கு திப்பிலி
பாத்து தாளிச பத்திரி கொண்டிடே. 421

சீரகம் ரெண்டுபலம், வாய்விளங்கம், ஏலம், மிளகு, மோடி, சிறுதேக்கு, சுக்கு, திப்பிலி, தாளிசபத்திரி.

கொண்டிடாய் வகைக் கோர்பல மேவறுத்
தெண்டிடா யிடித் தேவடி செய்துடன்
கண்டிடாய்ப் பேரீச்சங் கனி வித்தெடு
தண்டிடாய்ப் பல மாறெட்டுத் தாக்கிடே. 422

மேற்படி சரக்குகள் வகைக்கு ஒருபலம் எடுத்து இடித்து வடிகட்டி பேரீச்சம்பழ விதை, எட்டு பலம் எடுத்திடு.

தாக்குமுன் பொடி தன்னை விட்டுப்பிசை
நீக்கு வேர் பலம் நேரிரு நேரமும்
தோக்கு மண்டலத் துள்விரை வாதமும்
போக்குப் பாதப் பொருமல் விட்டோடுமே. 423

எடுத்ததை பொடித்து முன் பொடியுடன் கலந்து ஒரு பலம் அளவு உட்கொள். இவ்வாறாக இருநேரமும் ஒரு மண்டலம் உட்கொள்ள விரைவாதம், வாதப் பொருமல் தீரும்.

ஒடும் பத்திய முண்டுண்டு கந்தறி
சாடும் வாயு வஸ்தாகா தகத்துடன்
போடு முப்புப் புளியிவை கூட்டியே
ஆடும் வெந்நீ ரன்னமுண்ணக் காரமே. 424

மேற்படி மருந்திற்கு பத்தியம் உண்டு. கத்திரி சேர்த்திடு. உப்பு, புளி, இவைகளை கூட்டலாம், வாயுப் பொருளாகா. வெந்நீருடன் அன்னம் சேர்த்து உணவு கொள்.

வீரியவிர்த்திக்கு ஓணான் லேகியம்

காரநற் சாதிக்காய் லவுங்கம் மலர்
நேர றிந்த பிளியதின் வித்துடன்

மாரன் புஷ்பம் வகைக்குக் கழஞ்சிடை
பாரச் சூதம் பணவிடை யொண்டதே. 425

சாதிக்காய், லவுங்கப்பூ, பிளிவித்து, மதனகாமப்பூ, வகைக்கு கழஞ்சிஎடை, சூதம் பணம் எடை எடுத்து மேற்படி பொருட்களை சேர்த்திடு.

ஒண்டப் பாட்டி யோணான் குடல் தோலெடுத்
தண்டப் பாவைத் தறுப்புவாய் தைத்துடன்
விண்டப் பாவிநெய் விட்டுப் பதத்தினில்
கண்டப்பா பொரித்துக் கரத் தெடுத்திடே. 426

ஓணானின் குடல், தோல், இவைகளை அகற்றிவிட்டு அதனுள் மேற்படி சரக்குகளை வைத்து அபானவாய், வாய் இவைகளை தைத்து ஆவின் நெய்யில் மேற்படி ஓணானை போட்டு நன்றாக சிவக்க எடுத்திடு.

எடுத்துடன் மேலும் பொல்லா மகத்துடன்
தொடுத்திடு கல்வத்துள் வைத் தரைத்தெடு
கொடுத்திடு சிறு குன்றிபோல் நெய்யினில்
அடுத்திடு விந்து அகலா திருக்குமே. 427

எடுத்ததை கல்வத்திலிட்டு அரைத்து சிறு குன்றி போல் செய்து நெய்யில் உட்கொள்ளவும். பெண்ணைப்புணர விந்து விழாது.

இருக்குங் கிராணி யிரங்கா தருவையோ
ஒருக்கு மல்குலி லூண துலக்கையாம்
பொதிக்கும் போகம் பொதியும் வென்னீர்விடில்
வெறுக்கு மாதர் விடாளிது வுண்டிடே. 428

மேற்படி குளிகையால் கிராணித் தீரும். வென்னீர் குடித்து மேற்படி புணர விந்து விழாது.

வீரியவிர்த்திக்கு ஊர்க்குருவி லேகியம்

உண்டிடா யூர்க் குருவிக் குடலெடுத்
தண்டிடாய் லவுங்கஞ் சாதிக் காயபின்
விண்டிடாய் வகைக்கு விராக னரைக்
கண்டிடாய் மதன் கைமலர் சேர்த்திடே. 429

ஊர்க்குருவி குடல், மயிர் இவைகளை நீக்கிவிட்டு லவுங்கம், சாதிக்காய், அபின் வகைக்கு அரை விராகன் எடை, மதனபூ கால் கழஞ்சி எடை.

சேர்த்திடு கழஞ்சி யிடை காலது
ஏர்த்திடு மிவை யெல்லா மரைத்துடன்
கோர்த்திடு குருவிக் குள்ளே வைத்துவாய்
போர்த்திடு நெய்யிற் போட்டுப் பொரித்திடே, 430

மேற்படி, சரக்குகளை அரைத்து மேற்படி குருவிக்குள் வைத்து வாய், அபானவாய் இவைகளை தைத்து நெய்யிலிட்டு சிவக்க பொரித்திடு.

பொரித் தெலும்பையும் போக்கி மெழுகென
குறித் தரைத்தொரு குன்றிபோல் வாங்கியுண்
நிருத்த நாளிரு நேரமூ வேழுநாள்
விருத்த மன்மத வீரியங் கண்டிடே. 431

பொரித்ததை எடுத்து எலும்புகளை நீக்கிவிட்டு மெழுகு போல அரைத்து குன்றி அளவு எடுத்து உட்கொள். இருநேரமும், இருபத்து ஏழு நாட்கள் உட்கொள், மன்மதனைப் போல் வீரிய முண்டாகும்.

உந்தி வேர்க்குளிசம்

சண்டிடா யிளங் கன்னி தலைச்சுதன்
உண்டிடா திரு வுந்தியின் வேரது
கொண்டிடா நர்க் குளிசந் தூபங்கொடுத்
தண்டிடா யிடை தன்னி லிறுக்கிடே. 432

இளங்கன்னியை புணர்வதற்கு குளிசம் கூறுகிறேன். உந்திக் கொடியின் வேருக்கு தூபதீபம் கொடுத்து வேரை எடுத்து குளிசத்துள் அடைத்து இடையில் கட்டிக்கொள்.

இருக்கும் பெண்களை யீரைந்து நாழிகை
ஒறுக்கும் பூண்கட் டுலக்கைய தாக்கிடும்
பெருக்கும் விந்துப் பிசகாதிவ் வேர்க்கது
பொறுக்குங் காமம் பொழியும் பின்னேரவே. 433

குளிசம் கட்டிக் கொண்டபின் பெண்களை பத்து நாழிகை நேரம் புணரக் கூடிய திறம் உண்டாகும். விந்து ஒருசாமம் வரையில் விழாது.

மன்மதக் குழம்பு

ஏர் நிலப்பனையின் கிழங் கோர்பலம்
வேர் தண்ணீர் விட்டான்கிழங் கோர்பலம்
தேர் நெரிஞ்சிவேர் சேர்த்திட் டொருபலம்
பாரைத் தாவிநன் பாலுழக் கூட்டிடே. 434

நிலப்பனை கிழங்கு ஒருபலம், தண்ணீர் விட்டான் கிழங்கு ஒரு பலம், நெரிஞ்சில் வேர் ஒருபலம், ஆவின்பால் உழக்கு அளவு.

கூட்டு மான குழம்பு கொதித்துடன்
மூட்டு னித்த முனைந்து குடித்திடில்
காட்டு வீரியங் கைகண்ட திம்முறை
மாட் டுலக்கையா மல்குலிற் கண்டிடே. 435

மேற்படி சரக்குகளை இடித்து தூள் செய்து மேற்படி பாலிலிட்டு குழம்பாக கொதிக்க வைத்து குடிக்க வீரியவிர்த்தி காணும். இது கைகண்ட முறையாகும்.

பாஷாண பற்பம்

கண்டு நாகம் வெண்காரங் கருவங்கம்
தண்டு மூன்றுஞ் சமன்வகை யோர்பலம்
பண்டு போட்டொரு பாரிய சட்டியில்
ஒண்டு தீயிட் டுருக்கிப் பிரித்திடே., 436

நாகம் வெண்காரம், கருவங்கம் மூன்றும் வகைக்கு ஒரு பலம், ஒரு சட்டி யில் மேற்படி பொருட்களை இட்டு நன்றாக உருக்கிடு.

பிரித்திடு வெடியுப்பு பொடி செய்து
நிறுத்திடு பலம் நேரொரு மூன்றுநாள்
குறித்திடு சிறுகக் கொடுத் தெருக்கங்கோல்
வறுத்திடு சட்டி மாத்தே ழரிந்திடே. 437

வெடியுப்பை பொடித்து பலம் எடுத்து மேற்படி சரக்குகள் உருகும்போது வெடியுப்பு பொடியை சிறுகச்சிறுக மூன்றுநாள் தூவி எருக்கம் கோலால் கிண்டிக் கொண்டு இருக்க வேண்டும்.

அரிந்திடும் பற்பம் அம்புலி போலதாம்
பரிந்திடும் வெள்ளைப் பாஷாண மோர்பலம்
விரிந்திடு பற்ப மேலுங் கீழிட்டெரி
பொரிந்திடுங் கட்டிப் போகாது நீறுமே 438

மேற்படி வகையில் செய்ய பற்பமாகும். வெள்ளைப் பாஷாணம் ஒரு பலம் எடுத்து சட்டியில் மேற்படி பற்பத்தை அடியில் இட்டு அதன் மேல் பாஷாணக் கட்டியை வைத்து அதன்மேல் மேற்படி பற்பத்தை இட்டு எரித்துப் பார் பாஷாணம் நீறிடும்.

நீறும் வெள்ளை நெரித்தொரு நெல்லிடை
தேறுந் தேனி லிஞ்சித்திரி கியாழத்தில்
மாறுஞ் சன்னியு வாயு குளிர்ச்சுரம்
தீரும் பத்தியம் சேர புளிதள்ளே. 439

நீறிய வெள்ளையை ஒரு நெல் அளவு, தேன், இஞ்சிக் கியாழம், கூட்டி, உட்கொள்ள, சன்னி, வாய்வு, குளிர் சுரம் இவைகள் தீரும், புளி நீக்கி பத்தியம் காத்திடு.

தந்த வாயுவுக்கு உப்புச் சூரணம்

தள்ளடா வுப்பு தானீ ரைந்துபலங்
கொள்ளடா செங்கொட்டைப் பலம் ரெண்டதில்

கள்ளடா வெருக்கன் பழுப் பைம்பது
துள்ளடா யிடித் தோட்டில் வறுத்திடே. 440

உப்பு பத்து பலம், சேங்கொட்டை இரண்டு பலம், எருக்கன் பழுப்பு ஐம்பது எடுத்து மேற்படி சரக்குகளுடன் இட்டு இடித்து ஒட்டில் இட்டு வறுத்திடு.

வறுத்திடு சாம மைந்திரத் தூளதாம்
நெறித்திடு மிரு நேர மரைப்பலங்
குறித்திடு நிதங் கோரிடீ ரைந்துநாள்
உரித்திடும் பல்நோய் ஓடிடுங் கண்டிடே. 441

மேற்படி ஒரு சாமம் வறுத்திட தூளாகும். இருநேரமும் அரை பலம், அளவு, பத்துநாள் இத்தூளால் தந்தசுத்தி செய்ய பல் நோய்கள் தீரும்

கண்டிடா யடைக்காய் வாயி லிட்டுடன்
பண்டிடாய் வெள் ளிலையிலோர் பாச்சியை
விண்டிடாய் சுருட்டி மேலே மெல்லிடில்
சுண்டிடா யீர்ச் சுரப்புரு மாத்திடே. 442

மேற்படி தூளை வெற்றிலையில் வைத்து சுருட்டி வாயிலிட்டு மென்று அடக்கிக்கொள்ள ஈரு வீக்கம் குணமாகும்.

தந்த வாயுவுக்கு காட்டாமணக்கன்பால்

மாத்து காட்டாமணக் கொடி பாலெடுத்து
ஊத்து முக்கழஞ் சூட்டோ டுள்ளங்கையில்
ஏத்து நன்றாய் இழைத்திரு நேரமும்
சாத்து தந்தநோய் தான்பறந் தோடுமே. 443

காட்டாமணக்கு கொடியின்பால் மூன்று கழஞ்சி எடுத்து உள்ளங்கையில் இட்டு தேய்த்து இருநேரமும் பல்லில்வைக்க பல் நோய் குணமாகும்.

ஓடும் பாரம் பட்டையுந் தொராப்பட்டை
ஜாடு ரெண்டுஞ் சமனிடை தட்டியே
நாடு மண்டலம் நாளிரு நேரமும்
போடு வீரரைப் புண்ணுரு நாட்டிடே, 444

பாரம்பட்டை, தொரப்பட்டை இரண்டும் சமனெடை எடுத்து தட்டி அரை. புண்ணுக்கு வைத்திடு. இரு வேளையும் ஒரு மண்டலம் இவ்வாறு செய்ய குணமாம்.

சளி கோழைக்குப் பிரண்டை ரசம்

நாட்டிடும் பிரண்டை நறுக் கொண்டுதான்
வாட்டிடும் பிழிந் தாங்கு ரசந்தனை
போட்டிடு மிரு போதுமோ ரைந்துநாள்
கூட்டிடுஞ் சளி கோழைவிட் டோடுமே. 445

பிரண்டையைநறுக்கி இடித்து பிழிந்த ரசத்தை இருவேளையும் ஐந்து நாள் உட்கொள்ள சளி, கோழை இவைகள் தீரும்.

சகல வியாதிக்கு குளிகை

ஓடுத் தாமணி யூமத்தை சங்குப்பி
நாடும் பிரம்மறாக் காச்சிநல் வேளையுஞ்
சாடு வாத மடக்கி வெண்சாரணை
ஆடும் வெள்ளை யறுகுடன் கார்த்திடே. 446

உத்தாமணி, ஊமத்தை, சங்கக் குப்பி, பிரம்மதண்டு, நல்வேளை, வாதமடக்கி, வெள்ளைச்சாரணை, வெள்ளறுகு மற்றும்,

கார்த்திடாய்த் தும்பை கள்ளி யெருக்குடன்
நேர்த்திடாய்ப் பல மிவ்வகை யொன்றுக்கு
மார்த்திடாய்ச் சமன் வாங்கிடு நீபலம்
போர்த்திடாய் மஞ்சள் பூண்டு சுக்காட்டிடே. 447

தும்பை, கள்ளி, எருக்கு இவை. வகைக்கு ஒரு பலம், மஞ்சள்,ம், பூண்டு, சுக்கு மற்றும்.

காட்டுச் சீரகம் கார்போ கரிசியும்
நாட்டுத் திப்பிலி நல்மிள குப்பையு
மாட்டுக் காயம் வாளங் கடுக்காயொடு
மூட்டிச் சித்திர மூலமும் அண்டிடே. 448

சீரகம், கார்போக அரிசி, திப்பிலி, மிளகு, பெருங்காயம், நேர்வாளம், கடுக்காய், சித்திரமூலம் மற்றும்.

அண்டுங் கத்தூரி மஞ்சன் றாஷ்டமுடன்
வெண்டுஞ் சென்னல் வித்து கருஞ்சீரகம்
உண்டும் வெண்கடு கொட்டி யமுக்குறா
கண்டுகொள் வகைக் காற்பல மாட்டிடே. 449

கஸ்தூரி மஞ்சள், சன்றாஷ்டம், சென்னல்விதை, கருஞ் சீரகம், வெண் கடுகு, அமுக்கிரா இவைகள் வகைக்கு கால்பலம்.

ஆட்டி தூளு செய்தப்பா வடித்தெடு
கூட்டி முன்ரசங் குத்தேழு சாமமுங்
காட்டி மைபோல் கதித்திட் டரைத்துடன்
வாட்டி கெந்தி மனோசிலை சூட்டிடே. 450

மேற்படி சரக்குகளை தூள் செய்து வடிகட்டி முன் சொன்ன மூலிகை ரசங்களை விட்டு ஏழுசாமம் நன்றாக அரைத்திடு. கெந்தகம், மனோசிலை கூட்டி மற்றும்.

சூட்டுத் தாளகஞ் சூதம்வெண் காரமும்
கூட்டு லிங்கம் கெவுரி வென்நாபியுங்
காட்டு வோர்வகைக்குப் பலங் காலிடை
நாட்டு தும்பை ரசத்தி லரைத்திடே 451

தாளகம், சூதம், வெண்காரம், லிங்கம், கெளரி, வெண்நாபி, இவைகள் வகைக்கு கால்பலம் எடுத்து தும்பை சாற்றில் நன்றாக அரைத்திடு.

அரைத்து சாமமேழ் ஆட்டி வலிந்துடன்
தெரைத்து நற்க் கருசிலாங்கண்ணிச் சாற்றினில்
விரைத்து சாமமேழ் வீசி யரைத்துபின்
பரைத்து பார்க்கரன் பாரது லர்த்திடே 452

மேற்படி ஏழுசாமம் அரைத்து கரிசலாங்கண்ணிச் சாற்றில் ஏழு சாமம் அரைத்து நன்றாக உலர்த்திடு.

உலத்திச் சஞ்சீவி ஓர்பலஞ் சாற்றினில்
பிலத்தி யாயிழை பின்னையின் காயென
சலத்தி யாய்த்தனல் தாக்கிக் கொடுத்திட
நிலத்தியா யிரு நேரமும் தாக்கிடே. 453

இஞ்சிச்சாறு ஒருப்லம், மேற்படி மருந்து புன்னைக் காயளவு மேற்படி சாற்றில் இழைத்து சூடுசெய்து கொதிக்க வைத்து கொடுத்திடு.

தாக்கு நேரேழ் தரிக்கனு வாயுவுங்
கூக்கு கைப்பதங் குத்தல் குடைச்சலும்
போக்கு மேகவாய்வுப் பிடிப்போடிடுங்
காக்கும் பத்தியங் கண்டிதங் கார்த்திடே. 454

மேற்படி இருநேரமும் ஏழுநாள் கொடுக்க கனு வாய்வு, பாதத்தில் குத்தல், குடைச்சல், மேக வாய்வு பிடிப்பு இவைகள் தீரும். பத்தியம் காக்கவேண்டும்.

காசத்துக்கு அனுபானம்

கார்த்துச் சங்குப்பி கால்பலச் சாற்றினில்
சேர்த் துரைத்தெடு சுண்டையின் காயென
ஏர்த்து நாளேழ் இருபோ திந்தப்படி
பார்த்துக் காசம் பறந்திடுங் கண்டிடே. 455

சங்கங்குப்பிச்சாறு கால்பலம், சுண்டைக் காயளவு மருந்தை மேற்படி சாற்றில் இலழைத்து இருவேளையும் ஏழு நாட்கட்கு உட்கொள்ள காசம் குணமாம்.

சீதசுரத்துக்கு அனுபானம்

கண்டிடப் பாகதண்டுத் தேன் விட்டிழைச்
செண்டி டப்பா தேத்தன்வித் தென்தொட

அண்டி டப்பா வாரிரு நேரமுந்
திண்டி டப்பா சுரந் தெரித்தோடுமே. 456

பாகல் தண்டை தேன்விட்டு இழைத்து தேத்தன் விதையளவு மேற்படி மருந்தை மேற்படி தேனில் கலந்து இருவேளையும் உட்கொள்ள சுரம் குணமாகும்.

இதுவுமது

ஓடும் வேளையி லுற்ற ரசத்தினில்
தோடுறைத் தெடு சுண்டையின் காயென
போடு நாளெழு போதிரு நேரமுஞ்
சாடுஞ் சுரந் தன்னைக் கட்டுமே. 457

வேளைச் சாற்றில் மேற்படி மருந்தை சுண்டைக்காயளவு கலந்து உட்கொள், இருவேளையும் ஏழு நாளுட்கொள்ள சுரம் குணமாகும்.

ஜன்னி சயித்தியத்திற்கு

கட்டு மாவுலிங்கை முருங்கைப் பட்டை
குட்டு பாதிரி கொங்கையின் பால்பலம்
விட்டுத் தேனொடு வெள்ளிலைச் சார்சமன்
தட்டுயின்ற சத்தால் ரசம் வாங்கிடே. 458

மாவுலிங்கை, முருங்கைப்பட்டை, பாதிரி, தாய்ப்பால் வெற்றிலைச்சாறு, ஒவ்வொரு வகைச்சாறும் வகைக்கு ஒரு பலம்.

வாங்கி யிந்தப்படி மாறா தைந்துநாள்
ஓங்கியி ழைத்திடுவோரிரு நேரமுந்
தாங்கி நின்றதோர் ஜன்னி சயித்தியம்
தேங்கி டாமல் தெரித்திடுஞ் செய்திடே. 459

மேற்படி சாறுகளை கலந்து ஐந்துநாள் இருவேளையும் உட்கொள்ள சன்னி சயித்தியம், இவைகள் தீரும்.

குன்மத்திற்கு

செய்யடா வாழைச் சாற்றினி லேழுநாள்
வையடா யிழை வாங்கிரு நேரமும்
பையடா கொள்ளு பத்தியங் கண்டிதம்
மெய்யடா குன்ம மீறாது கட்டிடே 460

வாழைச் சாற்றில் மேற்படி மருந்தை இழைத்து இருநேரமும் உட்கொள்ள குன்மம் குணமாகும், பத்தியம் காக்க வேண்டும்.

கட்டிடுங் கடுக்காய் பிஞ்சியின் மலர்
தொட்டிடுஞ் சூரத்துச் சிறு நாகப்பூ

விட்டிடுஞ் சோம்பு வீதங் கழஞ்சிடை
நெட்டிடும் பசு நெய்யிலே தோர்த்திடே. 461

சூரத்து கடுக்காய் பிஞ்சு, கடுக்காய், பூ, சிறுநாகப்பூ, சோம்பு இவைகளை வகைக்கு கழஞ்சி எடை எடுத்து பசு நெய்யில் வறுத்திடு.

தோர்த்திடாய் வறுத்துப் பொடி செய்துடன்
கார்த்திடாய் வெண் கற்கண்டு கழஞ்சிநால்
ஏர்த்திடா யரைத் திவ்வித மேழுநாள்
சேர்த்திடாய் உதிரஞ் சீதஞ் சாடுமே. 462

வறுத்து பொடி செய்து கற்கண்டை பொடித்து நான்கு கழஞ்சி அரைத்து உட்கொள், இவ்விதம் ஏழுநாள் உட்கொள்ள உதரம் சீதக்கழிச்சல் தீரும்.

சாடு ஓமந் தனிப் புரசம்விரை
ஓடும் வேப்பை யீர்க்குத் தப்பிரண்டையும்
போடு நால்வகை போட்டுச் சமனிடை
ஆடு நீரு மரைப்படிக் கண்டிடே. 463

ஓமம், புரசம்விதை, வேப்பன் ஈர்க்கு, பிரண்டை இவை நான்கும் சமன் எடை எடுத்து அரைப்படி நீரில் இட்டு காய்ச்சு

கண்டிட வேரி காச்சி நாலொன்றுதான்
சுண்டிட விறுத்துக் குடி மூன்றுநாள்
உண்டிடப் பூச்சி யுள்ளது கட்டுடன்
விண்டு பந்தாய் விழும் இதறிந்திடே. 464

காய்ச்சி நாலொன்றாய் சுண்டினபின் வடிகட்டி குடித்திட வேண்டும். இவ்வாறு மூன்றுநாள் குடிக்க வயிற்றில் உள்ள பூச்சிகள் கூண்டோடு விழும்.

அரிந்திடும் பேதி யாகக் கொடுத்திடு
சரிந்திடும் பூச்சி தங்கா தினத்துடன்
பரிந்திடும் பின்னி பந்து பந்தாய்விழும்
திரிந்திடும் பத்திய மில்லைத் தோத்திடே. 465

பேதிக்கு மருந்து கொடு, பூச்சிகள் தங்காது பந்து பந்தாக வெளியேறும். பத்தியம் இல்லை

தாம்பூர பற்பம்

தோத்தி தாம்பூர துட்டு வெண்சாரணை
சாத்தி லேழ்தினந் தாநூறி யானபின்
நேத்திச் சூட்டி வோரேழ்விசை காச்சித்தோய்த்
தாத்தி வெள்வங்கத் தால்குகை செய்திடே. 466

தாமிர துட்டை வெண்சாரணைச் சாற்றில் ஏழுநாள் ஊற வைத்து பின், தாமிர துட்டை காய்ச்சி மேற்படி சாற்றில் ஏழுதடவை தோய்க்க வேண்டும். வெள்வங்கத்தால் குகை போல் செய்திடு.

செய்யு மூசையிற் சேர்முன் மருந்தடை
பெய்யுஞ் சாறு பிழிந்ததின் மேல்விடு
வையுஞ் சீலைமண் வாகாக செய்துடன்
முய்யுஞ் சீலை முழத்தளஞ் சுற்றிடே. 467

வெள்வங்க குகையில் மேற்படி தாமிர தகட்டை வைத்து வெண்சாரணையின் சாற்றை அதில் விட்டு மூடி ஐந்து சீலைமண் செய்திடு.

சுற்றும் பந்தத்தில் தூவாமணக் கெண்ணெய்
மெற்று நன்றாய் மிகச்சுட ரேத்ததில்
பற்று மாறிடில் பாத்தெடு பற்பமாம்
முற்று தீப தூபமுங் கொடுத்திடே. 468

ஆமணக் கெண்ணையில் விளக்கேற்றி குகையை அதில் காட்டு பின் முறையாய் பிரித்தெடு பற்பமாக இருக்கும். தீப தூபம் காட்டு.

கொடுத்திடாய் பற்பங் குன்றிடை தூக்கியே
விடுத்திடு ஆவின்நெய் விட்டிரு நேரமும்
அடுத்திடாய் மண்டலம் அரை கொண்டிடில்
எடுத்திடாய் வீர்யமாந் தெரித்திடே. 469

பற்பத்தை குன்றி எடை எடுத்து ஆவின் நெய்விட்டு கலந்து உட்கொள். இவ்வாறு இரண்டு வேளையும் அரைமண்டலம் உட்கொள். வீரிய முண்டாகும்.

பக்க சூலை சுரவாதத்திற்கு

கண்டி டுள்ளி கனத்தயிலத் திழைத்
துண்டிடு பக்க சூலைவிட் டோடிடுங்
கொண்டிடுந் தேனிற் கூட்டிடில் மூன்றுநாள்
மண்டிடுஞ் சுரம் வாதம் போமூட்டிடே. 470

உள்ளி தயிலத்தில் மேற்படி பற்பத்தை இழைத்து உட்கொள். பக்க சூலை தீரும். தேனில் மேற்படி பற்பத்தை உட்கொள்ள சுரம், வாதம் தீரும்.

ஜன்னிக்கு

மூட்டு நொச்சிப்பட்டை முருங்கைப்பட்டை
காட்டு மாவு லிங்கப்பட்டை வென்னியில்
வாட்டிச் சார்பிழிந் தாறு! சுரசத்தில்
கூட்டு சன்னி குதித்தெழுங் கண்டிடே. 471

நொச்சிப்பட்டை, முருங்கைப்பட்டை, லவுங்கப்பட்டை. இவைகள் நெருப்பில் வாட்டி பிழிந்து மேற்படி பற்பத்தை அளவுபட உட்கொள்ள சன்னி குணமாகும்.

பித்தத்திற்கு

கொண்டிடுங் கையான் குத்திதன் சாற்பலம்
பண்டிடும் பொர்ப் பணவிடை பற்பமாம்
உண்டிடு மண்டல மிரு நேரமும்
கண்டிடும் பித்தங் காணாது பார்த்திடே. 472

கையானை இடித்துப் பிழிந்த சாறு ஒரு பலத்துடன் மேற்படி தாமிரபற்பம் பணவிடை கூட்டி உட்கொள், இருவேளையும் ஒரு மண்டலம் உட்கொள்ள பித்தம் குணமாகும்.

தமரக வாயுவுக்கு

பார்த்திடாய்ப் பரங்கிப் பட்டை சங்கம்வேர்
சேர்த்திடாய் மிளகு சுக்கு திப்பிலி
ஏர்த்திடாய் வகைக்குக் கழஞ்சிச் சலங்
காத்திடா யுழக் கொன்றாய்க் காச்சிடே. 473

பரங்கிப்பட்டை, சங்கம்வேர், மிளகு, சுக்கு, திப்பிலி, வகைக்கு கழஞ்சி எடை, இவைகளை அரைப்படி நீரிலிட்டு உழக்கு அளவு காய்ச்சிக் கொள்.

காச்சிடா யிரு நேரங் கியாழத்தில்
பாச்சிடாய் பொற் பணவிடை பற்பமா
மாச்சிடா யரை மண்டலங் கொண்டிடில்
மூச்சிடா வாயுவு முன்னழிந் தோடுமே. 474

காய்ச்சிய கியாழத்தில் மேற்படி பற்பம் பணவிடை கூட்டி உட்கொள்ள வேண்டும். இருவேளையும் அரைமண்டலம் உட்கொள்ள வாய்வு தீரும்.

திமிருக்கு கிரந்தி ஊரல் குஷ்டம் அரிகிரந்திக்கு

ஒடும் நீரடி யோரத்தி சாணமாம்
ஆடுமே லோட கத்திப் பருப்பெடுத்
தேடுவுள் தயிலத் திற் கழஞ்சிடை
ஒடு பற்பமும் பொர்ப்பணந் தூக்கிடே. 475

நீரடி முத்துப் பருப்பை சாணத்தில் சுத்தி செய்து ஒடுநீக்கித் தயிலம் எடுத்து, கழஞ்சிஎடையுடன் மேற்படி தாமிர பற்பம் பணவிடை எடுத்து உட்கொள்.

தூக்கு மண்டலந் தோய்ந்திரு நேரமும்
தூக்கு சீனிநெய் தூபதீபங் கொடு
நோக்கு மீனடிடில் நோய்விதங் கண்டறிந்
தாக்கு மெய்த்திமிர் தானழிந் தோடுமே. 476

மேற்படி வகையில் இருநேரமும் ஒருமண்டலம் உட்கொள், சீனி சேர்த்திடு, நெய் தீபம், தூபம் காட்டி மேற்படி மருந்தை உட்கொள்ள திமிர் நோய் குணமாகும்.

ஓடும் வாயுவோ டொத்த வியாதியுங்
கேடு மேகக் கிரந்திப்புண் ணூறல்போம்
வாடு ; குட்ட மரிக்கிரந்தி விடும்
தேடு மிம்முறை தேவியைப் பூசியே. 477

மேலும் வாய்வு, மேகம், கிரந்திப்புண், ஊரல், வரிக்குட்டம் இவைகள் தீரும். தேவியைப் பூசை செய்ய வேண்டும்.

மகோதரத்திற்கு

பூசி கோனீரில் பொற்பணத் தின்னிடை
வீசி நாளேழ் விடிந்துட னீந்திடில்
பாசி போலப் பாபரிந்திடும் பேதியா
மாசில் லாமல் மகோதரம் நீங்குமே. 478

தாமிர பற்பம் பணவெடை கோநீரில் கலந்து விடிந்த உடன் கொடுக்க வேண்டும். பேதியாகும், இவ்வாறு ஏழுநாள் கொடுக்க மகோதரம் தீரும்.

பாண்டு விரை வாதத்திற்கு

நீங்கும் வெள்ளாட்டு நீர்பிடித் தேழுநாள்
பாங்கு பற்பம் பணவிடை யேத்திடில்
வீங்கும் பாண்டு விரைவாத மோடிடும்
ஓங்கும் பத்திய மொன்றிலை மூட்டிடே. 479

வெள்ளாட்டு நீருடன் பணவெடை பற்பத்தை ஏழுநாள் கொடுக்க பாண்டு, விரைவாதம் குணமாகும். பத்தியமில்லை.

சார திராவகத்தில் இலிங்க பற்பம்

மூட்டிடுச் சார மூவிரண் டார்பலங்
காட்டிடு நாலாங் காச்சலுப் பார் பலம்
மாட்டிடுங் குடுவைக் குளறைத் தமைச்
சூட்டிடு வாலை திராவகங் காத்தெடே. 480

சாரம் ஆறுபலம், நாலாங் காய்ச்சல் உப்பு ஆறுபலம், மேற்படி இரண்டையும் வாலை எந்திரத்தில் இட்டு திராவகமாக இறக்கிக் கொள்.

கார்த்துச் சாதி லிங்கம் பலமொன்றதி
லூர்த்துத் திராவக முள்ள முந்தும்படி
ஏர்த்துச் சாம மிரவிமுன் வைத்தெடு
போர்த்து வாலையைப் பூசனைச் செய்திடே. 481

சாதிலிங்கம் ஒருபலம் எடுத்து அதில் லிங்கம் முழுகும்படி மேற்படி திராவகம் விட்டு ஒரு சாமம் வெய்யிலில் வைத்திடு. வாலைக்கு பூசை செய்.

செய்யடா வோரைந்து வாளி தன்புடம்
வையடா பற்ப மாகும் பூசித்தெடு
மெய்யடா பொர்ப் பணவிடை தூக்கியுண்
ஐயடா சீனியா மென் றரிந்திடே. 482

மேற்படி லிங்கத்தை ஐந்து புடமிடு பற்பமாகும். பூஜை செய்திடு, சீனியுடன் கலந்து பணவெடை உட்கொள்ள வேண்டும்.

பித்தபாண்டு பயித்திய மூர்ச்சைக்கு

அருந்திடு மிருநேர மீரைந்து நாள்
பரிந்திடும் பித்த பாண்டு பயித்திய
முரிந்திடும் வாந்தி மூர்ச்சைவிட் டோடிடும்
தெரிந்திடும் முறை செய்திடத் தீருமே. 483

இரண்டு வேளையும் பத்துநாள் உட்கொள்ள பித்த பாண்டு, பயித்தியம், வாந்தி மூர்ச்சை இவைகள் குணமாகும்.

தீரும் பற்ற தினமிரு நேரமுஞ்
சேருங் குன்றிடைத் தேனிலீ ரைந்துநாள்
நேரு வாதமுன் னில்லா தொழிந்திடும்
பாரும் பத்தியம் பாங்கில்லைத் தோர்த்திடே. 484

தேனில் குன்றிஅளவு பற்பத்தை உட்கொள்ள வேண்டும் இருவேளையும் பத்துநாள் இவ்வாறு கொள்ள வாதம் குணமாகும். பத்தியம் இல்லை.

தோர்த்திடாய் பற்பந் தூக்கியோர் குன்றிடை
பார்த்திடாய் முலைப்பா லிஞ்சி வெல்லத்து
வேர்த்திடாய் மூன்று நாளிரு நேரமுஞ்
சார்த்திடாய் சுரம் சன்னிவிட் டோடுமே. 485

மேற்படி லிங்க பற்பத்தை குன்றிஅளவு தாய்ப்பால், இஞ்சி, வெல்லம், இவைகளில் கலந்து உட்கொள்ளவும். இவ்வாறு இரண்டு வேளையும் மூன்று நாளுட்கொள்ள சுரம், சன்னி, தீரும்.

ஓடும் வெள்ளுள்ளி யுட்டயி லத்தினிற்
கூடும் பற்பமுங் குன்றிடை சேத்துமத்
தாட நாளே ழுடுத்திரு நேரமுஞ்
சூடும் வாயுவுஞ் சூலைபோம் பார்த்திடே 486

வெள்ளுள்ளி தயிலத்தில் குன்றிஎடை லிங்கபற்பம் கலந்து உட்கொள்ள வேண்டும். இவ்வாறு இரண்டு வேளையும் ஏழுநாள் உட்கொள்ள வாய்வு, சூலை இவைகள் தீரும்.

பார்த்திடாய் வேம்பு பட்டை யரைப்பலங்
கார்த்திடாய் திரி கடுகுட னரைப்பலம்
வார்த்திடாய்ச் சல மாறா தரைப்படி
சேர்த்திடா யெரித்தெட் டொன்றாய் வாங்கிடே. 487

வேம்பு பட்டை அரைபலம், திரிகடுகு அரைபலம் தண்ணீர் அரைப்படியில் மேற்படி சரக்குகளை இட்டு எட்டில் ஒன்றாக சுண்டக்காய்ச்சி வடிகட்டிக் கொள்.

வாங்கி நீரை வடியடி செய்துடன்
தாங்கு பற்பந் தனிலொரு குன்றிடை
ஆங்கு சேத்து வருளிரு நேரமும்
நீங்கு நோய்வகை நேரறிந் தாடிடே. 488

வடிகட்டின கியாழத்துடன் சாதிலிங்க பற்பம் குன்றி எடை அளவு உட்கொள்ள வேண்டும். இவ்வாறு இருநேரமும் உட்கொள்ள வேண்டும்.

ஆடுமே தருவாய் அந்திர வாயுவுங்
கூடு குன்மங் குடைச்சல் வயிற்றுநோய்
ஓடுங் கால்கை நோயுத்த மேகப்புடி
வாடும் பாரீச வாய்வுபோ முண்டிடே. 489

மேற்படி வகையில் கொள்ள வாய்வு அந்தர வாய்வு, குன்மம், குடைச்சல், வயிற்றுநோய், கைகால் சோர்வடையும், மேகம், பாரிச வாய்வு இவைகள் தீரும்.

உண்டி டாட்டு நீரொரு ழக்காமதில்
பண்டிடாய் லிங்க பற்பமோர் குன்றிடை
அண்டிடாய் தினம் ஆறிரு நேரமும்
கொண்டிடாய் மகோதரம் விட்டு ஓடுமே. 490

ஆட்டு நீர் ஒரு உழக்கில் லிங்கப் பற்பத்தை குன்றிஎடை கலந்து உட்கொள்ள வேண்டும். இவ்வாறு இருநேரமும் ஆறுநாள் உட்கொள்ள மகோதரம் குணமாகும்.

ஓடுங் கோவுநீர் ஒருழக் காம்அதில்
கூடும் பற்பம்ஓர் குன்றிடை சேர்த்துடன்
நாடு மூன்றிரு நாளிரு நேரமும்
வாடு நீங்கும் பெருவயிர் கண்டிடே. 491

கோநீர் ஒரு உழக்கு, லிங்கபற்பம் குன்றிஎடை எடுத்து கலந்து உட்கொள்ள வேண்டும். இவ்வாறு இருநேரமும், மூன்றுநாள் உட்கொள். பெருவயிறு சுருங்கி குணமாகும்.

கண்டிடுங் கொடிக்கள்ளிக் கழஞ்சிடைக்
கொண்டிடு மிளகு உள்ளி சமனரைத்து
உண்டிடும் பற்பஞ் சேரொரு குன்றிடை
அண்டிடு மண்டலம் ஒன்று நீட்டிடே. 492

கொடிக்கள்ளி கழஞ்சிஎடை, மிளகு, உள்ளி, வகைக்கு கழஞ்சிஎடை, லிங்கபற்பம் குன்றி எடை, இவைகளை கலந்து உட்கொள். இவ்வாறு இரண்டு வேளையும் ஒரு மண்டலம் உட்கொள்.

நீட்டிடாய் இரு நேரமும் இப்படி
கூட்டிடாய் கருங் குட்டம் பவுத்திரம்
மூட்டிடாய் மேக மூறல் கிரந்திப்புண்
மாட்டிடாய் வெள்ளை வாங்கும் அரிந்திடே. 493

மேற்படி வகையில் மருந்துண்ண கருங்குட்டம், பவுத்திரம், மேகமூறல் கிரந்திபுண், வெள்ளை, இவைகள் குணமாகும்.

அரிந்திடாய் சுக்கு அரத்தை வெண்சங்கம்வேர்
தெரிந்திடாய்க் கருஞ் சீரகந் திப்பலி
பரிந்திடாய் பறங்கிப் பட்டை ஓமமும்
விரிந்திடாய் மோடி வாய்விளங் கூட்டிடே. 494

சித்தரத்தை, வெண் சங்கன்வேர், கருஞ்சீரகம், திப்பலி, பரங்கிப்பட்டை, ஓமம், மோடி, வாய்விளங்கம், மற்றும்,

கூட்டிச் சீரகங் கோட்ட மதுரமும்
காட்டுக் கிராம்புக் கடுக்காய் முத்தான்றிக்காய்
மூட்டு மக்கிரா முக்கிறா தேக்கொடு
வாட்டு வொன்று வகைப்பல மாக்கிடே. 495

சீரகம், கோஷ்டம், அதிமதுரம், கிராம்பு, கடுக்காய், தான்றிக்காய், அமுக்கிறா, சிறுதேக்கு, இவைகள் வகைக்கு ஒரு பலம்.

மாக்கும் பொன்னிறமாய் வறுத்தே யிடித்
தேக்கு மெல்லிய சீலை வடித்தெடுத்
தாக்குஞ் சர்க்கரைத் தான்சமன் பாகுசெய்
தேக்கு முன்பொடி தூவித்தேன் வார்த்திடே. 496

சரக்குகளை பொன்னிறமாக வறுத்து இடித்து துணியில் சலித்துக் கொள், தூளிற்கு சமன் எடை சர்க்கரையை பாகு செய்து மேற்படி பொடியை தூவி கிளறி தேன், நெய், வகைக்கு இரண்டுபலம் விடு.

வார்த்திடாய் நெய் வகைக்கு பலமிரண்டு
ஏர்த்திடாய்க் கிண்டி யிறக்கிடு லேகியம்
பார்த்திடா லிங்க பற்பமுங் காற்பலங்
கார்த்திடாய் சுண்டைக் காய் அள வோங்கிடே. 497

நெய், தேனை, மேற்படி அளவில் விட்டு நன்றாக கிளறி லேகியம் செய்து அதில் லிங்கப்பற்பம் கால் பலம் இட்டு நன்றாக கிளறிவைத்துக் கொண்டு சுண்டைக்காய் அளவு உட்கொள்.

ஓங்கிடு மிருநேர மோர் மண்டலம்
வாங்கிடு வாத வாயுவு மார்நோய்கள்
தீங்கிடும் பெருநோய் திமிர் வாயுவும்
நீங்கிடு முறை நேரறிந் தேத்திடே. 498

மேற்படி வகையில் இரு நேரமும் ஒரு மண்டலம் உட்கொள்ள வாதம், வாய்வு, மார்புநோய், பெருநோய், திமிர் வாய்வு, இவைகள் தீரும்.

சகல வீக்கத்திற்கும் பத்து

ஏத்திடாய்ப் புத்தடி மண் பழைய அன்னம்
ஆத்திடாய்ச் சமன்மை போல் அரைத்தெடு
காத்திடாய் நீராகாரம் விட்டுக் குழைப்
பார்த்திடாய் கொதிப் பாகெனத் தேக்கிடே. 499

புற்று மண், பழைய சாதம், இரண்டையும் சமனாக சேர்த்து மைபோல் அரைத்து நீராகாரம் விட்டு குழம்பி கொதிக்கவை.

தேக்கு நாளேழ் துடந்திரு நேரமும்
தாக்கு வீக்கம் தரியாவிட் டோடிடும்
போக்கு வாய்வு வஸ்தும் புகையும்புளி
நீக்கும் பத்தியம் நேர்கண் டறிந்திடே. 500

வீக்கம் கண்ட பகுதியில் இரண்டு வேளையும் ஏழுநாள் இக் குழம்பை பற்றிட வீக்கம் குணமாகும், வாய்வு பொருள், புகை, புளி, இவைகளை நீக்கி பத்தியம் இருக்க வேண்டும்.

மலசலஞ் சிக்கினால் எண்ணெய்த்திரி

அரிந்திடாய் ’சூடக மிகுந் தாதலால்
சரிந்திடாது மலசலந் தீய்ந்திடும்
தெரிந்திடா யிழைச் சீலைத் திரித்துடன்
நெரிந்தி டாமணக் கெண்ணெயி லூட்டிடே. 501

மல சலம் அடைத்து விட்டால் துணியில் ஆமணக் கெண்ணை ஊட்டிடு.

ஊட்டிடா சனத்துள் நீர் துவாரமும்
காட்டி டாதே கடிகை யீரைந்தது
போட்டிடாய்ச் சலம் போக்கு மலத்தையும்
ஆட்டிடாய் வாயு வஸ்து தள்ளாடுமே. 502

மேற்படி எண்ணெய் ஊட்டிய திரியை ஆசனத்துள்ளும், நீர் துவாரத்திலும் பத்துகடிகை நேரம் வைத்திருக்க கட்டி தீய்ந்து போன மலம் வெளியாகும் சலமும் வெளியாகும். வாய்வு பொருட்களை தள்ளவேண்டும்.

கள்ளிக் காக்கை எண்ணெய்

ஓடுஞ் செண்பக முட்குடல் ரெக்கையும்
பாடு செய்து பரிந் துரலிலிட்டே
சாடு மையெனத் தானிடித் தேயிதில்
ஆடு முத்தெண்ணெ யாம்படி சேர்த்திடே. 503

கள்ளி காக்கையின் குடல், ரெக்கைகளை நீக்கி விட்டு சுத்தம் செய்து உரலில் இட்டு நன்றாக மை போல் இடித்து முத்து எண்ணெய் ஒருபடியில் போடு.

சேர்த்துப் பத்தஞ் செருப்படைச் சார்படி
சார்த்து வந்தரத் தாமரைச் சார்படி
கார்த்து றுய்யக் கட்டுக்கொடிச் சார்படி
பார்த்து வெள்ள றுகுப் படிச் சாறிடே. 504

செருப்படைச்சாறு ஒருபடி, அந்தரத்தாமரை சாறு ஒருபடி, கட்டுக்கொடிச்சாறு ஒருபடி, வெள்ளறுகுச்சாறு ஒருபடி, இவைகளை மேற்படி எண்ணெயில் ஊற்று.

சாறிடா யிவை தானுற வாகவே
நேரடா யிரு நெல்லியின் தோலிடைப்
பாரடா! பலம் பஞ்சனத் தட்டியுள்
ஏரடா வடுப் பேற்றி யெரித்திடே. 505

நெல்லித்தோல் ஆறுபலம் எடுத்து நையத்தட்டி மேற்படி மருந்துகளுடன் சேர்த்திடு. பின் அடுப்பேற்றி எரித்திடு.

கள்ளரித்திடு பதமே யிறுத்தேயுடன்
துள்ளத்திடு பலங்கொள் எரைமண்டலம்
....சூலைபோம்
....ன ருந்திடே. 506

எரித்து பதமாக இறக்கி வடித்துக்கொள், வேளைக்கு பலம் அளவு உட்கொள், அரைமண்டலம் இவ்வாறு உட்கொள்ள சூலை தீரும்.

கெந்தி ரசாயனம்

அரிந்திடாய்க் கெந்தி யார்பலஞ் சுத்திசெய்
யெரிந்திடா தெள்ளெண்ணை யீரைந்து பலம்
தெரிந்திடா தரைத்தே யிழைச் சீலையில்
சரிந்தடா தப்பிதான் திரித் தோர்த்திடே. 507

கெநதகம்ஆறுபலம் சுத்தித்து எள்ளெண்ணெய் பத்து பலத்தில் அரைத்து துணியில் தடவி திரியாக திரித்திடு.

தோர்த்தி தீபச்சுடர்த் தயிலம் பிடித்
தார்த்திச் சீரகத் தாளீச பத்திரி
போர்த்தி நாகையின்பூ லவுங்கப் பட்டை
நேர்த்தி யேலம் நெரித்துப் பரிந்திடே. 508

திரியை எரித்து சுடர்தயிலம் எடுத்து சீரகம் தாளிச பத்திரி சிறு நாகப்பூ, லவுங்கப்பட்டை, ஏலம், வகைக்கு அரைப்பலம்.

பரிந்திடு வகைக்குப் பலந் தானரை
சரித்திடு லவுங்கஞ் ஜாதிக்காயொடு
வருந்திடு வோர் வகைக்கிப் பலமரை
தெரிந்திடு வறுத்தே பொடித் தோங்கிடே. 509

லவுங்கம், ஜாதிக்காய், வகைக்கு அரைபலம், இவைகளை வறுத்து பொடி செய்திடு.

ஓங்குஞ் சூரணமுத் தயிலத் தொடு
வாங்குஞ் சாம மரைத்து ரசாயனம்
பாங்கு சுண்டைப் பழமிரு நேரமுந்
தாங்கு மண்டலந் தானரைக் கொள்ளுமே. 510

பொடியும், மேற்படி தயிலமும் சமமாக எடுத்து அரைத்து ரசாயனம் செய்து சுண்டைக்காய் வீதம் இருவேளையும் அரை மண்டலம் உட்கொள்.

கொள்ளுங் கைகால் குதித்தோல் வெடித்தலும்
விள்ளுங் கூந்தல் மிகுந்துதிர் புண்புரைத்
தெள்ளு மேகத் திமிர்குடை வாயுவுந்
தள்ளு நோயிவை தான்விடும் பாரிதே. 511

கை,கால், குதி, இவைகளில் ஏற்படும் தோல் வெடித்தல், முடி உதிர்தல், புண் புரைகள், மேகத்திமிர், குடைச்சல் வாய்வு இவைகள் குணமாகும்.

வாந்திவிக்கல் இரும்பலுக்கு

பார் பருத்திப் பருப்பொடு சீரகம்
ஏர் மதுர மொடு ஏலம் நெல்லுப்பொரி
சேர் அரிசியின் திப்பிலி கெந்தமுங்
கார் வகைக்கிடை காற்பலந் தோர்த்திடே. 512

பருத்திபருப்பு, சீரகம், அதிமதுரம், ஏலம், நெல்லுப் பொரி, அரிசித்திப்பிலி, கெந்தகம், வகைக்கு கால்பலம்.

தோர்த்திடும் பொடி தூளிரு கழஞ்சிடை
சார்த்திடும் பழச்சாறு தேன் சர்க்கரை

போர்த்திடு மிருபோதுமோ ரேழு நாள்
ஏர்த்திடு வந் திருமலும் பேருமே. 513

மேற்படி பொருட்களை இடித்தசூள் இரு கழஞ்சிஎடை எடுத்து பழச்சாறு, தேன், சர்க்கரை, இவைகளை கலந்து இருவேளையும் ஏழு நாள் உட்கொள்ள இருமல் குணமாகும்.

பேருங் கிராணியும் பித்த மரோசிகம்
வாருஞ் சுக்கு மயக்கொடு விக்கலும்
பாரு நாவிற் பசைத்தலுந் தாகமும்
தீருங் கற்கமிது செய்து பார்த்திடே. 514

மேற்படி மருந்தால் கிராணி, பித்தம், அரோசகம்,மயக்கம் விக்கல், தாகம், இவைகள் குணமாகும்.

மாதவிடாய் வராதவளுக்கு மருந்து

பார்த்து வேலிப் பருத்திக் கொழுந்ததில்
மார்த்து நாலைந்துவை மிளகைந்து நால்
சேர்த்து திட்டித் திரட்டி அரைத்துடன்
தேர்த்து நாளே ழிருபோது முண்டிடே. 515

வேலிப் பருத்தி கொழுந்தில் நான்கு அல்லது ஐந்து மிளகை வைத்து அரைத்து இரண்டு வேளையும் உட்கொள்ள வேண்டும்.

உண்டு கொர்ப்பத்திலுள்ள வாயுவுங்
கண்டு வோடிக் கழண்டு நீருவிழும்
புண்டு வுப்புப் புளிபுகை தள்ளிவிட்
டண்டு வென்னீரோ டன்னமு மூட்டிடே. 516

மேற்படி வகையில் செய்ய கெர்ப்ப வாய்வு தீரும். மாத விடாய் வராதவர்க்கு மாதவிடாய் காணும், புளி, உப்பு புகை, நீக்கி வென்னீருடன் அன்னம் உட்கொள்க,

மூட்டு நீர்வொடி முத்தின் பருப்பொடு
நாட்டு ஆவாரை நல்ல பஞ்சாங்கமும்
சாட்டு நிம்பழச் சாற்றில் அரைத்துடன்
கூட்டு மிப்படிக் கோரித்து வைத்துமே. 517

நீராடி முத்து பருப்பு, ஆவாரை, சமூலம், (வேர், தண்டு, இலை, பூ, காய்) இவைகளை எலுமிச்சம் பழச்சாற்றால் அரைத்து பற்றிடு.

வைத்து மூவேழு நாளிரு நேரமும்
பத்துப் போட்டிடில் பாரிய மெய்தனில்
கத்தும் வண்டு கடிப்படர் தாமரை
மத்துச் சில்விஷம் வாங்கும் பொரியுமே. 518

மேற்படி மருந்தை இரண்டு வேளையும் இருபத்து ஒரு நாள் பற்றிடு. வண்டுகடி, படர்தாமரை, சில்விசம், இலைகள் குணமாகும்.

பொரியுநல் துவரைப் பருப்போடு தீ
எரியுமே வறுத்து இடைக்கிடை விட்டரைக்
குறியும் பத்திடில் கோத்து வீரைந்துநாள்
தெரியுந் தாடை வயித்தியம் எட்டுமே. 519

துவரை பருப்பை வறுத்து அரைத்து பத்துநாள் பற்றிட தாடை பற்றிய நோய்கள் தீரும்.

சுரக்கியாழம்

எட்டுப் போடு தலையிலை யோட்டினில்
மட்டு நன்றாய் வதக்கு வேப்பெண்ணெயில்
கட்டு நாளேழ் கனத்த வீக்கம்பதைத்
திட்டு வாடிச் சயித்தியம் தீருமே. 520

பொடுதலையை ஒட்டிலிட்டு வேப்ப எண்ணெயில் நன்றாக வதக்கி வீக்கத்தின்மீது வைத்து கட்டிடு. இவ்வாறு ஏழுநாள் செய்திடு. வீக்கம் வற்றி சயித்தியம் தீரும்.

தீரும் பேய்ப்புடல் சீந்தி பர்ப்பாடகம்
நேரு மாடாதொடை நில வேம்பொடு
பாருங் கடாஞ்சிப் பட்டை வகைப்பலங்
காருஞ் சுக்குக் கழஞ்சிடை பார்த்திடே. 521

பேய்ப்புடல், சீந்தி, பற்படாகம், ஆடாதொடை, நிலவேம்பு, கடழாஞ்சிப்பட்டை வகைக்கு ஒரு பலம், சுக்கு கழஞ்சி எடை.

பார்த்துப் போட்டிடு பலமரை தூக்கிவிட்டு
ஏர்த்து நாழிரெண்டு எட்டொன்றாய்க் காச்சியே
வார்த்து நன்றாய் வடித்திரு நேரமும்
போர்த்து மார்தினம் போஞ்சுரங் கொண்டிடே. 522

மேற்படி சரக்கு மூலிகைகளை பொடித்து அரை பலம் எடுத்து இரண்டு நாழி அளவு நீர்விட்டு எட்டுக்கு ஒன்றாக காய்ச்சி வடித்து உட்கொள், இவ்வாறு இருவேளையும் ஆறு நாள் உட்கொள்ள சுரம் தீரும்.

கொண்டிடு செவியங் கொடி வேலியும்
....வேளை
கண்டிடு விஷ்ணு காந்திவெண் சீந்திலும்
மண்டிடும் வகைக்குப் பலந் தொட்டிடே. 523

சவ்வியம், கொடிவேலி.... வேளை, விஷ்ணு காந்தி, வெண் சீந்தில், வகைக்கு ஒரு பலம்,

தொட்டு இடித்துடன் தூக்குப் பலமரை
விட்டிடீர் சலமே இருநாழி சேர்த்து
இட்டிடீர் எரித்தே எட்டொன்றாய்க் காச்சியே
நெட்டிடீர் இரு நேரமோர் ஆறுமே. 524

மேற்படி மூலிகைகளை எடுத்து அரைபலம் அளவுக்கு எடுத்து இரண்டு நாழி அளவு நீரில் போட்டு எட்டொன்றாக காய்ச்சி இரண்டுவேளையும் ஆறுநாள் உட்கொள்.

ஆறு போக அகலாமல் அருந்திடில்
மாறு தாப சுரம்பறந் தோடிடும்
போறா முப்பு புகைபுளி விட்டிடு
ஏரு வாய்ப் பொரிநீரன்ன முண்டிடே. 525

மேற்படி வகையில் கொள்ள சுரம் தீரும். புளி, புகை, உப்பு தள்ளி, வென்னீரன்னம் கொள்ள வேண்டும்.

வீக்கத்திற்கு பிரமிக்கட்டு

உ.ண்டு பிரமியோ டொக்கவே காடிவார்த்து
தண்டு வெரிய சட்டி அடுப்பில் வைத்து
தொண்டு செய்து சுருள வதக்குடன்
கொண்டு கட்டு குதிக்கப்பொன் ஒன்றுமே. 526

பிரமியிலையுடன் காடியைவிட்டு சட்டியில் இட்டு வதக்கிக் கட்ட வீக்கம் கரையும்.

இருமல் சயத்திற்குக்கியாழம்

ஒன்று பூனைக் காஞ்சோரிலை ஓர்பலம்
வென்று மாவிநெய் விட்டுச் சமனிடை
அன்று தீயா யளிய வதக்குடன்
நன்று மாரைந்து நாளது போர்த்திடே. 527

பூனைக்காஞ்சோரி இலை ஒரு பலம் இதற்கு சமன் எடை ஆவின் நெய்விட்டு நன்றாக வதக்கி ஐந்து அல்லது ஆறு நாள் உட்கொள்ள வேண்டும்.

போர்த்திடாய் இரு போதும் இந்தப்படி
கர்த்திடாய்க் குத் திருமல் சயத்துடன்
பார்த்திடாய் ஈளை பற்றர ஓடிடுங்
கார்த்திடாய் பத்தியம் இல்லை கண்டிடே. 528

மேற்படி வகையில் செய்ய குத்திருமல் சயம், ஈளை இவைகள் தீரும்.

கண்டிடாய் முசுக்கை இலை ஓர்பலம்
கொண்டிடா நெய்யைக் கூட்டிச் சமனிடை
சுண்டிடாய் நற் சுருள வதக்குடன்
திண்டிடா ரைந்து தினமிது ஏர்த்திடே. 529

முசுக்கை இலை ஒருபலம், இதற்கு சம அளவு ஆவின் நெய் சமமாக கூட்டி நன்றாக வதக்கி ஐந்து அல்லது ஆறுநாள் இரண்டுவேளை உட்கொள்ள வேண்டும்.

ஏர்த்து விந்தப் படியிரு நேரமும்
ஆர்த்துங் குற்றிருமல் சய மீளையுஞ்
சேர்த்து நில்லா திகைத்து விட்டோடும்
பார்த்து நோயறிந்து பத்தியம் கண்டிடே. 530

மேற்படி வகையில் செய்ய குத்திருமல் சயம், ஈளை, இவைகள் தீரும். பத்தியம் காக்க வேண்டும்.

குன்மத்திற்குச் சூரணம்

கண்டிடு மிளகாய் கனி யெண்பலம்
உண்டிடுங் கனி யுப்புச் சமனிடை
அண்டிடு வறுத்து ஆட்டி யெள்ளுப்பொரிக்
கொண்டிடு எண்பலங் கூட்டி.... பாங்கிடே 531

மிளகாய் பழுத்தது எட்டுபலம், எலுமிச்சை உப்பு எட்டு பலம், இரண்டையும் வறுத்து அரைத்து எள்ளுப்பொரி எட்டு பலம் சேர்த்துக் கொள்.

பாங்கிடாய்க் கொட்டைப் பாக்கள வாகவே
வாங்கிடாய்ப் பனை வெட்டுடா தேனதில்
நீங்கிட விரு நேரமு லேழுநாள்
ஓங்கிடாய் குன்மம் ஓடுங் கைகண்டதே. 532

மேற்படி சேர்த்ததை கொட்டைப் பாக்களவு பனைவெட்டு, தேனில் கலந்து உட்கொள். இரண்டுவேளையும் இருபத்தி ஒருநாள் கொள்ள குன்மம் குணமாகும், கைகண்ட முறை இது.

அர்த்தனாரீசுரக் குளிகை

கண்டு கெந்தி வெண்காரம் நாபிரசம்
கொண்டு ஓரிடைக் கூட்டுவெண் நொச்சிச்சார்
இரண்டு சாமம் அரைத்துத் திரட்டுடன்
முண்டு சீலை முடிந்தது போர்த்திடே. 533

கெந்தகம், வெண்காரம், நாபி, ரசம், இவைகளை சமன் எடை எடுத்து வெண்ணொச்சி சாறு எடுத்து மேற்படி சரக்குகளை இரண்டு சாமம் அரைத்து திரட்டி துணியில் மூட்டை போல் கட்டிக்கொள்.

போர்த்துச் சட்டியில் போடு மறைப்படி
சேர்த்து முன் மருந்திட்டு மேலுப்பிடு
மார்த்து மூடு மறுசட்டி சீலைமண்
சார்த்து வீரிரு சாமம் எரித்திடே. 534

கட்டியை சட்டியில் இட்டு அதன்மேல் உப்பை இட்டு மறு சட்டி கொண்டு மூடி சீலைமண் செய்து இரண்டு சாமம் எரித்திடு.

எரித்து ஊமத்தை இலைச் சாற்றில் ஆட்டுடன்
விரித்து கொச்சி மிளகள வாகவே
நிறுத்து உருட்டி நிழலில் உலர்த்தியே
குறித்து ஆத்தங் குளத்தடி கண்டிடே. 535

எரித்து எடுத்து ஊமத்தை இலைச்சாற்றில் அரைத்து மிளகு அளவு உருட்டி நிழலில் உலர்த்திடு. ஆறு, குளம், கரைகளில் உள்ள துர்க்கை, கணேசன் ஆகியவர்கட்கு, பூசை செய்.

கண்டு துர்க்கைக் கணேசனைப் பூசைசெய்
தண்டு தூபங் கொடுத்தடுத்தே பணி
வெண்டு மாத்தான் மெய்க்குளிகை இதைக்
கொண்டு தர்க்கமுங் கூறிடில் ஏத்திடே. 536

பூசை செய்து மருந்துக்கு தூபதீபம் கொடுத்து வணங்கு. இது உண்மையான மருந்தென்று கூறு.

ஏத்திடாய் முலைப்பாலில் இழைத்தோர் பிறந்
தோத்திடாய் நசியஞ் சுரம் பாதிபோம்
ஆர்த்திடாய் நசியம் மறு பக்கமும்
பார்த்திடாய் சுரம் பந்திவிட் டாடுமே. 537

மேற்படி குளிகையை தாய்ப்பாலில் இழைத்து நசியம் கொடுக்க பாதி சுரம் தீரும். இன்னொரு மூக்கு துளையில் நசியமிட முழு சுரமும் அகலும்.

பித்தம் வாத நடப்புக்குத் தயிலம்

கையாந் தகரை நெல்லிக்காய்
கறுத்த துளசிச் சாற்நாழி
மையா எண்ணெய் வையொழக்கு
மருவும் ஆவின் பால்நாழி
செய்யுங் கண்டங் கத்திரியும்
சேர இடித்துத் தலைமுழுக
ஐயம் பித்தம் காசம்போம்
அடர்ந்த காதும் வெளியாமே. 538

கையாந்தகரை, நெல்லிக்காய், கருந்துளசி சாறு நாழி, எண்ணெய் உழக்கு, ஆவின்பால் நாழி, கண்டங்கத்திரி இவைகளை இடித்து தலைமுழுக ஐயம், பித்தம், வாதம் இவைகள் தெளிவாகும்.

உண்ணும் ஆவின்பால் ஓர்படி தன்னிலே
வெண்ணு தூதுவளை பழம் ஈர்பலம்
.........போட்டுக் கொதித்து வடித்தபின்
நிண்ணு வோர்பல ரைப்படி நெய்யுமே. 539

ஆவின்பால் ஒருபடியில் தூதுவளை பழம் இருபலம் போட்டுக் கொதிக்க வைத்து வடித்த பாலில் அரை படிஅளவு நெய்யைச் சேர்த்திடு.

நெய்யடா தகரைச் சாற் நிரைபலம்
பையடா யெரித்து இப்படி மூன்றுநாள்
நையடா வடித்தே இரு நேரமும்
துய்யடா வசனத் தைத் துலைத்திடே. 540

பாடல்கள் சிதைந்து உள்ளது.

துலைத்திடாய் மூதுர் இஞ்சியின் பட்டையை
அயத்திடா மல ரைத்திடு வென்னியில்
மலைத்திடா யிரு வாய்கிடு மூன்றுநாள்
திலைத்திடா திறப்பு நீங்குப் பில்லையே. 541

இல்லையே யரி தார மெருக்கிலை
வல்லையே பிரண்டைச் சார்விட் டேயரை
பல்லையே பகலு மெடுத்தே யிடுந்
தெல்லையே வங்கு தீர்ந்திடப் பார்த்திடே. 542

அரிதாரம், எருக்கனிலை இவைகளை பிரண்டைச்சாறு விட்டு அரைத்து வங்குக்கு பூச வங்கு மறைந்து குணமாகும். (வங்கு- ஒருவகை தோல் நோய்)

நீரிழிவுக்கு

பார்த்திடு ஆவின்நற் பாலுழக் காமதில்
கார்த்திடாய் சத்திச் சாரணை வேர்பலம்
சேர்த்திடாய் அரைத்து இவ்வித மூன்றுநாள்
ஏர்த்திடாய் ரத்த நீரிழிவு ஓடுமே. 543

ஆவின்பால் உழக்கு அளவு, சத்திசாரணை வேர் ஒருபலம், பால்விட்டு மேற்படி வேரை அரைத்து உட்கொள்ளவும். இவ்வாறு மூன்றுநாள் உட்கொள்ள நீரிழிவு குணமாகும்.

படர்தாமரைக் கீல்வாயுவுக்கு

ஓடுமே பத்திய மென்று கந்தரி
போடு மேகம் புளிபுகை தள்ளிவிட்டு
ஆடுமே வென்னீர் அன்னமுங் கொண்டிடச்
சாடுமே படர்த் தாமரை தீருமே. 544

மேற்படி மருந்துட் கொள்ளும் போது கத்தரி, புளி, புகை, நீக்கி பத்தியமாக இருக்க வேண்டும். வென்னீர் சாதமுட்கொள்ள படர்தாமரையும் குணமாகும்.

தீர விட்டரி தென்னம்வேர் காற்பலம்
நேர விடுத்திடு நீர்ப்படி ரெண்டது
கார் கசைந்திடு கட்டியால் வட்டுடன்
சேர் விடுத்திடு மஞ்சள் வெள்ளுள்ளியே. 545

தென்னம்வேர் கால்பலம், இதை இரண்டுபடி நீரில் போட்டு கசாயம் வைத்து பிசைந்து வடிகட்டிக்கொள். மஞ்சள், வெள்ளுள்ளி மற்றும்.

உள்ளி நல்மிளகு ஓர்வகை ஓர்பலம்
துள்ளி டாமல் பொடித்ததில் உள்ளிடு
கொள்ளி வாயிலைக் கொத்தது இருத்துடன்
தள்ளிடாய் முறை தாக்குடன் நீறுமே. 546

மிளகு, இவைகள் வகைக்கு ஒருபலம் பொடித்து கசாயத்தில் இட்டு கொள்ளிவாயிலை கொத்தாக எடுத்து மேற்படி நீருடன் சேர்த்திடு.

நீறும் இந்தப் படியிரு நேரமும்
மாறு போதக லாமல் அருந்தினால்
மீறுங் காலுப் பிடிப்புவிட் ்டாடிடும்
மோறு முப்பு புளிபுகை தள்ளிடே. 547

சேர்த்த நீரை வடித்து இரண்டு வேளையும் ஆறுநாள் உட்கொள்ள கால்பிடிப்பு நீங்கும், உப்பு, புளி, புகை நீக்க வேண்டும்.

தள்ளிக் குப்பைக் கீரைவேர் வசம்போடு
உள்ள வெள்ளெண்ணெ யோடுற வாகவே
விள்ளி டாமல் எரித்து வடித்துடன்
தெள்ளிடும் பிளவை தீரப் பூசிடே. 548

குப்பைக்கீரை வேர், வசம்பு இவைகளை எள்ளெண்ணெயுடன் சேர்த்து எரித்து வடித்துக் கொள். பிளவைக்குப் பூசு,

பூசியே யிவை விட்டாவி வைத்தெடு
வாசி செய்மிசை விட்டாவிக் கட்டிடில்

மாசிடா முளை மாரி விழுந்திடும்
வீசி டெட்டு விடத்தே ரிலையுமே. 549

பிளவைக்குப் பூசி, ஆவிகாட்டு பிளவையுள்ளிருக்கும் முளைப்பு விழுந்து விடும். விடத்தேரி இலையை எடு.

இலையுமே யுசிலங் கருங் காலிலை
குலையுமே சட்டிக்குள் வைத்து எரித்திடு
கலையுமே கக்கரும் பொடிக் காத்திடாய்
அலையுமே பிளவை நிணந் தீருமே. 550

மேற்படி இலையுடன் உசிலம், கருங்காலி, இலைகளின் இலைகளை கூட்டி சட்டிக்குள்ளிட்டு எரித்து எடுத்து பொடி செய்து பிளவை ரணத்திற்கு வைத்துக் கட்ட ரணம் குணமாகும்.

அடிதள்ளினால் பூசுமருந்து

தீரப்பா எருதின் கழுத்தின் ரணம்
ஊரப்பா முன்பொடி மேலிட் டாத்திடு
சேரப்பா கரந் தொட்டா சுருங்கிலை
தாரப்பா வுள் ளொட்டித் தழையுமே. 551

எருது கழுத்தில் உண்டாகும் புண்ணிற்கும் மேற்படி பொடியை வைத்துக்கட்ட ஆறிவிடும். தொட்டாற்சுருங்கி இலை. உள்வொட்டி இலை, இரண்டு இலைகளையும் எடுத்திடு.

தழையும் வெள்ளுள்ளித் தன்னுள் மிளகுசேர்
திழையு மெல்லிய சீலையில் ஊட்டியே
குழையும் அல்குலில் கூச்சம் இலாதிட்டு
எழையும் வாழைப்பூ வேத்திமேற் கட்டிடே. 552

மேற்படி இரண்டு இலைகளுடன் வெள்ளுள்ளி, மிளகு சேர்த்து அரைத்து மெல்லிய துணியில் தடவி அடியில் வைத்து வாழைப் பூக் கொண்டு கட்டிடு.

கட்டிடு ஆவின்பால் கண்டி டரைப்படி
வெட்டடா ஆர்பலம் வெள்ளுள்ளியின் பருப்பு
இட்டடா வொரு சேறுதா னுள்ளுக்கு
மட்டடா நீயும் வைத்திடச் செய்திடே, 553

மேற்படி முறை செய்யும்போது ஆவின்பால் அரைப்படியில் ஒருபலம் வெள்ளுள்ளி பருப்பு போட்டு உட்கொள்ள வேண்டும். இவ்வாறு இருவேளையும் ஏழுநாள் கொள்ள வேண்டும்.

செய்யப்பா வேழு போதிய நேரமும்
உய்யப்பா புகை முன்விட் டிடுபுளி

முய்யப்பா வடி மீறாதுள் ளோட்டிடும்
மெய்யப்பா சாமையின் சாதங் கொண்டிடே. 554

மேற்படி மருந்து பயன்படுத்தும் போது புகை, புளி, தள்ள வேண்டும் அடிதள்ளுதல் குணமாகி உள்ளே போகும். சாமை உணவை மட்டும் கொள்ளுதல் வேண்டும்.

கொண்டிடும் ரசங் கெந்தமு மோர்பலம்
திண்டிடும் அகத்திக் கொழுந்து ஆர்பலம்
வெண்டிடு மாதளம் பழம் வில்வப்பழஞ்
சுண்டிடு மரைத்து உள்ளுக்கு ஏத்திடே. 555

ரசம், கெந்தகமும், ஒருபலம், அகத்தி கொழுந்து ஆறு பலம், மாதளம்பழம், வில்வப்பழம் இவைகளை அரைத்து உள்ளுக்கு கொடுத்திடு.

உள்ளுக்கு மருந்து

ஏற்றியே.................... யெழுபோ திருநேரமும்
.... மோடிடும்
தொன்று நீரில் துவள வலசியே
கான்று சூலை ரணத்தினில் தீருமே. 556

பாடல் சிதைந்து உள்ளது.

மலசலங் கட்டினால் மருந்து

மங்காத குழன்மடவீர் சொல்லக் கேளிர்
வாயுவினால் சிற்றின்பம் அதிகம் ஆனால்
தங்கிநின்ற விருவாயுங் கட்டிக் கொள்ளும்
தாரணியில் மானிடர்கள் சசிக்கமாட்டார்
வெண்காரஞ் சவுக்காரஞ் சீனக்காரம்
வெண்மதியாம் இந்துப்பு வெதுப்பிக் கொண்டு
சிங்கார இளநீரில் கொள் வீராகில்
சிக்காது மலசலங்கள் திண்ணந்தானே. 557

வாய்வினாலும், சிற்றின்பம் சேர்க்கை அதிகமானாலும், வாய்வு கட்டிக் கொள்ளும், இதை மானிடர்களால், சகித்திருக்க முடியாது. வெண்காரம், சவுக்காரம், சீனாக்காரம், இந்துப்பு இவைகளை வெதுப்பி இளநீரில் உட்கொள்ள மலசல கட்டு தீரும்.

கண்ணீரில் நீர் வடிதலுக்கு மை

பாடினேன் கண்ணில் நீர் வடிந்துதானால்
நாடினேன் கருவேலன் இலை தன்னைச்

சூடினேன் காசுக் கட்டியுட நாகக்
கூடியே இவை எல்லாம் பொடித்திடே. 558

கருவேலின் இலை, காசுக்கட்டி, நாகம் இவைகளைப் பொடியாக்கு.

பொடித்துமே கரண்டியிலே வேணதும்
அடுத்துமே சீனக் காரமுங் கூட்டியே
தொடுத்த நெற்பொரி சேர் சமனாகவே
விடுத்த மாவாரைக் குச்சியால் கிண்டிடே. 559

மேற்படி பொடியை வேண்டிய அளவு கரண்டியில் இட்டு சீனாக்காரம் கூட்டி நெற்பொரி சமனாக சேர்த்து ஆவாரைக் குச்சியால் கிளறிடு.

கிண்டியே நேத்திரஞ் சுற்றிப் பூசிடு
விண்டுமே புளியிலையை வேக வைத்து
கொண்டிடுங் கண்ணில் வேதுவாய் கட்டிடும்
அண்டிடுஞ் சிவப்பேறு கண் மாறுமே. 560

கண்ணைச் சுற்றி மேற்படி மருந்தை பூசி புளியிலையை வேக வைத்து கண்ணில் வேதுகாட்டு கண் சிவப்பு மாறும்.

கண்வலிக்கெல்லாம்

கேளாய் கண்ணில் வலிவந்த பேருக்கு
சூளாய் புண்ணாக் கிலையின் துளசியை
வீளாய் கோளங் கட்டி சமனாகவே
பாளாய் பழம்புளிப் பாகாய்க் கரைத்திடே. 561

புண்ணாக்கு இலை, துளசி இவைகளை சமனாய் சேர்த்து பழம் புளி சேர்த்து கரைத்திடு.

கரைத்துக் கண்ணிலே காலை மாலைபோட
முறை தப்பாமலே நாலுநாள் முழுகிவா
குறைதப்பா புளி யுப்புபுகை தள்ள
நிறைதப்பா கண்வலி நீங்கிப் போகுமே. 562

கரைத்ததை காலை மாலை கண்ணிலிட வேண்டும் நாளுக்கொரு தரம் நான்கு நாள் தலைமுழுக வேண்டும், புளி, உப்பு, புகை நீக்க வேண்டும். கண் வலி தீரும்.

தந்தவியாதிக்கு

கூறுந் தந்த வியாதிக்கு ஒருமுறை
வீரு மயந்துடன் கிட்டந் தன்னையே
நீறும் பீங்கானில் போட்டுக் கடுக்காயும்
தூறுந் தான்றி மாசக்காயுஞ் சேர்த்திடே. 563

சேர்த்து சீனங் கொறுக்காய் புளியுடன்
பார்த்துமே துருசு காசுக் கட்டியும்
ஆர்த்துமே கணக் காய் சமனாகவே
போர்த்து மேரும் பழச்சாறு அரைத்திடே. 564

கடுக்காய், தான்றிக்காய், மாசிக்காய், சீனம், கொருக்காப் புளி, தூரிசு காசுக்கட்டி இவைகளை சமனாகச் சோத்து பீங்கானில் இட்டு பழச்சாற்றில் அரைத்திடு.

அரைத்துமே பொடி பல்வலி புரியவே
கரைத்தப் பல்ரோகங் காட்டினிற் புக்கிடும்
உரைத்த பல்புழு வுடலைவிட்டு ஏகிடும்
உரைத்த நூலிது தேறையன் உண்மையே. 565

ஊற வைத்ததை அரைத்துப் பெடியாக்கு. இதில் பல் தேய்க்க, பல் நோய்கள் தீரும். பல் புழு போகும், தேரையராகிய நான் உரைத்த முறைகள் பொய்யாகாது.

பல் புழுச்சாக

போகும் இன்ன மொருமுறை செப்புவேன்
நாகுமே னெனிநூலை பலம் வாங்கி
நீகும் நெல்லிக்கா நீர்சமன் தன்னுடன்
ஆகும் பச்சரிசி இடை காட்டிடே. 566

நூல் ஒருபலம், நெல்லிக்காய் சாறு ஒருபலம், பச்சரிசி ஒரு பங்கு இவைகளை எடுத்திடு.

காட்டுமே மந்திர நசிமசி யென
தீட்டு நூறு முறையுடன் தீட்சையை
பூட்டுரு வைரப் பல்புழு செத்திடும்
மீட்டு தேறையன் சொல்லிது உண்மையே. 567

நசி, மசி என மந்திரம் நூறு உரு சொல்லி செபித்திடு. பல் புழு செத்து விடும், தேரையர்ாகிய தான் சொல்லும் முறைகள் உண்மையாகும்.

வாய்ப் புண்ணுக்கு எண்ணெய்

கேளும் வாயில் கெடியான புண்வந்தால்
நாளும் ஆமணக் கெண்ணெய் ஒருநாழி
வீளுஞ் சாயகஞ் சார்விட்டுப் பிசறியே
சூளுநீர்ப் பூண்டு கஸ்தூரி சேர்த்திடே., 568

ஆமணக்கு எண்ணெய் நாழி அளவு எடுத்து சாயகஞ்சார் விட்டு பிசறி, நீர்ப்பூண்டு, கஸ்தூரி அதனுடன் சேர்த்திடு.

சேர்த்துச் சீரகம் சீராய்ப் பொடித்திட்டு
பார்த்து எண்ணெயைப் பதத்தில் வடித்தெடு

ஊர்த்து வுச்சிக் கரண்டி வீதங்கொள்ள
போர்த்து வாய்ப்புண்ணும் பொருமலும் ஓடுமே. 569

மேற்படி எண்ணெய்யுடன் சீரகத்தை அளவுடன் பொடித் திட்டு சேர்த்து பதமாக காய்ச்சி வடித்து உச்சிக்கரண்டி அளவு உட்கொள்ள வாய்ப்புண் பொருமல் தீரும்.

சகல ரணங்களுக்குக் களிம்பு

செப்புவேன் களிம் பொன்று முறையுடன்
ஒப்பும் விளங்கமு மிங்கியும் பூரமும்
....ஞ்சமன்
....யே. 570

இப்பாடல் சிதைந்து உள்ளது.

மகா விக்கலுக்கு

விளம்பு விக்கலுக்கு ஓர்முறை சுளுவதாய்
தளும்புஞ் சாம்பிராணித் தனிக்காடி சுத்தியாம்
குளம்புஞ் சுங்கானில் குணமாய்ப் பிடித்திட
பளம்பு விக்கலும் பஞ்சுபோல் ஓடுமே. 571

விக்கலுக்கு ஒருமுறையைக் கூறுகிறேன், சாம்பிராணியை தனிக்காடி விட்டு சுத்தித்து சுங்கானில் வைத்து புகையை பிடிக்க மகாவிக்கல் குணமாகும்.

மயக்கத்துக்கு கலிக்கம்

சொல்லுஞ் சுக்கு மிளகு கிராம்புடன்
வெல்லுந் துவரைப் பருப்பு கால்கூட்டியே
சொல்லு மேனிச்சார் தன்னில் ஆட்டியே
வில்லுங் கண்ணினில் வீசியே போட்டிடே. 572

சுக்கு, மிளகு, கிராம்பு, இவைகளுடன் துவரைப் பருப்பு கால்பங்கு, கூட்டி, மேனிச்சாறு விட்டு ஆட்டி கண்ணில் கலிக்க மிடு.

போட சன்னிமுதற் பசாசு வோடும்
நீடதே மயக்கம் விஷம் வோடிடும்
ஓடவே கபாலத்தின் சூடு களும்
கூட கண்டம் விட்டகன் றிடுமன்பரே. 573

மேற்படி முறை செய்வதால் சன்னி, பசாசகுணம், மயக்கம், விஷம் தலையில் ஏறபடும் உஷ்ணம், இவைகள் தீரும்.

முகசன்னிக்கு எண்ணெய்

கூறும் சன்னிக் குறிப்பாகும் எண்ணெயை
வீறுந் தேங்காயின் நெய்படி நாழியே

தூறும் ஓமம் வசம்பு வெள்ளைப்பூண்டு
மாறுங் குப்பை மரத்தின் பெருங்காயம் 574

சன்னிக்கு ஒரு எண்ணெய் கூறுகிறேன். தேங்காய் எண்ணெய், நான்குபடி, ஓமம், வசம்பு, வெள்ளைப்பூண்டு, பெருங்காயம் இவைகள் வகைக்கு விராகன் எடை மற்றும்.

காயம் விராகன் கருஞ் சமனாகவே
தாய மாவிலின் தாவும் லிங்கப்பட்டை
நேயம் நொச்சியின் பெருமரப் பட்டையும்
உபாயமாய்ப் பொடித்து எண்ணெயிற் காய்ச்சிடே. 575

மாவிலிங்கப்பட்டை, நொச்சிப்பட்டை, பெருமரப் பட்டை இவைகள் மூன்றும் விராகனெடை பொடித்து மேற்படி பொருட்களுடன் எண்ணெயிலிட்டு காய்ச்சிக் கொள். இது சன்னிக்கு ஆகும்.

சோகை காமாலைக்கு நீர்க்கட்டுக் கியாழம்

ஆகுங் கீழ்க்காயின் நெல்லி நீர்முள்ளியும்
ஏகும் கோவைத் தண்டுடன் வீழிவேரும்
பாகும் பூவரசன் பட்டை தொட்டிவேர்
சாகுஞ் சிறுபூளை தொட்டியுஞ் சேர்த்திடே. 576

கீழ்க்காய் நெல்லி, நீர்முள்ளி, கோவைத்தண்டு, வீழி வேர், பூவரசன் பட்டை, தொட்டிவேர், சிறுபூளை தொட்டி, இவைகளை தூள்செய்து கொள்.

சேர்த்துத் தூளுடன் நெருஞ்சியிது கீரை
ஊர்த்து ஊஞ்சலின் நிலவாகைப் பட்டையும்
பார்த்துக் கடுக்காய் பருத்த ரோகணியும்
ஆர்த்துச் சீரங் கருஞ்சீரங் கூட்டிடே. 577

மேற்படி தூளுடன் நெருஞ்சி இலை, நிலவாகைப் பட்டை, கடுக்காய், ரோகணி, சீரகம், கருஞ்சீரகம் இவைகளை சேர்த்திடு.

கூட்டி ஒன்றாய் விடித்துமே தொண்டியே
ஆட்டி ஆறு பாகமாக நீயெடு...............
கூட்டி பாகம் ஒருபடி தண்ணீரில்
மூட்டிக் காய்ச்சி பிழிந்து வடிகட்டே. 578

சேர்த்ததை இடித்து தூள் செய்து ஆறுபாகமாக செய்து ஒருபடி தண்ணீரில் ஒருபங்கை இட்டு காய்ச்சி பிழிந்து வடிகட்டு.

கட்டி ஆறுநாள் காலையில் உண்டிட்ட
மட்டுமே உப்பு மங்கையே தள்ளிடு
விட்டு வோடு மதிர்க்கோவை பாண்டுவும்
கெட்டு வோடும் மகோதரம் பீலியே. 579

வடிகட்டினதை காலையில் உட்கொள். இவ்வாறு ஆறு நாளுட்கொள். உப்பு, பெண் போகம் நீக்கிடு, நீர்க்கோவை. பாண்டு மகோதரம், பீலிகை குணமாகும் மற்றும்.

பீலி ரோகம் பொருமல் இளைப்புகள்
கீலி சோகையின் காமாலை வீக்கமும்
நீலி கண்ணினில் தண்ணீர் வடிதலும்
சோலி விட்டுமே சொல்லாது ஓடுமே. 580

பொருமல் இளைப்பு, சோகை, காமாலை, வீக்கம், கண்ணில் நீர் வடிதல், இவைகள் தீரும்.

புருசர்கள் - மதனகோலாகல ரசமணி மாத்திரை

மண்டலத்தினில் உள்ள வர்க்கொரு
    மகிமையாகிய முறைமை கேள்
மதன கோலா கலரசமணி
    மாத்திரை குண நேர்த்தியை
மாசில்லாத பேரீச்சங் காய்தனை
    வாங்குவாய் தச பலமதாய்
மாதே கேளிதின் வித்தெடுத்திடு
    மத்த வித்துள் அடைத்திடு 581

ரசமணி மாத்திரை குணத்தை கூறுகிறேன். பேரீச்சங்காய் பத்துபலம், எடுத்து விதையை நீக்கி விடு. மத்தவித்தை வைத்து அடைத்து.

கெண்டை நூலதை சுத்திகோதுமை
    மாவை பாலில் அரைத்திடு
கெட்டியாய்க் கவசித்துமே
    சிட்டிப்பால் படி ரண்டதனிலே
கேளதின் கவசத்தை நீக்கியே
    வித்தகத்தி கல்வத்தில் வை
கெட்டியாய் சுரவுலையில் வைத்தெரி
    சுண்டும் மட்டும் அவித்திடு. 582

பேரீச்சங்காய்க்கு நூலைச் சுற்றி, கோதுமை மாவை பாலில் கரைத்து மேற்படி காய்க்கு கவசித்து பாலில் வேகவிடு, பின் கவத்தை நீக்கி கல்வத்திலிட்டு அரைத்து உலையில் வைத்து நீர்பதம் சுண்ட மட்டும் வேக வை.

அண்டர் கோளகை யானகுதமும்
    மத்தகெந்தி கிராம் பவின்
அந்த மாகிய சாதிபத்திரி
    ஐயிரண்டு பண விடை

அத்தி திப்பலி நாகமு
மானந்த மூலி யரைப்பலம்
அச்சமாகிய பச்சை பூரமு
மிசுப்பு கோலுமே குங்குமம். 583

சூதம், கெந்தகம், கிராம்பு, சாதிபத்திரி, இவைகள் வகைக்கு பத்து பணஎடை, திப்பிலி, சுஞ்சா இவைகள் வகைக்கு அரைபலம், பச்சைப்பூரம், இசுப்புகோல் குங்குமப்பூ மற்றும்.

கண்டு பல்கரை சுத்திசெய்திடு
காசு மூன்றிடை யாகவே
காய் முருங்கையின் பூவும்பிஞ்சியுங்
கண்டு ரண்டு பலத்துடன்
காலனாருரைக் காய்ந்த பாலினால்
கட்டி சட்டியின் திட்டமாய்
கருதியே யுரையு மொருமையாய்
கனக ரசமாங் குளிகையே. 584

பலகரை சுத்தித்து இவைகள் மூன்று காசு எடை, முருங்கைப்பூ, பிஞ்சி இவைகள் இரண்டு பலம், மேற்படி சரக்குகளை நன்றாகக் காய்ந்த (உரை குத்தும் பதம்) பாலில் மேற்படி சரக்குகளின் பொடியை இட்டு குளிகை செய். இது ரசமணி மாத்திரையாம்.

கொண்டுவா ஒரு மண்டலமுடன்
கோதுமை சர்க்கரை தேனிலே
கோவு பாலமு துண்டு பூவில்
உறங்குவாய் அது வோரிடம்
கொடியவன் பிணி நடுநடுங்கிய
குத்து வாதமுஞ் சத்தியும்
கொதித்தசூடு கதித்த சூடு
குலைந்து ஓடிக் குளிர்ச்சியாம். 585

மேற்படி குளிகையை ஒரு மண்டலம் சர்க்கரை, தேன், இவைகளில் உட்கொள்ள நோய்கள் தீரும். குத்துவாதம், சன்னி, உஷ்ணம் தீர்ந்து உடல் குளிர்ச்சி உண்டாகும்.

....................தூடல் வாலையாகி
ரதிக்கு மனமத னாகுவீர்
.... தோரங்கலிங்கம்
பருத்த யானைத் துதிக்கையாம்
....வகுபுதுமையிதப்பா
பண்புரசர்க ளறிகுவீர்
....திப்
பாவை மாரையும் வெல்லலாம். 586

மேற்படி மருந்தால் மன்மதனைப் போல் ஆகலாம். உடல் பலம் உண்டாகும் லிங்கம் பருத்து யானை துதிக்கை போலாகும். பெண்களை வெல்லாம்

விண்டு உரைப்பது பத்தியத்தை
விப்பமாய் அதைக் கேளுநீ
விண்டு கத்திரி கிகண்டுகருணை
வெள்ளெலி வெள்ளாட்டுமா
விளமுருங்கையின் பூவும் பிஞ்சியும்
விளாங்கனி எலுமிச்சை நெய்
விலாங்கு காடை யடைக்கலாங்குருவி
வுடும்பு முயல் கலைவிரும்பலாம். 587

பத்தியத்தைக் கேள். கத்திரி, கருணை, வெள்ளெலி, வெள்ளாடு, முருங்கைப்பூ, பிஞ்சு, எலுமிச்சை, நெய், விலாங்கு, காடை, அடைக்கலங்குருவி, உடும்பு, முயல், மான் இவைகள் ஆகும்.

கண்டு கறிகள் வுண்டு மாதரை
அண்டிடா தொரு மண்டலம்
துன்பமற்று உடலின்பபோக
சுகத்தை நாளும் விரும்பலாம்
துதிபெருந் தமிழறி வறிந்திடு
துய்ய பண்டிதர் சுகமுற
தோய்ந்த பொருளாய் பாதபூசிதர்
சொல் முறையிது உண்மையே. 588

மேற்படி மருந்து ஒரு மண்டலம் உட்கொள்ளும் போது பெண் போகம் தள்ள வேண்டும்.

பித்த வெடிப்புக்கு

பாரும் பித்த வெடிவந்து நேர்ந்ததால்
ஈரும் மருது இலையை அரைத்துமே
கூரு நற்பசும் பாலில் கலக்கியே
சோறு முண்டபின் சுகமாய்க் குடித்திடே. 589

மருது இலையை அரைத்து பசும்பாலில் கலக்கி சாப்பாடு உட்கொண்டபின் உட்கொள். இவ்வாறு கொள்ள பித்த வெடிப்பு தீரும்.

நீரில் ரத்தங் கண்டால்

பாடும் நீரினில் ரத்தம் விழுந்திடில்
கூடும் பச்சரிசியின் அறுபலம்
சாடும் விராலி இலையின் துளிர்கூட்டி
நாடு மூன்றுநாள் நயந்து கொடுத்திடே. 590

பச்சரிசி அறுபலம், இதில் விராலி இலைத்துளிரைக்கூட்டி கொடுத்திடு. இவ்வாறு மூன்றுநாள் கொடுக்க சிறுநீரில் ரத்தம் வருவது நிற்கும்,

முழங்கால் வாதம்

செப்புவேன் முழங்காலின் வாதங் கண்டால்
ஒப்பும்விழிப் புண்ணாக்குடன் ஆவாரை
தப்பும் வெள்ளுள்ளி தாக்கும் விளக்கெண்ணெய்
ஒப்பு மூன்றுமே வேதிட்டுக் கட்டிடே 591

புண்ணாக்கு, ஆவாரை, வெள்ளுள்ளி, விளக்கெண்ணெய் மூன்றையும் வேக வைத்து முழங்கால் வாதமுள்ள பகுதியில் கட்டு. முழங்கால் வாதம் குணமாகும்.

இரணங்களுக்குப் புகை

விளம்பு மின்னமொரு முறை கேட்டிடு
தளும்புமே கொளுஞ்சியின் வேர் தன்னிலே
குளம்பு லிங்கமும் கூடக்கால் சேர்த்துமே
விளம்புஞ் சுங்கானில் வைத்துப் புகையிடே. 592

கொழுஞ்சிவேர் ஒருபங்கு, லிங்கம் கால்பங்கு இவைகளை சுங்கானில் இட்டு புகையிடு.

இட்டுமே புகை இணங்க சுவாசத்தில்
கட்டு மூன்றுநாள் ஆர்வேளை தான்கொள்ளு
புட்டுமே பாலும் சோறுமே உண்டிடு
கெட்டு ஓடும் ரணங்களின் ரோதமே. 593

புகையிட்டு புகை சுவாசத்தில் இழுத்திடு, இவ்வாறு மூன்றுநாள், ஆறுவேளை செய்ய வேண்டும். பாலும் சோறும் கலந்துட் கொள்ள வேண்டும். ரண நோய் தீரும்.

தீருமேக கரப்பன் வகையெல்லாம்
பாருங் கண்ணோடை கண்வலி சோறும்
வீருஞ் சூலை அரையாப்பு புத்துகள்
கூரும் பிளவை கொடிய ரோகம்போமே. 594

மேற்படி முறை செய்வதால் கரப்பான், கண்வலி, சூலை, அரையாப்பு, பிளவை, போன்ற கொடிய நோய்கள் தீரும்.

ஸ்திரீ வசியம்

மாட முட்டை மனோசிலைக் காந்தமும்
நீரில் ஒட்டிய நின்று சிணுங்கியும்
ஆடை யொட்டிய வப்பனுங் கூட்டினால்
பாடை ஏரினும் பட்ச மறவளே. 595

மாட முட்டை, மனோசிலை, காந்தம், நின்றால் சிணுங்கி ஆடையொட்டி, இவைகளைக் கூட்டி பெண்ணிற்குக் கொடுத்து விட்டால் சாகும்வரை பிரியமாட்டாள்.

வாயுவு குத்தலுக்குக் கியாழம்

பாரும் வாயுவு பகுத்த வாய்வுகண்டால்
தேரும் வேலி தெருப்பான சுக்குடன்
வீரும் பரங்கிப் பட்டைக் கிழங்குடன்
நாருஞ் சரியெடை நாழிசலம் வாரே. 596

கொடிவேலி, சுக்கு, பரங்கிப்பட்டை இவைகளை சரி எடை எடுத்து நாழி அளவு சலத்தில் போட்டு அடுப்பேற்று.

வார்த்து எட்டொன்றாய் வாகக் கியாழஞ்செய்
போர்த்துமே இருவேளை குடித்திட
ஆர்த்தும் பத்திய முப்பு புளிஆகா
பார்த்து விந்தக் கியாழ மருந்திடே. 597

அடுப்பேற்றி எட்டுக்கு ஒன்றாக சுண்ட வைத்து கியாழம் செய்து இரண்டு வேளையும் உட்கொள்ள வாய்வு குத்தல் தீரும், உப்பு, புளி, ஆகாது.

சகலகிரந்திக்கு எண்ணெய்

கூறும் பூசினிக்காய் சாறு உழக்கதாம்
தேறுங் கற்றாழை நெல்லிக்காய் சாறுடன்
வீறும் வல்லாரை வில்வங் கொடுப்பையும்
சீறும் ஆதொண்டை நீர்ப்பூண்டு சேர்த்திடே. 598

பூசனிக்காய் சாறு உழக்கு, கற்றாழை, நெல்லிக்காய்ச் சாறு, வல்லாரை, வில்வம், கொடுப்பை, ஆதொண்டை, நீர்ப்பூண்டு மற்றும்.

சேர்த்துப் பாச்சானை வாட்டித் தண்ணீருடன்
பார்த்துச் சங்கோடு நீர்ப்பூலா பாளையும்
கோர்த்து யானை நெருஞ்சின் விழுதிபுவும்
ஏர்த்து அறுகன்வேர் சார்படி ஒன்றதே. 599

பாச்சானை வாட்டிப் பிழிந்தசாறு, சங்கம், நீர்பூலா, பாளை, யானை நெருஞ்சில், விழுதி, அறுகன்வேர் இவைகளின் சாறு ஒரு படி.

ஒன்று சாறுவர மூலி யெல்லாமே
மன்று நேர்மையாய் நிறுத்து பிழிந்துகொண்டு
அன்று அடுப்பினில் ஏற்றிப் பதமாய்
கன்று பாலும் பசுநெய்யுங் கூட்டிடே. 600

மூலிகைகளை இடித்து முறைப்படி சாறு எடுத்த மேற்படி அளவுகளில் சேர்த்து அடுப்பேற்றி அத்துடன் பால் பசுநெய் கூட்டிக்கொள்.

கூட்டி ஆமணக் கெண்ணெய் சமனெடை
தீட்டுமே பசும் பாலுமே கூட்டிடு

ஊட்டுமே கடைச் சரக்கு வகையெல்லாம்
நீட்டுமே யிடை யாக நிறுத்திடே. 601

கூட்டியதற்கு சமன் எடை ஆமணக்கு எண்ணெய், பசும் பால் கூட்டி கடை சரக்குகளை அளவுடன் சேர்த்துக் கொள்.

நிறுத்துமே யசுவ கெந்தி சர்க்கரை
பொறுத்துஞ் சித்திர மூலம் நிலக்குமிழ்
வறுத்த துத்தியின்வேர் பூமி சர்க்கரை
கறுத்த நீர்நெருப்பு சமன் சேர்த்திடே. 602

அசுவகெந்தி, சர்க்கரை, சித்திரமூலம், நிலக்குமிழ், துத்திவேர், பூமி சர்க்கரைகிழங்கு, நீர் மேல் நெருப்பு இவைகளை சமனெடை எடுத்து தூள் செய்து மேற்படி எண்ணெயில் சேர்த்திடு.

சேர்த்து எண்ணெயில் போட்டுச் சரக்கையும்
பார்த்துப் பத்திரி சாதிக்காய் தன்னுடன்
ஆர்த்துமே லவுங்கம் அதி மதுரமாம்
ஏர்த்து மாஞ்சியின் சோம்பொடு ஏலமே. 603

மற்றும் சாதிபத்திரி, சாதிக்காய், லவுங்கம், அதிமதுரம், சடாமாஞ்சில், சோம்பு, ஏலம் மற்றும்.

ஏலம் வெந்தியம் திரிகடு சீரகம்
மூல மஞ்சள் முதிர்ந்த பலாதியும்
தாலம் ரோசனை தாக்குங் கஸ்தூரியும்
கோலம் வாலின் மிளகு கசகசா, 604

வெந்தயம், திரிகடுகு, சீரகம், மஞ்சள், முதிர்ந்தபலாதி, கோரோசனை, கஸ்தூரி, வால்மிளகு, கசகா மற்றும்.

மிளகு பூரம் கடுக்காய் சிறுநாவல்
களகு மல்லிகைத் தாளிசப் பத்திரி
புளகு கார்போகம் லவுங்கமுஞ் சீனியும்
அளகு முத்தக்காசு நெய்யுஞ் சேர்த்திடே. 605

மிளகு; பச்சைக்கற்பூரம், கடுக்காய், சிறுநாவல், மல்லி, தாளிசபத்திரி, கார்போக அரிசி, லவுங்கம், சீனி, முத்தக்காசு, நெய் இவைகளை அளவுப்படி எடுத்துப் பொடித்து மேற்படி எண்ணெயுடன் சேர்த்திடு

சேர்த்துக் காய்ச்சி மெழுகா யிறக்கியே
போர்த்து மேகடு வொன்றினி லூற்றியே
கார்த்துமே கணபதியைப் பூசித்துமே
ஆர்த்துமே கரண்டி யொன்று கொண்டிடே 606

சேர்த்ததை அடுப்பேற்றி மெழுகு பதமாகக் காய்ச்சி இறக்கி ஆறவிட்டு பத்திரப்படுத்து. கணபதிக்குப் பூசை செய்து கரண்டி அளவு மேற்படி எண்ணெயை உட்கொள்.

கொள்ளும் போது கிரந்தி மதுமேகம்
புள்ளியே கருஞ் செங்கிரந்திப் புண்ணு
விள்ளு மேகம் இருபத்து ஒன்றுமே
தெள்ளி ஓடுந் தேறையன் முறையிதே. 607

கிரந்தி, மதுமேகம், கருங்கிரந்தி, செங்கிரந்தி, இருபத்தி யொரு வகை மேகம் இவைகள் நீங்கி குணமாகும். தேரையராகிய நான் உரைத்த முறைகள் பொய்யாகாது.

சகலமேகங்களுக்கு எண்ணெய்

உரைக்கும் மேகம் இருபதுந் தீரவே
திரைக்கமான விளக்கெண்ணெயிள நீரும்
உரைக்கும் ஆவின்பால் ஊற்ற காடியுடன்
இரைக்கும் பொன்னாங்கணி மூலி சேர்த்திடே. 608

விளக்கெண்ணெய், இளநீர், ஆவின்பால், காடி, பொன்னாங்கண்ணி மற்றும்.

சேர்த்து ஆதொண்டை வல்ல அறுகன்வேர்
போர்த்துக் கள்ளியை வார்த்துமே நீர்பழு
ஏர்த்து வெந்தயம் சீரகம் நாகப்பூ
கார்த்து ஏலம் கிராம்பு சாதிக்காயே. 609

ஆதொண்டை, அறுகன் வேர், கள்ளி, வெந்தயம், சீரகம், சிறு நாகப்பூ, ஏலம், கிராம்பு, சாதிக்காய் மற்றும்.

ஜாதியான வதி மதுரமுடன்
ஆதியாய் கூகை நீருஞ் சீனமுடன்
பாதியான சரக்குப் பகுந்துமே
வாதியாக மெழுகாய் இறக்கிடே. 610

அதிமதுரம், கூகைநீர், சீனம் இவைகளை மேற்படி எண்ணெயிலிட்டு மெழுகு பதமாக காய்ச்சிக் கொள்.

இறக்கி மண்டலம் இருவேளை கொண்டிடே
உரக்கு மண்டலம் வாய்நாற்றம் தீர்த்திடும்
இரக்கும் ரோகங்கள் மேகங்கள் ஆனதும்
பரக்கு மென்று பகர்ந்தனர் தேறையன். 611

மேற்படி எண்ணெயை இருவேளை ஒரு மண்டலம் உட்கொள்ள வாய் நாற்றம் தீரும், மேக ரோகம் தீரும்.நாதாக்களின் முறையை பார்த்து தேரையராகிய நான் சொன்னேன் இம்முறைகளை,

எலிகடிக்கு

செப்புவேன் பதினெட்டு எலிகடி
ஒப்புமே கரும் பூனை மலமதை
தப்புமே கழற்சிக் காய் அளவுடன்
அப்புமே கருப்பன் கட்டிச் சேர்த்திடே. 612

கரும்பூனை மலம் கழற்சிக்காய் அளவுடன் கருப்பட்டி சேர்த்து உள்ளிக்காய் அளவு உட்கொள்ளவும்.

சேர்த்துமே உள்ளிக் காயளவு உண்டிட
பார்த்துப் பத்தியம் பண்புடன் உப்பாகா
ஏர்த்து மேழாநாள் இணங்க ஸ்நானஞ்செய்ய
கார்த்துமே எலி விஷக்கடி தீருமே. 613

மேற்படி வகையில் கொள்ள வேண்டும். உப்பு ஆகாது. மருந்துட் கொண்டு ஏழாவது நாளில் ஸ்நானம் செய்ய வேண்டும், பதினெட்டு வகை எலிகடி விஷமும் தீரும்.

வண்டுகடிக்கு மருந்து

தீரும் வண்டு கடிவந்த பேருக்கு
மாரும் வெள்ளாட்டுப் பால்தினை அரிசியும்
வீரும் ஆடாதோடை மூலிச் சாறுடன்
கூறும் ஒன்றாகக் கூட்டிக் கலந்துண்ணே. 614

வெள்ளாட்டுப்பால், தினை அரிசி, ஆடா தோடைச் சாறு, இவைகளை ஒன்றாக கூட்டி உட்கொள்.

உண்ணும் பத்தியம் வெள்ளாட்டுப் பாலுண்ணு
திண்ணும் ஏழாநாள் சிரசில் நீரைவார்
கண்ணும் நீலிவேர் கடிய வசம்புடன்
வண்ணு மேற்பூச வண்டுகடி போமே. 615

மேற்படி மருந்துட் கொள்ளும் போது பத்தியமாக இருந்து வெள்ளாட்டு பால் மட்டும் உட்கொண்டு, ஏழாவது நாள் தலையில் நீரூற்றிக் கொள்ள வேண்டும். நீலிவேர், வசம்பு, இவைகளை அரைத்து வண்டுகடி படைமீது பூச குணமாகும்.

போகுமே விஷப் பாண்டு மேகங்களும்
ஏகுந் தாமரைப் புண்கள் ரிணமாறும்
சாகும் பூரான் கடிவிஷந் தான்தீரும்
வேகு மருந்து வியாதி விட்டோடும். 616

மேலும் விஷப்பாண்டு, மேகம், தாமரைப்புண், ரணம், பூரான்கடிவிஷம் இவைகளும் தீரும்.

பெருச்சாளிகடிக்கு

செப்புமே பெருச்சாளி கடிகட்கு
ஒப்புங் கொல்லன் கோவைமூலம் தன்னுடன்
கொப்பு மயிற்பீலி கோவை இரண்டையும்
அப்புமே புகை அழகாய் பிடித்திடே. 617

கொல்லங் கோவை, வேருடன் மயிற்பீலி கோவை இரண்டையும் சேர்த்து புகை பிடித்திட வேண்டும்.

பிடித்திட பெருச்சாளி விஷங்களும்
குடித்திட அறுகன்வேர் கிஷாயங்கள்
கடித்திடப் பாம்பு விரியன் விஷங்களும்
கொடுத்திட வுடல் குடிவிட்டு ஓடுமே. 618

புகை பிடிக்க பெருச்சாளி விஷம் தீரும். அறுகன்வேர் கஷாயமுடன் மேற்படி புகையைப் பிடிக்க பாம்பு விரியன் கடி விஷங்களும் தீரும்.

சகல விஷங்களுக்கு

செப்பும் தோஷ சகல விஷங்கட்கு
வெப்பும் எட்டிப் பழச்சாறு வாங்கியே
துப்பும் வேப்பெண்ணெய் சரிசமன் கூட்டியே
கப்பு மெழுகுபோல் காச்சி வடித்திடே. 619

எட்டிப் பழச்சாறுடன், சமஅளவு வேப்பெண்ணெய் கூட்டி மெழுகு பதமாக காய்ச்சிக்கொள்.

வடித்துமே செப்பில் வாகாக மூடியே
துடித்த விஷங்கள் தீண்டின பேருக்கு
வெடித்த தூதளங் காயள வாகவே
நடித்து போதுன்ண நல்விஷந் தீருமே. 620

காய்ச்சியதை பத்திரப்படுத்து விஷஜந்து கடித்தவர்கட்கு தூதுளங்காய் அளவு உட்கொள்ள விஷம்தீரும்.

விஷநசியம்

குரித்திடுமே விஷ நசிய மொன்று
நிரித்திடுமே நீல துரிசை வாங்கி
தரித்துமே நிரையாகத் துணியில்வை
பொரித்துமே விஷம் நசியம் பொருத்திடே. 621

நீலதுரிசியை பொடித்து துணியிலிட்டு நசியமிட விஷங்கள் தீரும்.

சிறுபாம்பு கடிக்கு

ஓடுமே சிறுபாம்பு கடித்தோர்க்கு
நீடுமே குறிஞ்சான் வேரை வாங்கியே
ஆடும் வென்னீரில் அரைத்து உருட்டியே
நீடு மண்டலம் இருவேளை உண்டிடே. 622

குறிஞ்சான் வேரை எடுத்த வென்னீரில் அரைத்து உருட்டி இரண்டு வேளையும் ஒருமண்டலம் உட்கொள்ள சிறு பாம்பு கடி தீரும்.

குஷ்டத்திற்கு மருந்து

கூறும் குஷ்டநோய் குடிகொண்ட பேர்கட்கு
வாறும் செவ்வலரி வேர் சமூலமாய்
தூறுடனே குழித்தயிலம் வாங்கி
பாறு குப்பிக்குள் பதனங்கள் செய்திடே. 623

செவ்வலரியை சமூலமாக எடுத்து குழித்தயில மிறக்கி பதனமாக வைத்திடு.

செய்யும் எண்ணெய் சிறந்த தண்ணீரிலே
எய்யுமே தளிக் குத்திக் கலக்கியே
பைய மூன்றுநாள் காலை மாலையுண்ண
நையுங் குஷ்டங்கள் நடுங்கி ஓடுமே. 624

தண்ணீரில் மேற்படி எண்ணெயை துளி அளவு விட்டு கலக்கி உட்கொள். காலை மாலை மூன்றுநாள் உட்கொள்ள குஷ்டங்கள் தீரும்.

ஓடும் பத்தியம் உப்பு புளியாகா
நீடும் பருப்பு நீள்சம னாகவே
கூடு மேழினில் குணமாய்ப் புளிசேரு
ஓடுங் குஷ்டநோய் உண்மை பொய்அல்லவே. 625

மேற்படி மருந்துட் கொள்ளும் போது உப்பு, புளி, ஆகாது, பருப்பு, சேர்த்துக்கொள், மறு பத்தியமிருந்து ஏழாம் நாள் புளி சேர்த்திடு, குஷ்டம் தீரும் இது பொய்யாகாது.

மருந்து முறிவு

கொள்ளு மாதர் குணமாய் மருந்திடில்
எள்ளு மெண்ணெய் இட்டு முழுகச்சொல்லு
விள்ளு மோருடன் அன்னந் தான்கொடு
கொள்ளுந் தேங்காயின் பாலை எடுத்திடே. 626

பெண்களால் மருந்திடு ஏற்பட்டால் அதை முறிப்பதற்கு கேள், எள்ளெண்ணை இட்டு முழுகச்சொல், பின் மோர் சாதம் உட்கொள்ளச் செய் தேங்காய்ப் பாலை எடுத்துக் கொள்.

எடுத்து பாலை யிடைசமன் சர்க்கரை
விடுத்த முருங்கை விளங்கரும் பாலைசார்
அடுத்த வாவிநெய் ஆழாக்குடன் சேர்த்து
கொடுத்து பேதியில் குணமாய் அருந்திடே. 627

தேங்ய்காய்ப் பாலுக்கு சமனெடை சர்க்கரையை சேர்த்து முருங்கைச்சாறு கரும்புச்சாறு ஆவின்நெய் ஆழாக்கு இவைகளை சேர்த்து உட்கொள்ளச் செய்.

அருந்தும் போது அரிவையர் மருந்துகள்
திருந்து முன்னறு வேளையில் தான்விழும்
குருந்து தானங்கள் குணமாகச் செய்திடில்
பொருந்துமே மருந்தீடு முறியுமே. 628

மேற்படி செய்ய பெண்களால் ஏற்பட்ட மருந்தீடு பேதியாகும் வேளையில் வெளியாகும். மருந்தீடு முறியும்.

நஞ்சுண்டவர்க்கு கெர்ப்பமழிக்கவும்

கொள்ளும் நஞ்சு குடிகொண்ட பேர்கட்கு
அள்ளும் நீலியின் பட்டைவேர் தன்னையே
விள்ளும் சோதகஞ் சமூலம் இடித்துமே
கொள்ளு முன்னீரில் கியாழம் அருந்திடே. 629

விஷத்தைக் குடித்தவர்கட்கு மருந்து கூறுகிறேன், நீலி செடியின் சமூலம் தூள் செய்து முன் சொன்ன கியாழத்துடன் கொடுக்க வேண்டும்.

அருந்துமே இருவேளை யோர் மண்டலம்
பொருந்துங் கர்பம் பொருமியே கீழ்விழும்
செருந்துங் கஞ்சி கருப்புக் கட்டியுடன்
முரிந்துமே இரு வேளை கொடுத்திடே. 630

மேற்படி இருவேளையும் ஒரு மண்டலம் உட்கொள்ள கெர்பம் வெளிப்படும், கஞ்சியுடன் பனை வெல்லம் சேர்த்து இரு வேளை கொடுக்கவும்

கொடுத்திட உதிர மிகவுங் கண்டால்
அடுத்த வேம்பினின் பட்டை இடித்துமே
எடுத்து மோருடன் எழிலாய்ப் பிசைந்துமே
கொடுத்திட உதிரமுந் தானீங்குமே. 631

உதிரம் அதிகமாக வெளிப்பட்டால் வேம்பின் பட்டையை இடித்து மோருடன் பிசைந்து கொடுக்க உதிரம் நிற்கும்.

விதவையைக் கூட பிள்ளையில்லா திருக்க

கூடுங் கன்னி விதவையைக் கூடினால்
தோடு பிள்ளை இல்லாமல் இருக்கவே

தாடு மூன்றாநாள் தழுவி அணைந்திடில்
பேடும் பிள்ளை பெறுவதும் இல்லையே 632

விதவையைக் கூடினால் கர்ப்பமாகாமல் இருக்க மாதம் மூன்றாம் நாள் தழுவி அணைத்து உறவுகொள்ள பிள்ளை இருக்காது.

பூட்டு மூலம் பொருமல் ரோகந்தீர
ஆட்டுத் தூதுவளை கருணை மூலம்
மூட்டு நல்லாரை முதிய பிரண்டையும்
காட்டுக் கருணை கூடிய அறுகன் வேர். 633

தூதுவளை கருணைக்கிழங்கு நல்லாரை, பிரண்டை, காட்டுக் கருணை அறுகன்வேர், மற்றும்

வேரும் நீர்ப்பூண்டு விளங்குங் கிழங்குடன்
தூருமே சமன் துகள் இடித்துமே
கூறுஞ் சூரணங் குறிக்குந் தேனிற் கொள்ள
ஆரு மூலம் அகன்றுதான் ஓடுமே. 634

நீர்ப்பூண்டு கிழங்கு, இவைகள் சமனாக சேர்த்திடித்து சூரணம் செய்து தேனில் உட்கொள்ள மூலம் குணமாகும்.

வேறு - பித்தக்கியாழம்

புகலுஞ் சந்தனம் பற்படகம்
பூசுஞ் சந்தனம் விலாமிச்சம்
திகலும் வேர்க்கொம்பு சித்தாமுட்டி
தேர்ந்த சுக்கு சரிகூராய்
இகலு ஃதம் ஒவ்வொன்றாய்
இசையுந் தண்ணீர் நாழிவிட்டு
பகலுங் காய்ச்சிக் குடிப்பீராய்
பகரும் பித்தம் பறக்குமென்றே. 635

சந்தனம், பற்படாகம், செஞ்சந்தனம், விலாமிச்சம் வேர், வேர் கொம்பு, சித்தாமுட்டி, சுக்கு, இவைகளை சரி எடை எடுத்து நாழி அளவு தண்ணீர் விட்டு கஷாயமிட்டு உட்கொள். பித்தம் குணமாகும்.

வேறு - வாதசுரக்கியாழம்

தூது வளையின் பூரா வாடாதோடை
சொன்ன சங்கன்வேர் சமனாய் வீழிகூட்டி
மாது வளர் திப்பிலியும் பற்பாடகம்
வழுதலையுங் காலியுடன் சமன் சேர்கொண்டு
வேது விடநீர் நாழியெட் டொன்றாக்கி
இதனுடனே தேன்கூட்டி இசைத்தே உண்ணு
மீது பாரீர் சுரமும் வாதசுரமும்
மேகத்திற்கு சேர்ந்த சுரமகன்று போமே. 636

தூதுவளைபூ, ஆடாதோடை, சங்கன்வேர் வீழி, திப்பிலி, பற்படாகம், வழுதலை காலி, இவைகளை சமனாக கூட்டி நாழி அளவு நீரிலிட்டு எட்டொன்றாய் கியாழமிட்டு தேன்கூட்டி உட்கொள்ள சுரம், வாதசுரம், மேகசுரம் இவைகள் தீரும்.

வேறு - சேத்தும சுரத்துக்கு

ஆடாதோடை சிறுதேக்கு
    அடர் வாகையான் தகரைச்சங்கு
தோடா வேறும் எரும்பில்லை
    சுக்குச் சேர்த்து சமன்மிளகு
வாடா நீர்வார்த்து எட்டொன்றாய்
    வறுத்தந் தேனு முடன்கூட்டி
போடா நீறுங் கொள்வீராய்
    போற்றுஞ் சேத்தும சுரம்போமே. 637

ஆடாதோடை, சிறு தேக்கு, வாகை, கையான் தகரை, சங்கு, இவைகளின் வேர், இவைகளுடன் சுக்கு, மிளகு, சமனாக சேர்த்து நீரிலிட்டு எட்டொன்றாக்கி தேன் கூட்டி உட்கொள்ள சேத்துமசுரம் தீரும்.

வேறு- வயிற்று நோவுக்கு

நிலக்கு மிழ்வேர் சிறுதேக்கு தேவதாரம்
    நிலவேம்பு பற்படகம் கடுக்காய் சுக்கு
துலக்கமொடு முத்தமிடும் வசம்பு நேராய்
    சொன்னநீர் இருநாழி சுவரக்காய்ச்சி
கலக்கமில்லா தேன்கூடிக் கியாழங்கொள்ள
    கலந்துழக்கு மருந்து கொள்ளக் கடியவையம்
விலக்கரிய வயிற்றுநோய் இளைப்புத்தீரும்
    வேதமுனி தாமுரைத்தார் விளம்புங்காலே. 638

குழிழ்வேர், சிறுதேக்கு, தேவதாரம், நிலவேம்பு, பற்படாகம், கடுக்காய், சுக்கு, வசம்பு, இவைகளை சமனாக சேர்த்து இருநாழி நீரிலிட்டு எட்டொன்றாக்கி தேன் கூட்டி, உழக்கு அளவு உட்கொள்ள வயிற்று நோய் இளைப்பு, இவைகள் தீரும் வேதமுனி இம்முறையை உரைத்தார்.

வேறு பித்தசுரம்

இடித்து அத்திப் பட்டையுடன்
    இசையுங் கதலிப் பழம்பிசைந்து
வடித்த நீரும் நெல்லிக்காய்
    வறுத்துஞ் சாறு தேன்கூட்டி
பிடித்து வறுத்துச் சீரகமும்
    பிரியமுடன் சர்க்கரை கலந்து
குடித்த போதே பித்தசுரம்
    பேசா தோடிப் போய்விடுமே. 639

அத்திப்பட்டை, கதலிப்பழம், இவை இரண்டையும் பிசைந்து அத்துடன் நெல்லிக்காய்ச்சாறு, தேன்கூட்டி வறுத்த சீரகம், சர்க்கரை, கலந்து குடிக்க பித்தசுரம் தீரும்.

மூலரோகத்திற்கு

போகுமே மூல ரோகமுந்தான் தீர
ஆகுந் தூதுவளை வேர் சமூலமும்
தாகும் நல்லாரைப் பிரண்டைக் கருணையும்
வாகு மூலம் அருகன் சமூலமே. 640

தூதுவளை சமூலம், நல்லாரை, பிரண்டை, கருணை வேர்களும் அறுகன் சமூலம், மற்றும்

மூலம் பூண்டு கிழங்குடன் மூலியும்
தாலமாய் உரலிட்டு துளாவியே
கோலமா சீனி சர்க்கரை சேர்த்துமே
சீலமாந் தேனில் சிறப்புடன் கொண்டிடே. 641

நீர்பூண்டு மற்றும் கிழங்கு இவைகளை சமனெடை எடுத்து இடித்து சீனி சர்க்கரை சேர்த்து தேனில் உட்கொள்.

கொண்டிடு கைகடிப் பிரமாணமும்
உண்டிடவே இருவேளை மண்டலம்
அண்டிடாது அறுவகை மூலமும்
திண்டு மேனியுடல் விட்டு நீங்குமே. 642

வெருகடி பிரமாணம் இரண்டு வேளையும் ஒருமண்டலம் கொள்ள ஆறுவகை மூலம் உடலைவிட்டு நீங்கும்.

கிரந்தி அறையாப்புக்கு எண்ணெய்

செப்பும் எண்ணெய் தெளிவுடன் மாந்தர்க்கு
ஒப்பும் சங்கோடு சங்கங் குப்பியுடன்
வெப்பு நொச்சி வெள்ளறுகுடன் வன்னியும்
கப்புங் கிரந்தியின் நாயகங் காரமே. 643

சங்கன், சங்கங்குப்பி, நொச்சி, வெள்ளறுகு, வன்னி, இவைகளை எண்ணெயிலிட்டுக் காய்ச்சிக் கிரந்திப் புண் மீது தடவ குணமாகும்.

சுரங்களுக்கு

காரமட்டுங் கனங்குழல் செப்புவாய்
வார மட்டும் வனமுலை மாதுகேள்
பேர மட்டியுஞ் சுக்குங் குடித்தால்
ஊரை விட்டுமே ஓடுஞ் சுரங்களே. 644

பேராமுட்டி, சுக்கு இவைகளை கியாழமிட்டு குடித்தால் சுரங்கள் தீரும்.

வில்லப் பத்திரி வேர் சிறுமட்டியும்
வல்ல சுக்கு வளம்பெறக் காச்சியே
நல்ல தேனில் நயந்து குடித்திட
கொல்ல வந்த சத்தியுங் குறுகுமே. 645

வில்வவேர், சித்தாமுட்டி, சுக்கு இவைகளை நீரிலிட்டு கியாழம் வைத்து, கியாழத்துடன் தேன் கூட்டி குடித்திட கொடிய வாந்தியும் நிற்கும்.

வேது

காடியிலே தான் நிற்கனாளில்
கருத்த தோஷம் போமென்றார்
தேடிர் அழிஞ்சில் வேர்மஞ்சள்
தேடேவொன்றா விருபலமாம்
நாடிக் குமரிச் சாற்றரைத்து
நற்காடியில் தான் கழுவில்
பாடிர் வேனத் தோடமும்போம்
பதனம் பண்ணிக் கொள்வீரே. 646

சரக்குகளில் உள்ள தோஷம் காடியால் தீரும். அழிஞ்சில் வேர், மஞ்கள் இரண்டு பலம் எடுத்து குமரிச்சாற்றால் அரைத்து காடியில் கழுவிக் கொள், தோஷம் தீரும். இதை பத்திரப்படுத்து.

கொள்ளே கொன்னை வேர்மஞ்சள்
கூட்டும் இதனை ஒருபலமாய்
கள்ளே குமரிச் சாறரைத்துக்
கழுவி எடுக்கில் கரைதோஷம்
துள்ளே கொடுவேல் கடாய்மூலிச்
சுகமாம் இதனை ஒருபலமாய்
அள்ளே அரைத்துக் கழுவீராய்
அக்கினி தோஷம் போமென்றார். 647

பொற்கொன்றைவேர் ஒருபலம் எடுத்து குமரிச்சாறுவிட்டு அரைத்து காடியில் கழுவிக்கொள். கரை தோஷம் நீங்கும். கொடிவேலி வேரை மூலிச்சாறு விட்டு அரைத்து காடியில் கழுவிட அக்கினி தோஷம் தீரும்.

போமே மஞ்சள் மதுமத்தைவேர்
புகழும் பலந்தான் ஒருபலமாம்
தாமே அரைத்துக் கழுகுவிராய்
தக்க காடி தான்கூட்டும்
சேமே மஞ்சள் தோஷமும்போம்
செய்யக் கடுக்காய் தான்றிநெல்லி
ஆமே மஞ்சள் இதினாலும்
அடவாய்க் கூட்டு பலம்நாலே 648

பொன்னூமத்தை ஒருபலம் எடுத்து அரைத்து காடியில் கழுவிக்கொள்ள தோஷம் தீரும். கடுக்காய், தான்றி, நெல்லி, மஞ்சள் இவைகள் நான்கு பலம்.

பலந்தான் கூட்டி அதைபெடுத்துப்
பழகுங் காடி தனிற்கழுவி
பிலந்தா லுண்டாம் விஷதோஷம்
பிறகு திரியின் கடுமூன்றும்
கலந்தே பலந்தான் மூன்றுகொள்ளும்
கடுகக் கூட்டி கழுவுவிராய்
தலத்...டாய்மூலந்
தக்க தோஷம் போமென்றார். 649

மேற்படி நான்கையும் காடிவிட்டு கழுவிக்கொள். விஷதோஷம் நீங்கும். திரி கடுகும் பலம் மூன்றை காடிவிட்டு கழுவ தோஷம் நீங்கும்.

கணுவுக் கொருக்காய் பலமிரண்டு
கடிய மஞ்சள் பொடிபலமாம்
அணுவுங் காடி தனிக்கழுவில்
ஆரை தோஷம் போமெனவே
மிணுவு நன்னார் பற்படக
மேவுஞ் சுக்குப் பலஞ்சேர்த்து
சணுவுஞ் சகல தோஷமும்போம்
சாற்று நாலு நாள்கொள்ளே. 650

கொருக்காய்புளி இரண்டு பலம், மஞ்சள் பொடி ஒருபலம் காடிவிட்டு கழுவ ஆரை தோஷம் நீங்கும், நன்னாரி, பற்படாகம், சுக்கு இவைகளை பலம் அளவு எடுத்து காடியால் கழு வசகல தோஷமுந் தீரும்.

கொள்ளே இஞ்சிச் சாறுடனே
கூட்டு நார்த்தம் பழச்சாறு
உள்ளே தேனு முரிகூட்டி
உதரங் கொடுவேல் பலமுக்கால்
அள்ளே கியாழம் அதுவாக்கி
அறவே பிசகு தன்பதத்தில்
இள்ளே இந்தப் பொடிதூவிக்
கிளறிப் பாகு பதத்தினிறக்கே 651

இஞ்சிச்சாறு, நாரத்தம் பழச்சாறு, தேன், அமுரி இவைகளுடன் சிகப்பு, கொடிவேலி முக்கால் பலம் இவைகளை கியாழம் போல் வைத்து மேற்படி தோஷம் நீக்கின சரக்குகளில் பொடியை சேர்த்துக் கிளறி லேகிய முறைப்படி செய்திடு.

இறக்கி இதுவும் ஆறியபின்
எடுத்தே பொடியும் ஒருபலமாய்

குருக்கும் பொடியைப் பாகுதனில்
குழப்பி தினந்தான் கொள்வீரேல்
பறக்குங் குன்மம் பெருவயிறு
பிறநீர் கோர்வை பாண்டுரோகம்
உறக்கும் பித்தம் பாண்டுரோகம்
உஷ்ணம் குன்ம மாறிடுமே. 652

மேற்படி லேகியத்தை உட்கொள்ள குன்மம் பெருவயிறு, நீர் கோர்வை, பாண்டு ரோகம், பித்தபாண்டு, உஷ்ண குன்மம் இவைகளுடன்.

மாறு மூல ரோகமுடன்
வருந்துங் கிராணி காமாலை
மீறும் பீனி சமதுமுதலாய்
மேவுஞ் சகல வியாதிகளும்
தேரும் படியே பத்தியமாந்
தீரும் வியாதி சொன்னோம்போம்
பாருஞ் சிவனா ருரைத்தமொழி
பரிவாய் உரைத்தார் பார்மீதில், 653

மூலநோய், கிராணி, காமாலை, பீனிசம் இவைகள் குணமாகும், சகல நோயும் குணமாகும். பத்தியம் காக்க வேண்டும் சிவனார் சொன்ன முறையிது.

புளியங் காயுங் காடியுமாம்
புகழுங் கையான் தகரையுடன்
குளியும் வங்கம் பத்திரியும்
குப்பை மேனி முருக்கிலையுந்
தெளியும் பிரண்டை நொச்சிலையும்
சேர்ந்த கிட்டம் பலம்நூறு
ஒளிசேர் காடி தன்னிலிடு
ஊறப் போடு மூன்றேநாள். 654

புளியங்காய், காடி, கையாந்தகரை, லவுங்கப்பத்திரி, குப்பைமேனி, முருக்கிலை, பிரண்டை, நொச்சியிலை இவைகளை நூறு பலம் சேர்த்து காடியைவிட்டு மூன்றுநாள் ஊறவை.

ஊறி யெடுத்த தின்பிறகு
ஊக்கு ஈயப் பொடியுடனே
சேருங் கடுக்காய் அரைப்பொடியுஞ்
சேர்த்தே பலந்தான் அஞ்சுகொள்ளும்
நாருங் கோமியம் நானாலு
நல்ல சர்க்கரை பலம்நாலு
மீரு ஏலம் இலவங்கம்
மிக்க இந்து சாதிக்காய்.

ஊற வைத்ததை எடுத்து உழக்கு அளவு ஈயப்பொடி ஐந்து பலம் கடுக்காய் பொடி, கோமியம் நான்கு பலம் நல்ல சர்க்கரை நான்கு பலம், ஏலம், லவுங்கம், சாதிக்காய் மற்றும்.

மிக்க கரந்தை கைச்சோலம்
மேவுங் கடுகு ரோகணியும்
தக்க சிவதை தேவதாரஞ்
சரிசேர் கோஷ்ட மரமஞ்சள்
ஒக்க கரிவேப் பிலையுடனே
யுத்த திரியின் பாலையதும்
தொக்குந் திரியின் கடுகுடனே
சொல்லும் பலந்தான் நாலாமே. 656

கரந்தை கச்சோலம், கடுகுரோகணி, சிவதை, தேவதாரம், கோஷ்டம், மரமஞ்சள், கரிவேப்பிலை, திரிபலை, திரிகடுகு, இவைகள் வகைக்கு நான்கு பலம்.

வெள்ளுள்ளி சுக்குப் பெருங்காய
மிக்க இந்து நசியமதாம்
கொள்ளுஞ் சுக்குத் திப்பிலிவெல்லங்
கூட்டி முலைப்பால் நசியமிட
தெள்ளு நறுநெய் விந்துவுடன்
சேர்ந்தே ஒன்றாய் நசியமிட
விள்ளும் இந்த திப்பிலியும்
வென்னீர் தன்னில் நசியமிடேன். 657

வெள்ளுள்ளி, சுக்கு பெருங்காயம், இவைகளை நசியமாக கொடுத்து சுக்கு, திப்பிலி, வெல்லம் கூட்டி நறு நெய் விந்து சேர்த்து நசியமிடவும். திப்பிலியை வென்னீருடன் நசியமிடவும்.

குக்கில் பசுவின் கொம்புடனே
கூறு மாட்டு கொம்பருகில்
மிக்க நறுநெய் தான்கூட்டி
மிகவே புகையுங் கொள்வீரே
தக்க கிராம்பு மஞ்சளிலை
சரிசேர் அரக்கும் ரோசினையும்
சிக்கே நாடி நிற்கும்நஷ்டம்
சிறக்க வேதான் தெரிந்துஎடேன். 658

குக்கில், பசுவின் கொம்பு, மாட்டுக் கொம்பு அருகில் நறு நெய் கூட்டி புகையுண்டாக்கி புகையை கொள்ள வேண்டும். கிராம்பு மஞ்சளின் இலை, அரக்கு, கோரோசினை இவைகளை சரி எடை எடுத்திடு.

எடுத்தே மருந்து ரெண்டாக்கி
இட்டுக் காச்சி குடிப்பீராய்
தொடுத்த காச சுவாசமுடன்
சொல்லுஞ் சன்னி சூலைவாதம்
அடுத்த வியாதி இவைமாறு
மருந்தும் அவிழ்தங் கொள்வீராய்
விடுத்தோம் இன்னம் நீர்கேளு
மிஞ்சும் வியாதி மெல்லியளே. 659

எடுத்ததை இரண்டு பங்காக்கி ஒரு பங்கை கசாயமிட்டு குடிக்க சுவாச காசம், சன்னி, சூலை, இவைகள் தீரும்.

மெல்லியளே நாயுருவி
விரையைத் தேடித் தேனதனில்
அல்ல லறவே நீர்குழப்பி
அந்தி சந்தி கொள்வீராய்
வல்ல அமுக்குரா வேரை
வளரும் பசும்பால் தனிற்கொள்ளும்
நல்ல திப்பிலி தான்கூட்டு
நறுநெய் அதனைக் கொள்வீரே. 660

நாயுருவி விரையை எடுத்து தூள்செய்து தேன் கலந்து அதை நீருடன் காலை, மாலை, உட்கொண்டு பின் அமுக்கிறா வேரை பால்தனில் உட்கொண்டு திப்பிலியை நெய்தனில் உட்கொள்ள வேண்டும்.

கொள்ளுந் தயிலம் முழுகிவரக்
கூடும் விக்கல் மிகவெடுத்து
துள்ளுஞ் சுவாசங் கடினமென்றால்
சுகமாம் எண்ணெய்த் தீர்த்துவிடும்
விள்ளும் வேது மிகப்பிடிக்க
விரும்பும் புகைதான் உட்கொள்ள
புள்ளும் விளாவிலை நறுக்கிப்
பொருந்த முடிந்து முகந்துகொள்ளே. 661

பின் தயிலத்தால் முழுக விக்கல் நிற்கும். கடின சுவாசம் நீங்கி சுவாசம் சுகமாகும். வேது பிடிக்கும் முறையைக் கூறுகிறேன். விளாவின் இலையை நறுக்கிப் போட்டு வேகவைத்து வேது பிடி.

குளுந்த தண்ணீர் நெஞ்சிலிடக்
குக்கில் புகையைத் தான்குடிக்க
அழுந்துங் காலில் சூடுசுட
ஆன நசியம் நாசியிட

எழுந்து கரும்பு தான்திண்ண
இளகு நறுநெய் தான்குடிக்க
விழுந்த வாராய் எழுந்துநிற்கும்
விக்கல் வியாதி மாறிமே. 662

குளிர்ந்த நீரை மார்பில் விடு குக்கில் புகையை முகர்ந்து உட்கொள். கரும்புச்சாறு உட்கொள்ள. நறுநெய் குடிக்க, தீராத விக்கல் தீரும்.

பிரமேகம் நீர்க்கடுப்புக்கு

தீராத பிரமேகம் நீர்க்கடுப்பு
தீருதற்கு மருந்துசொல்வேன் செண்பகப்பூ
வார்சேருங் கூவளைவேர் நிலப்பனைவேர்
வளர்கிழங்கு அதிமதுரங் கிராம்பூதானுங்
கூர்வேரும் இலவ மரத்தின்பிசினுங்
கொண்டுதண்ணீர் நாழியுரி விரைவாய்வார்த்து
தார்சேரு முரியவே வடித்துக்காச்சி
தாழைவீழிச் சார்பிழிந்து தயவாய்க்கொள்ளே. 663

தீராத பிரமேகம், நீர்கடுப்பு, இவைகள் தீருவதற்கு மருந்து கூறுகிறேன். செண்பகப்பூ, கூவளைவேர் (வில்வம்) நிலப்பனை கிழங்கு, அதிமதுரம், கிராம்பு, இலவம்பிசின். இவைகளை சம அளவெடுத்து நாழி அளவு நீரிலிட்டு கஷாயம் வைத்து வடித்து தாழை, வீழி இவைகளின் சாறு கூட்டி உட்கொள்ள மேற்படி நோய்கள் தீரும்.

கொள்வீர் இந்தச் சாறுதனில்
கூடும் வெல்லந் தான்கரைத்து
உள்ளே ஏடு தான்கட்டி
உதவும் பனியிலே வைத்து
விள்ளே விழு வேதுகுடிக்க
விரும்பும் பிரமேகங் கடுப்பு
தள்ளே இதனை உட்கொள்ளு
தணியும் சிவனார் தன்ஆணை 664

மேற்படி மூலிகை சாறு கலந்த காஷயத்தில் வெல்லம் கரைத்து சட்டியிலிட்டு மேல்வேடுகட்டி பனியில் வைத்து குடிக்க பிரமேகக் கடுப்பு தீரும். இது சிவனார் மேல் ஆணை.

ஆலம் விழுது இருதூணி
ஆன செப்பு நெருஞ்சியின்வேர்
தாலம் புகழும் நாணலுடன்
தரும் பூர்ப் பாதிரி இலையும்

ஏலம் கரு அதிமதுரம்
மிளகு மாதுளம் வேரும்
கோலம் பெறவே அதின்பிஞ்சும்
கொழுந்தும் பூவும் இன்கொழுந்தே. 665

இரு தூணி அளவு ஆலம்விழுது, அத்துடன் செப்பு நெருஞ்சிவேர், நாணல் அதிமதுரம், மிளகு, மாதுளம்வேர், மாதுளம்பிஞ்சு, மாதுளம் கொழுந்து மாதுளம் பூ.

கொழுந்தே கொண்டு அரைத்துக்காச்சி
குடிக்கில் இதற்குப் பத்தியங்கேள்
எழுந்த பசும்பால் நெய்போட்டு
இதுவுங் காய்ச்சி சாய்பொழுதில்
அழுந்தும் பசும்பால் குடிப்பீராய்
ஆன வெக்கைப் பிரமியம்போம்
விழுந் தயாரா மெழுந்திருக்கும்
விமலர் ஆணை மெய்யிதுவே. 666

மேற்படி பொருட்களை எடுத்து அரைத்து நீரிலிட்டு காய்ச்சி கஷாயம் வைத்து குடிக்கவேண்டும். பத்தியமாக பசும் பாலும், நெய்யும் சேர்த்து பொழுது சாயும் நேரத்தில் குடிக்க வேண்டும். இவ்வாறு செய்ய வெக்கை, பிரமியம், இவைகள் தீரும், விமலர் மேல் ஆணையாக மேற்படி நோய்கள் தீரும். இது பொய்யாகாது.

கருப்புக் கட்டி பச்சரிசி
காணு நறுவலிக் கொழுந்து
பெருக்க ஒரு பிடிகொண்டு
பேணி அரைத்து எண்ணெயிட்டு
சுருக்க முடனே களிகிண்டி
துகழ்சேர் எள்ளுப் பொடிதூவி
விருப்ப முடனே யெண்ணெயதனில்
மிகவே தோய்த்துத் தின்பீரே 667

கருப்புக்கட்டி (பனைவெல்லம்) பச்சரிசி, நறுவலிக் கொழுந்து இவைகளை ஒரு கைபிடி கொண்டு வந்து அரைத்து எண்ணெய் சேர்த்து களிபோல் கிளறி எள்ளுப் பொடி தூவி, எண்ணெய் கலந்து உட்கொள்ள வேண்டும்.

திண்ணும் போது பல்கடுப்பு
செய்ய ஊமைக் கடுப்புடனே
உண்ணுஞ் சுக்கில ஊன்மயமும்
உடனே வயிற்றில் கடுப்புவிடும்
எண்ணும் பிரமேகம் நீரிழிவு
இதுவும் பலது மிகத்தீரும்
நண்ணும் பெரிய மாமுனியும்
நவின்றார் இதனை நவின்றாரே. 668

மேற்படி வகையில் கொள்ள பல்கடுப்பு, ஊமைகடுப்பு, சுக்கில ஊன் வயிற்றுக் கடுப்பு, பிரமேகம், நீரிழிவு இவைகள் தீரும். மாமுனி சொன்ன முறையிது.

பொன்னாங் காணியிற் கொழுந்து
பெரிய மாதுளம் விரையும்
மின்னே பயறு இலுப்பைப்பூ
மேவுங் குருவிக் கரும்புடனே
சொன்னோங் கூட்டிக் காய்ச்சிவடித்து
துலங்குமே வாதி உண்டையரை
நன்றாய்க் குடிக்க நீர்க்கடுப்பு
நாடும் பிரமிய மாறிடுமே. 669

பொன்னாங்கண்ணி கொழுந்து, பெரிய மாதுளம் விதை, பயிறு, இலுப்பை பூ, குருவிக்கரும்பு, இவைகளை கூட்டி நீரிலிட்டு காய்ச்சி வடித்து குடிக்க நீர்க்கடுப்பு, பிரமியம் தீரும்.

சங்கம் வேரு கரும்புடனே
தன்னா மணக்கின் புல்கிழங்கும்
அங்கு சொன்னோ முத்தக்காசு
ஆலம் விழுது அதிமதுரம்
பங்கப் படாத சுக்குடனே
பாதிரிப் பூ தான்கூட்டி
எங்கும் உதிக்குங் கரும்புடனே
இவைகள் எல்லாஞ் சரிகூட்டே. 670

சங்கம்வேர், கரும்பு, புல்லாமணக்கு கிழங்கு, முத்தக்காசு ஆலம்விழுது, அதிமதுரம், சுக்கு, பாதிரிப்பூ இவைகளுடன் கரும்பும் சரி அளவு கூட்டிடு.

கூட்டப்பா விரு நாழி
குலவுந் தண்ணீரொரு நாழி
மீட்டே வார்த்து மூவுழக்காய்
மிகவே காய்ச்சி வடித்தெடுத்து
நாட்டிற் சீனி யெண்போடு
நன்றாய் குடிக்கில் நாளேழும்
தீட்டு நீரிற் கடுப்புவிடும்
சிவனார் ஆணை உண்மையிதே. 671

கூட்டியதை நாழிஅளவு நீரிலிட்டு மூன்று உழக்காக காய்ச்சி சுண்ட வைத்து வடித்து சீனி கூட்டி குடிக்க வேண்டும். இவ்வாறு ஏழுநாள் குடிக்க நீர்க்கடுப்பு தீரும். சிவனார் மீதாணை இது உண்மையான முறை. தவறாமல் குணமளிக்கும்.

சங்கம் வேர் நாயின்பாலில்
தனியே குடிக்கப் பிணிபோகும்

பொங்கு மாவின் பாலதனிற்
புகழ்சேர் பாலை வேர்குடிக்க
மங்கையரே பசுவின் பாலில்
வளரு திப்பிலி வேர்குடியும்
செங்கண் மாலே பசும்பாலில்
செப்பு நெருஞ்சி வேர்குடியும். 672

சங்கம் வேரை நாயின் பாலில் கூட்டி குடிக்க பிணிகள் தீரும். பாலை வேரை அரைத்து ஆவின்பலுடன் குடிக்கவும். திப்பிலிவேரை அரைத்து ஆவின் பாலில் கொள்ளவும். பசும்பாலில் செப்பு நெருஞ்சில் வேரை கொள்ள வேண்டும். எதையேனும் முறையாக கொண்டால் மேற்படி நோய்கள் தீரும்.

மாலே இந்த மருந்துகட்கு
வளரும் பனவெட் டுடன்கூட்டு
தாலே பச்சை நெல்லிக்காய்
தக்க தேத்தா விரையுடனே
காலே நரிக்கிச் செவ்விளநீர்
கடிதாய் ஊறப் போட்டுவைத்து
தூலே இருந்து தண்ணீரில்
தொந்தாங் கரைக்கு மருந்துசொல்வேன். 673

மேற்படி முறைகட்கு வேருகளை எட்டு பணம் அளவு சேர்க்க வேண்டும், பச்சை நெல்லிக்காய், தேத்தான் விதை. மேற்படி இரண்டையும், நருக்கி செவ்விளநீரில் ஊறவைத்துக் கொள், பின்னர் தண்ணீரில் சேர்க்கும் மருந்து சரக்கைக் கூறுகிறேன்.

சொல்வீர் கருப்புக் கட்டியுடன்
துய்ய கலையின் கொம்பிழைத்து
நல்வீர் அரைத்துக் குடிப்பீராய்
நாடும் பிரமியம் நீர்கடுப்பு
கல்வீர் கண்டு ஓடிவிடுங்
கான உடம்பு தேறிவரும்
அல்வீர் சிவனார் தன்னாணை
ஆரும் பிரமிய மாறிடுமே. 674

தண்ணீருடன் பனை வெல்லம், சேர்த்து கலைமான் கொம்பை இழைத்து மேற்படி மருந்தை சேர்த்து குடிக்க பிரமியம், நீரடைப்பு, இவைகள் குணமாகி உடல் தேரும், இது சிவனார் ஆணை.

வாழு மதுரை சுட்டெலும்பு
மறுகாற்பாசு தந்தமுமாம்
சூழும் வெள்ளி சிலையுமாந்
தூளா யொக்கப் பொடிசெய்து

நாளும் நறுநெய் தனிற்கொள்ள
நல்ல கடுப்புப் பிரமியம்போம்
கோளு மன்னை தேனாகிற்
கொள்ளுஞ் சுக்கில பிரமியம்போம் 675

சுட்ட எலும்பு, தந்தம், வெள்ளி, மனோசிலை, இவைகளை சுத்தித்து தூளாக பொடிசெய்து நெய்யில் உட்கொள்ள கடுப்பு பிரமியம் தீரும். மேற்படி பொடியைத் தேனில் உட்கொள்ள சுக்கில பிரமியம் தீரும்.

பருத்தி விரையிற் பருப்புடனே
பகரு மென்னா நுனிமஞ்சள்
பெருக்கத் தனியே வெச்சோடு
பிறகு காட்டிப் பொடிசெய்து
இருக்குஞ் சட்டி தனிலெண்ணெய்
இனிதா வார்த்துக் கோழிமுட்டை
மருக்கோள் சரக்குப் பொடி தூவி
வாழா கட்டு வடுப்பேற்றே. 676

பருத்தி விதை பருப்பு, நுனிமஞ்சள், இரண்டையும் தனித்தனியாக பொடித்து, சட்டியில் எண்ணெய் விட்டு கோழி முட்டையையும் சேர்த்து சரக்கு பொடிகளையும் சேர்த்து அடுப்பேற்று.

போற்று தேங்காய் பால்வார்த்து
பிறகு தீயாமல் வறுத்து
காற்று படாமற் காயத்திற்
கட்டி வைத்து நாற்கழஞ்சி
பாற்று தின்ன நீர்க்கடுப்பு
பகரும் பிரமியங் கிரிச மெல்லாம்
சேற்று விதுகள் ஓடிவிடுஞ்
சிவனார் ஆணை உண்மையிதே. 677

அடுப்பேற்றி தேங்காய் பாலும் கூட்டி தீயாமல் வறுத்திடு பின் காற்று படாமல் வைத்து நாற்கழஞ்சி அளவு உட்கொள்ள நீர்க்கடுப்பு, பிரமியம், கிரிச்சம், இவைகள் தீரும். சிவனாராணை இது பொய்யாகாது.

வில்வாதி லேகியம்

வில்வாதி லேகியந் தன்னை
மிக்க இனிதாய் சொல்லச்
சொல்வோம் ஏலம் திரிகடுகு
சீறுங் கிராம்பு திரிபாலை
மல்லாந் திப்பிலி யின்மூலம்
வளருங் கோஷ்டம் கொத்தமல்லி
நல்லாஞ் சீரம் நாகப்பூ
நவிலும் இலவங்கப் பத்திரியே. 678

வில்வாதி லேகியத்தைக் கூறுகிறேன், ஏலம், திரிகடுகு, கிராம்பு, திரிபலை, திப்பிலி மூலம், கோஷ்டம், கொத்துமல்லி, சீரகம், சிறுநாகப்பூ லவங்கப்பத்திரி, இவைகள் வகைக்கு ஒருபலம்.

நாறுஞ் சரக்கு ஒருபலமாம்
நவிலும் கொடிவேல் பலமிரண்டு
தேறுமே இதனை இடித்தெடுத்துத்
தெளிவாய்ச் சூரணம் பண்ணி
மீறும் வில்வப் பத்திரிவேர்
மிகவே பலமும் முப்பதுவாய்
கூறும் படியே இடித்தெடுத்துக்
கொண்டு தூணி நீர்வாரே. 679

கொடிவேலிவேர் இரண்டு பலம், இவைகளை இடித்து சூரணம், செய்திடு, வில்வப் பத்திரிவேர் இவைகள் முப்பது பலம் எடுத்து இடித்து தூணி அளவு நீரில் போட்டுக் கொண்டு அடுப்பேற்று.

கொண்டே தூணி நீரதனைக்
குருணி யாகக் காய்ச்சிவடித்து
உண்டே சர்க்கரைக் கியாழத்தில்
பலமு மொக்க வேகரைத்து
சென்டே செப்புக்கரண்டிகொண்டு
துழாவிக் காச்சித் தன்பதமாய்
நன்றாய் சூரணப் பொடியை
நல்ல பாகில் துழாவுவதே. 680

அடுப்பேற்றி தூணிநீரை, குருணியாக சுண்டக்காய்ச்சி வடித்துக்கொள், வடித்த கியாழத்தில் அளவுடன் சர்க்கரை சேர்த்து கரைத்து செப்புக்கரண்டி கொண்டு துழாவிக் காய்ச்சி பாகுபதம் செய்து மேற்படி சூரணத்தை பாகில் சேர்த்துப் பதமாக கிளறிக்கொள்.

தூவிக் கிண்டித் தீயாமல்
துழாவி நாழி நெய்விட்டு
தாவும் லேகிய பதத்திற்கு
சரியாய்த் தின முக்கழஞ்சிகொள்ள
மேவும் பாண்டு ரோகமுடன்
மிக்க இள காமாலைமுதல்
கூவுஞ் சோகை தாபமந்தங்
குலவும் விக்கல் மாறிடுமே. 681

மேற்படி கிளரும் போது தீயாமல் பார்த்துக் கொள்ள வேண்டும், நாழி அளவு நெய்விட்டு லேகியமாக கிளறிக்கொண்டு தினமும் மூன்று கழஞ்சி அளவு உட்கொள்ள, பாண்டு, காமாலை, சோகை, தாகம், விக்கல், இவைகள் குணமாகும்

மாறும் பயித்தியம் வாராது
வலமாஞ் சுத்தியும் நன்றாகும்
கூறும் உடம்பு ஊதுதல் போம்
கொள்ளு மதி சாரமும்போகும்
நாறும் உடம்பு மணம் வீசும்
நல்ல மெய்யிற் சுரந்தீரும்
தேறு மருந்து தின்பீராய்
சிவனார் ஆணை மாற்றிடுமே. 682

மேற்படி லேகியத்தால் பயித்தியம், உடம்பு ஊதல், அதிசாரம், உடல் நாற்றம், சுரம், இவைகள் தீரும், சிவனா ராணையால் இது பொய்யாகாது.

வாதம் அடக்கிப் பெருநொச்சி
மா விலங்கை கரத்தோடி
சேதம் அணுகாச் சாரணைவேர்
செய்ய ரவிர் வேரிலையுடனே
நாத முள்ளோர் ஆயிலியம்
நல்ல பட்டை விராலியின்வேர்
தூத மெருக்க மிலையுடனே
துகளுஞ் சிவனார் வேம்பு அழிஞ்சி. 683

வாதமடக்கி, பெருநொச்சி, மாவிலிங்கம், கரந்தை, சாரணைவேர், சாரணை இலை, ஆயிலியம்பட்டை, விராலிவேர், எருக்கனிலை, சிவனார்வேம்பு, அழிஞ்சில், மற்றும்,

கொள்ளுங் கொத்தான் கொன்னையின்வேர்
கொள்ளுந் திராய்வேர் கோவையிலை
கொள்ளும் புங்க வேரிலையாங்
கூட்டுந் திலகம் பட்டதனை
விள்ளும் வேலிப் பருத்தியின்வேர்
மேவுங் குறிஞ்சி பிளிநடலை
தெள்ளுங் குரோட்டை கிழங்குபண்டி
சேருங் கோவைக் கிழங்குடனே. 684

கொத்தான், கொன்றைவேர், திராய் வேர், புங்கம் வேர், இலை, கோவை இலை, வேலிப்பருத்திவேர், குறிஞ்சி, புளிநரளை, குரோட்டை கிழங்கு, கோவைக் கிழங்கு.

துள்ளுங் கொல்லன் கோவைக்கிழங்கு
துகளு முருங்கை கள்ளின் வேர்
கள்ளே பொதிந்த மொழிமாதே
கருதுங் கோவை இலையுடன்
கொள்ளே வெவ்வே றொவ்வொன்று
கூட்டும் பலமொன் றரையாக
துள்ளே நொச்சி வேரிலையைத்
தூளாய் இடித்துக் கூட்டீரே. 685

கொல்லங் கோவைக் கிழங்கு, முருங்கை, கள்ளிவேர் வகைக்கு பலம் ஒன்றரை நொச்சிவேர் இலை இவைகளை தூளாக இடித்துக்கொள்.

சிரிய குருஞ்சி செம்மணத்தி
சேருங் காட்டு மல்லிகையும்
அரியும் நல்ல கல்மிளகு
ஆன மயிலின் குருந்தின் வேர்
குரியா மூமத் திலை வேருங்
கூறும் விழி களப்பனைவேர்
பரியும் நன்னா ரிவையெல்லாம்
பதராது இடித்தோர் அளவுகொள்ளே. 686

சிறு குறிஞ்சான், செம்மணத்தி, காட்டு மல்லிகை, நல்ல மிளகு, மயில் குருத்து வேர், ஊமத்தின் இலை, பனைவேர், நன்னாரி இவைகளை சமமாக எடுத்து இடித்து தூள் செய்து வைத்துக் கொள்.

கொள்ளே முந்தி இடித்துவைத்துக்
கூறு மருந்து இருகூறும்
உள்ளே இதனை ஒன்றாக்கி
உதக மரைக்கால் பத்துவிட்டு
துள்ளே வெச் செனவுபண்ணி
சொல்லு மேழு நாளூறி
கள்ளே பொதிந்த மொழிமாதே
காச்சி மூன்று கூர்க்கேளே. 687

முன்பு இடித்த தூளும் மேற்படி தூளும் ஒன்றாக கலந்திடு, இவைகளை ஏழுநாள் நீரில் ஊற வைத்து காய்ச்சி வடித்துக் கொள்.

தேடும் வேம்பு மாமணக்குத்
தெரிந்த எண்ணெய் சரிச்சரியாய்
கூடும் படியே யொன்றாக்கிக்
குலவுங் கியாழந் தனிலூற்றி
நாடுஞ் சரக்குக் கர்க்கடகம்
நர்ச்சீ ரகமுங் கடுக்காயும்
வாடுங் கருஞ்சீர் வசம்புள்ளி
வளரு முழுவால் மிளகுசுக்கே. 688

வேம்பு, ஆமணக்கு, இவைகளின் எண்ணெய் சரி அளவு மேற்படி கியாழத்தில் கலந்து இத்துடன் சேர்க்கும் சரக்குகளானவை, கர்க்கடகம், சீரகம், கடுக்காய்,, கருஞ்சீரகம், வசம்பு, உள்ளி, வால்மிளகு, சுக்கு.

இளகிய யிந்துப்பூவு
மிலவங்கந் தான் குங்கிலியம்

அளகிய சதையின் குப்பை
ஆன கடுகு ரோகணியும்
பளகிய பீனாரியுந்தான்
பகருஞ் சாதிக் காயுடனே
களிரும் வெளுத்தப் பிசின்கழற்சி
கவறும் பருப்புத் தேடீரே. 689

மேற்படி, சரக்குடன், இந்துப்பு, லவங்கம், குங்கிலியம், சதகுப்பை, கடுகு ரோகணி, பீநாறி, சாதிக்காய், வெளுத்தப் பிசின், கழற்சிப் பருப்பு மற்றும்.

தேடும் காரம் பூர்வசுவாஞ்
செய்யக் கடுகு நேர்வாளம்
கூடும் அபினும் ஒவ்வொன்றைக்
கொள்ளுஞ் சரக்கோர் ஆர்கழஞ்சி
நாடுஞ் சரக்கெல்லாம் இடித்து
நல்குங் கியாழந் தனிலிட்டு
கோடு முலையே ஒருநாள்வை
கொள்ளு மறுநாள் அரையீரே. 690

கடுகு, நேர்வாளம், அபின் மேற்படி சரக்குகள் வகைக்கு கழஞ்சி எடை எடுத்து இடித்து தூள் செய்து மேற்படி கியாழத்தில் இட்டு வைத்திருக்க வேண்டும்.

அரைத்துக் கரையீர்க் கியாழத்தில்
அன்பாய் ஏழு நாளூறி
உரைத்து யெண்ணெய் யிளகுபதம்
உடனே காய்ச்சி வடித்தெடுத்து
சிரத்திற் பூசி மூன்றாநாள்
சென்ற பிறகு முழுகுவீராய்
பெருத்த எண்ணெய் தின்பீராய்
பிடிப்புந் திமிரும் வாதமும்போம். 691

மேற்படி சரக்குகளுடன் ஏழுநாள் ஊறவைத்து எண்ணெய் கலந்து பதமாக காய்ச்சிவடித்து கொள்ளவேண்டும், இந்த எண்ணெயை தேய்த்து தலைமுழுக உட்கொள்ள, பிடிப்பு, திமிர், வாதம் இவைகள் தீரும்.

அபானவாயுவின் குணம்

மங்கை தனக்குத் திருமதலை
வயறறில் இருந்து வளர்நாளில்
திங்கள் மூன்று நாலஞ்சாய்
சேருந் திங்கள் ஈரஞ்சில்
பொங்கு முகந்தனில் வரசூல்
பொருமிப் பரந்து திரண்டேரும்
அங்கு சொன்னோ மடிவயிற்றில்
அடக்கும் அபான வாய்வதுவே. 692

பெண்களின் கர்ப்ப காலத்தில் சூல் வளர்வதால் வாய்வு திரண்டு பொருமியபடி ஓடிக் கொண்டிருக்கும் அப்படி வாய்வு நகரும் காலத்தில்.

அடரு மாசந் தாகமுடன்
ஆன வெங்கா யுள்ளுகொள்ளும்
துடரு மோதங்க ளஞ்சியஞ்சு
துய்ய உள்ளிப் பூடுபத்து
படரு முப்புக் கரைத்தெடுத்து
பகருஞ் சரக்குத் தனிவார்த்து
தடரு முலையாய் காய்ச்சிறக்கித்
தரைத்து மாவாய்க் கொள்ளீரே. 693

அடங்கா தாகமாக உள்சூடு காணப்படும் வேளையில் ஐந்து கழஞ்சி உப்பைக் கரைத்த நீரிலிட்டு காய்ச்சி அரைத்து, கழஞ்சு எடை பத்து வெள்ளைப்பூண்டும்.

கொள்ளும் பச்சைத் தேனதனில்
குலவும் வெருகடி பிரமாணம்
உள்ளே கொள்ளும் மென்னேரம்
உகரம் அதனில் வாய்வகலும்
கள்ளே பொதிந்த மொழிமாதே
காஞ்ச தண்ணீர் பருமாரும்
எள்ளே யாலுங் குளுந்தநீரை
யெடுத்துப்பாரு மாவென்றாம். 694

உட்கொள்ளும் போது தேனைக் கலந்து வெருகடி பிரமாணம் உட்கொள்ள வேண்டும். வயிற்றிலுள்ள வாய்வு நீங்கும். சுடுதண்ணீர் அருந்த வேண்டும் குளிர்ந்தநீர் ஆகாது.

அண்டவாத உப்பலுக்கு

அன்ட வாதம் பலவாதம்
அனலில் வாத மதுதனக்கு
துண்ட மதுசேர் நுதலாளே
சொன்னோஞ் சித்தா மணக்கெண்ணெய்
கொண்ட கழஞ்சி இருநாழி
கோது தள்ளி மணியெடுத்து
செண்டுஞ் சித்த வரைக்கிழங்கு
சேன் மூலி கொடுவேலி. 695

அண்ட.வாதம் உள்பட பலவாதம், அனல் வாதம் இவைகட்கு சித்தாமணக்கு எண்ணெய். நுரையைத் தள்ளி விட்டு மணி போல் இரு நாழிஎடுத்து அதில் சிற்றவரைக்கிழங்கு சேனமூலி, கொடுவேலி.

கொடிய மருந்து அரைத்தெடுத்துக்
கொள்ளீர் பாக்கின் அளவாக
கடிய கலாம்பூர் கார்வரிசி
கருதும் வெளுத்தப் பிசின்வசம்பூ
படியில் வளரு மெள்ளுள்ளிப்
பகருங் கருஞ்சீர் தேவதாரம்
வடிசேர் சிவந்த சந்தனமும்
வெளுத்தப் பிராய்தேடேன். 696

மேற்படி சரக்குகளை அரைத்து சிற்றாமணக்கெண்ணெயில் விட்டு கலந்து பாக்களவு உட்கொள்ள வேண்டும். கார் அரிசி, வெள்ளைப்பிசின். வசம்பு, வெள்ளுள்ளி, கருஞ் சீரகம், தேவதாரம், செஞ்சந்தனம் பிராய்,

தேடாய் சரக்கு வோரொன்று
சிறப்பாய்க் கொள்ளீர் இருகழஞ்சு
நாடாய் அரைத்து எண்ணெய்தனில்
நல்குங் கியாழந் தனில் விட்டு.
ஈடாய் எரித்து மெழுகுபதம்
இறக்கிக் கரண்டி காலமேதான்
கோடா முலையே கொள்வீராய்க்
குடிபோம் அண்ட வாதமுமே. 697

மேற்படி சரக்குகளை இருகழஞ்சி எடுத்து தூள் செய்து கியாழமிட்டு அத்துடன் எண்ணெய் கலந்து மெழுகுபதமாக எரித்து இறக்கி கரண்டி அளவு வீதம் உட்கொள்ள வேண்டும், ஒரு மண்டலம் இவ்வாறு உட்கொள்ள வாதம் தீரும்.

வேறு

வல்லதொரு மாவிலங்கையிலை வேர்பட்டை
வளபலமு மிருதேக்கு வகுத்துக்கூட்டி
நல்லதொரு கீழ்வேர்தான் பலமேமூன்று
நயமுடைய வேலிநற் பருத்தியின்வேர்
சொல்லவே பலமூன்று பெருங்குருத்
துய்யதொரு சிவதையுடன் அறுவாய்வேரும்
இல்லமுரு கொடுவேலிக் கரண்டை நொச்சி
இயல்வாத மடக்கி அமுக்கரா வேர்தேடே. 698

மாவிலிங்கம் இலை, வேர், பட்டை, சிறு தேக்கு இவைகள் வகைக்கு ஒருபலம், கூட்டி கீழ்க்காய்நெல்லிவேர்மூன்று பலம், வேலிருத்தி வேர் மூன்று பலம். பெருங்குருந்தமவேர், சிவதைவேர், அறுவாய்வேர், கொடிவேலி, நொச்சி வாத மடக்கி, அமுறக்கிறாவேர்.

தேடிய வேரோ ரெண்டு பலமுமூன்று
சிறக்கவே கொத்தி பிடித்தொன்ற தாக்கி
நாடியதோர் புனல்விட்டுப் பாதியாக
நயமுடனே காச்சி இதைக் கியாழமாக்கி
கூடியதோர் பெருங்காயந் திப்பிலியும்
குணமுடைய வெண்பிசின் கடுகுதானும்
பாடியதோர் வசம்புசுக்கு மிளகுவுள்ளி
பகர்கோஷ்டம் அரத்தை கார்போகவரிசி. 699

மேற்படி வேர்கள் வகைக்கு மூன்று பலம். இவைகளை இடித்து நீரிலிட்டு பாதியாக காய்ச்சி, கியாழமாக்கி, பெருங்காயம், திப்பிலி, வெண்பிசின், கடுகு, வசம்பு, சுக்கு, மிளகு, உள்ளி, கோஷ்டம், அரத்தை, கார்போக வரிசி,

வேறு

அரிய கடுகு ரோகிணியும்
ஆன வாலுளுவை உடன்
புரியுங் கருஞ்சீர் நற்சீரம்
போத வெவ்வே ரொருபிடியாம்
தெரியுஞ் சரக்கெல்லாம் அரைத்துச்
சேரவக் கியாழந் தனில் வார்த்துச்
சரியாய் வேம்பின் எண்ணெய்விட்டு
தக்க பதமாய் வடியீரே. 70C

மேற்படி பொருட்களுடன் கடுகுரோகணி, வாலுளுவை அரிசி, கருஞ் சீரகம் நற்சீரகம், இவைகளை வகைக்கு ஒரு கைப்பிடி அளவு எடுத்து அரைத்து மேற்படி கியாழத்தில் இட்டு வேப்ப எண்ணெய் சேர்த்து பதமாக வடித்துக் கொள்.

வடித்தே யெண்ணெய் சிரசில் வைத்து
வளரு மெய்யில் தான்பூசி
குடிப்பீர் மூன்று காசிடைதான்
குத்துப் பிரவீச் சுட்குத்து
துடிக்குங் கைகால் முடங்கியதுஞ்
சொல்லுஞ் சன்னி பதினெட்டும்
நொடிக்குள் இதுகள் தான்தீரும்
நுகரு மாவிலங்கை எண்ணெய். 701

வடித்த எண்ணெயை சிரசில் வைத்து உடம்பில் பூசி, மூன்று காசு எடை எண்ணெயை உட்கொள்ள வேண்டும். குத்து, பிரவீச்சு, உட்குத்து, கைகால் முடக்கம், சன்னி, இவைகள் தீரும், மாவிலிங்க எண்ணெயை கூறுகிறேன்,

திருந்தியதோர் மாவிலங்கை வேரின்பட்டை
செப்புபெரு மரப்பட்டை சித்திரமூலம்
பொருந்தியதோர் முருங்கைவேர் இதுகள்நாலும்
பொட்டெனவே வெவ்வேறு பலம்பத்தாக்கி

வரும்படியே தரித்திடித்து மிடாவிற்போட்டு
வாழ்மரக்கால் நாலுகொண்டு வார்த்தேதண்ணீர்
தரும்படியே காய்ச்சியொரு மரக்காலாக்கி
தக்கதொரு வேப்பெண்ணெய் சரியாம்நாழி. 702

மாவிலிங்க வேர்பட்டை, பெருமரபட்டை, சித்திரமூலப் பட்டை, முருங்கை வேர், இவைகள் வகைக்கு பத்துபலம் எடுத்து இடித்து ஒருபாண்டத்திலிட்டு நான்கு மரக்கால் தண்ணீர் விட்டு அடுப்பேற்றி ஒரு மரக்காலாக சுண்டவைத்து வேப்ப எண்ணெய் நாழி அளவு கலந்து கொள்,

வேறு

நாழி எண்ணெய் தான்விட்டு
நல்ல மருந்து கொடுவேலி
தூழி நொச்சி அரமுரியுந்
துய்ய குதிரை வாலியொடு
வாழுங் கரண்டை சிவதையுடன்
வளரு முத்த மோரெண்டு
ஆழும் விளாங்காய் தன்னளவு
அரைத்துக் கரையீர்க் கியாழத்தில். 703

மேற்படி எண்ணெயுடன் கொடிவேலி, நொச்சி, அரிமுரிவேர், குதிரை வாலி, சிவதை, முத்தக்காசு இவைகளை அரைந்து விளாங் காயளவு மேற்படி கியாழத்துடன் சேர்த்திடு.

கியாழத்திற் பொன் மெழுகு
காச்சி வடித்துக் கோதுதள்ளி
கயாழந் தள்ளித் தான்விட்டுக்
கடையின் மருந்துக் கர்க்கடகம்
வியாழமான வில்வங்க
மேவும் வசம்பு சதகுப்பை
தயாழ சுக்கு மாஞ்சிலொடு
தக்க பச்சைச் சோளமுடன். 704

சேர்த்த கியாழத்தை மெழுகு பதமாக காய்ச்சி வடித்து, கற்கடகம் மாவிலிங்கம், வசம்பு, சதகுப்பை, சுக்கு, சடாமாஞ்சில், பச்சை சோளம் மற்றும்.

தக்க திப்பிலி சிறுதேக்கு
சரியாய் மிளகு சித்தரத்தை
தொக்க விந்து வாலுளுவை
சுகமாங் கடுக்காய் குராசானி
மிக்க வுள்ளி வோரெண்டு
மேவுங் கழஞ்சிதான் கொண்டு
லக்கமாக அரைத் தெடுத்து
வார்க்குங் கியாழந் தனில்வாரேன். 705

திப்பிலி, சிறுதேக்கு, மிளகு, சித்தரத்தை, வாலுளுவை, கடுக்காய், குரோசானி, உள்ளி, இவைகளை கழஞ்சி எடை எடுத்து அரைத்து மேற்படி காய்ச்சியதுடன் சேர்த்திடு.

வாராய் நல்ல சந்தனந்தான்
வாங்கும் பலந்தான் ஒன்றுகொள்ளு
சீராய் வேம்பு யெள்ளெண்ணெய்
சிறக்க வெவ்வேர் சரிசரியாய்
நேராய் விட்டுக் காச்சியதை
நிதமும் முழுகி உடற்பூச
தீரா விடங்கள் பிரமியங்கள்
தீரு மரண வலிவாதம். 706

நல்லசந்தனத்தை உரைத்து ஒருபலம் அளவு உட்கொண்டு வேம்பு, எண்ணெய், எள் எண்ணெய், இவைகளை சரி அளவு வெவ்வேறாக மேற்படி கியாழத்துடன் சரியாக கூட்டி காய்ச்சி வடித்து தினமும் உடலில் பூசி தலைமுழுக தீராத பிரமியம், மரணவலி வாதம்; மற்றும்.

வாத சன்னி உட்குத்து
வருந்துங் கைகால் முடங்கியதும்
பேத மாக பற்கிட்டுப்
பிறக்குந் தொகுதி வாதமுடன்
காத வழிதான் விட்டோடுங்
கடிய எண்ணெய் பூசிடுகில்
நாதன் ஆணை உண்மைசொன்னோம்
நல்ல மாவிலிங்கை எண்ணெய். 707

வாதசன்னி, உட்குத்து, கைகால் முடக்கம் வாதம், இவைகள் நீங்கும், இந்த மாவிலிங்கம் எண்ணெயில் மேற்படி நோய்கள் நீங்கும்.

வல்ல சூதஞ் சீனப்பா
நாளும் நரர்தான் திண்ணவதை
வல்ல பத்திய முறிந்து
வருத்த முண்டாம் உடம்பெங்கும்
அல்லல் அறவே தான்கட்டி
அடுத்தே முடங்கி கிடந்தவர்க்கு
செல்லு மருந்து பரிகாரஞ்
செய்யுங் குணங்கேள் தேன்மொழியே. 708

சூதத்தை பத்தியமில்லாமல் உட்கொண்டவர்கட்கு, உடல் எல்லாம் வருத்த முண்டாகும், கட்டி, முடக்கம், இவைகள் உண்டாகும், அதற்கு முறிவு பரிகாரம் சொல்கிறேன்.

மொழியுஞ் சூதம் நாலரையா
    முன்னம் விராகன் இடைதானா
பொழியும் இயமம் முப்பதுவாம்
    போதப் பணவிடை தானாகும்
தெளியும் பொன்னின் அரிதாரஞ்
    சேர்ந்தே பணவிடை பதிமூன்றாம்
களியுங் க்ருத்த குங்கிலியங்
    கனத்த பணவிடை ஒன்பதுவாம். 709

சூதம் நாலரை விராகன் எடை, உப்பு பணவெடை, பொன்னரிதாரம் பதிமூன்று பணவெடை, குங்கிலியம் ஒன்பது பணவெடை, மற்றும்.

கனத்த கடுகு பணவிடையேழ்
    கடிய மிளகு பனிரெண்டு
எனத்த வெருக்கங் கரிதானு
    மிதுவும் விராகன் இடையரையாம்
தனத்த ஈயந் தானுருக்கி
    தக்க விரத மதினில்விட்டு
பனத்த அம்மி தனில்வைத்து
    பாளை இலைச்சார் விட்டரையீர். 710

கடுகு ஏழு பணஎடை, மிளகு பனிரெண்டு பணஎடை, எருக்கன்கரி அரை விராகனெடை, ஈயத்தை உருக்கி மேற்படி ரசத்துடன் சேர்த்து பாளை இலைச் சாறுவிட்டு அரைத்திடு.

விட்டே மிளகு பதமரைத்து
    மிகவே ஏழு உண்டைசெய்து
தொட்ட புகைதான் விடுமுந்தி
    துலைபா எட்டு நாளெண்ண
கட்டும் பூசினியி னுடகாய்தான்
    கறிக்கு கூட்டி யிடு
நட்ட மில்லாப் பூசனிக்காய்
    நல்ல சாறு உச்சியிலே. 711

மேற்படி சரக்குகளை சேர்த்து அரைத்து ஏழு உருண்டை செய்து புகை போட்டு எட்டு நாள் காட்ட வேண்டும். பூசனி சாற்றை கூட்டிக் கொள்ளவும். பூசணிக்காய் சாற்றை உச்சியில் தட வ வேண்டும்.

உச்சி உள்ளங் கால்மட்டு
    மொக்கத் துவாலை தான்போடும்
வச்சே ஒன்பது நாளைக்கு
    வாகாய் அடுப்பில் தானிறுத்து

நிச்சை யமாய்க் குழிகெல்லி
நேராய் புளியம் பொருக்கிட்டு
மெச்சந் தணலை உண்டாக்கி
மேவும் உண்டை பாதியிடே. 712

உச்சியிலிருந்து உள்ளங்கால் வரை தடவி, அடுப்பில் புளியம் பொருக்கையிட்டு தணல் உண்டாக்கி பாதி உருண்டையை தணலில் இடு.

பாதி உண்டை தான்போட்டு
பகரும் புகையை விடுவீரே
நீதி யுடனே யந்தட்டி
நேராய் ஏழு நாள்புகையும்
கோது சொரியுங் குழலாளே
கொள்ளும் பூசினிக் காயை
ஓதும் புளிக்கருணை முருங்கை
உற்ற வழுதலைக் கத்திரியே. 713

தணலில் இட்டு புகையை முகர்ந்து விடவேண்டும், இவ்வாறு ஏழுநாள் செய்ய வேண்டும், பூசனி, கருணைக் கிழங்கு, முருங்கை, வழுதலை, கத்தரி, மற்றும்.

கத்தரிக்காய் புளி யரணை
கடிய கீரை தான்புளியாம்
நித்தந் திராவும் புளிச்சாராம்
நேரா மோரு மீருள்ளி
சுத்தப் படவே தான்கூட்டுந்
துய்ய நீர்சோ றுண்பீரே
அத்த நாளை யொன்பதுநாள்
ஆன தண்ணியில் வையும். 714

புளியரணைக்கீரை, புளிச்சகீரை ஈருள்ளி இவைகளை கூட்டலாம், தூய்மையான நீருடன் அன்னமுட் கொள்ள வேண்டும், ஒன்பது நாளிவ்வாறு செய்து விட்டு தண்ணீர் விடவேண்டும்.

வையும் ஏழு நாளைக்கு
வாகாய் தண்ணீர் தன்னிலேதான்
தொய்யும் எட்டா நாளுடம்பு
தோத்த மாக வாறிவிடும்
நையும் ஒன்பதா நாளில்
நல்லா மணக்கு யெண்ணெய்விட்டு
பைய முழுகி வருவீராய்ப்
பகரும் ஆறு மாதமட்டும். 715

ஏழுநாள் இவ்வாறு தண்ணீர் விடவேண்டும், எட்டாவது நாள் ஆமணக்கு எண்ணைவிட்டு தலை முழுகிவர வேண்டும். இவ்வகையில் ஆறுமாதம் செய்ய வேண்டும்.

ஆறு மாதம் நல்லெண்ணெய்
ஆன குளமீன் ஆகாது
கூறுந் தாம தான்கக்க
கொள்ளீர் பொன்னாங்காணி
பூறு முச்சி உள்ளங்கால்
ஒக்கத் துவாலை தான்போடும்
தேறு நாசா மரைக்கொத்து
திறமாய் உள்ளே கொள்வீரே. 716

நல்லெண்ணை மீன் ஆகாது, பொன்னாங்கண்ணிச்சார் உட்கொள்ள வேண்டும், உச்சி முதல் உள்ளங்கால் வரை மேற்படி சாற்றால் துவாலை விடவேண்டும்.

உள்ளே சாறுந தான்குடித்து
உறத்த ஆட்டுத் தோலதனில்
மெள்ள வெயிலில் தானிருக்க
விரும்பு முதரங் கக்கிவிழும்
கொள்ளு மிரண்டு நாள்துவாலை
குணமாய்ப் போகுங் குறிப்புடனே
துள்ளுஞ் சாறு உட்கொள்ளச்
சொன்னோம் கேளுந் தோகையரே. 717

மேற்படி வகையில் செய்யவும், ஆட்டு தோல் கொண்டு வெய்யிலிலிருக்க வேண்டும். இவ்வாறு இரண்டுநாள் செய்ய குணமாகும்.

மண்டை வியாதி யின்குணத்தை
மானே இன்னந் தான்கேளாய்
கண்ட படியோ விக்கருதிக்
காலுஞ் சொரிய நோகாது
முண்ட மதிசேர் முகம்நோகு
மூளை சுவரு மயிர்திரையும்
செண்டே தலைக் குள்ளேதான்
சிறுகச் சத்தமாய் இருக்கும். 718

மண்டை வியாதியின் குணத்தைக் கூறுகிறேன். சொறிந்து கொள்ள நோகாது. முகத்தில் வலி உண்டாகும். மூளை சுவடும். மயிர் கலைந்து போகும். தலைக்குள் சின்ன சத்தமுண்டாகும்.

இருக்கு முகத்திலே நரம்பு
எதிர்த்தே தெறிக்கு மூச்சிடிக்கும்
பெருக்கும் நாவு தான்வரளும்
பேசொண்ணாது பல் கடுக்கும்
தொருக்கும் பிடரி தான்கடுத்து
தூய நாசிற் றமர்விழுந்து
பருத்திக் கொட்டை திரித்தாப்போல்
பார்க்க வீழுஞ் சலந்தெரிக்கும் 719

முகத்தில் உள்ள நரம்புகள் எதிர்க்கும், மூச்சு இறைக்கும், நாக்கு வறட்சி உண்டாகும், பல்கடுப்பு உண்டாகும், பிடரி கடுப்பு, மூக்கிலிருந்து பருத்திக் கொட்டை போல் சளிவிழும்.

விழுமே ரெத்தம் நாவாலே
மிகவும் நாரி நெஞ்சுகள் நோவும்
எழுமே உடலும் வரண்டுவரும்
எங்குஞ் சிருக்க கடுப்புண்டாம்
கொழுமே இதற்கு மருந்திதென்ன
கூறக் கேளும் கோதையரே
கழுமே கருவேல் பட்டையுடன்
கையான் தகரை கார்பூளை. 720

நாக்கில் கெட்ட நாற்றமுடைய ரத்தம் வரும், நெஞ்சுப் பகுதியில் வலி உண்டாகும், உடல்வறட்சி உண்டாகும், உடலில் கடுப்பு உண்டாகும், இதற்கு மருந்து கூறுகிறேன். கருவேலன்பட்டை, கையாந்தகரை, சிறுபூளை.

காரே பூளைதன் சாரெடுத்துக்
கடையின் மருந்து இலவங்கம்
பேரே ஏலம் அதிமதுரம்
பெருகுங் கோஷ்டம் செண்பகப்பூ
சேரே அரத்தை சாதிக்காய்
சிறந்த தான்றி சிறுதேக்கும்
ஊரே சாஸ்திர வேதிரெண்டு
உரைக்கும் நாட் கழஞ்சிகொள்ளே. 721

மேற்படி மூன்று வகைகளில் சாறு எடுத்துக் கொள்வாயாக, லவங்கம், ஏலம், அதிமதுரம், கோஷ்டம், செண்பகப் பூ, அரத்தை, சாதிக்காய், தான்றி, சிறுதேக்கு, சாஸ்திரவேதி, வகைக்கு நான்கு கழஞ்சி இவைகளை எடுத்துக்கொள்.

கொள்ளே சரக்கு தானரைத்துக்
கூறும் எண்ணெய் நெய்நாழி
உள்ளே கூட்டிக் காச்சியதை
உச்சி தனிலே வைப்பீராய்
எள்ளே நாசிக் கிரிட்சையிட
இலைச்சார் கூட்டி தானெரித்து
பிள்ளே நாசி தன்னிலிட
பெருகும் வியாதி மாறிடுமே. 722

சரக்குகளை அரைத்து சாறுடன் கூட்டி எண்ணெய் நாழி அளவு கூட்டி பதமாகக் காய்ச்சி வடித்து உச்சந் தலையில் தேய்க்க வேண்டும், மூக்குறட்டை இலைச்சாறு மேற்படி மருந்துடன் கூட்டி எரித்து நாசியிலிட மேற்படி மண்டை நோய் அதனால் ஏற்படும் தீமைகள் குணமாகும்.

கைகாலெரிவுக்கு எண்ணெய்

சீதே செங்கழுநீர் சீந்தித்தண்டு
சிறக்கஓவ்வோர் பலமிரண்டு
மாதே இடித்து விருநாழி
வளருந் தண்ணீர் தனிற் காய்ச்சி
பேதை நறுநெய் நல்லெண்ணெய்
பெருகுங் கியாழந் தனிலிட்டு
கோதே மதுரங் கோஷ்ட்டமோடு
குலவு மாஞ்சில் வில்வங்கம். 723

சீதேவி செங்கழுநீர், சீந்தில்தண்டு, இரண்டும இரண்டு பலம் எடுத்து இடித்து இருநாழி அளவு நீரிலிட்டு காய்ச்சி நெய், நல்லெண்ணெய் கியாழத்துடன் சேர்த்து அதிமதுரம் கோஷ்டம் சடாமாஞ்சில், வில்வம்மற்றும்,

குலவும் ஏலம் குராசிலையுங்
கொடிய மஞ்சள் நறும்பிசினும்
இலகு நெல்லி சந்தனமும்
விலாமிச்சை வேர் இருவேலி
அலரும் இவையோர் இருகழஞ்சி
அரைத்துக் கரைத்து வடித்தெடுத்து
உலகுள் ளோர்கள் தான்பொருந்தி
உள்ளுங் கழஞ்சி கொள்வீரே. 724

ஏலம், குரோசிலை, மஞ்சள், வெண்பிசின், நெல்லி, சந்தனம், விலாமிச்சம்வேர், இருவேலி இவைகள் வகைக்கு இரண்டு கழஞ்சி சேர்த்து அரைத்து மேற்படி கியாழத்துடன் சேர்த்து பதமாக காய்ச்சி வடித்துக்கொள், கழஞ்சி அளவு உட்கொள்ள வேண்டும்.

கையாந் தகரை நெல்லியொடு
கருதும் இளநீர் ஆவின்பால்
மெய்யாஞ் சீந்தில் தண்டுடனே
மேவுஞ் சாறு விருநாழி
தொய்யா எண்ணெய் இருநாழி
சுகமாங் கோஷ்ட்டங் கைச்சோலம்
பொய்யா மதுரஞ் சந்தனமும்
பொருந்து நாகம் பூவேலம். 725

கையாந்தகரை, நெல்லி, இளநீர், ஆவின்பால், சீந்தில் தண்டு, இவைகளின் சாறு இருநாழி அளவு, எண்ணெய் இரு நாழி அளவு, கோஷ்டம், கச்சோலம், அதிமதுரம், சந்தனம், சிறுநாகப்பூ, ஏலம் மற்றும்.

பொருந்துங் கிராம்பு செண்பகப்பூ
போத வளரு முத்தமுடன்
திருந்துமே தாமரை வளையஞ்
சேரவரைத்து கரைத்து வடித்
தருந்தான் முழுகி வருவீராய்
தலையில் வாச்சி கண்ணோவு
இருந்த எரிப்பு எல்லாந்தீரும்
ரெட்டி னாதி எண்ணெயிதே. 726

கிராம்பு, செண்பகப்பூ, தாமரை, வளையம் முத்தக்காசு இவைகளை அரைத்து சேர்த்து வடித்துக் கொண்டு தலை முழுக தலைவாச்சி, கண்ணோய், எரிப்பு இவைகள் தீரும்.

துத்தமை கண்ணுக்குமை

துத்தந் தூசி வெங்கலத்திற்
துய்ய கடுக்காய் உப்புடனே
உத்த திப்பிலி செம்மிளம்பாக்கு
உதவு மருந்து வெழுகழஞ்சு
தத்தே தேசிப் பழச்சாற்றால்
தனியே ஏழு மருந்தரைத்து
மெத்தச் சீவி தனித்தடவி
விரும்பும் நிழலில் தானுலர்த்தே. 727

துத்தம், தூசு வெங்கலம், கடுக்காய், திப்பிலி, செம்மிளம் பாக்கு உதவும் மருந்து இவைகள் ஏழு கழஞ்சி எடுத்து பழச்சாற்றில் அரைத்து துணியில் தடவி நிழலில் உலர்த்திடு.

விரும்பும் புளிதான் விளாத்தியிலை
மேவும் வெட்பூ வுப்பிலிதான்
பொருந்துங் கையான் சாரணையும்
போத முருக்குத் தேள்கொடுக்கு
சுருங்கும் இசங்கு இவ்விலைகள்
சுருக்காய் வெவ்வேர் தான்கூட்டி
திருந்தது வைத்து வெவ்வேறாய்
சீலை அதனில் ஊட்டிரே. 728

புளி, விளாத்திஇலை, வெட்பூ, உப்பிலி, கையாந்தகரை இலை, சாரணை முருக்கு, தேள் கொடுக்கு, சங்கு, இதன் இலைகளை தனித்தனியாக இடித்து தனித்தனியாக துணியில் ஊட்டிக்கொள்.

வேறு

ஊட்டிய சீலை தன்னை
உலர்த்தியே திரி திரித்து
தாட்டிமை யாக மையுஞ்
சத்துடன் பத்தி வச்சுக்

கூட்டியே பசு வெண்ணெயில்
குழைத்துநீர் சிமிளிற் சேர்த்து
நாட்டினில் விழிதன்நோய்க்கு
நலம் பெறப் போடுவீரே. 729

ஊட்டிய துணியை நிழலில் உலர்த்தி திரியாக திரித்துக் கொள், திரியை எரித்து பசு வெண்ணெயில் குழைத்து சிமிளில் வைத்துக்கொண்டு கண்நோய் கட்கு போட வேண்டும்.

போடுவீர் துத்தத்தின்மை
புரிகண்ணின் இமைத் தடிப்பு
ஓடும் நீரிற் பாச்சலுடன்
உதவும் படல மாணிப்பூ
கோடு முலையே புரைவெட்டுக்
கொள்ளும் புகைச்சல் காசமெல்லாம்
வாடு மறுநாட் சென்றபிறகு
வருந்து மந்தார காசமிதே. 730

கண் இமை த்டிப்பு. கண்ணில் நீர்ப்பாய்ச்சல், கண் படலம், கண் பூ, புழுவெட்டு, புகைச்சல், காண்காசம், மந்தார காசம் இவைகள் தீரும்

வேறு

மந்தர காசம் மகிழ்ப் பித்தகாசம்
அந்தர நீலகாசம் அவிசுக்கில காசம்
குந்தமும் விழிகள் குருடு மாறாமேன்
அந்தமா முனிவர் அருள்புரி செய்ததே. 731

மந்தாரகாசம், பித்தகாசம், சுக்கிலகாசம், விழிகண்குருடு இவைகள் தீரும், இது மாமுனிவர் அருள் செய்தது.

வேறு

சேமத் தாவிய பூப்படலந்
திமிரக் காச மிவைதனக்கு
ஆமைத் தோடு முதலைப்பல்
அதனிற் பன்றிக் கொம்புடனே
சாமை முயர் கோடிலைப்பல்லுஞ்
சங்கு சுட்ட நீறுடனே
தீமை புரியா யாளிப்பிச்சு
திருந்த செங்கத் தாரிப்பட்டை. 732

கண்பூ, படலம், திமிர்காசம் இவைகள் நீங்குவதற்கு ஆமை ஓடு, முதலைப் பல், பன்றிக்கொம்பு, முயல்பல், பசுவின் பல், சங்கு, சுட்டகரி, ஆளிப்பிச்சு, செங்கத்தாரிப்பட்டை.

நாமத் தாகிய வெள்ளிபுலி
நல்ல சேவல் நெஞ்செலும்பு
வாமத் தாகிய தேத்தாங்கொட்டை
வளருந் துத்தந் துத்துடனே
தேமத் தாளி பகைப்புளிகள்
தியங்கும் நிம்பச் சாற்றாலே
சேமத் தரைத்த வுண்டைதனைச்
செலுத்தீர் காடித் தெளிவோடே. 733

மேற்படி வகையுடன் வெள்ளி, புலி, சேவல் இவைகளின் நெஞ்செலும்பு, தேத்தான்கொட்டை, துத்தம், தாளி இவைகளை சமனெடை எடுத்து நிம்ப பழச்சாற்றால் அரைத்து உருண்டையாக செய். அவ்வுருண்டையை காடித் தெளிவில் இழைத்து கண்ணில்விட மேற்படி நோய்கள் நீங்கும்.

மானே குழந்தை யதுதனக்கு
வரளுங் கணத்திற் சுரமுண்டாம்
தேனே நாக்குத் தானுலர்ந்து
செய்யுங் குணங்கேள் நீர்வாங்கும்
தானே முனிவர் தங்களுக்குச்
சரீரம் அதனில் பிணியதனைக்
கோனே போற்றி உரைத்தோமே
கூறுங் கேளுங் கோதையரே. 734

குழந்தைகளுக்கு ஏற்படும் கணம், சுரம், நாக்கு வறட்சி, ஏற்பட்டு நீர் அதிகமாக குடித்தல். இப் பிணிகள் நீங்குவதற்கு முனிவர்களாகிய நாங்கள் மருந்துகளை கூறியுள்ளோம்.

கூறுஞ் சிலக்கண் மதுதனக்கு
குளிருங் கைகால் வயிரழியும்
ஊறும் உடம்பு தான்காயு
முத்த அரைக்கு மேலாக
வேறு தாக மிகவுண்டா
மிகுந்தே வருத்த மிகுதியுமாம்
ஆறுந் தரித்த சிவனாணை
ஆன குணங்கள் உரைத்தோமே. 735

மேலும் குழந்தைக்கு குளிரும், கைகால் வலி ஏற்படும். வயிறழியும், உடல் காயும், தாகம் உண்டாகும், உடல் வருத்தம் மிக உண்டாகும். சிவனின் ஆணையால் இக்குணங்களை உரைத்தோம்.

உரைத்தோம் ரெத்தக் கணமதுக்கு
வொக்க வயிற்றில் அனலுண்டாம்
திரைத்த நேத்திர வாய்வுசேர்ந்து
தீரா சூடு மிகவுண்டாம்

வரைத்த நாக்குத் தான்பூக்கும்
வயிறு கழியுங் கண்வட்டமிடும்
புரைத்தே வயிறுதான் கடுத்து
போத ரெத்தந் தான்கழியும். 736

இரத்தக் கணத்திற்கு வயிற்றில் உஷ்ணம் உண்டாகும். நேத்திரத்தில், நேத்திரவாயு சேர்ந்து தீராத உஷ்ணம் உண்டாகும். வயிறு கழியும், வயிறு கடுத்து இரத்தக் கழிச்சல் உண்டாகும்.

சுழிக்குங் கண்கால் தான்குளிருஞ்
சுழியச் சுழிய தான்வாங்கும்
வழிக்கு நாக்கு பூத்திருக்கும்
வயிறு கழியும் வட்டமிடும்
கொழிக்குங் குழந்தை தங்களுக்குக்
கூறுங் குணங்கள் குணமாக
தெளிக்குஞ் சிவனார் தன்னாணை
சொன்னோங் குணங்கள் இதுவாமே. 737

கண், கால் இவைகளில் குளிர்ச்சி உண்டாகும். நாக்கு பூத்திருக்கும். வயிறு கழியும், குழந்தைகளுக்கு ஏற்படும் இவ்வகை நோய்கள் குணமாக சிவனார் ஆணையால் மருந்தை கூறுகிறேன்.

வயிறு போகும் வாயாலெடுக்கும்
வயிறு பேதமாய்க் கழியும்
வயிறு வலிக்குங் கைகால்கள்
வந்த போராமல் வலிக்கும்
வயிறு வலித்துத் துணுக்கிட்டு
வந்து முதுகு கால்கைகள்
வயிறு போகுங் கைகால்கள்
வளைத்து வில்லு போலாமே. 738

வயிறு போகும், வாந்தி, உண்டாகும். பேதமாய் கழியும், வயிறு வலி உண்டாகும். கைகால்களை வில்போல்வளைத்து வளைத்துக் கொண்டு அழும்.

வில்லு போலே வலியுண்டா
மிகவே கைகால் குளுந்திருக்கும்
பல்லுக் கிட்டுஞ் சூடெழும்பும்
பாதி நேரங் குளிந்திருக்கும்
சொல்லு மூக்கு கண்ணதுக்கு
சேர்ந்த உடம்பு தான்காயும்
வல்ல மூக்கு உண்டாகும்
மஞ்சள் போலேறி இரங்கும். 739

வில்லுப்போல் வளையும் கை கால்களில் வலி உண்டாகும். கைகால் குளிர்ந்து இருக்கும். பல்லு கிட்டி போய் எலும்பு பாதி உஷ்ணமும் பாதி குளிர்ச்சியும் இருக்கும். மூக்கு கண் சுற்றுப்புறங்களில் உஷ்ணமாகயிருக்கும், மூக்கு மஞ்சள் நிறமாக ஆகி மேலே ஏறி கீழிறங்கும்.

அக்காற்றுக்கு வாயு புண்ணாம்
அளகாம் நாக்குப் பூத்திருக்கு
மொக்க வயிற்றில் அனலுண்டாம்
உடல்கள் முழுதுஞ் சுரமுண்டாம்
மிக்கும் இந்த வியாதிகட்கு
மீளும் படியே மருந்துசெய்யில்
நிக்கும் படியே முனிவோரும்
நிகழ்த்தி உரைத்தார் உலகோர்க்கே. 740

வாய் புண்ணாகும். நாக்கு வெடிப்புண்டாகும். வயிற்றில் அதிக உஷ்ணம் ஏற்பட்டு, உடல் முழுவதும் சுரம் உண்டாகும். இந்த வியாதிபள் குணமாகும்படி மாமுனிவர்கள் உலகோருக்கு மருத்துவத்தை சொல்லியுள்ளார்கள்.

கோவை வேர் முசுமுசுக்கை
கொள்ளு மான் பச்சரிசி
தாவு படகம் வல்லாரை
தகரை துத்தி பழம்பாசி
தூவும் வெள்ளைக் காக்கணம்வேர்
சொன்னோம் கருவேல் பட்டையுடன்
காவு வசம்பு வாய்விளங்கம்
கடுகு ரோகிணி சித்தரத்தை. 741

கோவை வேர், முசுமுசுக்கை, அம்மான், பச்சரிசி, பற்படாகம், வல்லாரை, தகரை, துத்தி, பழம்பாசி வெள்ளைக் காக்கணம் வேர், கருவேலம்பட்டை, வசம்பு, வாய்விளங்கம், கடுகுரோகிணி, சித்தரத்தை மற்றும்.

சித்த மகிழும் கருஞ்சீரஞ்
செங் கத்தாரி பேரரத்தை
ஒத்தக் கருவாய்ப் பட்டையுடன்
உள்ளிப் பூடு அதிவிடையம்
மெத்தக் காட்டுச் சீரகமும்
மேவுங் கம்பி பிசினுடனே
பத்து மோத மொவ்வொன்று
பலந்தான் காலே கொள்வீரே. 742

கருஞ்சீரகம், செங்கத்தாரி, பேரரத்தை, கருவாய்ப்பட்டை, உள்ளி, அதிவிடையம், காட்டுச்சீரகம், லவுங்கம், கம்பிளிப் பிசின் இவைகள் வகைக்கு கால் பலம், மற்றும்.

பலஞ்சேர் ஓரிலைத் தாமரையும்
படருஞ் சிறிய புள்ளடியும்
நலஞ்சேர் பலந்தா னோரெண்டு
நல்ல வெள்வேல் கொன்னையுடன்
பிலஞ்சேர் கொத்த மல்லியுடன்
பேணிப் பலந்தான் அரைகொள்ளும்
குலஞ்சேர் சாதிக் காயுடனே
கூட்டுங் களும்பூர் வசுவாசே. 743

ஓரிலை தாமரை, சிறுபுள்ளடி இவைகள் இரண்டு பலம், வெள்ளை வேலம், கொன்றை, கொத்தமல்லி இவைகள் வகைக்கு அரைபலம் மற்றும் சாதிக்காய் வசுவாசி கூட்டிடு.

கூட்டுஞ் சரக்கு விராகனிடை
கொள்ளீர் காலத் தானாகும்
நாட்டில் வளருஞ் செண்பகப்பூ
நல்ல திப்பிலி மாசக்காய்
மீட்டும் விராகன் இடையொன்று
மிகவே இடித்துத் தூள்செய்ய
காட்டுங் கற்பூரஞ் சேர்த்துக்
கடுக்காய் போட்டுத் தெளியவையே. 744

மேற்படி மருந்துச் சரக்குள் விராகனிடை வீதம் கூட்டு, செண்பகப்பூ, திப்பிலி, மாசிக்காய் இவைகளும் வகைக்கு ஒரு விராகனிடை வீதம் கூட்டி தூள் செய்து கற்பூரம், கடுக்காய் போட்டுத் தண்ணீரில் கரைத்துத் தெளிய வைக்கவும்.

தெளியுந் தண்ணீர் ஒருகரண்டி
சேரும் படியா மணக்கெண்ணெய்
பொளியுஞ் சரக்கு எண்ணெய்தனில்
போத விட்டுக் காச்சியதை
ஒளியும் ஒரு துட்டிடைகொடுத்து
உயிர் மேனியிலுந் தான்பூசி
அளியும் வியாதி கடினமென்றால்
அதிக மாகக் கொள்வீரே. 745

தெளிந்த தண்ணீர் ஒரு கரண்டி, ஆமணக்கு எண்ணெய் கூட்டி சரக்குகளின் தூளை இட்டு பதமாக காய்ச்சி ஒரு துட்டு எடை கொடுத்து உடம்பிலும் பூசவேண்டும். நோய் கடினமாக இருந்தால் கொஞ்சம் கூட கொடுக்க வேண்டும்.

அதிக மான கணமஞ்சு
மக்கர மான வியாதிகளும்
மதிசேர் குடலில் நில்லாது
மாந்தம் அறுமே வியாதியும்போம்

பதிசேர் உலகோர் தங்களுக்குப்
பகர்ந்தோம் புளியுப்பாகாதே
துதிசேர் கிரந்தி கூடியதோர்
சொன்னோம் முறைமை ஆகாதே. 746

மேற்படி வகையில் செய்ய குழந்தைகட்கு ஏற்படும் ஐந்து வித கணம், கழிச்சல் மாந்தம் இவைகள் தீரும். புளி, உப்பு, ஆகாது, பத்தியம் காக்க வேண்டும்.

பித்தத்தில் வெப்புக் கொள்ளில்
பெருத்திடுங் குளிர்ச்சி தானும்
ஒத்துத்த உதிர நோவும்
வாந்தியுட் கழிச்சல் வீக்கம்
மெத்துத்த சுகங்கள் நீங்கள்
அவைவிட வேக முண்டாம்
கைத்துத்த பித்தம் வந்து
காந்துபின் பட்டாக் காலே. 747

பித்தம் அதிகமாகி உஷ்ணம் உண்டானால் உடல் குளிகும். உதிரநோயும், வாந்தியும் கழிச்சல், வீக்கம் இவைகள் உண்டாகும். பித்தம் அதிகமானால் மிக தொல்லை உண்டாகும்.

கீழே நின்ற வாயுவுகள்
கிளந்து மேலே நோக்கிடுகில்
நாளே நல்கி மிளந்துநின்று
நன்றாய் மேலே நின்றேற
தாளே வீங்கா திதுதண்ணீர்
தக்க மருந்தும் இதுவாகும்
மீளே வேறே திண்ணமென
விரைந்து மருந்து செயலாமே. 748

கீழ் நின்ற வாய்வு மேலே ஏறினால் பல தொல்லைகள் உண்டாகும். தண்ணீர் நல்ல மருந்தாகும். இதற்கு சீக்கிரமாக மருந்து செய்யவேண்டும்.

கண்ணோ முகங்கள் வெளுப்பிட்டுக்
காலோடு உதிரம் வீக்கமுமாம்
தண்ணீர் தாகம் மிகவுண்டாய்த்
தாகித் தாக மொருத்துடனே
விண்ணே சுழன்று மிகக்கடுத்து
மிகுந்தே மலமு மடைபட்டு
எண்மூ திவரை யொன்றாக
விதுவும் மரணம் என்றறியே. 749

கண், முகம் இவைகள் வெளுப்பாகும் கால், வீக்கமுண்டாகும், நீர்தாகம் மிக உண்டாகும். மலம் சிக்கலுண்டாகும். இதுபோல் நீடித்தால் மரண முண்டாகும்.

வேறு

நெஞ்சினில் அடைத்து வாந்தி
 நின்று நின்றெரித்துக் காட்டி
பஞ்சுபோல் நாவுங் கண்ணும்
 பாண்டமும் வெளுத்துக் காலும்
அஞ்சவே வீக்க முட்டு
 அடுத்தடுத் துளதே யாகில்
கெஞ்சிது மலமுந் தீயிற்
 கேடிது காலந் தானே. 750

நெஞ்சு அடைத்து வாந்தி ஏற்பட்டு நின்றால் நாவு, கண், முகம், இவைகள் வெளுத்துப் போகும், கால் வீக்கமுண்டாகும். மலம் தீய்ந்து கட்டுண்டாகும்.

வயிற்றுக் கடுப்புக்கு

நற்சீரகத்தை வைச்சு ஓட்டில்
 நயந் திருந்து புடமிட்டு
உத்தே இடித்துத் தூளதுசெய்து
 உறவே சீனி ஏழ்கொண்டு
நத்தே மணக்கும் நறுநெய்யில்
 நயந்தே அளாவி அருந்திடுகில்
பத்தா வயிற்றுக் கடுப்பதுவும்
 பறந்தே போகும் திண்ணமிதே. 751

நற்சீரகத்தை ஓட்டில் இட்டு வறுத்து இடித்து தூள்செய்து சீனி கலந்து நெய்யில் கொள்ள வயிற்றுக் கடுப்பு நீங்கும்.

சுவாசகாசக் குளிகை

இருதாங் கெந்தகம் வெண்காரம்
 எண்ணு நாவி மனோசிலையும்
மருவுந் தாரம் பற்படகம்
 வண்மைத் திப்பிலி இதுசமனாய்
ஒருமை நொச்சி கண்டங்காலி
 ஒங்கு ஆடா தோடையிலை
பெருகுஞ் சாரேழ் நாள்வார்த்து
 பின்னும் பயரள வுண்டைசெய்தே. 752

கெந்தகம், வெண்காரம், நாவி, மனோசிலை, அரிதாரம், பற்படாகம், திப்பிலி, இவைகள் சமனாக எடுத்து நொச்சி, கண்டங்கத்திரி, ஆடாதோடை இவைகளின் சாறுவிட்டு ஏழு நாள் அரைத்து பயிரளவு மாத்திரை செய்திடு.

செய்த உண்டை தேன்நெய்யில்
சிறந்த சர்க்கரை தனில்கொள்ள
அய்யங் கிளையாச்சு வாதம்பத்து
ஆன ஈளை இரும்பல் அஞ்சும்
வெய்ய குன்மம் இருபதுடன்
மிகுந்த சுவாச மவத்தையெல்லாம்
உய்யும் வேறிடம் இல்லையென்று
ஓடிப் போகும் கண்டாயே. 753

மேற்படி மாத்திரையை தேன் நெய், சர்க்கரை இவைகளில் கொள்ளா வேண்டும். பத்து வகை வாதம், ஈளை இருமல் ஐந்துவகை, இருபதுவகை குன்மம், சுவாசம் இவைகள் நீங்கி சுகமாகும்.

உள்குத்துக்கு

இதரஞ் சுக்கு வெண்காரம்
இயல்சேர் கடுகு திப்பிலியும்
சிதராச் சீனக் காரமுடன்
சேர்ந்த மிளகு பெருங்காயம்
பதரா அரத்தைக் கருஞ்சீரம்
பகர்கொண் டிலையின் பழச்சாறு
விதமாய் விட்டு அரைத்தெடுத்து
மிக்க தூது வளங்காய்போல். 754

சுக்கு, வெண்காரம், கடுகு, திப்பிலி, சீனாக்காரம், மிளகு, பெருங்காயம் அரத்தை, கருஞ்சீரகம் இவைகள் கொண்டிலை பழச்சாறுவிட்டு அரைத்து தூதுளங்காய் அளவு உருட்டிக் கொள்.

தூது வளங்காய்ப் பிரமாணம்
துய்ய உண்டை தான்செய்து
மாதே இளவெந் நீரதனில்
வருத்திக் குடிக்கக் குத்துவிடும்
கோதே கொடிவேல் அரிசியுடன்
கூட அரைத்துப் புட்டாக்கி
போதே பசும்பால் தான்குடித்துப்
புட்டு திண்ணப் போங்குத்தே. 755

ஒரு உருண்டையை வெந்நீரில் கொள்ள உட்குத்து உடற்குத்து நீங்கும், கொடிவேலிவேர், அரிசி, கூட்டி இடித்து புட்டுபோல் வேகவைத்து பசும்பாலில் உட்கொள்ள குத்து நீங்கும்.

கையாந் தகரை இருநாழி
கருதுங் குமரி முன்னாழி
மெய்யா ரெண்ணெயை யுழக்கு
மிக்க ஆவின் பால்நாழி

பொய்யாம் இதர ஈராறு
போதி வடித்துச் சிரம்பூசில்
வெய்யா வந்த உட்குத்து
மிக்க காசம் வெளியாமே. 756

கையாந்தகரை இருநாழி, குமாரி மூன்று நாழி, எண்ணெய் உழக்களவு ஆவின்பால் நாழி, இவைகளை காய்ச்சி பதமாக வடித்து தலையில் பூசிக் கொள்ள உட்குத்து நீங்கி காசம் வெளியாகும்.

இரத்த குன்மத்தின் குணம்

கெர்ப்பம் தரிக்கும் தலத்தில்
கேளும் செளிம்பும் அமிர்தமுமாய்
அர்ப்பூ தானு மூன்றாகி
ஆகத் திரண்டு கட்டுண்டு
தர்ப்பா மாதந் தானதோறும்
தலைய வழுக்குத் தான்மாறி
இப்போ பிள்ளைக்கு உண்டான
இயம்புங் குணங்கள் காண்பிக்கும். 757

கர்ப்பந் தரிக்கும் இடத்தில் செளிம்பு அமுர்தமாகி பூ மூன்றாகி திரண்டு கர்ப்பம்போல் உண்டாகும், மாதம் தோறும் தலையவஃழுக்கை மாறும் இந்த காலத்தில் பிள்ளைகட்குண்டான இயம்பும் குணங்களை காண்பிக்கும்.

காணு முலையிலப் பாலுண்டாம்
கனத்தே வயிற்றில் மயிரொழுக்கம்
பேணு முலைக்கண் தான்கறுத்து
பிறகு வயிறு தான்வீங்கும்
தோணு முதிரந் திரண்டுமேதான்
சுகமாம் பிள்ளை போலிருக்கும்
நாணும் பெரிய வயித்தியர்கள்
நன்றாய் அறிந்து செப்புகவே. 758

கர்ப்பத்தில் மயிரொழுக்கம் உண்டாகி மார்பு, கண், இவைகள் கறுத்து வயிறு வீக்கம் உண்டாகும். உதிரம் திரண்டு குழந்தையைப் போலிருக்கும் இதை வயித்தியர்கள் ஆராய்ந்து சொல்ல வேண்டும்.

செப்புந் திங்கள் பத்தானால்
சேரும் பிள்ளை அல்லவென்று
வைப்பும் புகழும் இரத்தகுன்மம்
மாறும் படிக்கு மருந்துசெய்யும்
நப்பும் பழைய அரிசிதனை
நன்றாய் எடுத்துச் சோறாக்கி
செப்பி லுள்ளி தான்பொரித்து
சிறந்த நெய்ச்சோறு உண்பீரே. 759.

பத்து மாதமானால் அது குழந்தை அல்ல என்றறிதியும். இது இரத்த குன்மாகும் இது நீங்கும்படி அறிந்து மருந்து செய்ய வேண்டும், பழைய அரிசியை எடுத்து சோறாக்கி உள்ளி சேர்த்து நெய்கூட்டி உட்கொள்ள வேண்டும்.

கடுக்காய் நெல்லி தான்றிக்காய்
கனத்த மிளகு திப்பிலியும்
முடுக்காய்சுக்கு விளாவரிசி
முதிய கொடுவேல் கொத்தமல்லி
எடுக்குஞ் சரக்கு செவ்விய
மிசைந்த கழஞ்சி மூன்றாக்கி
தொடுக்கும் பசும்பால் வார்த்தரைத்து
துய்ய நெய்யும் பசும்பாலும். 760

கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய், மிளகு, திப்பிலி, சுக்கு, விளா அரிசி, கொடிவேலி, கொத்தமல்லி சரக்குகளை மூன்று கழஞ்சி வீதமெடுத்து பசும்பால் விட்டு அரைத்து நெய்யும் பசும்பாலும் ஊற்று.

பாலும் நெய்யும் தான்விட்டுப்
பதத்தில் வடித்து உள்ளேதான்
கால மந்தி தினமானங்
காசின் இடைதான் மூன்றுகொள்ள
மேலும் இரத்த குன்மமது
மிகுந்தே மாறி ஓடிவிடும்
ஆலம் உண்ட கண்டர்திரு
ஆணை இதுதான் அறியீரே. 761

ஊற்றியதை அடுப்பேற்றி பதமாக எரித்து வடித்து மூன்று காசு எடை உட்கொள்ள வேண்டும். இரண்டு வேளையும் உட்கொள்ள வேண்டும். இரத்த குன்மம் குணமாகும், ஆலாகாலவிஷம் உண்ட நீலகண்டர் ஆணை இதுவாகும்,

அறியும் இதற்குப் பத்தியங்கள்
ஆன காடை கவுதாரி
வெரிமான் பலவாய் முயல்உடும்பு
மிக்க குருவி இறைச்சியுமாம்
கரி பூசனியின் வெள்ளரியின்
கடிய மஞ்சு தூதளங்காய்
நெரியாம் பிரண்டைச் சாரணையும்
நீண்ட சுரையின் கொழுந்தாமே. 762

மேற்படி மருந்துட் கொள்ளும் வேளையில் பத்தியம் காக்க வேண்டும், காடை, கவுதாரி, மான், முயல், உடும்பு, குருவி இவைகளின் இறைச்சியை சேர்த்துக் கொள்ளலாம் பூசணி, பிரண்டை, சாரணை, சுரை கொழுத்து இவைகளை சேர்த்துக் கொள்ளலாகும்.

பித்த குன்மத்தின் குணங்கேளும்
　　பெருக்காயழத்தி தாகமுண்டாம்
தத்தி யெடுக்கு மிகச்சேப்பந்
　　தருகா வாயுங் கசப்புமுண்டாய்
உத்தே வாந்தி உண்டாகும்
　　ஓங்கு நெருப்பு வெயில்கண்டால்
சித்த முடனே உடல்பொருந்தி
　　செய்ய சிறுநீர் சிவந்திருக்கும். 763

பித்த குன்மத்தின் குணத்தைக் கூறுகிறேன், பெருந்தாகம் உண்டாகும், ஏப்பம் உண்டாகும், வாய்கசப்பு, வாந்தி, இவைகள் உண்டாகும், நெருப்பு வெயில் இவற்றிலிருந்து விட்டு சிறுநீர் கழித்தால் சிறுநீர் சிவந்திருக்கும்.

இருக்கும் பித்த குன்மமது
　　ஈளை இருமல் உண்டாகும்
பெருக்கு மருந்து கெந்தகமும்
　　பேணும் தாமரைப் பொடியும்
சுருக்க முடனே களஞ்சுகொண்டு
　　துய்ய குமரி சாற்றரைத்து
பருக்க பற்ப மாவாக்கி
　　பைய வெயிலில் வைப்பீரே. 764

மேலும் ஈளை, இருமல், இவைகள் உண்டாகும், இதற்கு மருந்து கூறுகிறேன், கெந்தகம், தாமரைப்பொடி, வகைக்கு கழஞ்சி அளவு எடுத்து குமரிச்சாற்றால் அரைத்து வெய்யிலில் வைத்திடு.

வைத்த பிறகு புகையெழும்பில்
　　வாகாய் பதமென்றே அறிந்து
உத்தே எடுத்து வைத்துவதை
　　ஒருநாள் ஒன்றில் வெருகடிகொள்
பித்த பாண்டு ரூபமுடன்
　　பிளித்தேக் கிட்டும் பீலிகையும்
மத்துங் குன்மம் குடல்பிரட்டு
　　மாறுஞ் சிவனார் தன்னாணை. 765

வெய்யிலில் வைக்க புகை எழும்பும், இதுவே பதம் என்றெடுத்து ஒரு நாளைக்கு வெருகடி அளவு உட்கொள், பித்தபாண்டு, பீலிகை, குன்மம், குடல்பிறட்டு இவைகள் குணமாகும், இது சிவனாரின் ஆணையாகும்.

வேறு கவுசையின் குணம்

காலுடன் கையுடன் வற்றி
　　கனத்திடும் வயிறு தானும்
மேலுடன் விளங்கு மாகில்
　　விளைந்திடுங் கவுசை தானே

மூலமா மகோ தரமு
முற்றிடுந் திங்கள் மூன்றில்
ஆலமாய் வியாதி சொன்னோம்
ஆழியூஞ் சங்கு போல. 766

காலும், கையும் வற்றிப்போய் வயிறு கனமா இருந்தால் இது கவுசை என்றறியவும், மூன்று மாதத்தில் இது மகோதரமாக மாறிவிடும், நாளானால் கடல் சங்கு போல் அடிகால் வீங்கி விடும்.

ஆழியில் சங்கு போல
அடிகாலுந் தானும் வீங்கும்
நீமுட வீர்த் திருகி
நெருங்கியே மலங்கள் சாரி
கோளிடு பருவை யாராய்க்
கொழுந்திடுந் திங்கள் ஆகில்
நாளினி நாட்கு நாளு
நல்வினை தானுங் காணே, 767

மலங்களில் குற்றமுண்டாகும் மேலும் நாளானால் முற்றி விடும். நாளுக்கு நாள் வினை அதிகரிக்கும்.

விளையுமே கவிசை உண்டாய்
மேவிய மாந்தரெல்லாம்
புளகிய திங்கள் மூன்றில்
பையவே மான மாகும்
அழகிய தோள் முழங்கை
அத்துடன் வத்தி நிற்கும்
ஒளிசெரி கண்ணும் நீலம்
உடம்பெலாம் சர சரக்கும். 768

மூன்று மாதத்தில் மிகவும் கஷ்ட நிலையுண்டாகும். முழங்கையில் வீக்கம், வலி, உண்டாகும், கண்கள் நீல நிறமாகும். உடல் எல்லாம் சரசரப்பாகும்.

உடம்பெல்லாம் வில்லு போல
வொக்கவே நிமிர்ந்து கொள்ளும்
தடம்பயில் முனைகி மாந்தம்
அம்மை போல் இனிக்குமேனம்
திடம்பெறுங் குணங்கள் தன்னைத்
தெரிதமிழ் தன்னால் ஆய்ந்து
நடம்பெறுங் கவுசை ஆன
நற்குணம் உரைக்க லுற்றேன். 769

உடல் எல்லாம் வில்லு போலுண்டாகி நிமிர்ந்துகொள்ளும். மாந்தம் அம்மை போலுண்டாகும். இதை ஆராய்ந்து பார்த்துக் கவுசையின் குணத்தைக் கூறிவிட்டேன்.

ஒடுவுக்கு எண்ணெய்

காண்டை புங்கு நீர்பூலாக்
கடிய பொன்னா விரைவேரும்
நீண்ட துரிசு கடலாஞ்சி
நிறமாஞ் சாய வேருடனே
பூண்ட வேழு மிளகுநல்லொதி
பொருந்து வேர்கள் ஒருசரியாய்
கண்ட கைப்பு வசம்புள்ளி
கொள்ளு வாலுழுவா களிப்பாக்கு. 770

புங்கம், நீர்ப்பூலா, பொன்னாவிரைவேர், தூரிசு, கடலாஞ்சி, சாயவேர், மிளகு, இவைகளின் வேர் சரி எடையாக எடுத்து வசம்பு, உள்ளி வாலுழுவை, களிப்பாக்கு மற்றும்.

பாக்குங் கடுக்காய் அசமோதம்
பகர் திப்பிலியுஞ் சவ்வள்ளி
காக்குந் துருசு வெம்பாடல்
கருதுந் தாரமில் வாங்கும்
ஏக்கும் ஏலங் கொத்தமல்லி
இசைசேர் சிவந்த சந்தனமும்
தாக்கும் இவைகளை ஒருநிறையில்
த்க்க எண்ணெய்க் காய்ச்சியிடேன். 771

கடுக்காய், ஓமம், திப்பிலி, செவ்வள்ளி, தூரிசு, கொத்தமல்லி, செஞ்சந்தனம், இவைகளை சமனெடை எடுத்து எண்ணெயிலிட்டு காய்ச்சிக் கொள்.

துடரி வேரும் பலம்பத்து
துய்ய குருவி ஈச்சன்வேர்
படருங் கிளுவை கொண்ணைவொதி
பட்டை தானும் அமுக்குராவேர்
அடருஞ் சுக்கும் கைப்புடனே
ஆன வேம்பாடல் வேரும்
மடல்சேர் நிறையில் தான்கூட்டி
வளர்நல் எண்ணெய் தனில்காச்சே. 772

பின்துடரி வேர் பத்துபலம், குருவீச்சன்வேர், கிளுவை, கொண்ணை, ஒதியம் பட்டை, அமுக்கிராவேர், சுக்கு, வேம் பாடம் வேர் இவைகளை சமஎடை கூட்டி நல்லெண்ணெயில் காய்ச்சிக் கொள்.

ஒடுவு புண்ணுக்கு மருந்து

காச்சி வடித்து எடுத்தபின்பு
களவு பார்த்துப் பின்னதனில்
கூச்சம் அறவே போடுவீராய்
கொடிய வொடுவும் புண்ணாறும்

வாச்ச தீயி லூட்டியெண்ணெய்
வளர்புண் இதினில் மாறிவைக்க
பேச்சி முலையாய் அமுதுண்ணும்
பெருமாள் ஆணை மாறிடுமே. 773

காய்ச்சியதை வடித்து ஒடுவு புண்ணிற்கு போட ஒடுவு புண் ஆறும், எண்ணெயை சூடுசெய்து புண்ணிற்குவைக்க முலைப்பு வெறியாகும்.

சன்னி பதின்மூன்றுக்கும் மேற்பூசுந் தயிலம்

சுக்கு மிளகு திப்பிலியுந்
துய்ய கருஞ்சீர் காரரிசி
கக்கும் அரத்தை மரமஞ்சள்
கூடிய குப்பை சோமனாதி
புக்குங் கத்தூரியின் மஞ்சள்
புகழுங் கொடுவேல் வசம்புள்ளி
நக்கு முன்னை அமுக்கிறா
நல்ல சாரணை வேரே. 774

சுக்கு, மிளகு, திப்பிலி, கருஞ்சீரகம் கார்அரிசி, அரத்தை, மரமஞ்சள், சதகுப்பை, சோம்பு, கஸ்தூரிமஞ்சள், கொடு வேலி, வசம்பு, உள்ளி, முன்னை, அமுக்கிறா, சாரணை வேர்.

வேர்சேர் மிளகு கரணையின்வேர்
மிகுந்த ஆம்பல் கிழங்குடனே
பூர்சேர் தண்டை உடன்குலவும்
பெரிய மருதத்தின் வேரும்
நேர்சேர் சரக்கு ஒருநிறையாய்
நிறுத்தே கண்டு அரைத்தெடுத்து
பார்சேர் நாழி எண்ணெய்விட்டு
பைய மெழுகு பதம்இறக்கே. 775

மேற்படி சரக்குகளுடன், மிளகரணைவேர், ஆம்பல் கிழங்கு, மருதம்வேர் இவைகளை சரிஎடையாக எடுத்து அரைத்து எடுத்து நாழி அளவு எண்ணெயிலிட்டு மெழுகுபதமாக காய்ச்சிக்கொள்.

இறக்கி உடலம் முழுதுமெங்கு
இனிய உடம்பில் பூசுவீராய்
பறக்குஞ் சன்னி பிறவீச்சு
பகருங் கபோல சன்னியுடன்
இரைக்குஞ் சன்னி உட்குத்து
மீளா வியாதி தீருமென
மறைக்கும் உரிய மாமுனியும்
வகுத்தது இதுவென்று எண்ணுவிரே. 776

காய்ச்சியதை வடித்து உடல் முழுவதும் தடவ சன்னி, பிற வீச்சு, சுப்லி, இறைக்கும் சன்னி, உட்குத்து, இவைகள் தீரும், மாமுனி உரைத்த இம்முறையை நான் சொன்னேன், பொய்யாகாது.

வாயுவுகளுக்கு பலசரக்கேலாதியுண்டை.

கோட்டந் திப்பிலி அரிதாரம்
குலவு மிதரம் வெண்காரம்
மேட்டில் வளரும் கெந்தகமும்
மேவு நாவி வாய்விளங்கம்
நாட்டில் வளரும் அக்ராரம்
நல்ல தான்றி மனோசிலையும்
கூட்டு மிளகு சாதிக்காய்
கொடிய கிராம்பு வசுவாசி. 777

கோஷ்டம், திப்பிலி, அரிதாரம், வெண்காரம், கெந்தகம், நாபி, வாய்விளங்கம், அக்ராகாரம், தான்றி, மனோசிலை, மிளகு, சாதிக்காய், கிராம்பு, வசுவாசி மற்றும்.

வாசி ஏலம் இலவங்கம்
மஞ்சிட் டிருவி கைச்சோலம்
பேசுந் திப்பிலி மூலமஞ்சள்
பெருகும் இலிங்கம் உடன்அரத்தை
கூசும் பொன்னின் அரிதாரம்
குலவும் கருஞ்சீர் நர்ச்சீரம்
வாசம் பெருநல் உலுவாவும்
வளரு மோதம் வாலுளுவை. 778

ஏலம், இலங்கம், மஞ்சிஷ்டி, கச்சோலம், திப்பிலிமூலம், மஞ்சள், லிங்கம், அரத்தை, பொன்னரிதாரம், கருஞ்சீரகம், நற்சீரகம், வாலுளுவை மற்றும்.

வளருங் கார்பூ காரரிசி
மாஞ்சில் வெளுத்துப் பிசினுடனே
துளரு முலையே ஒரிரண்டு
சரிசேர் நிறையில் களஞ்சிகொள்ளும்
பழகும் வாளங் களஞ்சிரெண்டு
பையக் குமரி சாற்றாலே
அழகு பெறவே அரைத்துண்டை
அன்பாய்த் திரட்டிக் கொள்வீரே. 779

கார்போக அரிசி, சடா மாஞ்சில், வெளுத்த பிசின் இவைகள் வகைக்கு கழஞ்சி அளவு, நேர்வாளம் இரண்டு கழஞ்சி, எடுத்து மேற்படி சரக்குகளுடன் சேர்த்து குமரிச் சாற்றால் அரைத்து திரட்டி உருண்டை செய்திடு.

கொள்ளும் நொச்சி இலைச்சாற்றில்
குத்தி வடுத்த பேர்களுக்கு
மெள்ளச் சுக்குத் தண்ணீரில்
விரும்பும் வாய்வுக்கு இடுவீரே
துள்ளும் வயிறு விரிச்சிக்கில்
துய்ய தண்ணீர் தான்கொள்ளும்
தள்ளும் படினீ ரெண்ணாதே
தணி.யுந் திருமால் தன்னாணை. 780

உடல் குத்து உள்ளவர்கட்கு இவ்வுருண்டையுடன் நொச்சி இலைச்சாறுடன் கொடுக்கவும், வாய்வு உள்ளவர்கட்கு சுக்கு கியாழத்துடன் மேற்படி உருண்டையை கொடுக்க வேண்டும். பெரு வயிறுக்கு தண்ணீரில் மேற்படி உருண்டையைக் கொடுக்க வேண்டும். அந்தந்த வியாதிகள் மேற்படி உருண்டையால் குணமாம். திருமாலின் ஆணையாம்.

கபோல ஜன்னிக்குத் தயிலம்

எருக்குன் வேர் சாறுநாழி
எலுமிச்சம் பழச் சாறுநாழி
முருங்கைப் பட்டைச் சாறுநாழி
முதிர்ந்த தேங்காய்ப் பால்நாழி
விரும்பும் கிராம்பு வசுவாசி
மேவும் வள்ளி சாதிக்காய்
சுரும்பும் ஏலம் லவுங்கமது
துய்ய நற்சீரகம் ஓமம். 781

எருக்கன் வேரின் சாறு நாழி அளவு, எலுமிச்சம் பழச்சாறு நாழி அளவு, முருங்கைப்பட்டை சாறு நாழி அளவு, தேங்காய்ப்பால் நாழி அளவு, கிராம்பு, வசுவாசி, சாதிக்காய், லவுங்கம், நற்சீரகம் ஓமம் மற்றும்.

துய்ய மதுரம் திப்பிலிமூலம்
தொகுத்த அமுக்கராதிப்பிலியும்
நையும் சாறு கொண்டதிலே
நாழிஎண்ணெய் தான்விட்டு
பையக் கரைத்து வடித்தெடுத்துப்
பகரும் சிரசில் பூசுவீராய்
மையப் புரியுங் குழலாரே
மாறும் கபோல நோக்காடே. 782

அதிமதுரம், திப்பிலிமூலம், அமுக்கிரா, திப்பிலி, மேற்படி சாற்றில் நாழி அளவு எண்ணெய்விட்டு சரக்குகளை இட்டு காய்ச்சி பதமாக இறக்கி வடித்து தலையில் பூச கபால நோக்காடு தீரும்.

தந்த உதிர வியாதிக்கு - வேறு

ஊண்ட வலிக்கும் பல்லடியாம்
உதிரம் சாய்க்கும் குணங்கண்டால்
தாண்டிக் காயும் கடகசிங்கித்
தக்க உள்ளிப் பெருங்காயம்
தோண்ட அரைத்து வேப்பெண்ணெய்
சுருக்காய்க் குடிப்பீர் உள்ளுக்கு
காண்ட நார்த்தம் இலையதனை
காடி அதனில் வேதுயிடே 783

பல் வலி, பல் ஈரில் ரத்தம் வடிதல், முதலிய குணம் கண்டால் கற்கடக சிங்கி, உள்ளி, பெருங்காயம், இவைகளை அரைத்து வேப்பெண்ணெயில் கலந்து உள்ளுக்கு கொடுக்க வேண்டும். நாரத்தம் இலையை காடியில் இட்டு வேது பிடிக்க வேண்டும்.

கண்ட வியாதிக்கு ஆக்கிராணப் புகை

கண்ணே வலிக்கும் தான்சிவக்கும்
கனக்க உடம்பு தான்காயும்
நண்ணே சோமன் ஆதிஉள்ளி
நல்ல எண்ணெய் நுணாப்பட்டை
விண்ணே புரக்க வேயரைத்து
வெந்து மெழுகு பதம்வடித்து
கண்ணே நாசி தலையிலிட
கடிய மிளகு புகைகாட்டே. 784

கண்வலி, கண் சிவப்பு, உடல்காயல் இவைகட்கு சோமனாதி உள்ளி, நல்லெண்ணெய், நுணாப்பட்டை, இவைகளை அரைத்து மேற்படி எண்ணெயிலிட்டு காய்ச்சி மெழுகு பதமாக வடித்து கண், நாசி, தலை இவைகளில் இட்டு மிளகு புகையை காட்ட வேண்டும்.

வயிறு பிடுங்கும் வலிஎடுக்கும்
வந்தே இரத்தம் தான் சொரியும்
வயிறு பொருமும் கீழ்வயிறு
வாகாய்த் தொப்புள் தான்வீங்கும்
வயிறும் அறிந்து நோமிதற்கு
மருந்து கிராம்பு பெருங்காயம்
வயிறு சுக்கு உள்ளிசுட்டு
வாகாய் அரைத்துத் தேங்காய்ப்பால். 785

வயிறு வலியெடுத்து, இரத்தம் சொறியும், வயிறு பொருமல், கீழ் வயிறு, தொப்புள் இவைகள் வீங்கும், இதற்கு மருந்து கூறுகிறேன். கிராம்பு, பெருங்காயம், சுக்கு உள்ளி இவைகளை சுட்டு அரைத்து தேங்காய்ப் பாலுடன் உட்கொள்ள வேண்டும். மேற்படி நோய்கள் தீரும்.

தேங்காய்ப் பாலிட் உட்கொள்ள
    தீரும் காட்டே.. பில்லி
பாங்காய்க் கரம் கம்பிளிமயிரும்
    பகரும் மூஞ்சூர் மாட்டுக்குழம்பு
தாங்காமலே புகை காட்டிச்
    சத்தும் இதனைப் புகையிலிட
நீங்கா வியாதி எல்லாந்தான்
    நில்லா தூரம் ஓடிடுமே. 786

காட்டேரி, பில்லி, இவைகட்கு கருப்பு கம்பிளி மயிரும், மூஞ்சூர், மாட்டுக் நழம்பு இலைகளை புகையிட்டு புகையை காட்ட மேற்படி காட்டேரி, பில்லியும் அதனால் ஏற்படும் நோய்களும் தீரும்.

கண்ட வியாதிக்குத் தைலம்

மண்டைக் காது வலியெடுக்கும்
    வாகாய்க் காதில் எழுச்சியுண்டாம்
பண்டு சீழும் தான்விழுந்து
    பகர் மாங்கிஷமும் புறப்பட்டு
கண்டோம் கோழிக் குஞ்சதுபோல்
    காதி னாலே புறப்பட்டு
அண்டு சொன்னோம் விழும்என்று
    அடுத்த மருந்தும் உரைத்தோமே. 787

காது வலி எடுக்கும், காதில் எழுச்சி உண்டாகும். சீழ் வடியும், தூர்மாமிசம் உண்டாகும். கோழிக்குஞ்சு போல் காதில் வெளிப்படும். இதை நீக்குவதற்கு மருந்து சொன்னோம்.

உரைத்தார் அஞ்சு எண்ணெயுடன்
    உத்த காசா எண்ணெயதும்
பெருத்த காயம் கெந்தகமும்
    பேணும் கிராம்பூ நேர்வாளம்
வருத்த மான அரிதாரம்
    வசம்பு துரிசு மனோசிலையும்
திருத்தும் வேப்பம் பிசின்கூட்டிச்
    சேர அரைத்து விடநாகம். 788

ஐந்து எண்ணெய், பெருங்காயம், கெந்தகம், கிராம்பு பூரம், நேர்வாளம், அரிதாரம், வசம்பு, தூரிசு, மனோசிலை, வேப்பம் பிசின், இவைகளை கூட்டி அரைத்துக் கொள்.

சேரும் வெள்ளாட்டி னுடைய
    சிதறும் கோமியத் திலப்பா
காரும் வெடியின் உப்புடனே
    கருதிக் கூட்டி பதத்தெருத்து

சீரும் சிரசில் தான்தேய்த்துச்
செய்ய காதில் ஊறவிட்டுப்
பாரு நாலு நனைத்துபதம்
பாங்காய்ப் பண்ணிக் கொள்வீரே. 789

வெள்ளாட்டின் கோமியம் பிடித்து வெடியுப்புக் கூட்டி மேற்படி அரைத்த சரக்கு எண்ணெய் இவைகளை கலந்து பதமாக எரித்து தேய்த்து காதில் விட்டுக் கொள்ள மேற்படி நோய்கள் தீரும்.

பிடரி நோயும் தலைவலிக்கும்
பின்னும் வயிறு தான்பெருகும்
நடைசேர் பில்லி குணமதுக்கு
நாடு மருந்து நீகேளாய்
கொடிசேர் சீந்திற் கிழங்குடனே
கூறும் உள்ளிப் பெருங்காயம்
வடிவு சேருந் தான்றியுடன்
வலம்புரிக் காய் நீரரைத்து. 790

பிடரி நோய், தலைவலி, வயிறு பெருத்தல், பில்லி குணம், இவைகட்கு மருந்து கூறுகிறேன். சீந்தில் கிழங்கு, முள்ளி, பெருங்காயம், தான்றிக்காய், வலம்புரிக்காய் இவைகளை நீராலரைத்துக் கொள்.

அரைத்துக் கரைத்துப் பசும்பாலில்
அன்பாய் ஏழு நாள்குடியும்
உரைத்த கோழி மயிருடனே
உதவு முட்டையின் கோதும்
திருத்த மாகப் புகைகாட்டத்
தீரா நடையின் பில்லியது
வருத்த மாக ஓடிவிடும்
மாயோன் ஆணை உண்மையிதே. 791

மேற்படி முறையில் அரைத்து பசும்பாலில் ஏழுநாள் குடிக்க வேண்டும். கோழி மயிர், முட்டைக் கோது இவைகளை புகையிட்டு புகையைக் காட்ட பில்லியினால் ஏற்படும் பல நோய்கள் நீங்கும். இது மாயோனின் ஆணையாகும்.

நீரின் முள்ளி தண்டுடனே
நீண்ட இலையும் ஒரு பிடியாம்
பாருங் கடுக்காய் மிளகுடனே
பாக்கு மிருப்புக் கிட்டமுடன்
சீரும் பெறவே அரைப்பலங்கேள்
செய்ய சுக்கும் ஒருபிடியாம்
காருந் தண்ணீர் நாலொன்றாய்க்
காய்ச்சிக் கொடுக்கக் குணமாமே. 792

நீர்முள்ளி தண்டு, நீர் முள்ளி இலை ஒரு கைப்பிடி, கடுக்காய், மிளகு, பாக்கு, இரும்புகிட்டம் இவைகள் அரைபலம், சுக்கு ஒரு கைப்பிடி அளவு எடுத்து தண்ணீர்விட்டு நாலுக்கு ஒன்றாக காய்ச்சிக் கொடுக்க குணமுண்டாகும்.

சாதிக்காய் கிராம்பூ வசுவாசி
கருவேர்க் கொம்பு மிளகுடனே
நீதிக் கடுக்காய் அயமோதம்
நிறமாந் திப்பிலி நர்ச்சீரம்
ஈது வெல்லாம் ஒருநிறைகொண்டு
இடித்துச் சீலை வடிகட்டி
கோது பிரண்டை தானிடித்துக்
கூட்டும் பற்பம் ஒன்றாக்கே. 793

சாதிக்காய், கிராம்பு, வசுவாசி, சுக்கு, மிளகு, கடுக்காய், அயமோதம், திப்பிலி, நற்சீரகம், இவைகளை சமமாக எடுத்து இடித்து தூள் செய்து துணியில் வடிகட்டிக் கொள்ள வேண்டும். பிரண்டையை இடித்து மேற்படி தூளுடன் ஒன்றாக கலக்கிக் கொள்ள வேண்டும்.

கூட்டும் பற்பந் தன்னையினிக்
கொள்ளுந் தேனில் தானருந்த
மீட்டு மருந்து வதுகொள்ளில்
வேரு கடியின் அளவாகும்
நாட்டு மூலக் கடுப்புடனே
நல்ல கழிச்சல் இவைமாறும்
தீட்டுஞ் சிவனார் தன்னாணை
திண்ணம் இதுதான் செப்பினோமே. 794

மேற்படி கலந்ததை வெருகடி அளவு தேனில் உட்கொள்ள வேண்டும். மூலக்கடுப்பு, கழிச்சல் இவைகள் தீரும். சிவன் ஆணை இது பொய்யாகாது, திண்ணமாக குணமாகும்.

மூல வாய்வு கழிச்சலுக்கு
முந்துங் கிராம்பூர் வசுவாசி
தாலம் வீழும் அதிவிடையங்
சாதிக்காய் நர்ச் சீரகமும்
கோல வத்தித் திப்பிலியுங்
குணமாங் கஞ்சா வபின்மருந்து
சீலம் பெறவே ஓரொன்று
சேருங் களஞ்சி ஒன்றாமே. 795

மூல வாய்வு, கழிச்சல் இவைகட்கு கிராம்பு வசுவாசி, அதிவிடையம், சாதிக்காய், நற்சீரகம், திப்பிலி, கஞ்சா, அபின் இவைகள் வகைக்கு கழஞ்சி எடை.

ஒன்றாய் எடுத்து விளம்பதமாய்
ஒட்டில் வறுத்துப் பொடிபண்ணி
நன்றாம் வெருகின் பிடியளவு
நாளே தின்று வருவீராய்
அன்றே போகும் கிராணிமுதல்
லகுவைக் கட்டித் தான்தீரும்
மன்றோர் அறிய மூலவாய்வு
வளருங் கழிச்சல் மாறிடுமே. 796

மேற்படி பொருட்களை லேசாக வறுத்து தூள் செய்து வெருகடி அளவு உட்கொண்டு வர கிராணி, லகுவகை கட்டி, மூல வாய்வு, கழிச்சல் இவைகள் தீரும்.

மானே சர்வ குன்மத்திற்கும்
வளரு மிரதம் பலம்பத்து
தேனே சிலையும் பலமஞ்சு
செய்ய விலிங்கம் பலம்நாலு
தானே கெந்தகம் பலமாறு
தயவாய் நாபி பலமெட்டு
கானே அப்பிரகம் பலம்பத்து
கருதுந் துத்தம் பலம்ஆறு. 797

சகல குன்மத்திற்கும் மருந்து கூறுகிறேன். இரசம்பத்து பலம், மனோசிலை ஐந்து பலம், லிங்கம் நான்குபலம், கெந்தகம் ஆறுபலம், நாபி எட்டுபலம், அப்பிரேகம் பத்துபலம், துத்தம் ஆறுபலம் மற்றும்.

ஆறுந் துரிசி பலமஞ்சு
அடுத்த பொய்த்தலை கையாந்தகரை
நாறுஞ் சரகம் வார்த்தரைத்து
நாலு நாளுந் தப்பாமல்
மீறுஞ் செம்பு வட்டிற்பூசி
மிட்ட கத்தில் வேகவைத்து
கூறும் பற்பம் தின்னும்வகை
கொள்ளும் இதரம் பலமஞ்சே. 798

துரிசு ஐந்துபலம், மேற்படி சரக்குகளை அளவுடன் எடுத்து பொற்றிலை கையாந்தகரை சாறு கொண்டு நாலுநாள் விடாமல் அரைக்க வேண்டும். அரைத்ததை செம்பு வட்டில் பூசி வேக வைத்து பார்க்க தூளாகும். இவ்வாறு ஐந்து தடவை செய்ய பற்பம் ஆகும்.

பதமாங் கூகை நீருடனே
பகரும் பலந்தான் எட்டுக்கொள்
இதமாம் ஈயம் பலமஞ்சு
மின்னங் காரீயம் பலமஞ்சு

சதமாங் காந்தம் பலமஞ்சு
தங்க வாலம் வேர்நறுக்கி
கதமாங் குழிக்கல்லில் அரைத்துக்
கனத்த செம்பு வட்டில்பூசே. 799

மேற்படி பற்பம் ஐந்துபலம், கூகை நீரு எட்டுபலம், வெள்ளீயம் ஐந்து பலம், காரீயம் ஐந்துபலம், காந்தம் ஐந்து பலம் தங்கவாலம் வோ் நறுக்கிக் கொண்டு மேற்படி பொருட்களுடன் சேர்த்து செம்பு வட்டில் பூசி முன்போல் செய்திடு பற்பமாகும்.

பூசி வைத்துத் திண்ணும்படி
புகழும் இஞ்சிச் சாற்றிடவும்
வீசும் அந்நெய் தனிற்கொள்ள
மிகுந்த வலிக்குப் பற்பமாய்க்கொள்
நீசு மிந்த பற்பமதை
நிறையாய்க் குன்றித் தானருந்த
கூச வேண்டாம் பற்பமதைக்
குன்றி பொருக்கத் தின்பீரே. 800

இஞ்சிச்சாறு, நெய், இவைகளில் உட்கொள்ள வலி நீங்கும், பற்பத்தை குன்றி அளவு உட்கொள்ள வேண்டும்.

தின்பீர் அந்த பற்பமதைத்
திரண்டு வரண்டால் நெய்வடிக்க
முன்பே கூவளை பாதரிமுன்னை
முகரும் பெரிய வாகையின்வேர்
அன்பாஞ் சிறிய வழுதுணைவேர்
யானை நெருஞ்சி மாவிலங்கை
நன்பாம் பேராஞ் சித்தமல்லி
நல்ல கொடுவேல் வேர்தேடே. 801

பற்பத்துடன் நெய் ஒன்று கூறுகிறேன், கூவளை, பாதரி, முன்னை, முசுக்கை, பெருவாகை, சிறுவழுதலைவேர், நெருஞ்சில்வேர், மாவிலிங்கை பேராஞ்சி, கொத்தமல்லி, கொடிவேலிவேர்.

தேடுங் கோட்டந் திப்பலியுந்
தீட்டும் அத்தித் திப்பிலியுங்
கோடு முலுவாஞ் சதகுப்பைக்
கோடும் வெட்பால் விளாவரிசி
நாடு மதும் நற்சீரம்
நல்ல வாலு வுளுவையுடன்
ஓடும் வச்சார் புகாரரிசி
ஓதுங் கிராம்பூர் சாதிக்காய். 802

மேற்படி சரக்குகளுடன், கோஷ்டம், திப்பிலி, யானை திப்பிலி, சதகுப்பை, வெட்பாளை அரிசி, விளா அரிசி, அதி மதுரம், நற்சீரகம், வாலுவுளுவை அரிசி, காரிசி, கிராம்பு, சாதிக்காய், மற்றும்.

நல்ல மாஞ்சில் நாகப்பூ
நலமாம் களஞ்சி நெய்குறுணி
வல்ல பசும்பால் முக்குறுணி
வாகாய்ப் பாலிலே அரைத்து
அல்லும் பகலும் உண்பீராய்
அரிய கடுப்புத் தானகலும்
நில்லும் பற்பம் தின்றுவந்தால்
நேராய் நெய்யை அருந்துவதே. 803

சடாமாஞ்சில், சிறுநாகப்பூ, மேற்படி சரக்குகள் வகைக்கு கழஞ்சிஎடை, குறுணி, அளவு நெய், மூன்று குறுணி அளவு பசும்பால் மேற்படி சரக்குகளை பாலில் அரைத்து மேற்படி நெய்யுடன் கலந்து எரித்து வாங்கி காலை, மாலை உட்கொள்ள கடுப்பு நீங்கும், பற்பத்தை உண்ணும்வேளையில் நெய்யைச் சேர்த்து உண்ணவேண்டும்.

செவ்வள்ளி காந்தங் கொத்தமல்லி
சேர்ந்த கன்னார்க் கர்க்கடகம்
கொவ்வை இதழாய் அமுக்கூராக்
கூறுங் கருஞ்சீரிரு வியுடன்
கவ்வை மோரில் இருவிதன்னைக்
கடுக வூற வேகவைத்து
வெவ்வே ரரைத்து நேர்வாளம்
மிகவே சுத்தி பண்ணுவீரே. 804

செவ்வள்ளி, காந்தல், கொத்தமல்லி, கர்க்கடகம். கோவையிலை கருஞ்சீரகம், நாயுருவி, இச்சரக்குகளை சமனாக தனித்தனியாக மோரில் ஊறவைத்து அரைத்து நேர்வாளம் சேர்த்துக்கொள்.

பண்ணும் வாளங் களஞ்சியது
பதினெட் டாகக் கொண்டதுவும்
எண்ணுங் கொமட்டிக் காய்தன்னை
இரண்டாய் வெட்டிக் கொண்டபின்பு
நண்ணும் பெரிய கொடிக்கள்ளி
நல்ல பட்டை உடன்போட்டு
தின்ண மாகவே அவித்துத்
துய்ய ஆமணக் கெண்ணெய்எடேன். 805

மேற்படி, நேர்வாளத்தை பதினெட்டு கழஞ்சி சேர்த்துக் கொள்ளவேண்டும். கொமட்டிக்காயை இரண்டாய் வெட்டிக் கொண்ட பின்பு, கொடிகள்ளிப் பட்டைச்சேர்த்து வேகவைத்து ஆமணக்கு எண்ணெயுடன் சேர்த்துக்கொள்.

எடுத்த எண்ணெய் உடன்விட்டு
இதுவுங் குழம்புப் பதமிறக்கி
தொடுத்த எண்ணெய் களஞ்சிதின்ன
சுகமாய் வென்னீர் தான்கொள்ள
பொடித்த குன்மம் பதினெட்டும்
போகா வாய்வும் விட்டகலும்
படித்த சிவனார் தன்னாணை
பகருங் குன்மம் ஓடிடுமே. 806

எண்ணெயை குழம்பு பதமாகக் காய்ச்சி வடித்து இறக்கிக் கொள். இவ்வெண்ணெயை கழஞ்சிஎடை வென்னீருடன் சேர்த்து உட்கொள்ள, பதினெட்டுவகை குன்மம், வாய்வு இவைகள் நீங்கும், சிவனார் ஆணை குன்மவகைகள் இதனால் திண்ணமாகத் தீரும்.

வாந்திக்குநெய்

கோட்டான் பழமும் நறுநெய்யுங்
கொள்ளுந் துருசுந் தேசிப்பழமும்
மாட்டா கவ்வே ஒன்றாக்கி
வருத்திக் கொடுக்கச் சத்திபண்ணும்
மூட்டா மடைப்பின் சிலேட்டுமமும்
முறிந்து ஓடுஞ் சிவனாணை
போட்டா கணிரென் றெண்ணாதே
பொருந்துஞ் சத்தி எடுபடுமே. 807

கோட்டான்பழம், நெய், துரிசு, தேசிப்பழம், இவைகளை மேற்படி நெய்யிலிட்டு வறுத்துக் கொடுக்க அடைப்பு சிலேத்துமம் குணமாம். இது சிவனாணை சத்தி எடுபடும்.

பெரும்பாட்டுக்கு

ஆலங் கொழுந்து மதினமுது
மான பூனை அதின்வேரும்
கோல மாவாரை வேர்பட்டைக்
குணமாம் பசும்பால் தனிற்கொடுக்க
ஆலம் புகழும் பெரும்பாடு
அற்றே விழுந்து மாறிவிடும்
காலன் வந்து மிடுகானே
கருது மருந்தும் இதுவாமே. 808

பூனைவேர், ஆவாரை வேர்பட்டை, இவைகளை பசும்பாலில் கொடுக்க பெரும்பாடு குணமாகும்.

கொம்மட்டிக் காய் இருபதுதான்
கொண்டு வந்து வைக்கோலில்
செம்மை யாகக் கட்டியதைத்
திரும்பச் சுட்டு ரெண்டுபடி

உம்மை யாகச் சாறுகொண்டு
　　உதவுங் குழம்பு பதங்காய்ச்சி
நம்மை விடைய மிளகுசுக்கு
　　நல்ல கடுக்காய் திப்பிலியே. 809

கொம்மட்டிக்காய் இருபது எடுத்து வைக்கோலில் கட்டி நெருப்பில் சுட்டு இரண்டு படிசாறு எடுத்து குழம்பு பதமாக காய்ச்சிக்கொள்ள வேண்டும். அதிவிடையம், மிளகு, சுக்கு, கடுக்காய், திப்பிலி, மற்றும்.

கடிய தான்றி நெல்லிமுள்ளிக்
　　கனத்த காயம் இந்துப்பு
வெடியுப்புடனே கூவளையும்
　　மேவும் விழாவுஞ் சவுக்காரம்
துடிசேர் கடுகு ரோகணியும்
　　சொல்லு முப்பு கல்லுப்பு
பொடிசேர் உப்பு வெண்காரம்
　　பொருந்துஞ் சீனக் காரமுமே.

தான்றிக்காய், நெல்லிமுள்ளி, பெருங்காயம், இந்துப்பு, வெடியுப்பு, கூவளை, சவுக்காரம் கடுகுரோகணி, உப்பு, கல்லுப்பு, வெண்காரம், சீனாக்காரம் மற்றும்.

சீனக் காரம் நவாச்சாரம்
　　செய்ய எவச்சாரங் கருநாலாம்
தேனே நச்சீர் வயமோதும்
　　செய்ய கடுகு விராகனிடை
தானே மூன்று விராகனிடை
　　தக்க விளாவின் விரைகொண்டு
ஊனே இந்தக் கியாழத்தில்
　　ஒக்கத் தூவி விளக்கெண்ணெய். 811

நவாச்சாரம், எவச்சாரம், நற்சீரகம், கடுகு, இவைகள் வகைக்கு விராகனிடை, விளாவின் விதை மூன்று விராகனிடை, மேற்படி கியாழத்தில் இச்சரக்குகளைக் கூட்டி விளக்கெண்ணெய் சேர்த்திடு.

என்ணெய் நெய்யும் விட்டுக்கிளறி
　　இறக்கிப் பதத்தில் நெல்லிக்காய்
தின்னும் பொழுது அந்தளவு
　　சேரும் வெல்லஞ் சர்க்கரையில்
நன்றாய்ப் பிரட்டித் தின்பீராய்
　　நாடும் வாய்வு பெருவயிறு
சொன்னோம் அக்கினி மாந்தமுடன்
　　துய்ய குன்மம் பீலிகைபோம். 312

மேற்படி எண்ணெயுடன், நெய் விட்டுக் கிளறி பதமாக இறக்கிக் கொள், நெல்லிக்காய் அளவு வெல்லம், சக்கரை, இவைகளில் கொடுக்க வாய்வு, பெருவயிறு, அக்கினி மாந்தம், குன்மம், பீலிகை, இவைகள் குணமாகும்.

புத்தஞ்சாரதி

வட்டத் திருப்பிக் கொடுவேலி
வாடுஞ் சுக்குப் பெருங்காயம்
கட்டுந் திப்பிலி மிளகுடனே
கடிய மஞ்சள் லவணமுமாம்
இட்ட சீரகங் கொத்தமல்லி
இசைந்த சங்கம் வேருடனே
திட்ட மான மோதகமும்
செய்ய கருஞ்சீர் எவச்சாரம். 813

வட்டத்திருப்பி, கொடுவேலி, சுக்கு, பெருங்காயம் திப்பிலி, மிளகு, மஞ்சள், லவணம், சீரகம், கொத்தமல்லி, சங்கம்வேர், மோதம், கருஞ்சீரகம், எவச்சாரம், மற்றும்.

செய்யு மாலின் கிழங்குடனே
செவ்வியஞ் சாற் வேர்கூட்டி
வையம் புகழத் தூளாக்கி
வளருந் தேசிச் சாறரைத்து
நையுங் களஞ்சி பிரமாணம்
நன்றாய் உண்டை தான்பண்ணி
ஐயம் அறவே ஒருவுண்டை
யசனம் பண்ணு முதற்கொள்ளே. 814

மாலின்கிழங்கு, செவ்வியம், இவைகளை சமனெடை எடுத்து தேசிச் சாற்றால் அரைத்து கழஞ்சி அளவு உருண்டை செய்திடு, வேளைக்கு ஒரு உருண்டை உட்கொள்ள வேண்டும்.

கொள்ளே அசனந் தான்செரிக்கக்
கூடும் பக்கச் சூலையும்போம்
அள்ளே வயிற்றுச் சூலையுடன்
ஆரோசிகமாஞ் சூலைகளும்
பிள்ளே பிறவி மூக்குதலம்
பீலிகையும் மகோதரமும்
தள்ளே கிராணி கழிச்சல்களுந்
தக்க சூலை ரோகமும்போம். 815

மேற்படி வகையில் உட்கொள்ள பக்கசூலை, வயிற்றுச் சூலை, அரோசிகம், சூலைகள், பிறவிமூக்குதலம், பீலிகை, மகோதரம், கிராணி, கழிச்சல், சூலை நோய் இவைகள் தீரும்.

நார்த்தங்காய் கடுகு

வில்லை நெருஞ்சி சித்தாமட்டி
மேவுஞ் சாரணை வேருடனே
நல்ல கடுக்காய் பழங்கிட்டம்
நாடுங் காட்டா மணக்குடன்வேர்
இல்லங் காட்டுக் கருணையுடன்
இருப்பு சல்லிப் பலமிரண்டு
சொல்லுங் காடி கோமயமுந்
துகளு மோரும் உளத்தண்ணீர். 816

நெரிஞ்சில், சித்தாமுட்டி, சாரணைவேர், கடுக்காய், பழங்கிட்டம், காட்டாமணக்கின் வேர், காட்டுக் கருணை, இரும்புச் சல்லி இரண்டுபலம் இவைகளுடன் காடி, கோமயம் மோரும் கூட்டிடு.

தண்ணீரிதுகள் எட்டு மரைக்கால்
தானே இந்த மருந்துகளை
கொண்ணோ பிடிக்சூ லதில்போட்டு
குடிலக் குறுணியாய்க் காய்ச்சி
மின்னே வடித்து வதில்பத்து
மேவு நார்த்தம் பழம்பிழிஞ்சு
அன்னே உள்ளி பலம்பத்து
ஆன இந்து பலம்பத்தே. 817

எட்டு மரைக்கால் தண்ணீரில் மேற்படி சரக்கு நீர் வகைகளை கூட்டி அடுப்பேற்றி குறுணி அளவாக காய்ச்சி வடித்து அந்தக் கியாழத்துடன் நாரத்தம் பழத்தைப் பிழிந்தசாறு, உள்ளி இவைகள் பத்துபலம், இந்துப்பு பத்துபலம் மற்றும்.

பத்தே இந்த மருந்துதனை
பாகக் கியாழ மாய்க்காய்ச்சி
உத்தே பயித்தியம் வந்தவற்கு
உடனே நறுநெய் படியிரண்டு
சித்தா மணக்கு யெண்ணெய்படி
சேர ஒன்று கூடவிட்டு
மெத்து மேற பெருங்காயம்
மேவுஞ் சாதிக் காயுடனே. 818

மேற்படி கியாழத்தில் மேற்படி சரக்குகள் சேர்த்து கியாழமாக காய்ச்சி, நெய் இரண்டுபடி, சிந்தமாணி எண்ணெய் ஒரு படி இவைகளை விட்டு பெருங்காயம், சாதிக்காய், மற்றும்.

உடனே சத்தி எவச்சாரம்
ஓங்குங் கிராம்பூ வடசாரம்
திடனாம் புங்கங் கொட்டையுடன்
சேருந் திப்பிலி மிளகுசுக்கு

நடன மான கடுவசம்பு
நல்கும் பஞ்ச லவணமுடன்
அடவாஞ் சாரணைவேர் கடுக்காய்
அகிலும் ஏலம் சிறுமூலம். 819

சத்திசாரம், எவச்சாரம், கிராம்பு, வடசாரம், புங்கம் கொட்டை, திப்பிலி, மிளகு, சுக்கு, வசம்பு, பஞ்சலவணம், சாரணைவேர், கடுக்காய், ஏலம், சிறுமூலம் மற்றும்.

ஏருந் திப்பிலி மூலமுடன்
இசைந்த பெரிய திப்பிலியும்
கோலத் திப்பிலி செவ்வியுடன்
கொடிவேல் வேரின் பட்டையுடன்
ஞாலம் புகழும் நர்ச்சீரகம்
நல்ல கருஞ்சீர் தேவதாரம்
மேலும் அரத்தைத் தான்றிக்காய்
மேவு நெல்லி உள்ளிமஞ்சள் 820

திப்பிலிமூலம், பெரும்திப்பிலி, திப்பிலி, செவ்வியம், கொடிவேலி வேர்ப்பட்டை, நற்சீரகம், கருஞ்சீரகம், தேவதாரம், அரத்தை, தான்றிக்காய், நெல்லி, உள்ளி, மஞ்சள் இவைகள் வகைக்கு இரண்டு வராகன் எடை.

மஞ்சள்திகழுங் கடைமருந்து
வராகன் இடைதான் ஈரிரண்டு
கொஞ்ச மிஞ்ச வறுத்துபொடி
கூறுங் கிட்டம் பலமூன்று
துஞ்சார் கோமூத்திர மதனில்
சுருக்காய் மூன்றுநாள் போட்டு
அஞ்ச வேண்டாம் அரைப்பொடிதான்
ஆன பலந்தான் மூன்றுகொள்ளே. 821

மேற்படி எடையில் எடுத்து சரக்குகளை வறுத்துப் பொடி செய்திடு. கிட்டம் மூன்று பலம் எடுத்து கோமூர்திரத்தில் மூன்று நாள் போட்டு வைத்திடு. மூன்றுபலம் அரப்பொடியை எடுத்திடு.

ஆன புளியின் இலைச்சாற்றில்
அன்பாய் பத்து தரம்வறுத்து
மானே கையான் தகரைச்சாற்
வார்த்தே அரைத்து மூன்றுதரம்
தேனே அடுப்பிலே மூடி
சிறு வசம்பு புடமிட்டு
தானே ‌பின்பு பொடிபண்ணி
தக்க கியாழத்தினில் தூவி. 822

மேற்படி அரப்பொடியை புளிஇலை சாறுவிட்டு பத்து தடவை வறுத்துக் கொள். கையான்தகரைசாறுவிட்டு மூன்று தடவை அரைத்ததை சட்டியிலிட்டு மூடி கவசம்செய்து சிறு புடமிடு, பின்பு தூள்செய்து மேற்படி சரக்குகளின் கியாழத்தில் தூவி தக்க பதமாக இறக்கிக்கொள்.

தக்க பதத்திலே இறக்கித்
 தான்றிக் காயின் அளவாக
ஒக்க அந்தி சந்திகொள்ளும்
 ஓடும் வியாதி தனைக்கேளும்
பக்க சூலை வாயுவெட்டும்
 பகருஞ் சோகை பாண்டுவுடன்
மிக்க சீதக் கடுகுடனே
 விகர்ப்பம் இதுகள் எலாந்தீரும். 823

மேற்படி மருந்தை தான்றிக்காய் அளவு காலை மாலை உட்கொள்ள பக்கசூலை, எட்டுவகைவாய்வு, சோகை, பாண்டு, சீதக்கடுப்பு, விகர்ப்பம் இவைகள்தீரும்.

சுக்குப் பத்து பலங்கொள்ளுந்
 துய்ய மிளகு பலமூன்று
ஒக்க கடுகு பலமூன்று
 ஓமந் தானும் பலமூன்று
மிக்க முள்ளி பலமிருபது
 மேவுங் காயம் பலமூன்று
தக்க கருஞ்சீர் பலமரைக்கால்
 சரியாய் ஓட்டில் வருத்துயெடேன். 824

சுக்கு பத்துபலம், மிளகு மூன்றுபலம், கடுகு மூன்றுபலம், ஓமம் மூன்றுபலம், முள்ளி இருபதுபலம், பெருங்காயம் மூன்று பலம், கருஞ்சீரகம் அரைக்கால்பலம், இவைகள் ஓட்டிலிட்டு வறுத்து எடுத்துக் கொள்.

வருக்குஞ் சரக்கு எல்லாந்தான்
 வளருங் காயந் தன்னைவிட
சுருக்க தாகப் பொடிபண்ணித்
 தூய பனையில் கட்டியது
நிருக்கும் பலந்தான் மூன்றுகொண்டு
 நேராத் துத்தி உடன்போட்டு
பெருக்குங் காய முரிக்கிவிட்டுப்
 பிறகு உள்ளி நறுக்கியிடேன். 825

மேற்படி சரக்குகளைப் பொடிசெய்து பனைவெல்லம் மூன்று பலம் கூட்டி துத்தியுடன் சேர்த்து பெருங்காயத்தைப் போட்டு உள்ளியை நறுக்கிச் சேர்த்திடு.

உள்ளி நருக்கி இட்ட பின்பு
உடனே எள்ளில் எண்ணெய்விட்டு
மெள்ளச் சட்டி தனில்போட்டு
விரும்பி பிசறிக் காயமாக்கி
துள்ளு நெருப்பில் வேகவைத்து
சுருக்காய் கலையந் தனில்கட்டி
கொள்ளும் வெருகடிப் பிரமாணம்
கூட்டும் பத்து நாளைக்கு. 826

மேற்படி சரக்குப் பொடிகளுடன் எள்ளெண்ணெய்விட்டு சட்டிதனில் போட்டு பிசறி காயம் போல் செய்து நெருப்பில் வேகவைத்து கலையந்தனில் இட்டு தினமும் வெருகடி அளவு பத்து நாட்கட்கு உட்கொள்ள வேண்டும்.

பத்து நாளைக் குள்ளாகப்
பார வயிறு தான்கரையும்
நித்தம் பிடித்த நோயமாயு
நிறமு மிகுந்து பலனுண்டாம்
மத்து முடலில் பலபிணியும்
மாறும் வென்னீர் தான்குடியும்
கத்தச் சடையோன் தன்னாணை
கருதும் மருந்து இதுவாமே. 827

பத்து நாளைக்குள் பெருவயிறு குணமாகும், உடல் பல முண்டாகும், உடலில் உள்ள பல நோய்கள் தீரும். வென்னீர் குடிக்க வேண்டும்,கற்றைச்மையோனின்,ஆணை இது. வியாதிகளை நீக்கும் நல்ல மருந்து.

சோபத்துக்கும் சுரத்துக்கும் விஷபாகத்துக்கும் மருந்து

வட்டத் திருப்பி குறிஞ்சான்வேர்
வளருஞ் சிறுகாஞ் சொறியின்வேர்
கட்டப் பிரண்டை வேருடனே
காவடடம் புல்லுக் காவளைவேர்
தொட்ட புங்கு வேர்ப்பட்டை
துடரு முருக்கம் பட்டையுடன்
இட்ட கொன்றைப் பட்டையுடன்
இசைந்த பாவட்டம் வேர்தேடே.

வட்டத்திருப்பி, குறிஞ்சன்வேர், சிறு காஞ்சொறிவேர், பிரண்டைவேர், காவட்டம் புல்லு, காய்வேளைவேர், புங்கம் வேர்ப் பட்டை, முருக்கம்பட்டை, கொன்றைப்பட்டை, பாவட்டம் வேர் மற்றும்.

தேடே வெப்ப மலைதண்டும்
செய்யும் பிரண்டைத் தண்டுடனே
நாடாய்ப் பாதிரிபட்டையுடன்
நாய் வேளைவேர் கூவளைவேர்

கூடாய் மணலிச் சமூலமாம்
கூவளை வேருஞ் சுண்டித்தண்டும்
ஈடா மாமலைத் தண்டுமிலை
மிசையுங் கோவைத் தண்டுடனே. 829

வெப்பமலைத் தண்டு, பிரண்டைத் தண்டு, மேற்படி வகை பட்டை, நாய்வேளை வேர், கூவளைவேர், மணலிச் சமூலம், கூவளைவேர் சுண்டித்தண்டு, மலைத்தண்டு இலை, கோவைத் தண்டு மற்றும்.

கோவே பூசணித் தண்டுகொள்ளு
கொடிய சுரையின் தண்டுடனே
நாடே சொன்னோம் கத்தாழை
நார்த்தஇலை கீழ்நெல்லி சமூலம்
போடே நீரில் முள்ளியிலை
புகழும் அல்லி இலையுடனே
தாடே கொட்டைப் பாசியிலை
தருமாந் துளிரு சாறுடனே. 830

பூசணித்தண்டு, கொள்ளுகொடி, சுரைதண்டு, கற்றாழை நாரத்தம் இலை, கீழ்காய்நெல்லி சமூலம், நீர்முள்ளி இலை, மல்லி இலை, கொட்டைப்பாசி இலை, மாந்துளிர் சாறு.

உரிய சாறு அதுதனிலே
உத்தே அரைத்துக் கடைமருந்து
கரிய சீரம் நர்ச்சீரம்
கடிய அரத்தைச் சதகுப்பை
அரிய திப்பிலி தேவதாரம்
ஆன மஞ்சிட்டி வசம்புள்ளி
தெரியுங் கோட்ட மரமஞ்சள்
செவ்விய மதுரஞ் சிறுமூலம். 831

மேற்படி கூறியவைகளுடன் மேற்படி மாந்துளிர் சாறு விட்டு அரைத்துக் கொள், கருஞ்சீரகம், நற்சீரகம், அரத்தை சதகுப்பை, திப்பிலி, தேவதாரம், மஞ்சிஷ்டி, வசம்பு, உள்ளி கோஷ்டம், மரமஞ்சள், செவ்வியம், அதிமதுரம், சிறுமூலம்.

மதுர மான எண்ணெய்க்கு
வகையாஞ் சரக்கு ஓரிரண்டு
அதிக மாகக் கழஞ்சியெட்டு
ஆனசத்தி சாரணைக் கிழங்கு
பதிசேர் முக்கூர் சித்தாமட்டி
பகர் நன்னாரி சாரணைவேர்
பதிய உத்தா மணிகாணி
புகழும் வட்டத் திருபபிவேர். 832

மேற்படி சரக்குகளை வகைக்கு இரண்டு கழஞ்சி எடுத்துக் கொண்டு சத்திசாரணை எட்டுபலம், சித்தாமுட்டி, நன்னாரி, சாரணைவேர், உத்தாமணி, வட்டத்திருப்பி வேர் மற்றும்.

வட்டக் கொளுஞ்சி வேர்துமிட்டி
வளரும் பிலியுங் கீழாநெல்லி
இட்ட வேர்கள் வகைகளஞ்சி
இதுவும் அரைத்துத் தான்கரைத்து
பொட்டப் பொரு வாயின்சாறும்
பொன்னே மெழுகு பலமிரண்டு
இட்டுக் காச்சி வடித்தெடுத்து
இந்தக் கியாழந் தனிற்கல ந்தே. 833

கொளுஞ்சிவேர், பேய் துமிட்டி, பிலி, கீழா நெல்லி, இவைகள் வகைக்கு கழஞ்சி எடுத்து அரைத்து கலந்து பொருவாயின் சாறு, பொன் மெழுகு இரண்டுபலம் இவைகளை கலந்து கொள். கலந்ததை கியாழமாக வைத்து வடித்துக் கொள்.

கலந்தே எண்ணெய் தான்விட்டுக்
காச்சி வடித்துப் பூசிநக்க
பிலந்தான் உண்டாம் வீக்கமும்போம்
பிறகு சோகந் தான்தீரும்
தலந்தான் மகிழ வருந்துவீராய்
தக்க குடிநீர் வகைசொலக்கேள்
நிலந்தான் புகழுங் கொத்தமல்லி
நெடிய அரத்தை மரமஞ்சள். 834

வடித்த கியாழத்தை எண்ணெயுடன் சேர்த்து காய்ச்சி வடித்து பூச வீக்கம், சோகம் இவைகள் தீரும், குடிநீர் வகைகளை கூறுகிறேன். கொத்தமல்லி, அரத்தை, மரமஞ்சள் மற்றும்.

மஞ்சள் திகழும் நாய்வேளை
வளரும் பிரண்டை சாரணையும்
அஞ்ச வேண்டாம் நீர்விட்டு
அழகாய்க் காய்ச்சிக் குடிப்பீராய்
மிஞ்சுஞ் சோபஞ் சுரம்வீக்கம்
மேவும் உடலில் நில்லாது
கெஞ்சு மிதுதான் விட்டோடும்
கேளுஞ் சிவனார் தன்னாணை. 835

நாய்வேளை, பிரண்டை. சாரணை இவைகளை நீர்விட்டு காய்ச்சி குடிக்க வேண்டும், சோபம், சுரம், வீக்கம் இவைகள் நீங்கும். இது சிவனாரின் ஆணை.

குன்மங் காணுங் கொல்லாது
கொடிய கடிய வியாதிகண்டீர்

கன்மங் காணும் ஒட்டாது
கள்ளிப் பாலும் இந்துப்பும்
தென்னங் காயில் உள்ளிட்டுத்
தீயச் சுட்டு ஆறியபின்
புன்னங் காயில் பாதிகொள்ளப்
போயே குன்மம் போய்விடும். 836

குன்மநோய் கொல்லாது, ஆனால் உபத்திரவம் உண்டாக்கும் நோய் இது. கள்ளிப்பால், இந்துப்பு, இரண்டையும் தேங்காய்க்குள் வைத்துச்சுட்டு ஆறியபின் எடுத்துப் புன்னைக் கடயில் பாதிகறை வீதம் உட்கொள்ள குன்மம் நீங்கும்.

வீக்கத்துக்குக் குடிநீர்

நீர்முள்ளி செம்முள்ளி சீந்தில்
நெடிய ஆடா தோடையின்வேர்
காடு சாவடு வேருடனே
கடிய வாழ மரத்தண்டு
கூர்சேர் வவ்வா லொட்டியுடன்
கொடிய பிரமி கொத்தமல்லி
சீர்சேர் நனைய விராட்டியுடன்
செய்ய கடுக்காய் வேற்கொம்பே. 837

நீர்முள்ளி, செம்முள்ளி, சீந்தி, ஆடாதோடைவேர், சாவடுவேர், வாழைத்தண்டு, வவ்வாலொட்டி, பிரமி, கொத்த மல்லி, கடுக்காய், சுக்கு மற்றும்.

கடிய உள்ளி நர்ச்சீரங்
கருதும் ஓமந் திப்பிலியும்
துடிசேர் மிளகு கருஞ்சீரந்
துய்ய சரக்கு வொருநிறையாம்
படிகொள் தண்ணீர் தான்வார்த்துப்
பாகாய்க் கொள் நாலொன்றாக்கி
விடிவேரந்தி குடிப்பீராய்
வீக்கஞ் சுரங்கள் விட்டோடும். 838

உள்ளி, நற்சீரகம், மோதகம் திப்பிசி, மிளகு, கருஞ்சீரகம், இவைகளை சமமாக எடுத்து ஒருபடி நீரிலிட்டு நாலுக்கு ஒன்றாக காய்ச்சி காலை மாலை, குடிக்க வீக்கம், சுரம், நீங்கும்.

காமாலைக்கு செய்யுங்குணம்

கண்டம் கனக்குந் தலைநோவும்
கனத்த இளப்பும் உண்டாகும்
பண்டே அசன மத்திரிக்கும்
பகருங் கடுக்காய் இருபதுகொள்

செண்டே காந்தம் பலமூன்று
செய்ய கிட்டம் பலமிரண்டு
விண்டோம் அரைப்பொடி பலமூன்று
மேவு நீலம் பலமூன்றே. 839

தலைபாரம், தலைநோய், இளைப்பு, இவைகட்கு கடுக்காய், இருபது, காந்தம் மூன்றுபலம், கிட்டம் இரண்டு பலம், அரப்பொடி மூன்றுபலம், நீலம் மூன்றுபலம், மற்றும்.

நிலஞ்சேர் தான்றி கருஞ்சீரகம்
நேராய் ஆறு காசிடைகொள்
கலந்தே மதுரம் காசிடைநால்
கருதும் புளியின் இலைச்சாறு
பிலந்தான் உடைய குப்பைமேனி
பெருகுங் கையாந் தகரையுடன்
தலந்தான் புகழ ஓவ்வொன்று
சாறுமுன் நாழி தான்கூட்டே. 840

தான்றிக்காய், கருஞ்சீரகம், இவைகள் வகைக்கு ஆறு காசிடை அதிமதுரம் நான்கு காசுஎடை, புளி, இலைச்சாறு, குப்பைமேனி, கையாந்தகரை, இவைகளின் சாறு மூன்று நாழி அளவு மற்றும்.

கூட்டுந் தேசிக் காய்தானுங்
குலவும் நாற்பது எனலாகும்
பூட்டும் புளிவிட் டேயரைத்து
புகழ எட்டு நாளூறி
ஊட்டு மோனவ நாளதனில்
ஒக்கக்காய்ச்சி உண்டைபண்ணி
தீட்டு காசின் அளவாக
செய் நாற்பதின்நாள் திண்பீரே. 841

தேசிக்காய் நாற்பது இவைகளை புளியம்சாறு விட்டு அரைத்து எட்டு நாள் ஊறவைத்து காய்ச்சி உருண்டையாக காசு அளவு செய்து நாற்பதுநாள் காலை, மாலை உட்கொள்ள வேண்டும்.

திண்ணும் பிறகு பத்தியங்கேள்
செய்யப் பசும்பால் நெய்முருங்கை
உண்ணும் பசளை இலையுடனே
உப்பு புளிதான் விட்டுவிடும்
சொன்னோம் வயிறு கழிந்தாக்கால்
துய்ய மிளகு நீர்கூட்டும்
நன்னும் தண்ணீர் தான்காய்ச்சி
நலமாய் ஆற வைப்பீரே. 842

மேற்படி மருந்துண்ணும்போது பத்தியம் இருக்க வேண்டும், பசும்பால் நெய், முருங்கை, பசளையிலை, இவைகள் ஆகும். புளி, உப்பு, நீக்க வேண்டும், வயிறு கழிச்சல் கண்டால் மிளகு நீர் சேர்த்துக்கொள்ளலாம், தண்ணீரை காய்ச்சி ஆற வைத்து பிடிக்க வேண்டும்

காய்ச்சி ஆறவைத்த தண்ணீர் குடிக்க குளிக்க

ஆறாய் ஓடி வயிர்கழியில்
அழகாம் வாயு தானெடுத்தால்
சாரே எடுத்து நீர்ப்பூலாத்
தக்கவேரை தானரைத்து
கூராந் தேசிக் காயினுடன்
குணமாய் இட்டே தான்குழைத்து
நீராந் தலையில் அப்பிவைக்க
நேராய்த் தண்ணீர் குளிகுடியும். 843

வயிறு கழிச்சலும் வாய்வு உண்டானால் நீர்ப்பூலா வேரை அரைத்து தேசிக்காயுடன் குழைத்து தலையில் தடவிக் கொண்டு மேற்படி காய்ச்சி ஆறிய தண்ணீரில் குளித்துவிட்டு குடிக்கவேண்டும்.

உள்ளி ஆமணக்கு எண்ணெய்தனை
உரைக்கக் கேளு மடமயிலே
விள்ளுங் கூவளை பெருங்குமிழும்
விளங்கு முன்னை பாதிரியும்
தெள்ளுஞ் சித்தா மணக்குடனே
சிறு வழுதலை கொடுவேலி
கொள்ளுஞ் சித்தமல்லி பேர்மல்லி
கொண்டு இவையோர் சரிநிறையே. 844

உள்ளி, ஆமணக்கு எண்ணெயை கூறுகிறேன், கூவளை, முன்னை, பாதிரி, சித்தாமணக்கு, சிறுவழுதலை, கொடு வேலிவேர், சிறுமல்லி, பெருமல்லி, இவைகளை சரிஎடை எடுத்திடு.

நிறையே யுள்ளி முப்பதின் பலமாம்
நேரா முள்ளி முப்பதுமாம்
மறைசேர் சுக்கு திப்பிலிமிளகு
வாகாநெல்லி தான்றி கடுக்காய்
இறையு மேலம் விளாவரிசி
எடுப்பீர் களஞ்சி பத்தாக
நறைசேர் நாழி தண்ணீரில்
நாழி வார்த்து நாலொன்றாய். 845

உள்ளி முப்பது பலம், முள்ளி முப்பதுபலம், சுக்கு, மிளகு, திப்பிலி, நெல்லி, தான்றிக்காய், கடுக்காய், விளாவரிசி பத்து கழஞ்சி, இவ்வகை சரக்கு களில் தண்ணீர் நாழி அளவு விட்டு நாலுக்கு ஒன்றாக காய்ச்சிக் கொள்.

ஒன்றாய்க் காய்ச்சி அந்நீரில்
உதவ அரைத்துக் கடைமருந்து
நன்றாஞ் செவ்வி யரனுக்கு
நாடு மத்தி திப்பிலியும்
கொண்டாம் பெரிய காயமுடன்
கூறுஞ் சிறிய மூலமதும்
கண்டோம் வகைக்கு ஒருபலங்கொள்
கடுக அரைத்துக் கரைமருந்தே. 846

காய்ச்சிய நீரில், செவ்வியம், திப்பிலி, பெருங்காயம், சிறுமூலம், இவைகளை மேற்படி நீரிலிட்டு ஒருபலம் நன்றாக அரைத்து நீருடன் சேர்த்துக் கொள்.

சூலைக்கு எண்ணெய்

மருந்தா மணக்கு எண்ணெய்நாழி
வாகாய்க் கள்ளிப் பால்நாழி
திருந்தா இதுகள் தான்புகட்டி
செய்ய மெழுகு பதம்வடித்து
இருந்தே நீரும் உண்பீராய்
ஏகும்.சூலைப் பெருவயிறு
பிரிந்தே சூலப் பெருவயிறு
பேசு மொத்து வாய்வகலும். 847

ஆமணக்கெண்ணை நாழி அளவு கள்ளிப்பால்நாழி அளவு மேற்படி நீருடன் சேர்த்து மெழுகுபதமாக எடுத்து வடித்துக் கொள். இவ்எண்ணெயை உட்கொள்ள குன்மம், குடல் வாதம், பெருவயிறு, வாய்வு இவைகள் தீரும்.

சிருகாஞ் சொண்டி பர்ப்படகம்
செய்ய சுக்கு நிலவேம்பு
குருகாக் கோட்டந் திப்பிலியும்
கொள்ளுஞ் சீந்தில் தண்டுடனே
சிறிய பாதிரி.. இலைவேரும்
சேரே பண்டு ஒருபலமாம்
நிறையுந் தண்ணீர் நாழிவிட்டு
நேரே உழக்காய் காய்ச்சிவிடே. 848

சிறுகாஞ்சொறி, பர்ப்படாகம், சுக்கு நிலவேம்பு, கோஷ்டம், திப்பிலி, சீந்தில்தண்டு, சிறு வறாதி இலை, வேர், வகைக்கு ஒரு பலஙமெடுத்து ஒரு நாழி அளவு நீரிலிட்டு ஒரு உழக்காக காய்ச்சிக் கொள்.

பரங்கி வியாதிக்கு

பரங்கி வியாதி அது தனக்குப்
 பகருஞ் சிறுதேக்கு ஒருபலங்கொள்
திரஞ்சேர் குடிநீர் உட்கொள்ளத்
 தீராய் பரங்கி நவசுரமும்
இரங்கு மாறல் நாள்மூன்று
 விரண்டு நாளில் சுரம்போமே
அரஞ்சேர் சிவனார் தன்னாணை
 ஆராப் பரங்கி மாறிடுமே. 849

பரங்கிநோய்க்கு சிறு தேக்கு ஒருபலத்துடன் மேற்படி குடிநீரை கொள்ள தீராத பரங்கி, ஒன்பது வகை சுரம், இவைகள் மூன்று நாளில் குணமாகும். இரண்டு நாளில் சுரமும் தீரும், சிவனாரின் ஆணை, ஆறாத பரங்கி குணமாகும்.

மிளகு சுக்கு திப்பிலியும்
 மேவுங் கீழா நெல்லியுடன்
பழகுஞ் சிறிய தேக்குடனே
 புகருங் கோட்டங் காலியிவை
அழகு பெறவே இவைஇரண்டு
 ஆன கழஞ்சி தான்கொண்டு
இளகுந் தண்ணீர் இருநாழி
 இட்டே காய்ச்சிக் கொள்வீரே. 850

மிளகு, சுக்கு, திப்பிலி, கீழா நெல்லி, சிறுதேக்கு, கோஷ்டம், காலி இவைகள் வகைக்கு இரண்டு கழஞ்சி, இரண்டு நாழி அளவு தண்ணீர் விட்டு காய்ச்சிக் கொள்ளவேண்டும்.

பித்தசுரம்

இடித்த அத்திப் பட்டையுடன்
 இசையுங் கதலிப் பழம்பிசைந்து
வடித்த நீரும் நெல்லிக்காய்
 வருத்துஞ் சாறுந் தான்கூட்டி
பிடித்து வறுத்துச் சீரகமும்
 பிரியமுடன் சர்க்கரை கலந்து
குடித்த போதே பித்தசுரம்
 பேசா தோடிப் போய்விடுமே. 851

இடித்த அத்திப்பட்டையுடன் கதலிப்பழம் பிசைத்து வடித்த நீர், நெல்லிக்காய்ச்சாறு, வறுத்தசீரகம், சர்க்கரை இவைகள் முன்பாடலில் குறிப்பிட கசாயத்துடன் கலந்துட்கொள்ள பித்த சுரம் குணமாகும்.

மாறல்சுரம் - வேறு

நாய்வேளை வேலிப்பருத்தி கஞ்சாங்கோரை
நற்றாழை முடக்கொத்தான் கடியசுக்கு
தேவைமிகு சிறுதேக்கு சிறுகாஞ்சோரி
சீர் வேம்பின் பட்டையதிற் சிறந்தவிறகும்
மேவுஞ்சங்கம் பட்டையுடன் பதக்குநீரில்
வெந்து கொள்ள சீதங்கள் சுரங்களெல்லாம்
கோவைநறுங் கனிவாய் முனிவாய்வந்த
குளிர்மாறல் சுரமீளுங் கொள்ளுகொள்ளே. 852

நாய் வேளை, வேலிப்பருத்தி, கஞ்சாங்கோரை, தாழை, முடக்கொத்தான், சுக்கு, சிறுதேக்கு, சிறுகாஞ்சோரி, வேம்பின் பட்டை, சங்கன் பட்டை, இவைகளை நீரிலிட்டு காய்ச்சிக் குடிக்க சீதம், சீதசுரம், குளிர்சுரம் மாறல் சுரம் இவைகள் தீரும்.

தூதுவளையின் பூநல் ஆடாதோடை
சொன்னசங்கின் வேர்சுக்கு வீழிகூட்டி
மாதுவளர் திப்பிலியும் மிக்கசித்த மல்லி
பேர்மல்லி முள்ளி வில்லைகண்டம்
பாதிரி கோலொடுதக்க திலக்குமிழ்முத்தம்
பண்பான மோதந்தான் நிலவேம்பு
மோது தருவாக திப்பிலியுங்கூட்டிமிளகு
மல்லார்சுக்கு தொண்டை சீந்திலுண்ணே. 853

தூதுவளைபூ, ஆடாதோடை, சங்கம்வேர், சுக்கு, வீழி, திப்பிலி, சிற்றாமல்லி, பேராமல்லி, முள்ளி, வில்வம், கண்டங் கத்திரி கண்டம், பாதிரி தண்டு, நிலக்குமிழ் முத்தகாசு, நிலவோம், திப்பிலி, மிளகு, சுக்கு சீந்தில், இவைகளை முன்போல் செய்து உட்கொள்,;மேற்படி நோய்கள் திரும்

வாதசுரம் - வேறு

முத்தக் காசு பற்படகம்
முதலா மிச்சை இருவேலி
சுத்தச் சுக்கு சந்தனமும்
சுகமாய்க் காய்ச்சிக் குடிப்பீராய்
சித்தப் பிரமி உடன்பிறந்த
தேனே மானே சிலைக்கண்ணாய்
பித்தத் துடனே வாதசுரம்
பேசா தோடிப் போய்விடுமே. 854

முத்தக்காசு, பற்படாகம், விலாமிச்சை, இருவேலி, சுக்கு, சந்தனம், இவைகள் சரி எடை கூட்டி நீரிலிட்டு காய்ச்சி குடிக்க பித்தம், வாதசுரம் இவைகள் நீங்கும்.

விஷசுரம்

சுக்கு கடுக்காய் நிலவேம்பு
தோலும் ஆடாதொடை சீந்தி
கைக்கும் புடலம் பொடியதுவும்
கதிக்கும் இதுவொன் றோர்களஞ்சி
ஒக்க நறுக்கி இருநாழி
உழக்காய் காய்ச்சி உண்பீராய்
தக்க விஷமிச் சுரமதுவும்
தான் விட்டோடும் தப்பாதே. 855

சுக்கு, கடுக்காய், நிலவேம்பு, ஆடாதோடை, சீந்தி, பேய்ப்புடல் இவைகளின் தூள் வகைக்கு கழஞ்சி இவைகளை இரு நாழி அளவு நீரிலிட்டு உழக்காக காய்ச்சி குடிக்க விஷசுரம் தீரும்.

சித்தாமுட்டி பசும் பயறு
சிறந்த படகம் விலையோடு
கொத்தமல்லி சமனாக
குறுக நீர்விட்டு எட்டொன்றாய்
சத்த முடனே தான்காய்ச்சி
சதுராய்ச் செய்து உண்பீராய்
மெத்தப் பிராய தோஷமது
நிலைவிட்டோடும் நிச்சயமே. 856

சித்தாமுட்டி, பசும்பயறு, பற்படாகம் வில்வம், கொத்த மல்லி இவைகளை சமனாக எடுத்து நீர்விட்டு எட்டுக்கு ஒன்றாக காய்ச்சி உட்கொள்ள குழந்தைகள் தோஷம் நீங்கும்.

சிருகாஞ் சோரி குருந்தொட்டி
சிறந்த சுக்கு சீந்திலொடு
மருவா தோடை வேப்பீர்க்கு
வருபர்ப் படகஞ் சமன்கொண்டு
மருகா நீர்விட்டு எட்டொன்றாய்
மறுகக் காய்ச்சிக் குடிப்பீராய்
குருகாது ஓடுஞ் சுரங்களெல்லாம்
கோடா கோடி ஓடிடுமே. 857

சிறுகாஞ்சோரி, குருந்தொட்டி, சுக்கு, சீந்தில், ஆடாதோடை, வேப்பீர்க்கு, பற்படாகம் இவைகளை சமனாக எடுத்து நீரிலிட்டு எட்டொன்றாக காய்ச்சி குடிக்க சுரங்கள் குணமாகும்.

வேறு

நெற்பொரியும் பசும்பயரும் வில்லைமுல்லை
நெரிய சீரேலமுடன் நெல்லிமுள்ளி

முற்படவே இருநாழி நீரெட்டொன்றாய்
முதிரநிரை இருந்தருந்து முதுந்தபேர்கள்
சொற்பெரிய சத்திகுன்மம் அதிசார
சுரமுந் துயரமுடன் கிறுகிறுப்புஅழலை
மூச்சுறாப் பெரியமுனி உரைத்தபடியென்றாகும்
நாடாதென்றே உரைத்த நலமீதாமே. 858

நெல்பொரி, பசம்பயிரு, சிற்றேலம், நெல்லிமுள்ளி இவைகளை இருநாழி, நீரிலிட்டு எட்டொன்றாக காய்ச்சி குடிக்க சத்திகுன்மம், சுரம், துயரம், கிறுகிறுப்பு அழலை இவைகள் குணமாகும்.

அதிசாரசுரம் - வேறு

முகமாம் பிஞ்சு அதிவிடையம்
முத்தக் காசு பெருமரத்தோல்
தகமாஞ் சுக்கு விளாங்காயும்
சமனாய் ஒன்றாய் ஓர்கழஞ்சு
உகையாய்க் கூட்டி இருநாழி
உழக்காய் காய்ச்சி வைத்தருந்த
பகையாய் வந்த வதிசாரசுரம்
பாராதோடும் பாரீரே. 859

அதிவிடையம், முத்தக்காசு, பெருமரப்பட்டை, மாவு, சுக்கு, விளாங்காய், சமனாக வகைக்கு ஓர் கழஞ்சி, எடுத்து இருநாழி நீரிலிட்டு உழக்களவு காய்ச்சி குடிக்க அதிசாரம், சுரம், இவைகள் தீரும்.

வேறு

மாவடிபுகழ் நாவற் கொழுந்து புளியாரை
வன்குறிஞ்சி நுணாவிலை நறுவாழைப்பூவும்
தாவுவகைக்கு ஓர்களஞ்சி இருநாழிநீரில்
தகமைபெற உழக்காக்கி தனதோடித்துடனே
பூவில்வருத் திப்பிலியும் வெண்காரங்கூட்டிப்
பொருந்துநீர் மென்பொடியும் புகழ்வேன்கொள்ள
தாவில்வருந் தாகமோடு அதிசாரசுரமுந்
தன்னாலு நாள்மாற லுடனுஞ்சாமே. 860

நாவல் கொழுந்து, புளியாரை, குறிஞ்சி, நுணாஇலை, வாழைப்பூ, இவைகள் வகைக்கு கழஞ்சி எடுத்து இருநாழி அளவு நீரிலிட்டு உழக்காக காய்ச்சி திப்பிலி, வெண்காரம் இவைகளை பொடித்துப் போட்டு குடிக்க தாகம், அதிசாரம், சுரம், மாறல்சுரம் இவைகள் தீரும்.

வேறு

கருவாங் கதலிப்பூ முத்தங்
களரும் விடத்தலைக் கொழுந்து

நுருவாம் பாளை பெருமரத்தோல்
ஒளிமாதளம் பிஞ்சிரு கழஞ்சி
தருவாம் நீர்வார்த்து எட்டொன்றாய்
சாரும் இலவம்பிசின் விடையம்
பொரு மாத்திரையாய் கொண்டாக்கால்
போமே சாரம் ஒழிந்திடுமே. 861

கதலிப்பூ, முத்தக்காசு, விடத்தலைக் கொழுந்து, நுருவம் பாளை, பெருமரப்பட்டை, மாதளம்பிஞ்சு, இவைகள் வகைக்கு இரு கழஞ்சி எடுத்து நீரிலிட்டு எட்டுக்கு ஒன்றாகக் காய்ச்சி இலவம்பிசின், அதிவிடையம், கூட்டி மாத்திரையாக செய்து உட்கொண்டால் அதிசாரம் குணமாகும்.

வேறு

மாதளங் கடம்பு புங்கன்
வாய்த்த வேர் திப்பிலியத்தி
தீதிளங் கொழுந்து சுக்கு
திரிட்லை விரும்பிக் கூட்டி
நீதியாய் இரண்டு நாழி
நீருழக் காக்கிக் கொண்டால்
சூதிள முலையி னாளே
சுரசத்தி சாரம் போமே. 862

மாதளம், கடம்பு, புங்கன், இவைகளின் வேர், திப்பிலி அத்தியின் இளம் கொழுந்து, சுக்கு, திரிபலை இவைகளை கூட்டி இரண்டு நாழி அளவு நீரிலிட்டு உழக்காக காய்ச்சி உட்கொள்ள சுரம், அதிசாரம் இவைகள் குணமாகும்.

வேறு

முடித்து கனத்த கருங்குழலாள்
முத்தக் காசு மாம்பட்டை
இடித்து நனைத்து புட்டாய்ச்சுட்டு
இறுகப் பிழிந்திட்டு அதிவிடையம்
தடித்த வில்வம் பிசினோடு
தகமை பெறவே கொள்வீராய்
துடித்து விழுந்த அதிசாரஞ்
சுரத்தைப் போக்கும் சொன்னோமே. 863

கருங்குழலாள், முத்தக்காசு, மாம்பட்டை இவைகளை சுட்டு பிழிந்து அதிவிடையம், வில்வம்பிசின், சேர்த்து உட்கொள்ள அதிசாரம், சுரம், இவைகள் குணமாகும்.

தேங்காய்பாளை மொட்டு முத்தஞ்
சிதற இடித்துத் திரமாக
போங்கு முலைபோற்ப் புட்டாக்கி
பிழிந்து தேனும் உடன்கலந்து

வேங்கம் புகழும் அதிவிடையம்
இலவம் பிசினும் இட்டருந்த
பாங்கப் படுத்தும் அதிசாரம்
சுரத்தைப் போக்கும் சொன்னோமே. 864

தேங்காய்ப்பாளை மொட்டு, முத்தக்காசு இவைகளை இடித்து வேக வைத்து புட்டாக்கி பிழிந்து தேனுடன் கலந்து அதில் அதிவிடையாம் இலவம்பிசின் கலந்து அருந்த அதிசாரம் சுரம் இவைகள் குணமாகும்.

தாபசுரம் - வேறு

ஏலமதுரஞ் செங்கழுநீர் கோஷ்டம்
விலாமிச்ச மிருவேலி இசைந்தசுக்கு
மூலமிகு சந்தன நன்னாரிமுத்த
பற்படகஞ் சமன்கூட்டி முன்னீர்விட்டு
கோலமெட் டொன்றாய்க் காச்சியபின்னை
குடித்திடவே வித்தமுடன் குருவேர்வோடு
காலமிகு தாபசுரந் தீருமென்று
கருணையுடன் முனியுரைத்தார் காணலாமே. 865

ஏலம், அதிமதுரம், செங்கழுநீர். கோஷ்டம், விலாமிச்சம், இருவேலி, சுக்கு, சந்தனம். நன்னாரி, முத்தககாசு, பற்படாகம் இவைகளை சமனாக கூட்டி நீர்விட்டு எட்டுக்கு ஒன்றாக காய்ச்சி குடிக்க பித்தம், தாகசுரம், இவைகள் தீரும். இது முனிவர் கருணையுடன் சொன்னார்.

மூரிவெளி நன்னாரி வெள்வெங்காயம்
முதிர்வசம்பு இந்துப்பு கடுக்காய்முள்ளி
மருவிய நாரத்தை யெலுமிச்சைவேளை
வக்கனை மலைதாங்கி கிளாக்காய்நெல்லி
வருசுவாப் பூசினியும் பேய்ப்பாசுத்தி
வளகுரட்டை மால்கரநன வகையொன்றாக்கி
பெருநல்ல நீர்விட்டுக் காய்ச்சியுண்ண
பிலத்தசுரம் விஷம்வீக்கம் பேர்ந்துபோமே. 866

நன்னாரி, வெள்ளை, வெங்காயம், வசம்பு, இந்தப்பு, கடுக்காய், முள்ளி, நாரத்தை, எலுமிச்சை, மலைதாங்கி, கீழ்க்காய் நெல்லி, பூசணி, பேய்குரட்டை, கரந்தை இவைகளை ஒன்றாக்கி, நீர்விட்டு காய்ச்சி உட்கொள்ள சுரம், விஷம், வீக்கம் இவைகள் தீரும்.

கலிவிருத்தம்

வில்வவேர் சங்கொடு விளாநன்னாரி
புல்லுவேர் பபனொடு பொரிவெல்லமும்
நல்லநீர் குறுணியும் நாழியாக்கி
சொல்லநீர் வாந்தியும் சுரஞ்சோருமே. 867

வில்வவேர், சங்கு, விளா நன்னாரி, புல்லுவேர், பொரி, வெல்லம், இவைகளை குறுணி அளவு நீரிலிட்டு நாழி அளவாக காய்ச்சி உட்கொள்ள வாந்தி, சுரம், இவைகள் தீரும்.

ஏத்த சுக்கோடு அரத்தை எருக்கன்வேர்
நாத்த நொச்சிக் கொழுந்து நாரத்தமும்
சேத்து நீருழக் காக்கி தினங்கொண்டால்
மாத்தவர் சன்னி வாத சுரங்களே. 868

சுக்கு, அரத்தை, எருக்கன்வேர், நொச்சிக் கொழுந்து, நாரதீரும். இவைகளை தூணி நீரிலிட்டு உழக்காக சுண்டைவைத்து தினமும் உட்கொண்டால் சன்னி, வாதம், சுரம், இவைகள் தீரும்.

உட்சுரம் -வேறு

முன்னை பாதிரி முள்ளிமுதிர் கண்டங் காலிகோரை
பின்னை தூதளையுஞ் சீந்தில் பேராமுட்டி சித்தாமுட்டி
சொன்ன காஞ்சொரியுந்தோடைதுளசிவேம்பில் குரேசாணி,
நன்னிலகு ஒமமோடு நல்ல வாலுளுவை கூட்டே. 869

முன்னை, பாதிரி, முள்ளி, கண்டங்கத்திரி, கோரை, தூதுளை, சீந்தில். பேராமுட்டி, சித்தாமுட்டி, காஞ்சொரி, ஆடாதோடை, துளசி, குரோசாணி ஒமம், வாலுளுவை, மற்றும்.

கூட்டி வேப்பின் வித்து கோட்டநற் கொத்தமல்லி
வாட்டிய அரத்தையோடு மதுரமும் ஏலந்தானும்
நாட்டிய திரிகடுகு நாத்திரி பலையுங்கொண்டு
தீட்டினீர் எட்டொன்றாக்கிசெலுத்த உட்சுரங்கள் போமே. 870

வேம்பின்வித்து, கோஷ்டம், கொத்தமல்லி, அரத்தை, அதிமதுரம், ஏலம், திரிகடுகு, திரிபலை, இவைகளை நீரிலிட்டு எட்டுக்கு ஒன்றாக காய்ச்சி அருந்த உட்சுரம் நீங்கும்.

வேறு

சிறுதேக்கு தோடையொடு கஞ்சாங்கோரை
சேர்முதிய கூந்தல் சிறுகுரட்டைசோதி
உருசிறு காஞ்சோரி முள்ளிச்சாரணத்தி
உத்த நீர்முள்ளி மட்டி இரண்டுமன்னா
மருகு முக்காவேளை வக்கணாவும்
வளரும் பாவட்டையுங் கோஷ்டமல்லி
குருகு முருவலி யானாவேர்நன்னாரி
கொத்தமல்லி சுக்குமுத்தங் கூட்டுவீரே. 871

சிறுதேக்கு, ஆடாதோடை, கஞ்சாங் கோரை, முதியார் கூந்தல், சிறு குரட்டை, சோதி, சிறுகாஞ்சொரி, முள்ளி, சாரணை, நீர்முள்ளி, சிற்றாமுட்டி, பேராமுட்டி, முக்கா

வேளை, வக்கணா, பாவட்டை, கோஷ்டம், மல்லி, நன்னாரிவேர், கொத்தமல்லி, சுக்கு, முத்தக்காசு கூட்டிக்கொள்.

தீராதரோகத்திற்கு

முத்தமால் காந்தியொடு கண்டங்காலி
முதிர்பர்பாடகம் வசம்பு முன்னீர்விட்டு
சுத்தமாய்க் காச்சியதில் கடுகுரோணி
சுகமான சீரகமுந் துலங்கக்கொண்டு
மத்தநாள் முதலாக அரைத்துக்கொண்டு
மானே இப்புவியில் வளர்மாந்தர்க்கெல்லாம்
சித்தமாஞ் சுரங்களெல்லாம் வெகுசோபவீக்கம்
தீராத ரோகங்கள் தீர்ந்துபோமே. 872

விஷ்ணு காந்தி, கண்டங்கத்திரி, பர்ப்படாகம், வசம்பு இவைகளை முன் கூறிய நீர்விட்டுக் காய்ச்சி அதில் கடுகுரோகணி, சீரகம், இவைகளை அரைத்துக்கொண்டு உலக மனிதர்கட்கு வரும் சுரம், சோபம், வீக்கம், தீராத வியாதிகள் இதனால் குணமாகும்.

வேறு

ஆடாதோடை நன்னாரி அகிலுஞ் சிறிய வழுதலையும்
பாடாநிலங்கு பர்ப்படகம் பங்கம்பாளை வேர்க்கொம்பு
சேடாசீந்திச் சந்தனமும் செப்பவரிய இவையனைத்தும்
கூடாநீர்விட்டு உழக்காக்கி குடித்தார்குளிரை கெடுத்தாரே. 873

ஆடாதோடை, நன்னாரி, அகிலம், சிறுவழுதலை, பற்படாகம், பங்கம்பாளை, சுக்கு, சீந்தில், சந்தனம் இவைகள் அனைத்தும் நீரிலிட்டு உழக்காக சுண்டவைத்து குடிக்க குளிர் சுரம் நீங்கும்.

மாந்தசுரத்திற்கு

சீந்தில் தண்டுங் கடுக்காயும் சிவதைவேருங் களிப்பாக்கும்
காந்தசுக்கும் ரோகணியும் கன்னிச்சாறுங் கலந்துகொண்டு
வேந்து முலையாய் நீர்விட்டு வெட்டொன்றாக்கிக் கொடுப்பீராய்
மாந்தமான சுரந்தீரும் வயிறுங்கழியும் கண்டாயே. 874

சீந்தில் தண்டு, கடுக்காய், சிவதைவேர், களிப்பாக்கு, சுக்கு, கடுகுரோகணி, கன்னிச்சாறு, இவைகளை சமனெடை கலந்து நீரிலிட்டு எட்டுக்கு ஒன்றாக காய்ச்சி குடிக்க மாந்தசுரம் தீரும். வயிறு கழிச்சல் உண்டாகும்.

பித்தசுரம்

சிட்டச்சீந்தில் நிலவேம்பு சிறுகாஞ்சோரி கொத்தமல்லி
வட்டத்திருப்பி முத்தமொடு மகிழ்ந்து போந்து விலாமிச்சு
வெட்டிப்பொருது முதாரியுடன் உடனேகூட்டி நீர்விட்டு
திட்டமுடனே தான்செலுத்த தீராச்சுரங்கள் சேராதே. 875

சீந்தில், நிலவேம்பு, சிறுகாஞ்சோரி, கொத்தமல்லி, வட்டத்திருப்பி, முத்தக்காசு விலாமிச்சைவேர், முதாரி, இவைகளை சமன் எடை எடுத்து நீரிலிட்டு காய்ச்சி குடிக்க தீராத சுரங்கள் குணமாகும்.

ஐய சுரம்

சேர்ந்த செங்கழுநீர்க்கிழங்கும் சிறிய வழுதலை விலாமிச்சு
சார்த்தவேலி பொன்முசுட்டை தன்னோடொக்க கொத்தமல்லி
வாய்ந்தமுத்த நிலவேம்பு வளர்பர்ப்பாடந் தானருந்த
வேந்த வெதுப்பை விடுவிக்கும் விடாதால் விதியின் கொள்கையிதே. 876

செங்கழுநீர்க்கிழங்கு, சிறுவழுதலை, விலாமிச்சைவேர், கொடிவேலி, பொன்முசுட்டை, கொத்தமல்லி, முத்தக்காசு, நிலவேம்பு, பற்படாகம் இவைகளை நீரிலிட்டு காய்ச்சி குடிக்க வெதுப்பு நீங்கி சுரம் குணமாகும்.

வாத சுரம்

கடுக்காய்தாரங் கொத்தமல்லி கடியநொச்சி வெண்கோஷ்டம்
எடுத்தார்சுக்கு நிலவேம்பு இரண்டுமட்டும் உடன்கூட்டிப்
பொடித்தூளாக்கி நீரிலிட்டுப் பொங்கக்காய்ச்சி எட்டொன்றாய்
குடித்தார்தம்மை சுரம்விட்டுக் குடிப்போமென்று கூறியதே. 877

கடுக்காய், தாரம் கொத்தமல்லி, நொச்சி., வெண் கோஷ்டம், சுக்கு, நிலவேம்பு இவைகளை வகைக்கு இரண்டு கழஞ்சி எடுத்து தூள்செய்து நீரிலிட்டு எட்டுக்கு ஒன்றாக காய்ச்சி குடிக்க சுரம் தம்மைவிட்டு ஓடிவிடும் குணமாகும் என்பதாம்.

வேறு

காரமட்டுங் கருங்குழல் செப்புவாய்
வாரமட்டும் வனமுலை மாதுகேள்
பேரமட்டியுஞ் சுக்குங் குடித்தால்
ஊரைவிட்டு ஓடுஞ் சுரங்களே. 878

பேராமுட்டி சுக்கு இவைகளை கியாழமிட்டுக் குடிக்க சுரங்கள் தீரும்.

வில்வபத்திரி வேர்சிறு மட்டியும்
வல்லசுக்கு வளம்பெறக் காய்ச்சியே
நல்லதேனில் நயந்து குடித்திட
கொல்ல வந்ததோர் சத்திக்குறுகுமே. 879

வில்வபத்திரி, வில்வவேர், சிற்றாமுட்டி, சுக்கு, இவைகளை இட்டு காய்ச்சி தேன்கலந்துட்கொள்ள நம்மை கொல்ல வந்த வாந்தி நோய் குணமாகும்.

வேறு

இருபலை முக்காவேளை யிசைந்தசுக்கு தான்றியாகி
ஒருபடி தண்ணீரெட்டில் ஒன்றாகக் காய்ச்சி உண்ண

பெருகிய கிராணிவாய்வு பெலத்திடுங் குன்மரோகம்
பொருவஃது மேகம் விட்டுப் போவது திண்ணந்தானே. 880

கடுக்காய், நெல்லிக்காய், முட்காவேளை, சுக்கு, தான்றிக்காய் இவைகளை சமமாக எடுத்து ஒருபடி தண்ணீரிலிட்டு எட்டுக்கு ஒன்றாக காய்ச்சி குடிக்க கிராணி, வாய்வு, குன்மம், அரோசிகம், மேகம், இவைகள் தீரும்.

வேறு

முருங்கைக் கிழங்கு கொடிக்கழல்வேர்
முது சாரணைவேர் வெள்ளுள்ளி
நெருங்கத் தழைத்த வசம்புடனே
நெருப்பின் மிகுந்த கொடிவேலி
ஒழுங்காய்த் தேய்த்த பெருங்காயம்
உடனே காய்ச்சிக் கொள்வீராய்
மருங்காச் சூழ்ந்த நோய்களும்போய்
வயிறு வலியும் வாராதே. 881

முருங்கைக் கிழங்கு, கொடிக்கழல்வேர், சாரணைவேர், வெள்ளுள்ளி, வசம்பு, கொடிவேலி, பெருங்காயம், இவைகளை காய்ச்சி உட்கொள்ள வயிற்று வலி மற்றும் நோய்கள் குணமாகும்.

வேறு

ஆவராந் துளிர் கல்மதங் கொன்றைவேர்
நீவிரைந்து புளிமோரில் உண்பீராய்
தீவிரைந்து வரினுந் திரைகடல்
காவிரைந்து கடக்கு வடக்குமே. 882

ஆவாரந்துளிர், கல்மதம், கொன்றைவேர் இவைகளை புளிப்பு மோரில் உட்கொள்ள மேகசுரம் குணமாகும்.

வேறு

ஆவாரை கொன்றைநாகலலை கடல்முத்தங் கோஷ்ட்டம்
மேவிய மருந்துந்தோலும் விரைந்துடனொக்கக் கொண்டு
பூவிருங் குழலினாளே பொருந்தவே தன்னையுண்ண
காவேரி ஆறும்வற்றிக் கடல்களும் வற்றுந்தானே. 883

ஆவாரை கொன்றை, முத்தக்காசு, கோஷ்டம் மேற்படி முதல் இருவகை பட்டை மற்றும் சரக்குகளை சேர்த்து முறைப்படி உட்கொள்ள காவேரி ஆறு கடல் இவைகள் வற்றிப் போகும் நோய்கள் குணமாம்.

திருந்திய விளாவரை செப்பியவாள் பூலாவேர்
மருந்திய இலந்தை காட்டுமல்லிகை இலையுங்கூட்டி
பொருந்தவே மேதிமோரில் புகழ்பட வேகவைத்து
அருந்திடீர் தயிரிலப்போர் தகன்றிடுஞ்சலங்கள்தானே. 884

விளாவிரை, பூலாவேர், இலந்தை, காட்டுமல்லிகை இவ் வகளை கூட்டி மோரில் வேக வைத்து தயிருடன் உட்கொள்ள சலநோய் தீரும்.

வெண்பா - மேகசுரத்திற்கு

வல்ல சுரம்போம் மாந்தமொடு தோஷம்போம்
சொல்ல வெகுமேகம்போம் சோகைபோம் நல்லாய்கேள்
நல்லவெல்லஞ் சுக்குடனே நயந்துசத்தே நிலக்குமிழாஞ்
சொல்ல வல்லக் காய்ச்சிஉண்ணும்போது. 885

சுரம், மாந்தம், தோஷம், மேகம், சோகை இவைகள் நீங்குவதற்கு, நல்ல வெல்லம், சுக்கு, நிலக்குமிழ் இவைகளை கியாழம் வைத்து உட்கொள்ள மேற்படி நோய்கள் தீரும்.

கீழா நெல்லி வேர்களஞ்சு
கிளாப் பொற்கடுக்காய் இருகழஞ்சி
காளா மிளகு முக்களஞ்சி
கடுகப் புளித்த மோருடனே
தாளா துண்ண மணக்கழலுந்
தழைத்த வயிறுந் தாழ்வாகும்
ஆழ்வார் உண்ட நீரென்று
அரனார் அருளிச் செய்ததுவே. 886

கீழாநெல்லி வேர் ஒருகழஞ்சி, பொற்கடுக்காய் இரு கழஞ்சி, மிளகு மூன்று கழஞ்சி இவைகளை புளித்த மோருடன் உட்கொள்ள பெருவயிறு குணமாகும்.

முதியார் கூந்தற் கொடிவேலி
முருங்கைப் பட்டைக் குளவிந்தம்
கொதியால் வெந்த கழல்பருப்புக்
கூறுங் கரணைச் சாற்றுடனே
விதியால் வந்த விரைவாதம்
வெறுமை கண்ட வேசியைப்போல்
குதியா தாகில் பொத்தகத்தை
கொடுப்பேன் தீயில் கொடுப்பேனே. 887

முதியார் கூந்தல், கொடிவேலி, முருங்கைப்பட்டை, கழற்சி பருப்பு இவைகளை கரணைச் சாற்றுடன் கொடுக்க விரைவாதம் குணமாகும் குணமாகா விட்டால் என் நூலை தீயில் போடுவேன்.

வேறு

சோத்துக் கஞ்சியில் சுக்கரைத் தேத்தி
கார்த்து ஈருழக்கு ஒருழக் காக்கியே
ஊர்த்தி ஊர்த்தி உறிஞ்சிக் குடிப்பீராய்
நீர்த்து பாண்டமும் நீருண்ணும் பாண்டமே. 888

சுஞ்சியில் சுக்கை அரைத்து இரண்டு உழக்கு நீரிலிட்டு ஒரு உழக்காக காய்ச்சி குடிக்க விரைவாதம் குணமாகும்.

முருவிலி மாவெலை முள்ளி தூதளை
வரியுரி மணலி நன்னாரி கோவை
உரியுரி காடியோடு ஒக்கக் கூட்டினார்
சுரிகரி சுரும்பெனச் சோப மாறுமே. 889

முருவிலி, மாஇலை, முள்ளி, தூதுளை, வரியுரி, நன்னாரி, கோவை காடி இவைகளை கூட்டி உட்கொள்ள சோபம் தீரும்.

வேறு

பேருமரப்பட்டை நன்னாரி பெருத்த குடசைப் பாலையுமே
வாருமாதளையின் பொன்முசுட்டை மருவும்பில்லை வெட்டிவேர்
தாருமிலாமிச்ச முத்தமொடு தந்தசீந்தில் அதிவிடையம்
மாருமிதினிக் காட்டாத்தி மதிககிராம்பூ மருந்திடுமே. 890

பெருமரத்துப் பட்டை, நன்னாரி, குடசைபாலை, மாதுளை, பொன்முசுட்டை, மருவின்இலை, வெட்டிவேர், விலாமிச்சை வேர், முத்தக்காசு, சீந்தில், அதிவிடையம், காட்டத்தி, கிராம்பு இவைகளை கூட்டி மருந்திசய்.

வேறு

பெரிய வாகை பெருங்குழல் வேரொடு
பரிய முன்னையும் பாதிரி வேரொடு
கரிய செங்கத்தாரி நெரிஞ்சில் லின்வேர்
சிறிய மல்லி இவைதிசை மூலமே. 891

பெருவாகை, பெருங்குழல்வேர், முன்னை, பாதிரி இவைகளின் வேர், செங்கத்தாரி, நெரிஞ்சில் வேர், சிற்றாமல்லி இவை திசை மூலமாகும் திசைமூலம் என்பது எட்டுவேரை குறிப்பதாம், ஏழு வேர்தான் பாடலில் குறிப்பிடப் பட்டுள்ளது.

மூர்ச்சை சன்னிக்கு -வேறு

கதிரோன் எனவே திசைமூலக்
கியாழத்தாற் பிணி நீங்கிடவே
சதிராம் வாகை குமிழ்முன்னை
சாற்றும் பாதிரி வில்வமுடன்
புதிய மிளகு கரிமுள்ளி
போத்து நெருஞ்சி இருமல்லி
முதிரக் காய்ச்சிக் குடிப்பீராய்
மூர்ச்சை சன்னி சுரமாறும்.. 892

மேற்படி திசைமூலத்தை கியாழம் செய்து கொடுக்கநோய் நீங்கும், வாகை

குமிழ், முன்னை, பாதிரி, வில்வம், மிளகு, கரிமுள்ளி, நெருஞ்சி, இருமல்லி இவைகளை கியாழமிட்டு குடிக்க மூர்ச்சை, சன்னி, சுரம், இவைகள் குணமாகும்.

தந்தரோகத்திற்கு மருந்து - வெண்பா

மருக்காரை சுக்கு மருதந்தோல் வெள்வேல்
எருக்கு ஆவாரை பிரம்போடேழும் நறுக்கியே
நாலிலொன்றாய்க் காய்ச்சி நாலுநாள் கொப்பளிக்கப்
பாலன் பல்லாம் கிழவன் பல். 893

மருக்காரை, சுக்கு, மருதந்தோல், வெள்வேலன், எருக்கன், ஆவாரை, பிரமி இவைகள் ஏழையும் நறுக்கி நீரிலிட்டு நான்குக்கு ஒன்றாக காய்ச்சி கொப்பளிக்க கிழவனின் ஆடும் பல் கூட பாலன்பல் போல் ஆகும்.

வேறு

காசு கட்டிப் பலமொன்று
கனத்த கடுக்காய் பலமும் அரை
நீசு காண இந்துப்பு
நிலைக்கு மாசிக் காயுடனே
பாச மானபடி காரம்
பகர்வோம் ஒன்றுக் காற்பலமாய்
மீசத் துடனே பொரித்தெடுத்து
விதமாய் அசனங் கார்த்துயெடே. 894

காசுகட்டி ஒருபலம், கடுக்காய் அரைபலம், இந்துப்பு, மாசிக்காய், படிகாரம் இவைகள் கால்பலம் எடுத்து பொரித்து எடுத்துக்கொள்.

ஏக மாக வேயிடித்து
இசைவாய்ச் சூரண மாய்ப்பண்ணி
தேகத் திதமாய் தந்தத்தில்
தினமும் நன்றாய்த் தேய்த்திடவே
வாக மான முகவாதம்
வரையும் பல்லுங் கடுப்படங்கும்
மேக மான தந்தசைவும்
இறுகப் பிடிக்குங் கண்டாயே. 895

மேற்படி பொரித்ததையும் மேற்படி சரக்குகளையும் சூரணம் செய்து தினமும் பல் தேய்க்க வேண்டும். முகவாதம் பல் கடுப்பு, பல் அசைவு இவைகள் நீங்கி பல் உறுதியாகும்

கொன்றைத் தோலுங் கொத்தமல்லி
குமரிச் சாறுங் கடுக்காயும்
ஒன்றக் காய்ச்சி ரோகணியும்
ஒக்கக் கலந்து குடிப்பீராய்

கண்ணில் குடிக்க மலதிரட்டுக்
கடுகக் கழியும் வகைசொன்னோம்
விண்ணில் பெரிய வேந்தர்க்கு
வெப்பும் சுரமும் வாராதே. 896

கொன்றைபட்டை, கொத்தமல்லி குயரிச்சாறு, கடுக்காய் இவைகளை ஒன்றாக நீரிலிட்டு காய்ச்சி கடுக ரோகணி கலந்து குடிக்க மலக்கட்டு நீங்கி மலம் கழியும் வெப்பு சுரம் குணமாகும்.

வெண்பா

கூறுகின்ற பாவட்டை கொன்றை சிறுமட்டியுடன்
வீறுடன் வேலிப் பருத்திவேர் காறுகின்ற
நன்மிளகு கூட்டி நலமாய்க் கியாழமிட
சென்மம் இல்லையாஞ் சுரமே செப்பு. 897

பாவட்டை, கொன்றை, சிற்றாமுட்டி, வேலிப்பருத்தி வேர், மிளகு இவைகளை கியாழமிட்டு குடிக்க இந்த சென்மத்தில் சுரம் வராது.

பிரிந்தவுள்ள வென்னீரில் பின் முதியார் கூந்தல்
அரிந்த மதன்வேர் அரைத்துதிண்ணப் பரந்திடுங்
குன்ம மஞ்சும் போகும் குளிருஷ்ண தாகம்போம்
துன்மை சுரமில்லை எனச்செப்பு. 898

வென்னீரில் முதியார் கூந்தல் வேரை அரைத்து உட்கொள்ள ஐந்து வகை குன்மம் தீரும். குளிர் உஷ்ணம், தாகம், சுரம் இவைகள் குணமாகும்.

வேறு

சிட்டச் சீந்தில் நிலவேம்பு
சிறுகாஞ் சோரி பாவட்டை
நட்டப் பொருது முதாரியுட
நன்றாய் கூட்டி நீர்விட்டு
அட்டிப் படாமல் அடுப்பேற்றி
அன்பாய் இறக்கித் தானருந்த
திட்டத் துடனே எட்டொன்றாய்ச்
செலுத்தச் சுரங்கள் சேராதே. 899

சீந்தில், நிலவேம்பு, சிறுகாஞ்சோரி, பாவட்டை, முதாரி, இவைகளை கூட்டி நீர்விட்டு கியாழமிட்டு எட்டுக்கு ஒன்றாக சுண்டவைத்து குடிக்க சுரங்கள் குணமாகும்.

வெண்பா

காணும் புனல்முருங்கைக் கழற்சிக் காயின்பருப்பு
பூணுங் கொத்தானுடனே போந்த சுக்கு-வேணுமே

பன்னீர்க் கியாழம் பருகிப் பருகியபின்
விண்ணில் அண்டவாதம் போம் விட்டு. 900

புனல் முருங்கை, கழற்சிக்காயின் பருப்பு, கொத்தான் சுக்கு இவைகளை கியாழமிட்டு குடிக்க விரைவாதம் தீரும்.

விட்ட ஓதியீர்க்கு மேவுகரி வேப்பீர்க்கு
முட்ட கருஞ்சீரகம் மோதகமும் தட்டியிட்டு
காய்ந்த நீர்க்கொள்ள காணுமா அரோசிகமும்
பாய்ந்த கிராணியும் போம் பண்ணு. 901

ஓதியிர்க்கு, கருவேப்பீர்க்கு, கருஞ்சீரகம், மோதகம் இவைகளை தட்டி நீரிலிட்டு கியாழமிட்டு குடிக்க அரோசிகம், கிராணி இவைகள் தீரும்.

அலையுங் கருவளையல் ஆர்க்கப் பொடித்துமே
சிலையு மிளகுபொடி சேர்சரியாம் மலையிர்ப்
பொருங்காயங் கூட்டி உண்ணப் பெரும் அண்டவாதம் போம்
வரும் பாளை வண்டதராம் வாடு. 902

கரு வளையத்தை பொடித்து அதற்கு சமனெடை மிளகு பொடியைக் கூட்டி பெருங்காயமிட்டு குடிக்க அண்டவாதம் குணமாகும்.

போர்த்திடாத் தோடையிலை பொரித்ததொரு முந்திரிகை
சேர்த்திடித்தாக் குடிநீர் செலுத்திடீர் மாத்தறியார்
காரங் கூட்டிஅருந்தக் கடியதோர் வெட்டைமுதல்
காரி ரத்தப்பித்தம் போங்காண். 903

ஆடாதோடை, பொரித்த முந்திரிகை சேர்த்து இடித்து கியாழமிட்டு காரம்சேர்த்து குடிக்க வெட்டை, ரத்த பித்தம் குணமாகும்.

போகுங்காண் ரெத்தபித்தம் போய்விடவே தான்மருந்து
ஏகவே குகைநீரு காற்பலமும் நாகமாய்
நிம்பழச் சார்தான்வாங்கி நேகவரைத்து அரைத்து
தம் பசும்பாற் பாலருந்திப் பார். 904

கூகைநீரு கால்பலம், நிம்பழச்சாறு கொண்டு நேகஅரைத்து பசும்பால் கூட்டி உட்கொள்ள ரத்தபித்தம் குணமாகும்.

இரத்தவாந்திக்கு - வேறு

அகமே மாந்த ரானவற்கு
    அரிய மருந்து நானுரைப்பேன்
உசமே ஒவ்வொன்று முக்கழஞ்சு
    உகந்து ஆவின்பால் நாழிசேர்

சுகமாய் முன்னாழி நெய்கூட்டி
சேரப் பதமாய் வடித்துண்ண
தகமா ரெத்த வாந்தியுந்தான்
சலித்துப் போகுங் கண்டாயே. 905

நல்ல மருந்து ஒன்றை கூறுகிறேன், ஒவ்வொரு பொருளும் மூன்று கழஞ்சி சேர்த்து ஆவின்பால் நாழி அளவு சேர்த்து நாழி அளவு நெய்யும்கூட்டி பதமாக எரித்து வாங்கி குடிக்க இரத்தவாந்தி குணமாகும்.

நேத்திராஞ்சனத்திற்கு

அழுகுஞ் சாறுதான் குறுணி
அகமே ஆவின் பால்குறுணி
திகழும் நெய்தான் இருநாழி
சேரப் பதமாய் வடித்தபின்பு
அகழும் நாசி உதிரந் தோன்றில்
அதுவே நசியம் பண்ணுவீராய்
இகழுஞ் செவியுந் தான்சிவந்தால்
இதமாய்க் கண்ணில் தான்விடவே. 906

அழுகுஞ்சாறு குறுணி, ஆவின்பால் குறுணி, நெய் இரு நாழி அளவு இவைகளை கூட்டி பதமாக வடித்து நாசியில் ரத்தம்கண்டால் இம்மருந்தை நசியம் செய்ய குணமாகும். செவி நோயும் குணமாகும். கண் சிவந்தால் இம்மருந்தை கண்ணிலிடவும் குணமாகும்.

பதமாய்த் தண்டில் உதித்தோன்றில்
பதமாய்த் தண்டில் தானேற்ற
இதமா மயிர்க்கால் உதிரந்தோன்றில்
இதமாய் மேலெங்குந் தான்பூச
திதமா விழுகா பூசைபண்ணி
சேரக் கிருதந் தான்விடவே
நிதமாய் தேரெனும் ரெத்தபித்தம்
நில்லாது ஓடிப் போய்விடுமே. 907

மயிற்கால் வழியாக ரத்தம் வடிந்தால் மேற்படி மருந்தை அவ்விடத்தில் தடவ வேண்டும். பூசை செய்து இக் கிருதத்தை பயன்படுத்த இரத்தபித்தம் குணமாகும்.

வெண்பா

நண்ணாக வேர்க்கொம்பு நர்ச்சாரணை வேரும்
ஒண்ணாய்க் கியாழமிட்டு உண்டாக்கால் - நண்ணாக
ஓடுமே ரெத்தம் ஒளியாமல் நாடுவிட்டு
வாடுமே கெட்டு மனம். 908

சுக்கு, சாரணைவேர் இவைகளை ஒன்றாக கலந்துகியாழ மிட்டு உட்கொண்டால் இரத்தபித்தம் குணமாகும்.

வேறு

பாதிரியின் பெருங்குமிழு முன்னைமுத்தம்
பர்ப்படகஞ் சிறுதேக்கு கண்டங்காலி
ஓதரிய சித்தமல்லி கடுக்காய்சுக்கு
ஓங்க தாமரைவளையம் பேராமல்லி
நீதசிறு வழுதலையும் வில்வவேரும்
நெருஞ்சில்வேருஞ் சமனாய்க் காய்ச்சிக்கொள்ள
சீதசுரம் வாதசுரம் சன்னிபோமென்று
ஈசனார் தெளிந்துமே உரைத்திட்டாரே. 909

பாதிரி, பெருங்குமிழ், முன்னை, முத்தக்காசு, பர்ப்படாகம் சிறுதேக்கு, கண்டங்கத்திரி, சிறுமல்லி, கடுக்காய், சுக்கு, தாமரை வளையம், பேராமல்லி, சிறுவழுதலை, வில்வவேர், நெருஞ்சில்வேர் இவைகளை கியாழமிட்டு உட்கொள்ள சீதள சுரம், வாதசுரம், சன்னி இவைகள் குணமாகும். ஈசன் உரைத்த முறையிது.

வெண்பா

கூசுஞ் செங்கத்தாரிபட்டை கூர்சன்னி கூர்மிளகு
வீசுஞ் சிறுகுரிஞ்சான்வேர் கூட்டி - காசினியில்
எண்ணெயிட்டு வேகுடினீர் இறங்குமே மால்கரப்பான்
திண்ணமுடன் போமே தினம். 910

செ'கத்தாரிபட்டை, மிளகு, சிறுகுறிஞ்சான்வேர், காசினிவிதை எண்ணெய் கூட்டி கியாழம் வைத்து குடிக்க கரப்பன் தீரும்.

தினந்தான் சங்குசுரை சிறுநெருஞ்சி இஞ்சி
மனத்தால் நீர்முள்ளிஉள்ளி மாமலையிர்- கனத்துவரின்
வெண்கார மென்பொடியா மேவுகுடி நீரருந்தக்
கண்காண வீக்கம் போங்காண். 911

தாளி, சங்கு, சுரை, சிறுநெருஞ்சில், நீர்முள்ளி, உள்ளி, வெண்காரப்பொடி இவைகளை குடிநீர்வைத்துக் குடிக்க கண் வீக்கம், மற்றும் வீக்கங்கள் குணமாகும்.

தாகவாந்திக்கு வேறு

சுத்த நெர்ப்பொரியுஞ் சுக்குந் தொந்த் கூவளை வேர்கூட்டி
இத்தரக் காய்ச்சிக்கொண்டு இசையவே குடித்தபோது
சத்திய மருகுருப்புந் தாகமுந் தீருமென்று
விததகர் முனிவர்தானே வேண்டியே விளம்பினாரே. 912

நெற்பொரி, சுக்கு, கூவளைவேர், இவைகளை கியாழ மிட்டுக் குடிக்க தாகம் குணமாகும், வித்தகரான முனிவர் இம்முறையை கூறினார்,

பயத்தினில் உமியைப்போக்கி பரிவுள்ள நீரைவிட்டு
வியப்புறக் காய்ச்சிப்பின்னை விரைந்தநீர் தன்னினோடே
நயப்புறச் சீனிகூட்டி நலம் பெறக் குடித்தபோதே
தியக்கிடுஞ் சத்திமாது தீர்வது திண்ணந்தானே. 913

பயிற்றிலுள்ள மேல் உமியை நீக்கிவிட்டு நீரிலிட்டுகாய்ச்சி பின்னை நீருடன் கூட்டி சீனிசேர்த்து குடிக்க சத்திமாது குணமாகும்.

குன்மத்திற்குக் கியாழம் - வேறு

சீந்தில் சுக்கு துடரியின் தொட்டிவேர்
காந்த வேலி விலாமிச்சு சந்தனம்
போந்த கூவளை பொங்கிரு நாழிநீர்
காய்ந்த போதெரி குன்மம் கடக்குமே. 914

சீந்தில், சுக்கு, பின்துடரி, தொட்டிவேர். வேலி விலா மிச்சை, சந்தனம், கூவளை, இருநாழி நீரில் மேற்படி சரக்குகளை இட்டு, காய்ச்சி குடிக்க குன்மம் குணமாகும்.

மருவுக்குக்கியாழம் - வேறு

பயத்தொடு கடுக்காய்சுக்கு பகுத்திரு கழஞ்சிகொண்டு
வயத்த சுரத்தண்டுமந்த மருங்குருந் தொட்டிவேரும்
நயக்கவே வெட்டிக்கூட்டி நயம்பெறக் காய்ச்சிக்கொள்ள
வியப்புறுங் கைகால் தின்று வெரிகுடல் மருகும்போமே.915

கடுக்காய், சுக்கு, இவைகளை இருகழஞ்சி எடுத்து, சுரைத்தண்டு குருந்தொட்டிவேர், இவைகளை வெட்டி கூட்டி நீரிலிட்டு காய்ச்சி குடிக்க் கை- கால்களில் எரிச்சல் குடல் புரட்டல் போகும்.

குமரிவேர் கொன்றைசுக்கு குலவுரோகணியும் இந்தும்
அமர்குணஞ் சாலேசீந்தில் ஆசைந் ததிமதுரம்
தமரமாய்க் காய்ச்சிப்பின்னைத் தானிது வெந்தபோது
திமரமாஞ் சத்திகுன்மம் செயல்குடல் மருகும்போமே.916

குமரிவேர், கொன்றை, சுக்கு, கடுகுரோகணி, இந்துப்பு, சீந்தில், அதிமதுரம், இவைகளை கூட்டி காய்ச்சி குடிக்க சத்தி குன்மம், குடலில் உண்டாகும் மரு இவைகள் தீரும்.

உடலது மருகுண்டாகி உற்றுணர்ந் திருக்குமாகில்
பொடிபடை தகத்துசுக்கைப் போதவே கழஞ்சிகூட்டி
முடியிரு நாழிநீரில் மூன்றுநாள் இதனைக்காய்ச்சி
குடியிது நீருமென்று கூறினார் முனிவர்தாமே. 917

சுக்கைகழஞ்சி அளவு எடுத்து இருநாழிநீரிலிட்டு காய்ச்சி குடிக்க வேண்டும். இவ்வாறு மூன்றுநாள் செய்ய உட லில் உள்ள மருகு குணமாகும்.

வேறு

கொள்ளு முள்ளி கொடிய முருக்கிலை
எள்ளுக்காய் சுக்கு இவையுஞ் சிவதைவேர்
உள்ளதாக நீர் நாழி உழக்கதாய்
மெள்ளவே குடி விடுகுஞ் சுரோணியே. 918

கொள்ளு, முள்ளி, முருக்கிலை, எள்ளுக்காய், சுக்கு இவைகள் ஐந்துடன் சிவதைவேர் கூட்டி நாழி அளவு நீர் விட்டு உழக்களவாக காய்ச்சி குடிக்க சுரோணிதம் தீரும்.

நீர்சுருக்குக்கு - வெண்பா

கடுக்களி சுக்கிந்துப்பு கல்மதங் கொடங்கை
அடுக்கள் வேநீரை வார்த்தரைத்து குடிக்கில்
வளரிளவன் முலைமாதே வயிறுகள் தான்கழியும்
களரியுடன் நீர்க்கடுப்புப் போம். 919

சுக்கு, இந்துப்பு, கல்மதம், இவைகளை நீர்விட்டு அரைத்து குடிக்க வயிறு கழிச்சல் உண்டாகும், நீர்க்கடுப்பு தீரும்.

காசத்திற்கு... வெண்பா

பாரழிஞ்சிப் பட்டைப் பலமொன்று தன்னுடனே
கூர்மிளகு தினம்பாதி கூட்டியே- சீர்பாவை
வீசுநீர் எட்டொன்றாய் மேவி குடித்திடவே
காசமெல்லாந் தானீங்குங் காண். 920

அழிஞ்சிப்பட்டை, ஒருபலம், அரைபலம் மிளகு, இவைகளுடன் நீர்விட்டு எட்டுக்கு ஒன்றாக காய்ச்சி குடிக்க காசம், குணமாகும்.

விக்கலுக்குக் கியாழம் - வேறு

தக்க நெற்பொரி தன்னிள நீருட
நொக்க விட்ட பயறுடன் கூவளை
மிக்க காய்ச்சிப்பின் சர்க்கரை போட்டுண்ண
விக்கல் சத்தி விரைந்துடன் ஓடுமே. 921

நெற்பொரியுடன் நீர்விட்டு அதில் பயறு, கூவளை சேர்த்து காய்ச்சி சர்க்கரை கலந்துட்கொள்ள விக்கல் குணமாகும்.

அதிசாரத்திற்குக் கியாழம்

மாதளந் துளிர் மாந்துளிர் நாவலும்
தாதவிழ் சடையாருடன் அஞ்சனம்
வீதி தன்னில் விலங்கிய நண்ணினாப்
போதவெந் துண்ணப் போம் அதிசாரமே. 922

மாதுளம்துளிர், மாந்துளிர், நாவல், கஞ்சா, இவைகளை நீரிலிட்டு காச்சிக் குடிக்க அதிசாரம் தீரும். (இப்பாடலில் வரும் சடையாருடனஞ்சனம் என்பது கஞ்சாவாம்)

இரத்தவாந்திக்குகியாழம் - வேறு

பாதிரி பட்டைசுக்கு பரழ்சுண்டி பூலாவில்வம்
செவ்விய முத்தக்காசு விளம்பிய களஞ்சுகொண்டு
தாகிய சலத்திற்காய்ச்சித் தான்குடித் திடுவீராகில்
தூவியே வருகும்ரெத்தந் தூளெழுந் தோடிப்போமே. 923

பாதிரிபட்டை, சுக்கு, பாழ்சுண்டி, பூலா, வில்வம், செவ்வியம், முத்தக்காசு, வகைக்கு கழஞ்சு எடை எடுத்து நீரிலிட்டு காய்ச்சி கியாழம் செய்து குடிக்க இரத்தக் கழிச்சல் நீங்கும்.

பித்த அதிசாரத்திற்குக்கியாழம் - வேறு

அத்திப் பட்டை வாழைப்பூவும்
அரைத்து வைத்துப் புட்டாக்கி
பொத்துப் பிடித்துப் பிழிந்து கொண்டு
புதிய விடைய மேல்விசரி
மெத்தச் சீனந் தனைக்கூட்டி
மிகவும் பருக வல்லீராய்
பித்த கழிச்சல் அதிசாரம்
புறப்பட்டு ஓடுங் கண்டாயே. 324

அத்திப்பட்டை, வாழைப்பூ, இவை இரண்டையும் அரைத்து புட்டு போல் வேகவைத்து பிழிந்து அதிவிடையம், சீனம் இவைகளை பொடித்துத் தூவி, உட்கொள்ள பித்தக் கழிச்சல், அதிசாரம், இவைகள் குணமாகும்.

இரப்போனார் தம்மிநாணை யிட்டோல முத்தக்காசு
பரப்படஞ் சீந்திசுக்குப் பையவே தையவெந்த
அரப்பினார் தேனினோடே அளவினார் என்னக்கேட்டு
வெரப்பினர் சீதனாரை விரவினார் விடைகொண்டாரே.925

முத்தக்காசு, சீந்தி, சுக்கு, இவைகளை நீரிலிட்டு காய்ச்சி தேன் கூட்டி உட்கொள்ள முன் பாடலில் சொன்ன நோய்கள் தீரும்.

சன்னிக்குக்கியாழம்- வேறு

சுக்குச் சீந்தில் சிறிய வழுதலை
ஒக்கக் கொண்டிரு நாழி உழக்கதாய்
தக்கக் வியாழந் தானே குடித்திட
மிக்கதோர் சன்னி விட்டிடும் உண்மையே. 926

சுக்கு, சீந்தில், சிறுவழுதலை, இவைகளை ஒரிடை யாக எடுத்து நாழி நீரிலிட்டு, உழக்காக சுண்டக்காய்ச்சி கியாழமாக செய்து குடித்திட சன்னி தீரும்.

இருமலுக்குக்கியாழம்

ஆடா தோடை தேள்கொடுக்கு தூதளை
வாடா சுக்குடன் வல்லிதன் கொண்டவேர்
நீடா திப்பிலி நீபொடி இட்டிட
வோடா தாகிலும் ஓடும் இரும்பலே. 927

ஆடாதோடை, தேள்கொடுக்கு, சுக்கு, கர்ப்பூரவல்லிவேர், திப்பிலி தூதுளை இவைகள் ஒிடையாக எடுத்து கியாழமிட்டு குடிக்க இருமல் தீரும்.

குடினீர்- வேறு

கோஷ்டமுடன் சிறுதேக்கு கோரைக்கிழங்கு நிலவேம்பு
தேட்டமாக மிகுசீந்தில் சேருங்கண்டங் காரிசுக்கு
நாட்டமாகப் பர்ப்பாடம் நலமாஞ்சிறுமஞ்சொரிதானும்
வாட்டமாகத் திப்பிலியும் வளர்பரங்கிக் குடினீரே. 928

கோஷ்டம், சிறுதேக்கு, கோரைக்கிழங்கு, நிலவேம்பு, சீந்தில், கண்டங்கத்திரி, சுக்கு, பற்படாகம், சடாமாஞ்சில், சிறுகாஞ்சொரி, திப்பிலி. இவைகளை ஒிடையாக எடுத்து கியாழமிட்டு குடிக்க இருமல் தீரும்.

அரோசிகத்துக்கு - வேறு

கண்ட சுக்கு கடுகுடன் பேய்ப்புடல்
விண்ட தேக்கு மிகுகொத்த மல்லியும்
கொண்ட நீரைக் குறுகிக் குடிப்பீராய்
அண்ட வாயு அரோசிகந் தீருமே. 929

சுக்கு, கடுகு, பேய்ப்புடல், தேக்கு பேராமல்லி, சிற்றா மல்லி, இவைகளை ஒிடையாக எடுத்து கியாழமிட்டு குடிக்க அண்டவாய்வு அரோசிகம் தீரும்.

வயிற்றுவலிக்கு- வேறு

சிறு காஞ்சோரி நன்னாரி
தெய்வப் பெண்டீர் உடனாக
குறுகாரைத்து உண்டை பண்ணிக்
கொடிய சுரத்துக் கிடுவீராய்
மறுகால் வராது வாதமொடு
வயிறு நோவுங் குன்மமுடன்
தருகா தளவும் விழிமடவீர்
தரணி யோருக்கு உரைப்பீரே. 930

சிறுகாஞ்சொரி, நன்னாரி, இவைகளை அரைத்து உருண்டை செய்து கொடுக்க சுரம், வாதம், வயிற்றுவலி, குன்மம் இவைகள் குணமாகும்.

இதித் தனாபி கெந்தகமும்
இயல் சாதிக்காய் லவணமஞ்சுந்
துதிசேர் சீனக் காரமுடன்
சுவானு பீசம் வெண்காரம்
திதி சீரகம் இரண்டுடனே
திறமாய்க் கந்தஞ் சரிகூட்டி
குதிகொண் ணிஞ்சிச் சாறதனில்
கூட்டி அரைத்து உண்டைசெய்யே. 931

நாபி, கெந்தகம், சாதிக்காய், பஞ்சலவணம், சீனாக்காரம், சுவானுபீசும், வெண்காரம், கருஞ்சீரகம், நற்சீரகம், கந்தம், இவைகளை சரிஎடை எடுத்து இஞ்சி சாறுவிட்டு அரைத்து உருண்டை செய்திடு.

வேறு

துத்தந் துருசி துடர்ந்த பாஷாணமும்
மெத்திய கெந்தி மிகுர்சங்கை உப்புடன்
பத்தியப் பாகலின் சாற்றில் அரைத்துமே
தத்தி மிளகளவு உண்டைகள் செய்திடே. 932

துத்தம், துருசு, துடர்ந்த பாசாணம், கெந்தகம், சங்கை, உப்பு இவைகளை பாகல் சாற்றில் அரைத்து மிளகளவு மாத்திரை செய்திடு (இதுவும் மேற்படி பாடலில் குறிப்பிட்ட மாத்திரையும் எதற்கு கொடுக்க வேண்டும் என பாடலில் சொல்லப்படவில்லை)

சீதசுரத்திற்கு மாத்திரை

சீத சுரமது செய்யு முறைமைகேள்
ஓதிய கெந்தி உயரச வாளமும்
கோதறு திரிகடுகு கொடு சேவதை
மாதுரு பாலினில் மாத்திரை செய்திடே. 933

கெந்தகம், ரசம், நேர்வாளம்,திரிகடுகு கொடிவேலி இவைகளை சரிஎடை எடுத்து தாய்ப்பாலில் மாத்திரை செய்திடு.

செய்திடு மாத்திரை தேனில் அருந்திட
எய்திடும் பித்தம் இறங்கியே ஓடிடும்
கொய்திடு மையங் குறைந்துமே ஏறாது
வைதுகூறுந் தேறையன் வாக்குப் பொய்யாதிதே. 934

மேற்படி மாத்திரையை தேனில் குடிக்க பித்தம், மயக்கம் இவைகள் குணமாகும். தேரையரான என் வாக்கு பொய்யாகாது.

அக்கினி பிளாஸ்திரி

பொய்யாது மாந்தர்க்குப் புகலுவேன் வாகடம்
அய்யா பிளாஸ்திரி அறைவேன் முறையுடன்

மெய்யாக வீரம் விராகன் இருபது
தொய்யா விளக்கெண்ணெய் துகள அரைத்திடே. 935

பிளாஸ்திரி கூறுகிறேன். விரம் இருபது விராகனிடை. இதை விளக்கெண்ணெயால் அரைத்து எடு.

அரைத்துச் சல்லாவில் அழுந்திடப் பூசியே
விரைத்தக் கிறந்திப்புண் வீறும் ரணத்திற்கு
வரைத்தப் படியாக உறுதியாப் பூட்டிடில்
கரைத்த ரணங்களும் காணாமல் ஓடுமே. 936

அரைத்ததை லேசான துணியில் தடவி கிரந்திப்புண், ரணம் இவைகட்கு வைத்துக் கட்ட ரணம் குணமாகும்.

அண்டவாய்வுக்கு மாத்திரை

ஓடும் பத்திரி உற்றக் கழற்சிக்காய்
நாடும் கிராம்பு நன்னாரி வேருடன்
தேடும் பரங்கித் தேர்ந்ததோர் பட்டையும்
நீடு மாசிக்காய் நிறுத்துப் பலமெடே. 937

பத்திரி, கழற்சிக்காய், கிராம்பு, நன்னாரிவேர், பரங்கிப் பட்டை, மாசிக்காய் இவைகள் வகைக்கு ஒருபலம் மற்றும்.

எடுத்துச் சாதிக்காய் ஏற்ற லவங்கமும்
அடுத்தப் பத்திரி யானை நெருஞ்சியும்
கடுத்த தான்றிக்காய் காசுக் கட்டியுடன்
தொடுத்த முந்திரித் தோல்சமன் சேர்த்திடே. 938

சாதிக்காய், லவங்கம், லவங்கபத்திரி, யானை நெரிஞ்சில், தான்றிக்காய், காசுக்கட்டி முந்திரித்தோல் இவைகள் சமனெடை எடுத்திடு. மற்றும்.

சேர்த்துப் பத்திரி சிவதை குறிஞ்சானும்
பூர்த்துச் சந்திரக் காந்திப் பூதன்விரை
வார்த்துக் குமரி வாகாக ஊறவை
பார்த்து மூன்றுநாள் பதமாய் அரைத்திடே. 939

சேத்துப் பத்திரியுடன், சிவதை, குறிஞ்சான், சந்திர காந்திப்பூ, விதை இவைகளை மேற்படி கூறப்பட்டுள்ள சரக்குகளுடன் குமரிச்சாற்றில் மூன்றுநாள் ஊற வைத்து அரைத்திடு.

அரைத்துச் சாமம் அறுபது மானபின்
உரைத்து மெழுகாய் உற்ற பயிர்போல
நிரைத்த ரவியில் நேர்மையாய்க் காயவை
மரைத்த மண்டல மதிப்பாய் அருந்திடே. 940

மேற்படி வகையில் அறுபது சாமம் மெழுகு போல் அரைத்து பயிர் அளவு மாத்திரை உருட்டி வெய்யிலில் காயவைத்து ஒருமண்டலம் உட்கொள்ள வேண்டும்.

அருந்தும் போதுமே அண்டத்தின் வாயுவும்
செருந்து மேக சர்வாங்க வாதரோகம்
பொருந்துமே கழல் வாதம் இருபதும்
திருந்து மேறு வாதங்களுந் தீருமே. 941

மேற்படி வகையில் உட்கொள்ள அண்டவாய்வு, மேகம், சர்வாங்க வாதம், கழல் வாதம் இருபது வகை, மற்றவாத நோய்கள் இவைகள் நீங்கி குணமாகும்.

வாந்தி பேதிக்கு மாத்திரை

தீருங் கக்கல் தெளியு முறைமைகேள்
பாரும் லிங்கம் பகரும் வீரமுடன்
சேரும் சூடன் சிறந்த சாம்பிராணியும்
நேரும் வஸ்துவால் நிகழ அரைத்திடே. 942

லிங்கம், வீரம், சூடன், சாம்பிராணி, இவைகளை சரி எடை கூட்டி வஸ்துவால் நன்றாக சாமம் அரைத்திடு.

அரைத்துச் சாமம் அரியக் கியாழங்கேள்
கரைத்த மருந்தைக் கடிய மாத்திரைசெய்
உரைத்தப் படுவன் உற்ற கொம்பனுக்கும்
நிரைத்த தேனிலே நேராய்க் கொடுத்திடே. 943

கியாழம் கொண்டு மேற்படி அரைத்த மருந்தை மாத்திரை செய்திடு. படுவன், கொம்பன் நோய்களுக்கு தேனில் கொடுத்திடு.

கொடுத்திட பேதி கொட்டலுங் கக்கலும்
அடுத்து மூன்றுநாள் ஆறுவேளையில் தீரும்
கொடுத்திடுங் கஞ்சி கோதுமை தன்ரவை
தடுத்து மூன்றுநாள் தயவாய்ப் பொசித்திடே. 944

பேதி கொட்டல், கக்கல் இவைகள் மேற்படி மருந்தால் மூன்றுநாள் ஆறுவேளையில் தீரும். கஞ்சி, கோதுமை ரவை, இவைகளை மூன்றுநாளும் ஆகாரமாகக் கொள்.

பித்த மயக்கத்திற்கு சூரணம்

பொசித்திடும் பித்தம் போக்கும் வகைகேளு
வசித்திடும் வில்வம் வன்னப் பச்சைப்பயர்
பசித்திடும் சீந்தில் பாங்கான நெற்பொரி
முசித்திடும் அமுக்குரா வுந்தூக்கிடே. 945

பித்தத்தை குணமாக்கும் மருந்தைக் கூறுகிறேன். வில்வம், பச்சை பயிர், சீந்தில், நெற்பொரி, அமுக்கிரா மற்றும்.

தூக்கும் சந்தனந் துடியாம் விலாமிச்சை
பாக்கும் சீரகம் பண்பான ஏலமும்
நோக்கும் பத்திரி நொய்ய வசுவாசி
தேக்கு மதுரந் தேர்ந்த சீனிகூட்டே. 946

சந்தனம், விலாமிச்சை, சீரகம், ஏலம், பத்திரி, வசுவாசி, அதிமதுரம், சீனி இவைகளை பொடித்து தூள்செய்திடு.

கூட்டும் வெண்ணெயில் கூறும் இருவேளை
மூட்டு மண்டல முசிய அருந்திடில்
ஆட்டும் பத்தியம் ஆகா கடுகெண்ணெய்
பாட்டும் தேறையன் பாடலும் உண்மையே. 947

மேற்படி சூரணத்தை வெண்ணெயில் இருவேளை ஒரு மண்டலம் உட்கொள்ள பித்தம் குணமாகும். கடுகு எண்ணெய் தள்ளிப் பத்தியமாக இருக்க வேண்டும். தேரையராகிய நான் சொல்லும் இம்முறை உண்மையானது.

பரங்கிப் புண்ணுக்கு மேற்பூசம் எண்ணெய்

உண்மை கேளும் உலகினில் மாந்தரே
தண்மையாய் எண்ணெய் சாற்றுறேன் சூட்சமாய்
வண்மை ஆமணக் கெண்ணெய் ஒருபடி
பண்மையாம் பசும் பாலும் படிகூட்டே. 948

ஒரு எண்ணெயை சூட்சமாக கூறுகிறேன். ஆமணக்கு எண்ணை ஒருபடி, பசும்பால் ஒருபடி

கூட்டும் பூரங் குணமாந் துருசியும்
தீட்டுங் காரஞ் சிறந்த வெடியுப்பும்
பாட்டுந் துத்தம் பகரு மனோசிலை
நாட்டுங் கெந்தகம் ஆறும் சரிதூக்கே. 949

பூரம், துரிசு, காரம், வெடியுப்பு, துத்தம், மனோசிலை, கெந்தகம் இவை ஆறும் சமனெடை எடுத்திடு.

தூக்குங் கல்வத்தில் துகளப் பொடித்துமே
தாக்கும் எண்ணெயில் தயவாய்க் கலக்கியே
நோக்கும் வாலுகை நுகரும் அடுப்பினில்
போக்கி லாமலே பொருந்த எரித்திடே. 950

மேற்படி பொருட்களை கல்வத்திலிட்டு மேற்படி எண்ணெய், பால் கலவையுடன் சேர்த்து வாலுகையிலிட்டு அடுப்பேற்றி பதமாக எரித்து வாங்கு,

எரித்து எண்ணெய் எழிலாய் இறக்கியே
பரித்து மேனி பரங்கிக்குப் பூசிட
முரித்த மேகம் அரையாப்பு மாறிடும்
குரிந்து தேறையன் கூறும் மருந்திதே. 951

பதமாக எரித்த எண்ணெயை பரங்கிப் புண்ணிற்குப் பூச குணமாகும் மேகம், அரையாப்பு, இவைகட்கு தடவ குணமாகும், தேரையராகிய நான் கூறிய இம்முறை பொய்யாகாது.

மாரடைப்புக்கு சூரணம்

மருந்தும் பரங்கிப் பட்டை அறுபலம்
குருந்தான் வேருங் கூறுங் கழற்சிக்காயும்
பொருந்த நன்னாரி பூட்டும் நுணாவேரும்
திரந்து மிளகு சேர இடித்திடே. 952

பரங்கிப்பட்டை ஆறுபலம், குருந்தான்வேர், கழற்சிக்காய், நன்னாரி, நுணாவேர், மிளகு இவைகளை இடித்துக் கொள்.

இடித்துச் சூரணம் எழிலாய் வடிசெய்து
கடித்துச் சீனியில் கலந்து அருந்திடு
வடித்து தேறையன் வாக்குப் பொய்யாதிது
நடித்த மார்நோய் நடுங்கியே ஓடுமே. 953

மேற்படி நன்றாக இடித்து வடிகட்டி சீனியில் கலந்து உட்கொள்ள மார்பு நோய் குணமாகும். தேரையராகிய என் வாக்கு பொய்யாகாது.

கபால வலிக்குத் தயிலம்.

ஓடுங் கபால உச்சித நோய்கட்கு
தேடுந் தேறையன் தெளிந்த முறைகேளும்
ஆடுந் தூதளை ஆதண்டை தன்வேரும்
நீடுஞ் சுக்கான்வேர் நேர்மையாய்க் கூட்டிடே. 954

கபால நோய்க்கு (தலை நோய்) தேரையராகிய நான் மருந்து கூறுகிறேன். தூதுளை, ஆதண்டைவேர், சுக்கான் வேர் இவைகளை கூட்டிக்கொள். மற்றும்

கூட்டுஞ் சீரகம் கொடிய தேவதாரம்
நீட்டுஞ் சந்தனம் நேர்ந்த விலாமிச்சு
கூட்டுங் கஸ்தூரி கொடிய ரோகணியும்
மாட்டும் பத்திரி மாசிக்காய் சேர்த்திடே. 955

சீரகம், தேவதாரம், சந்தனம், விலாமிச்சை, கஸ்தூரி, கடுகு ரோகணி, பத்திரி, மாசிக்காயை கூட்டு மற்றும்.

சேர்த்து லவங்கம் சிறந்த கிராம்புடன்
தூர்த்து மோதகம் துய்ய கருஞ்சீரகம்
நேர்த்தி யான நெருஞ்சி விளாவுடன்
பார்த்து துங்கத்தின் பத்திரி கூட்டிடே. 956

லவங்கம், கிராம்புமோதகம், கருஞ்சீரகம், நெருஞ்சில், விளா தூங்கப்பத்திரி இவைகளை சமனெடை கூட்டிக்கொள்.

கூட்டும் ஒன்றாய் குறிக்குங் குழிக்கல்லின்
நீட்டும் சரக்கை நேர்த்தியாய்த் தானிடி
தீட்டும் பாண்டத்தில் சிறக்க வடிசெய்து
மூட்டும் சூரண மாக வெடுத்திடே. 957

மேற்படி கூட்டி உரலிட்டு இடித்து வடித்து சூரணமாக்கிக் கொள்.

எடுத்துச் சூரணம் எண்ணெயிற் காய்ச்சியே
அடுத்து மண்டலம் அன்பாய் முழுகிட
கெடுத்திடுங் கபால வலி பீனிசம்
விடுத்திடும் என்று விளம்பினன் தேறனே. 958

மேற்படி சூரணத்தை எண்ணெயிலிட்டு காய்ச்சி ஒருமண்டலம் தலைமுழுக தலைநோய், பீனிசம் இவைகள் தீரும். கடவுளின் அருளால் தேரையாராகிய நான் சொல்லி விட்டேன்.

ஒருதலை நோய்க்குத் தைலம்

தேறன் வாக்குத் திசையிலும் பொய்யாது
ஏறல் எண்ணெய் எழிலான வெள்ளெண்ணெய்
கூற நாழி கொடிய முசுக்கைசாற்
மாறல் இன்றி மதிப்பாய்ச் சமனெடை. 959

தேரையராகிய என்வாக்கு பொய்யாகாது. எள்ளெண்ணெய் நாழி அளவு அத்துடன் முசுக்கைச்சாறு சமனாக விட்டுக்கொள்.

எடுக்கும் வெள்ளுள்ளி எழிலான ரோகணி
கடுக்கும் தான்றிக்காய் கடிய விருசீரகம்
அடுக்கும் வேலி அழகாய் இருவேலி
தொடுக்கும் சீந்திலின் வேர்சமன் தூக்கிடே. 960

வெள்ளுள்ளி, கடுகுரோகணி, கடுகு, தான்றிக்காய், இருவகை சீரகம், கொடுவேலி, இருவேலி, சீந்தில்வேர் இவைகளை சமனெடை எடுத்திடு.

தூக்கும் பத்திரி துய்ய விளங்கமும்
பாக்கும் சாதிக்காய் பற்படம் பத்திரி
நோக்கு மேலே நுகருங் கிராம்புடன்
வாக்கு தப்பாமல் வல்லரை மாட்டிடே. 961

பத்திரி, வாய்விளங்கம், சாதிக்காய், பற்படாகம், சாதிபத்திரி, கிராம்பு, வல்லாரை, இவைகளை கூட்டிக்கொள் மற்றும்.

மாட்டும் பத்திரி மணத்த வசுவாசி
கூட்டு நன்னாரி கொடி பரங்கியும்
தீட்டும் சுக்கு தெளிந்த தண்ணீர்மிட்டான்
போட்டுச் சூரணம் பொடியாகச் செய்திடே. 962

வசுவாசி, நன்னாரி, பரங்கிப்பட்டை, சுக்கு, தண்ணீர் மீ ் ।ன்கிழங்கு இவைகளை மேற்படி சரக்குகளுடன் சேர்த்து பொடியாக செய்திடு.

செய்யும் சூரணம் சிறந்த எண்ணெய்தனில்
பைய கலக்கிப் பாங்காய் எரித்திடு
மெய்ய மண்டல மேவ முழுகிவர
ஐயம் ஓர்தலை நோயும் அகலுமே. 963

மேற்படி எண்ணெய் கவவையுடன் மேற்படி தூளை கலந்து பதமாக எரித்து ஒரு மண்டலம் தலைமுழுகி வர ஐயம் தலைநோய் இவைகள் குணமாகும்.

அகலும் பத்தியம் ஆகாது புளிபுகை
நிகலும் தாம்பூல நேர்மையாய் நீக்கிடு
புகலு மாய்கையும் பெண்போகம் ஆகாது
பகலு நித்திரைப் பாங்காக நீக்கிடே. 964

மேற்படி தலைமுழுகும் போது பத்தியமாக இருக்க வேண்டும், புளி, புகை ஆகாது, தாம்பூலம், பெண் போகம், பகல் தூக்கம் இவைகள் ஆகாது.

செவி நோய்க்குத் தைலம்

நீக்கு மாந்தரே நேர்மை முறமைகேள்
வாக்கு தேறையன் வார்த்தை பொய்யாமலே
தாக்குமே செவி தக்க வியாதிக்கு
போக்குந் தயிலப் புதுமை உரைப்பேனே. 965

இம்முறைகளை கூறும் தேரையராகிய என் வார்த்தை பொய்யாகாது. காது நோய்க்கு தைலம் கூறுகிறேன்.

உரைக்கு நெய்யுடன் உகர்ந்த எள்ளிலெண்ணெய்
திரைக்கும் ஆமணக் கெண்ணெய் சரிசமன்
கரைக்கு நண்டுநெய் காற்சேர் உடனாக
முறைக்கு மூன்றையும் ஒன்றாய்க் கலக்கிடே. 966

நெய், எள்ளெண்ணெய் ஆமணக்கு எண்ணெய், இவைகளை சம பாகமாக எடுத்து நண்டு நெய் கால்பாகம் சேர்த்திடு. இவைகளை ஒன்றாக கலக்கிக் கொள்.

கலக்கிச் சாம்பிராணி கருநாபி வெள்ளுள்ளி
மலக்கி சுக்கு மதித்த வசம்புசேர்
தலைக்கு ஏற்றதோர் தாளிச பத்திரி
நிலைக்கும் வேம்பின்வேர் நேர்சமன் எடுத்திடே.. 967

சாம்பிராணி கருநாபி, வெள்ளுள்ளி, சுக்கு, வசம்பு, தாளிசபத்திரி, வேம்பின் வேர் இவைகளை சமனாக எடுத்துக் கொள்.

எடுத்த சூரணம் எழிலாய் வடிசெய்து
கடுத்த எண்ணெய் கடுகு பதமாக

முடித்த சூரணம் மூன்று பலமிட்டு
நடித்த பதமாய் நன்றாய் இறக்கிடே. 968

மேற்கண்ட பொருட்களை சூரணம் செய்து வடிகட்டி மூன்று பலம் எடுத்து எண்ணெயுடன் கலந்து கடுகுபதமாக காய்ச்சிக் கொள்.

இறக்கிப் பூசை இயலாக் கணேசனை
சிறக்க ஓதியே சிறந்த உருவேற்றி
திறக்கும் தயிலம் திறமாய் முழுகிட
பறக்கும் செவிநோய் பாரினில்ஓடுமே. 969

காய்ச்சி இறக்கி கணேசனுக்கு பூசை செய்து உருவு ஏற்றி, தயிலத்தால் தலைமுழுக காது நோய் தீரும்.

ஓடும் பத்தியம் உப்புப் புளியாகா
தேடுந் தேனும் தினைமாவும் உண்டிடு
நீடு மண்டல நேர்மையாம் இம்முறை
பாடுந் தேறையன் பாட்டு பொய்யாதிதே. 970

மேற்படி தயிலம் முழுகும்போது பத்தியமாக இருக்க வேண்டும். உப்பு, புளி, ஆகாது. தினைமாவுடன் தேன், கலந்து உணவாக உட்கொள். ஒரு மண்டலம் இவ்வாறு தலை முழுக தேரையராகிய என்முறை பொய்யாகாது.

நேத்திராஞ்சனவியாதி தொண்ணூற்றாறுக்குந் தயிலம்

பொய்யாது தேறன் புகலும் குருமொழி
ஐயா கேளு அறைகிறேன் கண்ணோய்க்கு
செய்ய தயிலம் செப்புறேன் மாந்தர்க்கு
கையாந் தகரை கால்நாழி சேர்த்திடே. 971

தேரையராகிய என்வாக்கு பொய்யாகாது, கண்நோய்கட்கு தைலம் கூறுகிறேன். கையாந்தகரை கால்நாழி அளவு.

சேர்த்து ஆமணக் கெண்ணெய் இருநாழி
பார்த்து நறுநெய் பாங்காக முன்னாழி
நீர்த்துமே பசும் பாலது நால்நாழி
கூர்த்து நெல்லிச்சாற் குறிப்பாய்ச் சமனளவே. 972

மேற்படி கையாந்தகரை ஆமணக்கு எண்ணெய் இருநாழி நெய் மூன்றுநாழி பசும்பால் நான்கு நாழி, நெல்லிக்காய் சாறு சமனளவு.

அளக்கு மெண்ணெயில் அகிற்பட்டை தான்சேறா
பளக்க மான பருத்த நெரிஞ்சியும்
களக்கு மிளகு கடிய கசகசா
இளக்கமா கருஞ் சீரகம் எடுத்திடே. 973

அகில்பட்டை, நெருஞ்சில், மிளகு, கசகசா, கருஞ்சீரகம் மற்றும்.

எடுத்திடும் பீத ரோகணி நிம்பச்சாற்
கடுத்திடுஞ் சீந்தில் கடிய பொன்னாங்கண்ணி
அடுத்திடு முத்த மான சிறுகீரை
தொடுத்திடு நாகந் துய்ய மதுரமே. 974

பீத ரோகணி, நிம்பச்சாறு, சீந்தில், பொன்னாங்கண்ணி, சிறுகீரை, அதிமதுரம், மற்றும்.

மதுரஞ் சண்பக மரமஞ்சள் தன்னுடன்
அதுர மேல மலருஞ் செங்கழுநீர்
சதுரங் கோஷ்டஞ் சரிந்த பாதிரிப்பூ
இதர மாக இடித்துச் சூரணியே. 975

சண்பகம், மரமஞ்சள், ஏலம், செங்கழுநீர், கோஷ்டம், பாதிரிப்பூ, இவைகளுடன் மேற்படி சரக்குகளை சூரணித்துக் கொள்.

சூரணத்தைச் சுருக்காய் எண்ணெய்தனில்
பூரண யோக வாசியில் நின்றுகொண்டு
ஆரணி மாதுக்கு அர்ச்சனை செய்துபின்
வார ணத்துடன் வாகாய் எரித்திடே. 976

மேற்படி எண்ணெயில் மேற்படி சூரணத்தை கலந்து பூரண யோக வாசியில் நின்று சக்திக்கு அர்ச்சனைசெய்து மேற்படி சூரணத்தைக் கலந்த மருந்தை அடுப்பேற்றி எரித்திடு

எரித்துப் பதத்தில் எழிலாய் இறக்கியே
உரித்து மண்டல முறைமை தப்பாமலே
கருத்து மேகரி நாள்தனை நீக்கியே
வருத்து வாகடம் போலுரை முழுகிடே. 977

எரித்து பதத்தில் இறக்கி முறை தப்பாது ஒருமண்டலம் தலை முழுகு.

முழுகும் பத்திய மொய்குழலே கேளும்
அழுகும் வெற்றிலை ஆகாது புளிபுகை
ஒழுகும் நெய்யுடன் உற்ற பசும்பயர்
நழுகும் வெள்ளுள்ளி நவிலவே உண்டிடே. 978

எண்ணெய் தேய்த்து முழுகும் போது பத்தியமாக இருக்க வேண்டும். வெற்றிலை புளி, புகை, ஆகாது, நெய், பச்சை, பயிர், சேர்த்து வெள்ளுள்ளி உட்கொள்வாயாக.

உண்டிட கண்ணில் உற்ற வலிநீங்கும்
அண்டிட பித்தம் அரிய புழுவெட்டு
கண்டிட படலங் காமாலை போகும்
தொண்டன் தேரையன் தொகுப்பு பொய்யாதிதே. 979

மேற்படி முறையில் ஒரு மண்டலம் செய்ய கண்வலி, பித்தம், புழுவெட்டு, கண்படலம், காமாலை இவைகள் தீரும். தேரையராகிய யான் கூறிய முறைகள் பொய்யாகது.

கிராணிக்கழிச்சலுக்கு

பொய்யாது கிராணிப் புகலு மருந்துகேள்
ஐயாமாந்தர்க் கறைய உரைக்கிறேன்
தொய்யா சாதிக்காய் துய்ய விளாவிரை
மெய்யா கசகசா மேவும் ஆவாரையே. 980

கிராணிக்கு மருந்து கூறுகிறேன். சாதிக்காய், விளாவிதை கசகசா. ஆவாரை மற்றும்.

வாரை மிளகு வசம்பு திப்பிலி
சூரை விரையும் சுருண்டைலவங்கமும்
கோரைக் கிழங்கு கொடிய பற்படகம்
சாரை பருப்பும் சரிஎடை கூட்டிடே. 981

மிளகு, வசம்பு, திப்பிலி, சூரைவிதை, லவுங்கம், கோரைக்கிழக்கு பற்படாகம், சாரைபருப்பு, இவைகளை சரிஎடை கூட்டிக் கொள்.

கூட்டி ஒன்றாய்க் குலாவி இடித்துமே
நீட்டும் சூரணம் நேர்மையாய்த் தான்செய்து
பூட்டுஞ் சீனிப் புகட்டிக் கலந்துமே
மூட்டு நறுநெய் முசியவே உண்டிடே. 982

கூட்டியதை ஒன்றாக இடித்துச் சூரணம் செய்து சீனியைக் கலந்து நெய்கலந்து உட்கொள்.

உண்டு மண்டலம் உறுதியாய் இருவேளை
கண்டு பத்தியங் கணக்காய் இருந்திடில்
திண்டு கிராணி தீரமாய்த் தீர்ந்திடும்
உண்டு தேரையன் உறுதியாய் உரைத்தேனே. 983

இரு வேளையும், ஒருமண்டலம், உட்கொள்வாயாக, பத்தியமாக இருக்க வேண்டும், கிராணி வகைகள்தீரும். தேரையராகிய நான் உறுதியாக சொல்லிவிட்டேன்.

உரத்து மெத்தலை வியாதிப் பிணிநீங்க
கரக்கும் எள்ளெண்ணெய் கணக்குடன் நாழிதான்
சிரக்கும் ஆவின்பால் சேரறை காலதாய்
நிரக்கும் கம்பஞ்சோர் நீரையுங் கூட்டிடே. 984

தலைநோய் தீருவதற்கு கூறுகிறேன். எள்ளெண்ணெய் நாழி அளவு, ஆவின்பால் அரைக்கால் அளவு, கம்பு சோறு நீர் கூட்டு, மற்றும்.

கூட்டும் ஆதொண்டைக் கோவைத் துளிர்சாறும்
நீட்டு மிளகு நேர்ந்த பெருங்காயம்
போட்டு எண்ணெயில் பொடித்துக் கலக்கியே
வாட்டு அடுப்பினில் அரைத்து எரித்திடே. 985

கோவை துளிர்சாறு, மிளகு, பெருங்காயம், இவைகள்ள பொடித்து மேற்படி எண்ணெயுடன் கலந்து அடுப்பேற்றி எரித்திடு.

எரித்துக் காலையில் ஏழுநாள் ஸ்நானஞ்செய்
தெரித்து மண்டைநோய் தேர்ந்த கண்ணுக்குத்து
கரித்துக் காலையில் கணக்காய் முழுகிட
குரித்து ஓடும் வியாதி கைகண்டதே. 986

எரித்து பதமாக எடுத்து காலையில் ஏழுநாட்களுக்கு தலைமுழுக மண்டைநேய், கண்குத்தல், இவைகள் குணமாகும்.

ஒருதலைநோய்க்கு நசியக்கிராணம்

கண்ட போது கண்டத்தின் வியாதிக்கு
அண்டமே பெருங் காயஞ் சமுத்திரா
பெண்டுமே முலைப் பாலினால் ஆட்டியே
உண்டும் நாசியில் உரையப் பிழிந்திடே. 987

கண்ட வியாதிக்கு மருந்துகூறுகிறேன். பெருங்காயம் சமுத்திராபழம், இவைகளை தாய்ப்பாலால் அரைத்து மூக்கில் பிழிந்திட வேண்டும்.

பிழ்ந்திடுங் (காதில்) உறைந்தப் பிணிகட்கு
தெழிந்தும் வெள்ளுள்ளி தேர்ந்த மரமஞ்சள்
கழிந்து சுக்கொடுக் கடிய வலம்புரி
நழிந்துஞ் சீரகம் நத்தை இறைச்சியே. 988

மேற்படி செய்ய முன்சொன்ன நோய்கள், குணமாகும், வெள்ளுள்ளி, மரமஞ்சள், சுக்கு, வலம்புரி, சீரகம், நத்தை இறைச்சி மற்றும்.

இறைச்சி முட்டை இரைந்த முசுரண்டம்
கரைச்சி மேகருங் கோழியின் அண்டமும்
நுரைச்சிடும் நண்டின் இறைச்சி சமனதாய்
முரைச்சிடுங் கள்ளி முருங்கைச்சாற் சேர்த்திடே. 989

நத்தை இறைச்சியுடன் முட்டை, முசுரண்டம், கருங்கோழி அண்டம், நண்டு இறைச்சி, இவைகளை சமனாக எடுத்திடு, கள்ளி, முருங்கைச்சாறு, இவைகள் ஒருநாழி அளவு,

சேர்த்துமே சாறு சிறக்க ஒருநாழி
பார்த்துமே பசும்பால் படி காலதாய்
நார்த்தும் வேப்பெண்ணெய் நாழி சமனதாம்
சேர்த்துக் கலந்து கொதிக்க எரித்திடே. 990

மேற்படி சரக்குடன் பசும்பால் ஒருபடி, வேப்ப எண்ணெய் நாழி அளவு, இவைகளை கலந்து அடுப்பேற்றி கொதிக்களித்திடு.

எரித்திடும் எண்ணெய் இசைந்த செவியினில்
வரித்திடும் பிணி வாகாய் சொரிந்திட்டு
நிரித்திடும் பஞ்சி நேராய்ப் பொதிந்திடில்
குரித்த நோயுங் குடியோடிப் போகுமே. 991

எரித்து பதமாக எடுத்து எண்ணெயை காதில்விட்டு பஞ்சு வைத்து அடைத்துக் கொள்ள காதுநோய் குணமாகும்.

சகல மேகத்துக்கு எண்ணெய்

உறைக்கும் எண்ணெய் உலகினில் மாந்தர்க்கு
திறக்க மாகவேதேர்ந்த ஆமணக்குநெய்
பறக்குஞ் சன்னியின் பாதாள மூலியும்
முறக்க மாகவே முன்னைவேர் சேர்த்திடே. 992

ஆமணக்கு எண்ணெய், பாதாளமூலி, முன்னைவேர், இவைகளைச் சேர்த்துக் கொள். மற்றும்.

சேர்த்துப் பத்திரி சிறந்த லவங்கமும்
பார்த்துத் தானெடு பற்படம் ஓரிடை
துர்த்துக் கையான் துடர்ந்த ஆவாரையும்
போர்த்துப் பொடியாய்ப் பொட்டணம் செய்திடே. 993

லவங்கபத்திரி, லவங்கம், பற்படாகம், கையான், ஆவாரை, இவை பொடியாக்கி, பொட்டணமாக செய்து கொள், மற்றும்.

செய்யும் பொட்டணஞ் சிறந்த எண்ணெய்தனில்
பையக் கலக்கிப் பாங்காய் எரித்திடு
நைய மண்டலம் நலமாய் முழுகிவர
தொய்யு மேகம் தொடர்ந்துதான் ஓடுமே. 994

மேற்படி பொட்டணத்தை மேற்படி எண்ணெயிலிட்டு காய்ச்சி பதமாக எடுத்து ஒருமண்டலம் முறைப்படி முழுகிட மேகம் குணமாகும்.

ஓடும் பத்தியம் உப்புப் புளியாகா
தேடும் வெற்றிலைத் தினமும் விரும்பாதே
நாடும் தூக்கமும் நல்காது அவ்வேளையில்
போடும் பத்தியம் பொருத்த இருந்திடே. 995

மேற்படி எண்ணெயை பயன்படுத்தும் போது உப்பு, புளி, இவைகள், ஆகாது, வெற்றிலை, பகலில் தூக்கம், இவைகளை நீக்கவும், பத்தியமாக இருக்க வேண்டும்.

இருந்திட மேகம் எழிலாய்ப் பறக்குமே
பிரிந்திடு ரோகம் பிசகாமல் ஓடிடும்
செரிந்திடும் பித்தம் சிதைந்து தான்நீங்கிடும்
தெரிந்து தேரையன் தெளிவாய் உரைத்தேனே. 996

மேற்படி முறைப்படி செய்ய மேகம் குணமாகும், பித்தம் குணமாகும், தேரையராகிய யான் தெளிவாக இதை கூறிவிட்டேன்.

நூல் சமர்த்துக் கூறுகிறார்

உரைத்தேன் மாந்தர்க்கு உறுதியாம் இந்நூலை
பரைத்த சித்தர் பதினெண்பேர் நூல்களில்
நிரைத்த முறைமை நேராய் இல்லாததால்
திரைத்தனமாக தெளிவாகச் செப்பினேன். 997

உலக மனிதர்கட்காக இந்த நூலை உறுதியாக கூறி விட்டேன், சித்தர் பதினென் பேரும் தம் நூல்களில்பொருட்களை மறைத்துக் கூறினர், தேரையராகிய யான் தெளிவாக கூறிவிட்டேன்.

செப்பினேன் முறை சிறந்தயிந் நூல்தனில்
ஒப்புநாலாயிரத் துச்சில் வானநோய்
தப்பிப் போகத் தகுந்த மருந்துகள்
துப்புற வாய் தொடர்ந்து உரைத்தேனே. 998

இந்த நூலாகிய வயித்தியம் ஆயிரத்து ஒரு பாடல்களாக இந்நூலை சொல்லி உள்ளேன். நாலாயிரத்து நானூற்று நாற்பத்து எட்டு நோய்கட்கும் தகுந்தமருந்துகளை தொடர்ச்சியாக இந்த நூலில் சொல்லி உள்ளேன்.

இந்நூல் தொகுப்புக் கூறுகின்றார்

உரைத்தேன் இந்நூலுக்கு உற்ற பெருநூலொன்று
இறைத்தேன் காவியம் ஆயிரத் தைந்நூறாய்
வரைத்தேன் தேரையன் வயித்தியம் ஆயிரம்
குரைத்தேன் அன்னூறுங் கூறியது உண்மையே. 999

சொன்ன இந்த பெருநூலையொரு நூலாக தேரையர் வயித்தியம் ஆயிரம் என்று இதில் குறிப்பிட்ட முறைகள் உண்மையாகும்.

உண்மையாம் முறை உரைத்தேன் இந்நூல்தனில்
தண்மையாய்ச் செய்தால் தப்பாது ஒருநாளும்
வண்மை யாக வகுத்தனர் தேரையன்
திண்மை யாகத் தெளிந்தவர் செய்வரே. 1000

உண்மையான முறைகளை இந்த நூலில் சொல்லி விட்டேன், சொல்லிய முறைப்படி செய்தால் தப்பாமல் சொன்னபடி நோய்கள் குணமாகும். தேரையராகிய நான் சொல்லி விட்டேன். தெளிவாக உணர்ந்தவர் முறையாக செய்வர்,

செய்யும் போது சிறந்த குருமொழி
வையுந் தேரையன் வாக்கு பொய்யாதிது
எய்யு மாந்தர்க்கு எளிதாகும் இந்நூறு
உய்யும் ஆயிரத்து ஒன்றுதான் முற்றதே. 1001

முறைகள் செய்யும்போது சிறந்த குரு உரைத்ததை நினைத்து தவறாமல் செய்திடு, தேரையரான என் சொல் பொய்யாகாது. உலக மனிதர்கட்கு எளிதான வைத்திய நூல் இது. இவ்வாறு சொல்லப்பட்ட தேரையர் வயித்தியம் ஆயிரத்து ஒன்று முற்றுப்பெற்றது.

தேரையர் வைத்தியம் 1001
முற்றுப் பெற்றது

*****

தாமரை

நூலகம்